சமூகவியல்

மேல் நிலை

இரண்டாம் ஆண்டு

சமூகவியல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

சமூகவியல்

(இந்தியச் சமூகமும் சிக்கல்களும்)

மேல் நிலை — இரண்டாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்

பாடநூல் நிறுவனம்

சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு — 1980

பதிப்பாசிரியர் குழுத் தலைவர் :

டாக்டர் டி. சுந்தரம்,

பேராசிரியர் & துறைத் தலைவர் — சமூகவியல்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

நூலாசிரியர்கள் :

பேராசிரியர் உ. சுப்பிரமணியபிள்ளை,

சமூகவியல் துறைத் தலைவர்,
தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

டாக்டர் மா. இலக்குமண சிங்,

ரீடர் — சமூகவியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழக மையம்,
கோயம்புத்தூர்.

மேலாய்வாளர்கள் :

டாக்டர் வி. கோமதிநாயகம்,
சமூகவியல் துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

திரு. பி. வி. சந்தானம்,

விரிவுரையாளர் — சமூகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

திரு. இரா. சாரங்கபாணி,

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் — சமூகவியல்,
சம்பந்தம் மேல் நிலைப் பள்ளி,
செம்பனார் கோயில்.

விலை : ரூ. **10-00**

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம்.
தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர்:

மெய்ப்பொருள் அச்சகம், சென்னை - 600 023.

பொருளடக்கம்

			பக்கம்
1.	இந்தியச் சமூகம்	...	1
2.	சமயம்	...	36
3.	சாதி அமைப்பு	...	49
4.	வகுப்புகள்	...	60
5.	திருமணமும் குடும்பமும்	...	69
6.	உறவு முறை	...	80
7.	இந்தியச் சமூகத்தில் இஸ்லாமியப் பாதிப்பு	...	85
8.	இந்தியச் சமூகத்தில் மேற்கத்தியப் பாதிப்பு	...	89
9.	சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்கள்	...	94
10.	சமூக மாற்றம்	...	101
11.	மக்கள் தொகைப் பிரச்சனை	...	123
12.	சமூகப் பிரச்சனைகள்	...	144
13.	பிற்படுத்தப்பட்டோர் பிரச்சனைகள்	...	154
14.	இந்தியாவில் பெண்கள் நிலை	...	163
15.	நவபாரத உருவாக்கம்	...	175
16.	இந்தியச் சமுதாயத்தின் குறிக்கோள்	...	189
	கலைச் சொற்கள்	...	198

1. இந்தியச் சமூகம்

இந்தியா தொன்மையான ஒரு நாடு. உலக நாடுகளுள் இரண்டாவது மிகப் பெரிய நாடு. நிலக்கூறின் அடிப்படையில் மட்டுமல்லாமல் மொழி, பண்பாடு, சமயம், பழக்கவழக்கம் போன்றவற்றிலும் பல்வேறு தன்மைகளைக் கொண்டுள்ளது இந் நாடு.

இங்கு பனிபடர்ந்த மலையும் உண்டு; சம வெளி நிலமும் உண்டு. வற்றாத ஜீவ நதிகளும் உண்டு; வளம் காணா பாலை வனமும் உண்டு. பண்டைய மொழிகளும் பேணப்படுகின்றன. நவீன மேற்கத்திய மொழியும் பேசப்படுகின்றது. பழங்கால வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறவர்களும் வாழ்கின்றனர்; புதிய வழிமுறைகளைப் போற்றுகின்றவர்களும் உள்ளனர். சமயங்களில்தான் எத்தனை வேறுபாடுகள், உணவில், உடையில், பழக்க வழக்கத்தில் – எங்கும் எதிலும் பல்வேறு தன்மைகளைக் கொண்டுள்ளது நம் நாடு. இவ்வேற்றுமைகளுக்குள் ஒற்றுமையும் ஊடுருவிக் காணப்படுகின்றது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மேற்கொள்ளப் பட்டு விட்டது. அசோகன், சமுத்திர குப்தன், அக்பர் போன்ற மன்னர்கள் இந்தியாவின் பெரும்பகுதியை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்துள்ளனர். இப்போது இந்தியா ஒரே அரசியல் சட்டத்தின் கீழ் உள்ளது.

இந்துக்களின் திருத்தலப் புனிதப் பகுதிகள் நாடு முழுவதும் பரவி காணப்படுகின்றன. இந்துக்களுக்கு மட்டுமின்றி சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோருக்கும் இந்தியா புனித நாடாக விளங்குகின்றது. முகம்மதியர்களுக்கும் கிறித்துவர்களுக்கும் கூட புனிதத் திருத்தலங்கள் இந்தியாவில் உள்ளன. இவ் வேற்றுமைகள் இருந்தும், இந்தியா சமயச் சார்பற்ற நாடு என்று விளம்பரப் படுத்தப்பட்டிருப்பது வேற்றுமைகளைப் பொறுத்து ஒற்றுமை காணவேண்டும் என்ற பெருநோக்கையே வெளிப் படுத்துகின்றது.

நினைவுக் கெட்டாத காலத்திலேயே மனிதர்களையும் அவர் களது சமூகத்தையும் கற்கும் வழக்கம் நிலவிவந்துள்ளது. இந்திய மக்களின் சமூகத்தை ஆராய வேண்டும் என்ற எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதன்று.

இந்திய சமூகத்தின் அமைப்பு குறித்து மனுஸ்மிருதி விளக்க மாகக் கூறுகின்றது. மனு கூறிய சமூக அமைப்பின் விதிகள் பல. அவற்றுள் சிலவற்றையே இங்கு குறிப்பிடுகின்றோம். அவை:

1. அகிலம் தோன்றிய வரலாறு, 2. வர்ண அமைப்பின் விதிகள், 3. ஆஸ்ரமா முறையின் விதிகள், 4. எல்லா மனிதர் களும் செயல்முறையில் வேறுபாடு கொண்டவர்கள் என்றா லும் இன்பத்தை அடைவதில் ஒரே மாதிரியானவர்களே, 5. வேலைப்பாகுபாட்டின் அடிப்படையில் சமூகம் ஏற்படவேண்டும், 6. தனக்குப் பிடித்தமான சமயத்தை ஒருவன் பின்பற்றலாம், 7. கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டப் பஞ்சாயத்துக்களால் ஆளப்படவேண்டும், 8. சமூகத்தின் மிகச் சிறிய அங்கம் குடும்பமே தவிர தனிமனிதன் அல்ல, 9. பரம்பரை மூலம் நிலத்தைத் தவிர வேறு செல்வங்களை யாரும் ஏற்கக் கூடாது.

இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றிலும் இந்திய சமூகம் குறித்து விரிவான செய்திகள் உள்ளன. பாரதத்தில் அப் போது காணப்பட்டப் பல்வேறு மனிதர்களை இராமாயணம் படம்பிடித்துக்காட்டுகின்றது. இராமனின் குடும்பம், ஆசிரியர் மாணவர் உறவுமுறை, தந்தை மகன் உறவு, சகோதரர் உறவு முறை, நண்பர்களுக்கும் பகைவர்களுக்குமிடையே உள்ள உறவு முறை போன்றவற்றை அந்நூலில் காணலாம்.

மகாபாரதத்திலும் மக்கள் குறித்தும் சமுதாயம் குறித்தும் ஏராளமானக் கருத்துகள் உள்ளன. தமிழகச் சங்ககால நூற்கள் அக்காலத் தமிழர் சமுதாயம் குறித்து விளக்குகின்றன. புத்தரின் போதனைகள் மனிதர்களை அவர் எவ்வாறு அறிந்திருந்தார் என்பதனையே காட்டுகின்றது. மனிதர்களைக் குறித்தும் சமூக வாழ்க்கை முறை குறித்தும் அசோகரின் கல்வெட்டுகள் பேசு கின்றன.

இடைக்காலத்தில் இந்திய மக்களின் பொதுவானச் சமூக வாழ்க்கை முறையையும் சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் சூர்தாஸ் (Surdas), துளசிதாஸ், கபீர் போன்றவர்கள் தெளிவாக அறிந்து அறிவித்துள்ளனர்.

தற்காலத்தில் சமூகவியல் போன்ற அறிவியல்கள் சமூகம் குறித்து ஆராய்கின்றன.

இந்தியச் சமூகத்தின் கூறுகள்

இந்தியச் சமூகம் ஒரு தொகுப்பான (Complex) தன்மையைக் கொண்டது.

இந்தியச் சமூகத்தினை முழுவதுமாக அறிந்துகொள்ள அதன் சமூகக் கூறுகளை உணர்ந்துகொள்ளவேண்டும். இந்தியச் சமூகத்தின் முக்கிய சமூகக் கூறுகளாகக் கிராமம் (Village), வட்டாரம் (Region), சமயம் (Religion), இனக்குழுக்கள் (Ethnic Tribes), மொழி, கூட்டுக் குடும்பம் (Joint family), சாதி (Caste), மக்கள்தொகை அமைப்பு முறை (Demographic Composition) ஆகியவற்றைக் கூறலாம்.

இத்தகைய கூறுகளைத் தனித் தனியாகக் கற்கும்போது இந்தியச் சமூகத்தின் அமைப்பு முறையின் தனித்தன்மை விளங்கும். அது பிற சமூகங்களிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதனையும் கண்டுகொள்ளலாம். நீண்ட நெடுங் காலமாக இம்மண்ணில் நிலவி வரும் இத்தன்மைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் விளங்கும்.

கிராமியக் கூறுகள்

இந்தியக் கிராமம் என்பது வரிசையான வீடுகளும், வயல் வெளியும், வாய்க்கால் கரையும், கண்மாயும், மாந்தோப்பும் நிறைந்த, நிலக்கூறு அமைப்பு மட்டும் கொண்டது அல்ல. இதனைச் சேர்ந்தவர்க்கு வேறொரு வகையிலும் பல சிறப்புகள் திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒற்றுமைக்கும் போராட்டத்திற்கும் கிராமமே நிலைக்களனாக விளங்குகின்றது. ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் தனித்து வாழமுடியாது. ஆதலின் பிற சாதியினருடன் அவர்கள் இணைந்து போகவேண்டும்; சில நேரங்களில் போராடியும் வாழ வேண்டியுள்ளது. இதனால் சமரசமும் சச்சரவும் நிறைந்த வாழ்க்கையின் மொத்த வெளிப்பாடே இந்தியக் கிராமங்களாக விளங்குகின்றது.

இந்தியக் கிராமங்கள் என்றால் தன்னிறைவு கொண்டவை என்றும் மாற்றங்கள் அடையாதவை என்றும் எண்ணம் ஏற்பட்டுவிட்டது. ஆங்கில அரசின் தொடக்க கால நிருவாகிகளுள் ஒருவரான சர் சார்லஸ் மெட்கால்ப் (Sir Charles Metcalfe) எழுதிய குறிப்பிலிருந்து இதற்குச் சான்று காட்டப்படுகிறது.

அதில் ''கிராமச் சமுதாயங்கள் என்பது சிறு குடியரசுகளாக விளங்குகின்றன. தங்களுக்கு வேண்டியவற்றைத் தாங்களே அடைந்து கொண்டு வெளியார் உறவுகளிலிருந்து சுயேச்சையாக விளங்குகின்றன'' என்று கூறப்பட்டுள்ளது.

போர்கள் வந்தாலும் ஆட்சிகள் மாறினாலும் கிராமங்கள் அவற்றின் தனித் தன்மைகளில் மாற்றமடையாமல் பாதிப்பு ஏற்படாமல், ஆட்டம் காணாமல் அப்படியே நிலையாக விளங்கு கின்றன என்றும் அந்தக் குறிப்பு மேலும் கூறுகிறது. பின்பு வந்த சர் ஹென்றி மெயின் (Sir Henry Main), காரல் மார்க்ஸ் (Karl Marx), காந்தி அடிகள் போன்றவர்களும் இக்கருத்தினையே மேலும் வலியுறுத்தினர்.

ஆனால் கிராமங்களில் கள ஆய்வு (Field Study) நடத்திய போது, நிலைமை வேறுவிதமாக இருப்பது விளங்கியது. இந்தியக் கிராமங்களைக் குடியரசாக கூறமுடியாது. ஒவ்வொரு காலத் திலும் அவை மாறி வந்துள்ளன. கிராமங்கள் எக்காலத்திலும் தன்னிறைவு கொண்டதாக விளங்கியதில்லை. ''பரம்பரைச் சமூக அமைப்பு முறையே'' கிராமங்கள் தன்னிறைவு கொண்டதாக ஒதுங்கிவாழ்வதற்குத் தடைகல்லாக விளங்கியது. பழங்காலத்தில் கிராமச் சாலைகள் வசதி அற்றவையாகவும் பயணம் ஆபத் தானதாகவும் இருந்தபோதிலும் கிராம மக்கள் தங்கள் கிராமத்தி லிருந்து வேறு கிராமங்களுக்குப் போய் வந்து கொண்டிருந்தனர். வெவ்வேறு கிராம மக்களிடையே திருமண உறவு ஏற்படும்போது மக்களிடையே போக்குவரத்து நடைபெறுவதும் உண்டு. வேறு பல காரணங்களுக்காகவும் கிராம மக்களிடையே நடைபெறும் போக்குவரத்துகள் இப்போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருளாதார தேவைகளுக்கும் மக்கள் வெளி யிடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. ஒரே கிராமத்திலேயே எல்லா வேலைகளையும் செய்வதற்கான ஆட்கள் கிடைப்பதில்லை. அடுத்துள்ள கிராமங்களிலிருந்துதான் சில வேலைகளைச் செய்வதற்கு ஆட்கள் அமர்த்தப்படுகின்றனர். வேறு சில வேலைகளைச் செய்ய நகர்ப்புறங்களில்தான் தொழில் தெரிந்தவர்கள் உள்ளனர். செங்கல் அறுப்பவர்கள், சுண்ணாம்பு வேலை செய்பவர்கள், பொன் பித்தளை வேலை செய்பவர்கள், மலர் கட்டுபவர்கள் போன்றவர்கள் நகரங்களிலோ பெரிய கிராமங்களிலோதான் வாழ்கின்றனர்.

சந்தைகள் வேறு வேறு இடங்களில் இருப்பதுவும் மக்கள் வெளியிடங்களுக்குச் சென்றுவரக் காரணமாக உள்ளது. வாரந் தோறும் சந்தைகள் கூடும் இடத்திற்கு மக்கள் செல்கின்றனர்.

ஒரு கிராமத்தில் சந்தை இல்லையெனில் சந்தையுள்ள வேறு கிராமத்திற்குப் பொருள்களை வாங்கவும் விற்கவும் செல்கின்றனர். பல நூற்றாண்டுகளாக ஒரு சில கிராமங்கள் பெரும் வட்டாரங்களுக்கான விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் புகழ்பெற்ற இடங்களாகவும் விளங்கி வருவதைக் காண்கின்றோம். இங்கிருந்துதான் பொருள்கள் வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சில இடங்கள் சமய அடிப்படையில் மக்களை ஈர்க்கும் புகழ் பெற்ற புண்ணிய திருத்தலங்களாக உள்ளன. அங்கு நடைபெறும் திருவிழாக்களுக்கு பக்கத்து கிராமமக்கள் ஆயிரக்கணக்கில் கூடுகின்றனர். குறிப்பிட்ட காலங்களில் நடைபெறும் சமய சிறப்புகளுக்கு மட்டுமன்றி தங்களுக்குத் தேவைப்படும்போதும் இவ்விடங்களுக்கு மக்கள் இறைவழிபாட்டு காரியங்களுக்குச் செல்லும். வழக்கமிருக்கின்றது. அண்மைக் காலங்களில் இத்தகைய காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது என்றே கூறலாம் கல்வி, வழக்கு மற்றும் நிருவாகம் காரணமாகவும் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வது அதிகரித்துள்ளது.

அதேசமயத்தில், கிராம மக்கள் அனைவரும் வெளியிடங்களுக்குச் சென்று வருகின்றனர் என்று கூறமுடியாது. கிராமியப் பெண்கள் தங்கள் ஊரைவிட்டு அரிதாகத்தான் வெளியூர்களுக்குச் செல்கின்றனர். சில ஆண்களும் எப்போதாவதுதான் வேறு இடங்களுக்குப் பயணம் செல்கின்றனர்.

கிராம மக்கள் குறுகிய எல்லைக்குள் வாழ்ந்தபோதிலும் மொத்தமான பெரும் சமுதாயத்துடன் நெருங்கிய உறவினை வளர்த்துள்ளனர். இது முன்பே ஏற்பட்டு விட்ட தொடர்பாகவும் உள்ளது. ஆப்ளர் (Opler) என்பவர் சேனாப்பூர் (Senapur) மக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இதனை வலியுறுத்துகின்றார். அவர் "சேனாப்பூர் மக்கள் தொலை தூர மக்களுடன் மேற்கொண்டிருக்கும் தொடர்பானது தற்போதைய போக்குவரத்துத் தொடர்பு வசதி அதிகரித்ததனால்தான் ஏற்பட்டதன்று. பூர்வீகமான வழக்கத்தையும் கோலங்களையும் அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர்" என்கிறார்.

இந்தியக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் பல்வேறு காரணங்களுக்காகப் பலருடன் தொடர்பு வைத்துக்கொண்டுள்ளனர். ஒருசிலரோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்றார். வேறு சிலரோடு வேறு சமூகத் தேவைகளுக்கான தொடர்பு வைத்துக்

கொள்கின்றார். இதனைப் போன்றே ஒரு கிராமம் பல சமூகத் தேவைகளுக்கு வெவ்வேறு கிராமங்களுடனும், நகரங்களுடனும், தொர்பினை ஏற்படுத்திக்கொள்கின்றது. எனவே கிராமம் அடிப்படையான சமூக அங்கமாக இருந்த போதிலும் வேறு சமூக அங்கங்களிலிருந்து பிரித்தறிந்து ஆராயும் அமைப்பாக இல்லாமல் உள்ளது. ஒரு கிராமத்தை மேலும் ஆராய்ந்தால் அங்குள்ள தனித்தன்மைகள் புலப்படும். குடியிருப்புப் பகுதிகளின் வேற்றுமையும், தினசரி நடவடிக்கைகளில் மக்கள் சிலவற்றைத் தவிர்ப்பதையும் (avoidance), வேலைப் பங்கீட்டு முறையும், அதிகாரத்தில் வேற்றுமையையும் காணலாம்.

இந்தியக் கிராமங்களில் சில சூழ்நிலைகளில் சில காரணங் களுக்காக மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். ஒவ்வொருவரை யும் நாள்தோறும் பார்க்கின்றனர்; அதிக அளவில் நெருக்கமாகவும் ஊடாடுகின்றனர். ஒரே கிராமத்து மக்கள் வழக்கமான இடங் களில்தான் பிறருடன் உறவாகின்றனர். இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்துகொள்கின்றனர். கிராமியத் திருவிழாக் களில் சேர்ந்து கலந்து மகிழ்ச்சியை அனுபவித்துக் கொள் கின்றனர்.

இந்தியாவில், பொதுவாக ஒரு கிராமம் நிருவாகத்திலும் வருவாய்க் கணக்கிலும் ஒரே அமைப்பாக விளங்குகின்றது. இதனால் அக்கிராம மக்களுக்குப் பள்ளிக்கூடம், அஞ்சல் அலுவல கம், வருவாய்த்துறை போன்றவற்றில் ஒரேவிதமான: அனுபவம் ஏற்பட அதிக வாய்ப்பிருக்கிறது. பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையிலும் கிராம மக்கள் நெருக்கமாக இருப்பர். பொருட் களை வாங்குவதிலும் விற்பதிலும் இணக்கமும் நெருக்கமும் ஏற்படும், இணைந்து தொழில் செய்பவராக இருப்பார்கள். அவர்களது வாழ்க்கையை நடத்துவதற்கு இத்தகைய நெருக்கம் இன்றியமையாததாகிவிடுகிறது.

மேலும் இந்தியாவில் ஒருவர் வெளியிடங்களுக்குச் செல்லும் போது, எந்த ஊரைச் சார்ந்தவர் என்றுதான் முதலில் அறிமுக மாகிறார். பின்புதான் சாதியோ வேறு தன்மைகளோ கவனிக் கப்படுகின்றது. நகரத்தில் ஒரு குடும்பம் குடியேறி பல ஆண்டுகள் கழிந்த பின்பும் உறுப்பினர்கள் தங்கள் ஊரைக் குறிப்பிட்டே பிறருடன் அறிமுகமாகின்றனர். மகாராஷ்டிரத்தில் கிராமத்தை மக்கள் "வெள்ளை அன்னை பூமி" (White Mother's Earth) என்று கூறுவதாகத் திருமதி கார்வே (Mrs. Karve) குறிப்பிடு கின்றார். பச்சை வயல்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டவே அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். பய பக்தியுடன் உறுதிமொழி

எடுக்கும்போதும் இவ்வாறே கூறுகின்றனர். கிராமத்திலிருந்து ஒருவன் விலக்கி வைக்கப்படும்போது அங்குள்ள எல்லா மக்களிடையேயும் அவன் மன்னிப்புக் கோருகிறான்.

ஏதாவது குறிப்பிட்ட ஒரு பண்பினை ஒட்டி ஒரு கிராமம் அந்த வட்டாரத்தில் புகழ் பெற்றுவிட்டால் பின்பு அக் கிராம மக்கள் அனைவருக்கும் அப்பண்பு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுவிடுவதையும் காண்கின்றோம். இப்பண்பு கஞ்சத்தனமாகவோ கடின உழைப்பாகவோ அல்லது புத்திசாலித்தன மற்றதாகவோ இருக்கலாம். இந்த ஒருபடி வார்ப்புப் (Stereotype) பண்பு பொதுவாக அவ்வளவு முக்கியத்துவம் பெறாதது போன்று தோன்றும். மாமியார் மருமகள் சண்டையின் போதும் — ஏன் கணவன் மனைவிச் சச்சரவின்போதும் ஒருவருக்கொருவர் கிராமத்தை இழுத்து வசை மாரி பொழிந்துகொள்வர்.

சாதி வரிசையை நிலைநிறுத்துவதில் கிராம மக்கள் கண்டிப்புடன் செயல்படுவர். அந்தந்த வட்டாரத்துக்கு இயைந்த தரத்தையும் நாகரிகத்தையும் அவர்கள் பின்பற்றுவார்களே தவிர மீறமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் ஒரு சாதியின் அந்தஸ்தை தீர்மானிப்பதும் கிராம மக்களே. எடுத்துக்காட்டாக ஒரிசா மாநிலத்தில் பிசிபாரா (Bisipara) கிராமத்தில் துணி வெளுப்பவர்கள் சுத்த சாதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். ஆனால் அண்மையிலுள்ள போட் (Boad) பகுதியில் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக கருதப்படுகின்றனர்.

ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களையும் முறைமைகளையும் பின்பற்றுவதனால் கிராம மக்கள் தங்கள் கிராமத்தின் மீது பற்று கொள்கின்றனர். இது பல வழிகளிலும் வெளிப்படுகின்றது. மொத்தக் கிராமமே உறவுமுறையில் பின்னப்பட்டிருப்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தென் இந்தியக் கிராமங்களிலும் சில இடங்களில் ஒரு வீட்டுத் திருமணம் ஊர் திருமணம் போன்று கருதப்படுவது உண்டு. சின்னஞ்சிறு கிராமங்களில்தான் இத்தகைய ஐக்கிய உணர்வை காணமுடியும். இருப்பினும் பெரும்பான்மையான தென்னக கிராமங்களில் கிராம மக்களிடையே இந்த உணர்வை காணமுடியாது. இதற்குக் காரணம் உயர் சாதியினருக்கும் கீழ்ச் சாதியினர்க்குமிடையே உள்ள இடைவெளி பெரிது. மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கீழ்ச் சாதியினர் எவ்வகையில் திருமணம் செய்துகொள்கின்றனர் என்று அறிந்துகொள்வதில்கூட அசட்டையாக இருக்கின்றனர். கிராம மக்களுள் யாரேனும் ஒருவர் கெட்ட பெயர் பெறுவதைப் பொதுவாக எல்லாரும் விரும்புவதில்லை. கிராமக்

கொண்டாட்டங்கள் அனைத்து மக்களின் ஈடுபாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன. வெளியூர்களிலிருந்து உறவினர்கள் அழைக்கப்படுகின்றனர். விருந்து நடைபெறுகிறது. கிராம மக்கள் பொழுதுபோக்கக் குத்துச் சண்டை, சடுகுடு போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். பகையை மறந்து மக்கள் ஒரே குழுவில் உற்சாகமாக ஈடுபடுகின்றனர்.

கிராம செழிப்புக்கு சடங்குகளும் பல கிராமங்களில் நடைபெறுவதுண்டு. இராம்கேரி (Ramkheri) என்னும் இடத்தில் கிராம முழு நலனுக்காக அங்குள்ள நாற்பத்தி நான்கு கோயில்களிலும் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது என்று ஆண்டிரியன் மேயர் (Andrian Mayer) தனது நூலில் கூறுகின்றார். சில ஊர்களில் குலதேவதையும் காவல் தெய்வங்களும் இருக்கும். கிராம மக்களின் நலத்துக்காக இந்தத் தெய்வங்களுக்கு ஆண்டுதோறும் வழிபாடு நடத்தப்படுவதும் உண்டு. கிராமத்திலுள்ள கன்றுகாலிகளின் நலனுக்காக சடங்குகளையும் வட இந்தியாவில் சில கிராமங்களில் காணலாம். கிராமங்களிலிருந்து தீய தேவதைகளை விரட்டவும் வழிபாடுகள் உண்டு.

ஆனால், கிராமங்களில் உள்ள பல்வேறு சாதி மக்களும் ''ஒருங்கிணைவதின் மூலம் தனித்து'' (Being together separately) வாழ்கின்றனர் என்று பீல்ஸ் (Beals) கூறுகின்றார். இந்த வாசகம் எங்கும் நிலவும் மனித நிலையையே காட்டுகின்றது. குடும்பத்தில் ஒவ்வொருவனும் தனிமனிதனாகக் கருதப்படுகிறான். பல்வேறு குழுக்களுள் அவன் ஒரு சிலவற்றில்தான் அங்கம் வகிக்கிறான். பெரிய சமுதாயத்தைக் கணக்கிடும்போது அவன் உள்ளூர் சமூகத்தில் அங்கம் வகிக்கிறான். இந்திய மக்களைப் பொறுத்தவரையில் ஒரே இடத்திலேயே ஒரேவகை மக்கள் மத்தியில் ஒருங்கிணைவதும் தனித்துச் செயல்படுவதும் நிகழ்கின்றது. சாதிகள் தனித்து வாழ்வதையே முக்கியமாக விரும்பினாலும் இந்திய கிராமச் சமூக அமைப்பில் அது நடைமுறையில் இயலாத காரியமாகும். பல சாதிகள் சகோதரத்தன்மை போன்று காணப்படுகின்றன. அதே சமயத்தில் எல்லா சாதியினரும் இன்றியமையாத வகையில் ஒவ்வொருவரும் தனித்துத் தொண்டாற்றி வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றனர் என்று பீல்ஸ் (Beals) கூறுகின்றார்.

பெரும் சமுதாயத்தில் பங்கேற்று செயல்படும் இந்திய மக்களுக்குக் கிராமம் ஒரு முக்கியமான, செயல்முறைக்கு இலகுவான சமூக அமைப்பாக விளங்குகின்றது. கிராம மக்களையும் அவர்கள் பண்பாட்டையும் உள்ளூர் பின்னணியிலும் பெரும் சமுதாயத்தின் அங்கமாகவும் காணலாம்.

வட்டாரக் கூறு

வட்டாரம் என்பது நிலக்கூறு எல்லையை மட்டும் குறிப்பிடாது என்றும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மக்கள் கொண்டிருக்கும் சமூகப் பண்பாட்டுப் பொதுத் தன்மையையும் குறிப்பிடும் என்று டேவிட் ஜி. மாண்டல்பாம் (David G. Mandlebaum) விளக்குகின்றார். பெரிய புவியின் அமைப்பிற்குள் இந்த வட்டாரம் இருந்த போதிலும் அதன் தன்மைகளிலிருந்து வட்டாரத் தன்மைகள் சிலவற்றிற்கு வேற்றுமை காணப்படுவதும் உண்டு என்று கூறுவர்.

சில ஆய்வுக்காகத் துணைக் கண்டம் முழுவதுமே வட்டாரம் என்று குறிப்பிடலாம். மொழித் தன்மைகளை ஆராயும்போது அறிஞர் ஈமனோவும் (Emeneau) பண்பாட்டை ஆராயும்போது குரோபரும் (Krober) இந்த முறையைத்தான் கடைபிடித்துள்ளனர். ஆனால் இத்தகைய வட்டாரங்கள் பரந்ததாகவோ, குறிப்பிட்ட அளவினதாகவோ இருக்கவேண்டும் என்பதில்லை. ஏதாவது ஒரு கிராமமோ குடும்பமோ கூட இத் தன்மைகளைக் கொண்டதாகக் காணப்படலாம்.

ஆனால் எம். என். சீனுவாஸின் சமூக ஆராய்ச்சியில் கர்நாடகத்தில் உள்ள குடகு வட்டாரமோ மொத்தம் 2,00,000 மக்கள் தொகையைக் கொண்டது. இதில் 50,000 பேர்கள்தான் குடகு மொழியைப் பேசுகின்றவர்கள். இப்பகுதி, 1,500 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. இந்த மிகச் சிறிய நிலப்பகுதி ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்லாமல் அங்கு வாழும் மக்களுக்கும் கூட தனியான வட்டாரமாகத் தோன்றலாம். இதைவிடச் சிறிய நிலப்பகுதியும் குறைவான மக்களும்கூட வட்டாரம் என்று அழைக்கப்படலாம். குடகு வட்டார மக்கள் தங்களுக்கே உரித்தான இந்து சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர் என்று அவர் கூறுகின்றார். இங்குள்ள மக்கள் பின்பற்றும் சமயம் இந்து சமயத்திலிருந்து ஒரு சில வகையில் வேறுபட்டது. இதனை ''பெனின்சுலார்'' இந்து சமயம் (Peninsular Hinduism) என அழைக்கவேண்டும் என்று அவர் கூறுகின்றார். எனினும், இது அகில இந்திய இந்து சமயத்தின் அங்கமாகவே உள்ளது.

வீட்டு அமைப்பு, கிராம அமைப்பு, உணவு, உடை, தட்டுமுட்டுச் சாமான்கள், வண்டிகள் போன்ற 14 புழக்கத்திற்குரிய பொருள்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்று போசும்

சின்காவும் (Bose and Sinha) கண்டறிந்துள்ளனர். இந்த விவரங்களை ஆராய்ந்த கோன் (Cohn) என்பவர் மூன்று அம்சங்கள் கலந்து காணப்படுகின்றன என்றும் ஆறு தன்மைகளில் கிழக்கு—மேற்கு என்ற நிலையில்தான் வேறுபாடுகள் உள்ளன என்றும், ஐந்து தன்மைகளில்தான் வடக்கு தெற்கு வேறுபாடுகள் இருக்கின்றன என்றும் கூறுகின்றார்.

செலிக் ஹாரிசான் (Selig Harison) தனது அரசியல் ஒற்றுமையும் வேற்றுமையும் என்ற நூலில் இந்தியாவை மூன்று பெரும் வட்டாரங்களாகப் பாகுபடுத்துகின்றார். "இந்திய அரசியல் வரலாற்றினை வடக்கு, தக்காணம், தெற்கு என்று மூன்று பெரும் புவியியல் பகுதிகளின் வரலாறு என்று கருதப்பட வேண்டும். இவை ஒவ்வொன்றும் பிறவற்றிலிருந்து பூகோள அடிப்படையில் மிகுந்த வேறுபாடுகள் கொண்டது" என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இந்தப் பெரும் நிலப்பகுதிகளுக்கு வேறுபாடுகள் காண்பதற்கு வரலாற்றையும் புவியியலையும் அடிப்படைக் காரணிகளாக அவர் காட்டுகின்றார்.

புவியியலின் பொருளாதாரக் காரணிகள் அடிப்படையில் தான் இதுவரையிலும் இந்தியாவில் வட்டாரங்கள் வரைபடங்களில் விளக்கப்பட்டுள்ளன. பதிவாளர் ஜெனரல், அசோக மித்திரா 1965-ல் வெளியிட்ட வட்டார வளர்ச்சி அறிக்கையில் ஸ்பேட் (Spate) பயன்படுத்திய இந்திய வட்டார அமைப்பு முறையே பின்பற்றப்பட்டு 1961 ஆம் ஆண்டிலிருந்து இந்திய மக்கள்தொகை கூடுதல் விவரிக்கப்பட்டுள்ளது. இதே வரைவுக் குறிப்புகள்தான் தேசீய அட்லஸ் திட்டத்திலும் புதிய இந்திய கஜட்டியரிலும் (Gazetteer) பயன்படுத்தப்பட்டுள்ளன. துணைக் கண்டத்தின் பண்பாட்டு வட்டாரங்களை வரைவு படமாக வெளியிட்டபோது மொழி, பண்பாடு மற்றும் புவியியல் பொருளாதாரத் தன்மைகளையும் ஜெ. இ. ஸ்குவாட்ஸ்பெர்க் (J.E.Schwartzberg) கூடுதலாகச் சேர்த்துக்கொண்டுள்ளார். சமூக அமைப்பில் உள்ள வேறுபாடுகளையும் தரப்பிரிவுகளையும் இந்த வரைவு படங்கள் விளக்குகின்றன.

சில வட்டாரங்கள் அதிக ஆதிக்கமிக்க சாதியின் (Dominant caste) தன்மைகள் கொண்டதாக முத்திரை இடப்பட்டுள்ளது. ஜாட் (Jat) என்னும் சாதியினர் மேலாதிக்கமாக உள்ள ஹரியானாவின் சில பகுதிகளில் வேறு சாதிகள் உட்படுத்தப்படவில்லை. அப்படி உட்படுத்தப்பட்ட சில சாதியினரும் மிகக் குறைவான மக்கள்தொகையினர். நிலத்தை உரிமையாகக் கொள்ளும் ஜாட் மக்களின் வழக்கத்தின் அடிப்படையில்

எல்லாக் கிராமங்களிலும் ஜாட் பரம்பரையினருக்கு நிலமிருப்ப தாகக் கருதி வட்டாரத் தன்மை அச்சாதியின் தன்மையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

ஆதிக்கமிக்க சாதியின் தன்மையை வட்டாரத்தின் முத்திரை யாகச் சொல்வதற்கு அடுத்த எடுத்துக்காட்டாக மத்திய பிரதேசத்தின் தேவஸ் (Dewas) மாவட்டத்தைக் குறிப்பிடலாம். இங்குள்ள பல கிராமங்களிலும் ராஜபுத்திரர்கள் (Rajputs) எண்ணிக்கை பலம் வாய்ந்தவர்களே தவிர, எல்லா இடங்களிலும் ஆதிக்கமிக்கவர்கள் அல்ல. ஆதிக்கமிக்க வேறு சாதிகளும் ராஜபுத்திரர்களுடன் நட்புறவு கொண்டிருப்பவையேயாகும் மேயர் (Mayer) இது குறித்து, "மிக அதிக்கம் ஆதிகம் வாய்ந்ததாகக் கூறப்படும் சாதி ஒரு வட்டாரத்தில் உள்ள எல்லாக் கிராமங்களையோ மிகப் பெரும்பான்மையான வற்றையோ கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்ப தில்லை. இச் சாதியின் மீது அனுதாபம் கொண்டுள்ள வேறு சாதியினர் அத்தகைய சாதியின் வழிமுறைகளைப் பின்பற்றித் தங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்தி அதனுடன் சமநிலையைக் காட்டிக் கொள்வது உண்டு'' எனக் கூறுகிறார்.

வட்டார வேறுபாடுகளைக் காட்டுவதற்குச் சமூக அமைப்பு முறைகளை முக்கிய காரணிகளாகக் கொண்டு ஒருசில ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வட்டாரங் களில் சாதியின் தன்மையை மெக்கிம் மாரியட் (Mekim Marriot) ஆராய்ந்துள்ளார். சாதியின் வழக்கங்களையும் செயல்முறைகளை யும் ஆராயாமல் அங்குள்ள சாதியின் எண்ணிக்கையும் அவற்றின் வரிசை நிலையை (Rank) யும் குறித்து அவர்களிடையே நிலவும் ஒருமித்தக் கருத்துகள் என்னவென்று அவர் ஆராய்ந்துள்ளார் கேரளாவில் மட்டுமே விரிவான வரிசைநிலை உள்ளதாகவும் வரிசை நிலை குறித்து அதிகமும் ஒருமித்த எண்ணம் நிலவு வதாகவும் அவர் கண்டறிந்துள்ளார். குறைவான வரிசை நிலையும், அது குறித்துக் குறைந்த அளவில் ஒருமித்தக் கருத்தும் மேற்குக் கடற்கரை, கங்கையின் மேற்புறம், சிந்துவின் நடுப்பகுதி. வங்காள டெல்டா பகுதி ஆகிய இடங்களில் நிலவுகின்றன, இதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படாமலிருந்தபோதிலும் ஐந்து இடங்களிலும் நிலவும் சாதி வரிசைநிலையின் அமைப்பு முறை வேறுபாடுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

வட்டாரங்கள் குறித்து பலர் பலவகையில் ஆராய்ந்திருந்த போதிலும் மொழிக்குழுக்கள் குறித்த ஆய்வே மிகவும் பயனுடைய

தாக உள்ளது. ஒரு மொழியைப் பேசுகிறவர்கள் வேறு மொழி பேசப்படும் எல்லையில் வாழ்ந்தாலும், அவர்களின் சமூக அமைப்பில் ஒருங்கிணைந்த தன்மையும், பொருள்சார் பண்பாடும், சமய நடவடிக்கைகளும் தாய்மொழித் தன்மையைத் தான் வெளிப்படுத்துவனவாக உள்ளன. அண்டைமொழி பேசு வோரின் சமூக அமைப்பிலிருந்து வேறுபட்டுத்தான் காணப்படு கின்றனர் என்று திருமதி கார்வே கண்டறிந்துள்ளார். உறவு முறை அமைப்புகளை அவர் விளக்கமாக கண்டறிய இத்தகைய மொழி வட்டாரங்களை ஆராய்ந்துள்ளதை வேறு பலரும் பின்பற்றியுள்ளார்கள்.

நிருவாகத்தினருக்கும் இத்தகைய மொழி வட்டாரப் பிரிவுகள் அதிகம் பயனுள்ளவையாக உள்ளன. அவ்வட்டாரங் களில் வாழும் மக்களும் மிக விரைவாக அதன் தன்மைகளைப் பின்பற்றுகின்றவர்களாக இருப்பர். அரசியல் பண்பாட்டு சின்னத்தின் அடையாளத்திற்காக பல அரசியல் தலைவர்கள் தங்கள் மொழி வட்டாரத்தையே பயன்படுத்துகின்றனர். மாநில எல்லைகள் மொழி எல்லையைப் பயன்படுத்தியே திருத்தி அமைக்கப்பட்டிருப்பதால் அவை இப்போது அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கிராம மக்களும் முன்னைப் போலல்லாமல் சிறு வட்டத்திற் குள் கவனம் செலுத்தாமல் தங்கள் பார்வையைத் தொலைதூர நோக்கில் செலுத்திப் புதிய அனுபவங்களைப் பெற விழை கின்றனர். எல்லாத் தலைவர்களும் மாநில தேசிய அரசியல் களம் பரந்து காணப்படுவதை உணர்ந்துள்ளனர். இங்கு ஒருவரின் வட்டாரம் வேறு வட்டாரங்களுடன் போட்டி போட வேண்டிய நிலை இருப்பதால் வட்டாரப் பற்றுறுதி மக்கள் ஆதரவைத் திரட்டப் பயன்படும் கருவியாகிவிட்டது. இதனை இன்று அரசியல் கேந்திரங்களில் காணலாம்.

இதற்குப் பலக் காரணங்கள் உள்ளன. இந்தியச் சுதந்திரத் திற்குப் பிறகு தேசிய முதலீட்டில் வட்டாரங்கள் அதிக உதவியைப் பெறுவதற்கும் வட்டார முக்கியத்துவத்துக்கும் பல பகுதிகள் போட்டியிடுகின்றன. வட்டார மொழிகள் முக்கியத்துவம் பெற்று விட்டதும் ஒரு காரணமாகும். இம் மொழிகளில் கல்வி அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து அம்மொழிகளுடன் தங்களை ஐக்கியப்படுத்தும் எண்ணமும் அதிகரித்துவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியத் தலைவர்கள் வட்டார மொழிகளில் வேண்டுமென்றே பிரச்சாரம் செய்தனர். இலக்கியத்தை வளர்க்கக் கோரினர். உயர்மட்ட மக்களின் மொழி

அது ஆங்கிலமாயினும், பர்சிய மொழியாயினும் சரி அதன் செல்வாக்கை அத் தலைவர்கள் எதிர்த்தனர்.

வட்டாரத் தன்மையிலான சமூகப் பண்பாட்டுப் பற்றுறுதி கள் ஒன்றை ஒன்று சேதப்படுத்துவன அல்ல. ஒவ்வொருவருக்கும் தான் ஒரு குறிப்பிட்ட சாதியை, வட்டாரத்தை, மாநிலத்தை, சமயத்தை, அதே சமயத்தில் ஒரு நாட்டினைச் சேர்ந்தவர் என்ற உணர்வு எப்போதும் இருந்து வருகின்றது. இந்த உணர்வு இந்தியப் பேரரசின் அங்கமாக இருப்பதற்கு முரண்பட்டதன்று. ஒவ்வொரு பற்றுறுதிக்கும் வரிசைக் கிரமமாகத்தான் முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது என்று எம்.என். சீனிவாஸ் கூறுகின்றார். தேசிய நிலையில் ஒவ்வொருவரும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதற்குப் பாரம்பரியமாக நிலவி வரும் சமய நம்பிக்கைகள் துணை செய்கின்றன. இந்து சமயப் புராணங்களும் இதனை வலி யுறுத்துகின்றன. இந்த நம்பிக்கையே நாட்டின் பல இடங்களுக்கும் மக்கள் திருத்தலப் பயணம் செய்ய காரணமாக இருக்கின்றது. இத்தகு பயணங்கள் தேசிய உணர்வை மேலும் வலியுறுத்து கின்றன.

ஓரளவு வட்டாரத்தன்மை இருந்தாலும் நமது நாட்டில், கல்வி தேசீய விழாக்கள் போன்றவற்றினாலும், முக்கியத்துவம் வாய்ந்த தேசியத் தலைவர்களின் பேச்சு செயல்களினாலும் தேசிய உணர்வு எல்லோர் மனத்திலும் ஓரளவுக்கு உரம் ஏற்றப் பட்டு விட்டது. செய்தித் தாள்கள், வானொலி போன்ற பொது மக்கள் தொடர்பு சாதனங்களும் பெருமளவில் இதற்குத் துணை செய்கின்றன.

சமயக் கூறுகள்

இந்தியாவில் பழங்காலத்தில் சமயத்திலிருந்து வாழ்க்கையின் எந்தப் பகுதியையும் பிரித்தறிய முடியாது. இதனால் எல்லாரும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் பொருளாகாது. ஆனால் சமயம் அந்த அளவிற்கு வாழ்க்கை முழுவதுமாகத் தழுவி யிருந்தது. இதனால்தான் சமூக இயக்கங்கள் சமயத்தின் பெயரால் தொடங்கப்பெற்றன. தனி மனிதர்களின் போராட்டங்களுக்கும் மனவெறுப்புகளுக்கும் சமயத்தின்மேல் பழி போடப்பட்டது.

மேலும் சமூகத்தைத் திருத்தி அமைக்கும் பணியும் முதலில் இந்த மண்ணில் உருவாகிய சமயங்களினாலும் வேற்றுச் சமயங் களினாலும் பல இயக்கங்களாக உருவெடுத்தன. எல்லாரும் சமம் என்பதே இவர்கள் கூறிய வேதவாக்கு. ஆனால் நாளடைவில்

அவர்களே ஒரு புதிய சாதியாக மாறிவிட்டதையும் காண்கின்றோம்.

சமயத்தின் வழி அடிக்கடி ஏற்பட்ட மாற்றங்கள் பொதுவாகச் சமூக மாற்றங்களுக்கான உந்துதல்களாக இல்லாமல் தனிப்பட்ட மனிதர்கள் விழைந்த தாகங்களாகவே முதலில் தொடங்கின. ஆனால் அதன் விளைவுகளோ சமூகத்தினையே மாற்றும் உந்துதல்களாகப் பின்பு உருப்பெற்றன. இந்தப் புதிய மார்க்கம் எண்ணிக்கைப் பலம் வாய்ந்த சாதியினரால் பின்பற்றப்படும்போது அவர்கள் வாழும் வட்டாரத்தில் அதுவே ஆதிக்கம் மிக்கதாக வலுப்பெற்றுவிடும். இத்தகைய புதிய வழிமுறைகளையும் சமய நம்பிக்கைகளையும் பல சாதி கிளைப் பிரிவினரும் பின்பு பின்பற்றத் தொடங்குவர். இதற்கு மாறாக உண்மையிலேயே ஈடுபாடு கொண்டு பக்தி மேம்பாட்டால் மனம் மாறியவர்களால் புதிய வழிபாட்டு மரபு (Cult) ஏற்பட்டதும் உண்டு.

ஒரு சிலரின் தயவில் வாழ வேண்டியிருக்கிறது என்பதனாலும் அவர்கள் தங்களுக்கு மேலாளராக இருக்கிறார்கள் என்பதனாலும் அவர்கள் பின்பற்றிய சமயத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்று எல்லாருக்கும் இயல்பாக எண்ணம் ஏற்படுவதில்லை. அதிகாரத்தில் இருந்துகொண்டு பலர் சமயமாற்றத்திற்கு முயன்ற போதிலும் கூட இணங்காதவர்களும் இருக்கத்தான் செய்தனர். கீழ்நிலையில் உள்ளவர்கள் எந்தச் சூழ்நிலையில் என்ன காரணங்களுக்காக ஈர்க்கப்பட்டு சமயம் மாறினர் என்று ஆராய்வது இங்கு நோக்கமன்று. சில நேரங்களில் சில காரணங்களால் கவரப்பட்டுச் சிலர் சமயம் மாறினர். சிலர் இதனை எதிர்த்துச் சமயம் மாறாமலேயே இருந்தனர்.

எடுத்துக்காட்டாக, 1931-ல் பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய சமயத்திற்குக் கீழ்ச் சாதி மக்கள் மாறினர். இந்து சமயத்திலிருந்து விலகி சீக்கிய சமயத்தில் சேர்ந்தவுடன் அவர்களின் அந்தஸ்து (Status) நாளடைவில் உயர்ந்ததே இதற்குக் காரணம். 1950ஆம் ஆண்டுவரையிலும் இதே காரணத்துக்காக சமய மாற்றம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

ஆட்சியில் இருப்பவர்களின் சமயத்திற்குப் பலர் சமயம் மாறுவதும் உண்டு. முகமதியர்கள் ஆட்சியின்போது இஸ்லாமிய சமயத்திற்கும், ஆங்கிலேயர் ஆட்சியின்போது கிறித்துவ சமயத்திற்கும் பலர் மாறினர். இத்தகைய சமயமாற்றத்தின் உள் நோக்கத்தைப் பல சமயத் தலைவர்கள் கண்டித்துள்ளனர். இது

குறித்து நெடுங்காலமாக விவாதம் நடைபெற்று வருகின்றது. சமய மாற்றம் தொடர்ந்து நடைபெற்றுதான் வருகின்றது.

சமயம் மாறியவர்களுக்கு உடனடியாக அந்தஸ்து ஒன்றும் உயர்ந்துவிடுவதில்லை. வேறு சமயங்களைத் தழுவிய கீழ்ச் சாதியினரை அச் சமயத்தினர் சரிசமமாக நடத்துவதில்லை. வேறு மார்க்கங்களைப் பின்பற்றுகிறவர்களும் அவர்களுக்கு உரிய மரியாதை அளிப்பதில்லை. மக்களின் மேம்பாட்டிற்காகப் புதிய சமய நெறிமுறைகளைப் போதிக்கும் சமயக் குரவர்களைப் பின்பற்றி மக்கள் முன்பு சமயம் மாறும் வழக்கமும் இருந்தது.

இந்தியாவின் பல இடங்களிலும் இப்போதும் பல புதிய வழிபாட்டு மரபுகள் தோன்றி வருகின்றன. முன்பு வாழ்ந்த பக்தர்கள் எந்தக் காரணங்களுக்காக சமய இயக்கங்களில் கவரப் பட்டுச் சேர்ந்தார்களோ அதே காரணங்களுக்காகத்தான் இப் போதும் பக்தர்கள் சமய இயக்கங்களில் சேர்ந்துவருகின்றனர். சமயத்தில் தனி மனிதர்களின் விருப்பங்களுக்கும் இடமிருக்கிறது. வாழ்க்கைச் சட்டதிட்டங்கள் கட்டுப்பாடாக சமயத்தில் இருந்த போதிலும் தனக்குரிய வழிபாட்டுத் தெய்வத்தைத் தேர்ந் தெடுக்கும் உரிமை ஒருவருக்கு உண்டு. அந்தத் தெய்வத்தை வழிபடும் முறையை அவர் முடிவு செய்துகொள்ளலாம். ஒருவர் தன் குருவையும் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சமய நடவடிக்கைகளில் ஒருவன் இதமாக நடந்துகொள்ள வேண்டும். ஒருவன் சமயச் சம்பிரதாயமாக நடந்துகொள்கிறான் என்று வெளிப்படையாகத் தெரிந்தால் அவன் செய்வனவற்றிற்கு மற்ற வர்கள் ஓரளவு ஆதரவளிப்பர்.

குடும்பத்திலுள்ளவர்கள் வழிபடும் தெய்வங்களை வழி படாமல் ஒருவன் வேறு தெய்வங்ளையும் வழிபடலாம். சாதி அமைப்பிலும் இவ்வாறே அனுமதிக்கப்படுறது. ஒரு சாதியினர் பின்பற்றும் வழிபாட்டு முறைகளிலிருந்து வேறுபட்டு வழிபட ஒருவனுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் சாதியின் சட்ட திட்டங்களை அவை மீறக்கூடாது.

சமயத்தில் ஒருவன் புகலிடம்தேடித் தன் பலவீனங்களையும் மறைத்துக் கொள்ளலாம். ஒரு துறையில் செயல்படப் பொருத்த மில்லாதவராக இருந்தால் சமய நடவடிக்கைகளில் ஈடுபட மாற்று வழிகள் உள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக குஜராத் கிராமத் தில் ராஜபுத்திர பெருநிலக்கிழார் ஒருவரின் வாழ்க்கையை ஜிட்டல் ஸ்டீட் (Gittel Steed) என்பவர் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றில் விவரிக்கின்றார்,

ராஜபுத்திர இளைஞர் ஒருவருக்குப் பரம்பரை ஊர்த் தலைமைப் பதவி கிடைக்கின்றது. போர்க்குணம் கொண்ட ராஜ புத்திரக் குடும்பத்தில் பிறந்திருந்தும், இந்தப் பதவி அவருக்கு மன நிறைவு அளிப்பதாகயில்லை. இதற்கு காரணம் அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்க்கப்பட்ட முறையில் ஏற்பட்டகோளாறு. தன் தாய்வழிக் குடும்பத்தில் ஆதிக்கமிக்க பெண்களின் அர வணைப்பில் அவர் வளர்ந்து வந்தவர். அவர் கூச்ச சுபாவம் உள்ள வராகவும் பின்வாங்கும் தன்மை கொண்டவராகவும் விளங் கினார். அடிக்கடி மயங்கி விழுவார். அபின் அருந்தும் பழக்கமும் ஏற்பட்டது. பின்பு தீவிர பக்தராக மாறிவிட்டார். அவரின் குடும்பத்தினருக்கும் அண்டை அயலாருக்கும் அவரின் நிலைமை புரிந்தது. பரம்பரை ராஜபுத்திர குணத்தை அவர் வெளிக்காட்ட வில்லை என்றாலும் அவரை பிறழ்நிலை (deviant) உள்ளவராக யாரும் கருதவில்லை. இந்து சமூகத்தில் சாதாரணமாகக் காணப் படும் சமய நடவடிக்கைகளை அவர் மாற்று வழியாகப் பயன் படுத்திக்கொண்டார்.

சமய வழிபாட்டு இயக்கங்களில் கிராமத்தவர்கள் தாங்க ளாகவே முன்வந்து சேர்ந்துகொள்ளலாம். சமூக அமைப்பின் மீதுள்ள வெறுப்பையும் அரசியல் பொருளாதார மாற்றங்களின் விழைவுகளையும் அவர்கள் அந்த இயக்கங்கள் மூலம் வெளிப் படுத்துகின்றார்கள்.

மனிதர்களின் சுய தேவைகளை சமயம் நிறைவு செய்கின்றது. புனித பாடல்களை இசைப்பதற்குத் தன் வயதுக்கொத்தவர் களுடன் ஒருவன் கூட்டுச்சேர்ந்து கொள்ளலாம். விசேட சமயச் சடங்குகள் செய்வதன்மூலம் ஒரு பெண் தன் அந்தரங்க விருப்பங் களை வெளிப்படுத்துவதற்கு வசதி இருக்கிறது. குருவின் மூலமே சமய உண்மையை (Truth) ஒருவன் அறிந்துகொள்ள முடியும். குருவுக்கு ஒருவன் அப்பழுக்கற்ற முறையில் விசுவாசமாக இருந்து அவரின் மூலம் மனோபலத்தைப் பெறலாம். தினசரி உழலும் இல்லறத் தொல்லையிலிருந்து ஒருவரை கரையேற்றி முக்தி நிலைமை அடைய உதவி செய்ய குருவுக்கு இணையானவர் யாரும் கிடையாது என்றும் பலர் நம்புகின்றனர். எல்லா சாதியில் உள்ளவர்களும்-முகமதியர்கள்கூட இத்தகைய குருவை அடைந்து கொள்கின்றனர் என்று பெர்கூசன் (Ferguson) கூறுகின்றார். ஒருவன் சமய உண்மையைக் கண்டறிவது வரையிலும் குருவை மாற்றிக் கொண்டு வேறு குருவைத் தேடிக்கொள்வதும் உண்டு. ஒவ்வொரு குருவும் வேறொரு குருவின் சீடரே. இப்படி இந்த குரு சீடர் தொடர்பு சங்கிலித்தொடர் போன்று கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைக்கின்றது. தனது

குருவிடமிருந்து அறிந்துகொண்ட வழிமுறைகளைக் குரு தன சீடர்களுக்கு அறிவுறுத்துகின்றார்.

இத்தகைய குரு முற்றும் துறந்தவர்; பந்த பாசத்தை அறுத்தவர். அவரின் சீடர்கள் இல்லறம் நடத்துபவர்களாகவும் இருக்கலாம்; துறவிகளாகவும் இருக்கலாம். இத்தகைய பக்தர் குழாம் வழிபாடு நடத்தும்போது சமூக உயர்வு தாழ்வை புறக்கணித்துவிடும் புதிய மார்க்கத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலம் ஒருவர் இறை உணர்வை அதிகம் பெற்று தனக்கு உதவுவார். யாருமில்லை என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்கிறார். ஒரு குருவுக்குச் சீடராக இருப்பதினாலும் சகச் சீடர்களுடன் கலந்து உறவாடுவதினாலும் பலருக்குப் பலவிதத்திலும் பலன் கிடைக்கிறது.

இத்தகைய குழுக்கள் ஏராளம் உள்ளன. சிலவற்றின் ஆயுட்காலம் குறுகியது. சமுதாயத்திற்கு அதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை. சில நிலைத்து நின்று சமய நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும். வாய்ப்பான சமூகப் பொருளாதாரச் சூழல் காரணமாகச் சில வழிபாட்டு மரபுக் குழுக்கள் வலிமை அடைந்துவிடுவதும் உண்டு.

சில இயக்கங்கள் வெற்றிப்படியை அடைந்து விடுவதால் பக்தர்குழாம் உற்சாக மேலிட்டால் சமய போதனைகளை முழு மூச்சாகப் பின்பற்றும். குழுவின் செல்வாக்கை எங்கும் பரப்புவதற்குப் பல வழிகளிலும் பக்தர்கள் முயற்சி செய்வார்கள். நாளடைவில் சாதி வேறுபாடுகளை மறந்து ஒரே குருவின் சீடர்கள் என்ற எண்ணத்தைக் கொண்டு ஒரு தனிக் குழுவாகவே மாறி விடுவார்கள். நாள்கள் செல்லச் செல்ல இக்குழுவே ஒரு புதிய சாதியாக மாறிவிடுவதும் உண்டு.

இந்து சமயம்

இந்தியர்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள். இந்து சமயம் அவர்களின் வாழ்வில் ஆதார சுருதியாக இருக்கின்றது. இந்து சமயம் உலகிலுள்ள மிக முக்கியமான பெரும் சமயங்களில் ஒன்று. இந்தியாதான் இதன் தாயகம். நினைவுக்கெட்டாத காலத்திலேயே இந்து சமயம் இருந்து வந்திருக்கின்றது.

இந்து என்ற பெயர் சிந்து நதியிலிருந்து வந்ததாகக் கருதப்படுகின்றது. சிந்து நதிப் பக்கத்தில் வாழ்ந்த இந்துக்களைப் பண்டைக் கால ஐரானியர் (பாரசீகர்) நதியின் பெயரால் அழைத்தனர். சிந்து என்று உச்சரிக்க முடியாமல் 'ஹிந்து,'

என்று அழைத்தனர். (சுவாமி பரமாத்மானந்தரின் இந்து மதசாரம்: பக்கம் 2).

நாளடைவில் இந்து சமயத்திலிருந்து பௌத்தமும் சமணமும் இரண்டு பெரிய கிளைச் சமயங்களாகத் தோன்றின.

பௌத்த சமயம் என்பது இந்து சமயத்தைப் புனிதப்படுத்தும் முயற்சி என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறுகிறார். இச் சமயத்தைத் தொடங்கிய புத்தர் தமது இளமைக் காலத்தை இந்து மதசூழலில்தான் கழித்திருக்கின்றார். இந்து சமயத்தின் பல அடிப்படையானவற்றை இச்சமயம் ஏற்றுக்கொள்கிறது.

கூட்டுக் குடும்பம் என்றால் என்ன?

கூட்டுக் குடும்ப அமைப்பு இந்தியாவில் தோன்றியது என்று கருதுவது தவறு. ஆரியர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் குடியேறியபோது இந்தக் குடும்ப அமைப்பு எங்கும் பரவியது. பண்டைய உரோமானிய சமுதாயத்திலும் (Roman) மூத்த ஆண் மகனிடம்தான் எல்லா அதிகாரங்களும் இருந்தன. ஆடு, மாடுகளை மேய்த்த மனிதன் ஓர் இடத்தில் நிலையாக வேளாண்மை செய்யத் தொடங்கியபோதே இந்த அமைப்பு தோன்றிவிட்டது. போக்குவரத்து வசதிகள் அற்ற அக்காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்துதான் வாழவேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். உறவுமுறை (kinship) நெருக்கமாகவும், இறந்த முன்னோர்களை வழிபடும் வழக்கமும் குடும்பப் பிணைப்பை உறுதிப்படுத்தின. உலகில் வேறு இடங்களில் கூட்டுக் குடும்பங்கள் மறைந்துவிட்டபோதிலும், பல்வேறு நெருக்கடியான சூழலிலும் நமது நாட்டில் அவை இப்பொழுதும் இயங்கி வருகின்றன.

திருமணமான கணவன் மனைவி, அவர்களின் குழந்தைகளும் ஒரேவீட்டில் சேர்ந்து வாழ்வதே கூட்டுக் குடும்பம். தந்தை,மகன், சகோதரர்கள் அவர்களின் மனைவிமார்கள்,சகோதரிகள்,பேரன்கள் என்ற இரத்த உறவுடையவர்களாக இவர்கள் இருப்பர். குடும்பத்தில் சில சமயம் விதவைகளும் சேர்ந்தே வாழ்வர். தந்தை ஆட்சிக் குடும்பத்தில் (Patriarchal family) திருமணமானவுடன் ஒரு பெண் கணவன் வீட்டிற்குச் சென்று அங்குள்ள கூட்டுக் குடும்பத்தில் அங்கமாகி விடுவாள். சொத்துகளும் குடும்பத்தில் பொதுவாகவே இருக்கும்.

கார்வே (Karve) கூட்டுக் குடும்பம் குறித்துத் தெளிவாக விளக்கம் அளித்துள்ளார். "கூட்டுக் குடும்பம் என்பது ஒரே வீட்டில் வாழ்ந்து,ச்ஒரே அடுப்பில் சமைத்த உணவினை உண்டு

பொதுவான குடும்ப வழிபாட்டில் பங்குகொண்டு வாழும் குழுவினர். இவர்கள் ஒருவருக்கொருவர் குருதி வழி உறவு முறையைக் கொண்டவர்கள்.

பல்வேறு நடுவணுக் குடும்பங்கள் (Nuclear family) சேர்ந்து இணைந்ததே கூட்டுக் குடும்பம் என்று கருதுவது தவறு.

கூட்டுத் குடும்பத் தன்மைகள்

இந்தியாவில் கூட்டுக் குடும்பங்கள் எங்கும் விரவியதாக (universal) உள்ளன. நாடெங்கிலுமுள்ள கூட்டுக் குடும்பங்களின் அமைப்பில் சில வேறுபாடுகள் காணக்கூடும். பழங்காலத்தில் பலவகையான கூட்டுக் குடும்பங்கள் நிலவியுள்ளன.

இந்து திருமணம் புனிதமானதாகவும் பிரிக்க முடியாததாகவும் பரம்பரையாகக் கருதப்பட்டு வருகின்றது. தனி மனிதர்களின் விருப்பத்தின்படி திருமண உறவைப் பிரிக்க முடியாது என்பதே பண்டைய நம்பிக்கை.

தொடக்கக் காலத்தில் உள்ள கூட்டுக் குடும்பங்கள் தந்தை வழிக் குடும்பங்களாக இருந்துள்ளன. மூத்த ஆண்மகனுக்குத் தான் எல்லாவித அதிகாரங்களும் குடும்பத்தில் இருந்து வந்துள்ளன. சொத்துகள் பொதுவானதாகக் கருதப்பட்டது. குடும்பத்தின் கருத்தாவுக்குத்தான் சொத்தில் முழு அதிகாரம் உண்டு.

பரம்பரையான கூட்டுக் குடும்பங்கள் சிதறுண்டு போகாமல் இருந்ததற்கு அடிப்படையான வகையில் அதற்குச் சில பலமான தன்மைகள் முன்பு இருந்தன. பழங்காலத்திலிருந்தே இந்துசமயம் இதற்கு ஆதரவாக இருந்தது ஒரு காரணம். இந்து சமூக அமைப்பின் அடித்தளமாகக் கூட்டுக் குடும்பம் கருதப்பட்டு வருகின்றது. இன்றும்கூடச் சிலவகைக் கூட்டுக் குடும்பங்கள் இந்தியாவில் இருந்துதான் வருகின்றன. ஆனால் நடைமுறையில் இதன் அமைப்பையும் செயல்களையும் பல்வேறு காரணிகள் பாதித்துவிட்டன

சில பொதுவான மதிப்பீடுகளை எல்லாரும் உயர்ந்தது என்று கருதிப் பின்பற்றி வந்தனர். கூட்டுக் குடும்பங்களுக்கு அடிப்படை பலமாக இது உதவியது. தனி மனிதர்களின் சுதந்திரம் வலியுறுத்தப்படும்போது குடும்ப அமைப்புச் சிதறிவிடும். மேற்கு நாடுகளைப் போன்று இந்திய கிராமங்களில் அந்தரங்கம் அவ்வளவாக விரும்பப்படவில்லை. வேளாண்மையைக் கூட்டுக் குடும்பத்தினர் கூட்டாகச் செய்தனர்.

குடும்பச் சொத்துக் குறிப்பாக நிலம் அதிகரித்தபோது குடும்ப ஒற்றுமையை உறுதிப்படுத்துவதாக நம்பப்படுகிறது. நில

உடமை மதிப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. நகரங்களில் வேலை பார்ப்பவர்கள் ஓய்வு பெறும்போது கிராமங்களுக்கு வந்து வேளாண்மையில் ஈடுபட வசதியுள்ளது. கூட்டுக் குடும்பத்தினால் ஏற்படும் பெரிய நன்மைகளில் பொருளாதாரச் சிக்கனமும் ஒன்றாகும்.

அதிக வருமானம் உள்ள உயர்சாதியினரிடம்தாம் அதிக அளவில் கூட்டுக் குடும்பங்கள் காணப்படுகின்றன என்று நிம்காஃப், கோர் எழுதிய (Nimkoff and Gore: "The Social Bases of Hindu Joint Family' Sociology & Social Research, Vol. KLIV, 1959-60) ஒரு கட்டுரையில் தெரிவிக்கின்றனர். நீண்டகாலமாகக் கூட்டுக் குடும்பங்கள் சிதறாமல் நிலவி வந்ததற்குச் சாதி ஓர் அடிப்படைக் காரணமாகும். சாதி என்ற அமைப்பு குடும்ப அமைப்பின் விரிவாக்கம் என்று கூறலாம். ஒரே மாதிரியான மதிப்பும் செயல் முறைகளையும் கொண்ட குடும்ப உறுப்பினர் களின் கூட்டுத் தொகுதியே சாதி.

முன்பு பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாது. திருமணம் முடிந்தவுடன் ஒருத்தி தன் கணவன் வீட்டிற்குச் சென்று வாழத் தலைப்படுவாள். ஆகவே, பெண்ணுக்கு நிலத்தில் பங்கு கொடுக்காமல் இருந்தனர்; நிலச் சொத்து இதனால் கூறுபடாமல் முழுமையாக இருந்தது. பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாததை ஈடுசெய்ய, சீதனம் (dowry) வழங்கும் வழக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இது பொருந்தாது. ஏனெனில் சீதனம் கணவனுக்குத்தான் அளிக்கப்படுகிறது. புகுந்த வீட்டில் பெண்ணுக்குச் சொத்தில் உரிமையே கிடையாது. 1956ஆம் ஆண்டு இந்து சொத்துரிமைச் சட்டப்படி (The Hindu Succession Act of 1956) ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்தில் சமஉரிமை பெற வாய்ப்புள்ளது. கூட்டுக் குடும்பம் சிதறுண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இந்து சமயம் ஒரு வகையில் கூட்டுக் குடும்பத்திற்கு வலிமையை வழங்கி வந்திருக்கின்றது. திருமணம் செய்யாமல் ஒருவன் வாழக்கூடாது என்றும் மகன் ஆற்ற வேண்டிய கடமை குறித்தும் அது வலியுறுத்துகின்றது. திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுவதும், குழந்தை மணம் இப்போதும் நிலவி வருவதும் கூட்டுக் குடும்பங்கள் தொடர்ந்து செயல்படுவதற்கு உதவி செய்கின்றன.

நகரங்களில் கல்வி வசதி பெருகியதனால் கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது தற்போதைய கல்வியினால் ஆளுமையில் (personality) தனித்தன்மை

வலியுறுத்தப்படுகின்றது என்றும் கருதப்படுகின்றது. கூட்டுக் குடும்பங்கள் சிதறுவதற்கு இதுவும் ஓரளவுக்குத் துணை செய்கிறது.

இந்துச் சமூகத்தில் உள்ள வேறு பல அமைப்பினுக்கும் கூட்டுக் குடும்பத்திற்கும் உள்ள தொடர்பு ஆதரவானதாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் ஒவ்வோர் அமைப்பும் ஒவ்வொரு வகையில் உதவியாக இருந்து வந்திருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாம்.

சாதி வழக்கங்களைப் பின்பற்றுவதில் மாற்றம் ஏற்பட்டு விட்டதால் கூட்டுக் குடும்பங்கள் சிதறுண்டு தனியான குடும்பங்கள் பிரபலமாகிவிடுகின்றன. இதுதான் நகரங்களின் நிலைமை என்று கூறப்படுவதும் உண்டு. தனித்தனியான குடும்பங்களில் சாதி வழக்கங்களைப் பின்பற்றுவதற்கு ஏதும் தடை இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இத்தகைய கருத்து அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

சாதி அமைப்புமுறையும் பொருளாதார அடிப்படையுமே கூட்டுக் குடும்பங்கள் நிலைத்திருப்பதற்கான காரணிகள் வேளாண்மைப் பொருளாதாரம் இத்தகைய குடும்பம் நின்று நிலவுவதற்கு வாய்ப்பானதாக இருக்கின்றது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் வேளாண்மைச் சமுதாயங்களில் கூட்டுக் குடும்பங்களும் அதனைப் போன்ற விரிந்த குடும்பங்களும் (extended family) காணப்படுகின்றன. பல்வேறு அரசியல் சமய அமைப்புகள் வேறுபட்டபோதிலும் இவ்விதக் குடும்பங்கள் எங்கும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது தொழிற் புரட்சி இக் குடும்பங்களில் மாற்றத்தைக் கொண்டுவந்துவிட்டது.

இந்தியக் குடும்பங்கள் அமைப்பு முறையிலும் உறைவிட அடிப்படையிலும் கருக் குடும்பமாக (nuclear family) உள்ளது என்றும் செயல் அடிப்படையில் கூட்டுக் குடும்பமாக உள்ளது என்றும் கருதப்படுகின்றது. தனிக் குடும்பமாக நகரப் பகுதிகளில் வாழ்பவர் கிராமத்தில் உள்ள தங்களது கூட்டுக் குடும்பங்களுக்கு அடிக்கடி பணம் அனுப்பி வருகின்றனர்; ஊர்த் திருவிழா போன்றவற்றிற்கும் குடும்பத்தில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளிலும் அவர்கள் கலந்துகொள்கின்றனர். இத்தகைய குடும்பங்களைக் கூட்டுக் ‘குடும்பத்தின் உறுப்பு’ என்று ஓர் இந்திய சமூக இயலாளர் கூறியுள்ளார்.

இந்துக் குடும்பம் திருமணத்தை வலியுறுத்தியபோதிலும் குடும்பம் எந்த அமைப்புடையதாக இருக்க வேண்டும் என்று

கூறவில்லை. கூட்டுக் குடும்பத்திற்கும் சமயத்திற்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவில் சிறிய கூட்டுக் குடும்பங்கள் மிகுதியாக உள்ளன என்பதும் குறிப் பிடத்தக்கது. சுமார் 40 மிலியன் முஸ்லிம்களும்கூடக் கூட்டுக் குடும்பத்தில் வாழ்கிறார்கள்.

பழங்குடியினரின் மரபு இனக் கூறுகள்
(Ethnic Composition of Tribals)

பழங்குடியினரை (Tribals) மட்டுமே மக்கள்தொகையாகக் கொள்ளாத நாடுகளுள், இந்தியாவில்தான் அதிக எண் ணிக்கையில் பழங்குடியினர் வாழ்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் 7 சதவீதத்தினர் பழங்குடியினர்.

இந்தியச் சமூக அமைப்பில் பல வண்ணக் கலவையைக் குழைத்துக் கொடுக்கும் பழங்குடியினர் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வாழ்கின்றனர். இவர்களின் சமூகப் பண்பாட்டு வழக்கங்கள் இந்திய பெருஞ் சமூகத்திலிருந்து பலத்த வேறுபாடு கொண்டது. பழங்குடியினர் தமக்குள்ளும் சமூகப் பண்பாட்டு அமைப்பு முறை வேறுபாடு கொண்டதாகவே காணப் படுகின்றது. ஒவ்வொரு பழங்குடியினரும் தங்களுக்கே உரித்தான சமூக அமைப்பு முறையைக் கொண்டு பண்பாட்டு முறைகளை நினைவுக் கெட்டாத காலத்திலிருந்தே பின்பற்றி வருகின்றனர்.

இப் பழங்குடியினர் வாழும் நிலக் கூறுகளை வைத்து அவர்கள் வாழும் இடங்களை மூன்று மண்டலங்களாக வகைப் படுத்தலாம். அவையாவன: வடக்கு— வட கிழக்கு (North-North Eastern), மத்திய (Central or Middle), மண்டலம் தென் மண்டலம் (Southern Zone)ஆகிய இம்மூன்று மண்டலங்களிலும் வடக்கு-வட கிழக்கு மண்டலம் அதிகமாக மானிடவியலாளர்களால்(Anthropo- logists) ஆராயப்படவில்லை. இதனால் இம் மண்டலத்தில் உள்ள மொத்த பழங்குடியினரின் எண்ணிக்கையும் குறைவாகத் தோன்றுகிறது. சீனா, பர்மா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பொது எல்லையைக் கொண்டு இம் மண்டலம் விளங்குகிறது. இங்குதான் புகழ்பெற்ற நாகர்கள் (Nagas)வாழ்கின்றனர். மிகவும் நெருக்கமான மக்கள்தொகையைக் கொண்டது மத்திய மண்டலம். இதுகுறித்து தகவல்களும் அதிகமாக உள்ளன. அடுத்த தாகத் தென் மண்டலத்திலும் மரபு இனக்குழு (Ethnic group) குறித்து அதிகமான தகவல் கிடைக்கின்றது.

பழங்குடியினரின் இனச் சார்பு (Tribal Racial Affinity)

இந்தியப் பழங்குடியினரின் பழங்கால இனத்தைத் தீர்மானிப்பது மிகவும் சிக்கலான ஒன்றாக மானிடவியலாளர்கள் (Anthropologists) கருதுகின்றனர். வரலாற்று காலத்துக்கு முன்பு இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ்ந்த மக்களின் மரபு இனம் குறித்து எவ்வித நேரடித் தகவலுமில்லை. இந்தியாவில் இது குறித்து வரலாற்றுக்கு முந்தைய காலத்து மனித எலும்புக் கூடுகள் எதுவும் இதுவரைக் கண்டுபிடிக்கப்படவில்லை. சிந்துவெளி நாகரிகச் சான்றுகளும் நர்மதா பள்ளத்தாக்குக் குடியிருப்புச் சான்றுகளும் இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் மரபு இனம் குறித்து எதுவும் தெளிவாகக் குறிப்பிடுவதில்லை. சிந்து பஞ்சாப் நகரங்கள் பல்வேறு இனக்குழுக்களின் கலப்பு மக்களின் தாயகமாகக் கருதப்படுகின்றது. பல இனங்களின் கலப்பு இங்குத் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. நர்மதா பள்ளத்தாக்கு மனிதர்களின் இனம் குறித்து ஏதும் கூறப்படவில்லை.

வரலாற்று காலத்தில் வாழ்ந்த இந்திய மக்களின் இனம் குறித்த செய்திகளும் அரிதாகத்தான் உள்ளன. இந்தியாவில் ஏற்பட்ட இடப்பெயர்ச்சி (migration) தன்மையும், அது எந்தப் பாதை வழியாக நடந்தது என்றும் தெளிவான செய்திகள் இல்லை. ஆரியர்கள் வந்தபிறகு இந்தியாவில் ஏற்பட்ட இடப்பெயர்ச்சி குறித்தும் இதுவே நிலை. எனவே இந்திய மக்களின் இனத் தன்மையைத் தெளிவற்ற சான்றுகளின் உதவியினால் தான் கணிக்க முடிகிறது.

1891-ல் நமது நாட்டில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மேற்பார்வை செய்த சர் ஹெர்பர்ட் ஹோப் ரிஸ்லி (Sir Herbert Hope Risley), மனித உடல்சார்ந்த அளவை (Anthropometric) யின் அடிப்படையில் இந்தியாவின் இனங்களை முதன் முதலாக வகைப்படுத்தினார். இந்திய மக்களை அவர் ஏழு இனங்களாகப் பிரித்துள்ளார்.

அவை: டர்கோ இரானியன் (Turko-Iranian), இந்தோ ஆரியன் (Indo-Aryan), சைதோ திராவிடன் (Sytho-Dravidian), ஆரியோ திராவிடன் (Aryo Dravidian), மங்கோலா திராவிடன் (Mongola Dravidian), மங்கோலாய்ட் (Mongoloid), திராவிடன் (Dravidian). இந்த ஏழு வகைகளையும் திராவிடன், மங்கோலியன் இந்தோ-ஆரியன் என்று மூன்று அடிப்படை வகையாகச் சுருக்கி வகைப்படுத்தலாம். பழங்குடியினர் முதலில் கூறப்பட்ட இரண்டு வகையிலும் உட்படுவர்.

ரிஸ்லியின் முடிவை எல்லோரும் ஏற்றுக்கொள்வதில்லை வேறு சில மாற்றங்களையும் செய்துள்ளனர்.

தற்போது ஹட்டன் (Hutton), குகா (Guha), மஜும்தார் (Majumdar) ஆகியோர் இந்திய மக்களின் இனத்தை வகைப் படுத்தியுள்ளனர்.

குகா ஒன்பது உட்குழுவுடன் கூடிய ஆறு முக்கிய இனக் குழுக்களை வகைப்படுத்தியுள்ளார்.

1. நீக்கிரிட்டோ (Negrito)
2. பரோட்டோ ஆஸ்திரிலேயாட் (Proto Austroloid)
3. மங்கோலாயிட் (Mongoloid)
    (i) பேலியோ-மங்கோலாயிட் (Palaeo-Mongoloid
        (அ) நீண்ட தலை உடையவர்கள்
        (ஆ) விரிந்த தலை உடையவர்கள்.
    (ii) திபத்தியோ மங்கோலாயிட் (Tibeto-Mongoloids)
4. மெடிட்டிரேனியன்
    (i) பேலியோ மெடிட்டிரேனியன் (Palaeo Mediterranean)
    (ii) மெடிட்டிரேனியன்
    (iii) ஓரியன்டல்
5. மேற்கு பிராட்சிசிபெல்ஸ் (Western Bruchycephals)
    (i) ஆல்பினாயிட் (Alpinoid)
    (ii) டைனாரிக் (Dinaric)
    (iii) ஆர்மினாய்ட் (Armenoid)
6. நார்டிக் (The Nordic)

இப்போது வாழும் பழங்குடியினரின் பூர்வீகம் முதல் மூன்று வகை இனங்களிலிருந்துதான் வந்திருக்கவேண்டும் என்று கருதப் படுகின்றது. நீக்கிரிட்டோ இனக் கூறுபாடுகள்தான் பழங் காலத் தன்மையாகக் காணப்படுகின்றது. காடர்களிடம் இத் தன்மை காணப்படுகின்றது. மத்திய இந்தியப் பழங்குடியினர் புரொட்டோ ஆஸ்திரேலியாட் இனத்தைச் சேர்ந்தவர்கள். வடக்கு — வடகிழக்குப் பகுதியிலுள்ளவர்கள் மங்கோலாயிட் இனத்தைச் சேர்ந்தவர்கள். பேலியோ-மெடிட்டிரேனியன் இனத்தைச் சேர்ந்த சில பழங்குடியினரும் உள்ளனர்.

பழங்கால நீக்கிரிட்டோத் தன்மைகள் நிலவுவதாகக் கூறப் படுவதை மஜும்தார் மறுக்கின்றார். தெற்காசியாவில் அவர்கள்

வாழ்ந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை என்றும் ஆனால் பழங்குடியினரிடம் அவர்கள் தன்மை இருப்பதற்கு உறுதியான சான்று இல்லை என்றும் கூறுகின்றார்.

நீக்கிரிட்டோ தன்மை குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இந்தியப் பழங்குடியினரை ஒரு குறிப்பிட்ட இனத்திற்குள் சேர்த்துக்கொள்ள முடியாது. பல்வேறு இனங்களின் கலப்பாகவும் இருக்கலாம். தென்னிந்தியாவில் வாழும் தோதுவர்களுக்கு (Todas) எந்தவித இனத்தின் முத்திரையும் பதிக்கப் படவில்லை. இனக்கலப்பும் இடப் பெயர்ச்சியும் ஏற்பட்டிருப்பதால் இந்தியப் பழங்குடியினரின் இனங்களை வகைப்படுத்துவது எளிதானதன்று.

மொழி உறவுகள் (Linguistic affinities)

இந்தியர்களை நான்கு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பாகுபாடு செய்யலாம். அவை : இந்திய ஐரோப்பிய மொழி (ஆரியன்), திராவிட மொழி, ஆஸ்திரிக் மொழி, திபத்திய சீனமொழி ஆகியவை.

பழங்குடியினர் எல்லோருக்கும் பண்பாட்டின் தொடர்பு மூலமே ஆரிய மொழி அறிமுகம் கிடைக்கின்றது. மொழி, பண்பாட்டைப் பரப்பும் வலிமைமிக்க கருவி. இரண்டு பகுதிகளில் ஒரே மொழி பேசப்படும் எனில் பண்பாட்டுப் பரப்பல் எளிதாக நடைபெறும் என்றாலும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் தான் முக்கியக் காரணிகளாக உள்ளன. சோட்டா நாக்பூரில் (Chota Nagpur) வாழும் முண்டா (Munda), ஓரான் (Oran) பழங்குடியினர் அடுத்தடுத்து வாழ்கின்றனர். பொதுவான பண்பாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றனர். ஆனால் வெவ்வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முண்டா பழங்குடியினர் ஆஸ்திரிக் மொழிக் குடும்பத்தையும் ஆரான் பழங்குடியினர் திராவிடமொழிக் குடும்பத்தையும் சேர்ந்தவர்கள். மத்திய மண்டலத்தில் பல பழங்குடியினரும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் திறன் பெற்றவர்கள். தங்கள் தாய் மொழியை அறவே மறந்து புதிய மொழியைப் பின்பற்றுகிறவர்களும் உண்டு. மொழியின் அடிப்படையில் பழங்குடியினரை வகைப்படுத்துவது சரியானது ஆகாது என்பதற்கு இதுவே காரணம்.

நிலக்கூறு அடிப்படையில் மூன்று மண்டலங்கள் இருப்பதைப் போன்று மொழி அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மொழிப் பிரிவு அடிப்படை உள்ளது.

வடக்கு வட கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையான பழங்குடியினர் சீனோ-திபெத்தியன், திபெத்தியன், பர்மா மொழி களைப் பேசுகின்றனர். வட கிழக்குப் பகுதியில் சில இடங் களில் கலப்பு ஆஸ்திரிக் மொழியைப் பேசுகின்றனர். காசி (Khasi) மக்கள் இத்தகைய மொழியையே பேசுகின்றனர். நாகர் குன்றுகளில் பொதுவாக பதினாறு மொழிகள் பேசப்படுகின்றன. இது தவிரவும் வேறு பல மொழிகளும் பேசப்படுகின்றன.

மத்திய மண்டலத்தில் ஆஸ்திரிக் மொழி ஆதிக்கமிருந்ததாக இருந்தபோதிலும் திராவிட மொழிக் குடும்பத்தினுடன் தொடர் புடைய மொழியும் பேசப்படுகின்றன. ஒரான் (Oran), கோலம் (Kolam), கோண்ட் (Khond), காண்ட் (Gond) ஆகிய பழங்குடி யினரின் மொழி இத்தகையதே.

தென்மண்டலத்தில் திராவிடமொழிகளான தமிழ்,தெலுங்கு, மலையாளம், குடகு போன்ற மொழிகளுள் ஏதேனும் ஒன்றைப் பழங்குடியினர் பேசுகின்றனர். கேரளாவில் வாழும் காடர்கள் (Kadars) மலையாளம் பேசுகின்றனர். நமது நாட்டில் மிகவும் தொன்மை வாய்ந்தவர்கள் இவர்கள்.

மொழிவழிப் பிரிவுகள்

மொழிவழி இந்திய மக்கள் ஆரியன், திராவிடன், முண்டா, திபேத்தோசைனிஸ் மற்றும் காச் என்னும் ஐந்து மொழிப் பிரிவு களில் அடங்குவர். முண்டா மொழிப் பிரிவு கீழ்த்திசையிலிருந்து வந்தது. தற்சமயம் பீகார், வங்கம், ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேச மலைப் பகுதிகளில் வாழும் மலைஜாதியினரால் பேசப் படுகிறது. திராவிடமொழிகள் தென் இந்தியாவில் ஆரியர்கள் வருவதற்கு முன்பிருந்தே பேசப்படுகிறது. தற்பொழுது இப் பிரிவில் நான்கு முக்கிய மொழிகள் நன்கு வளர்ந்துள்ள இலக்கிய வளங்களோடு தென்னிந்தியாவில் இருக்கின்றன. தமிழ்மொழி தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும், தெலுங்கு ஆந்திரப் பிரதேசத்திலும் கன்னடம் கர்நாடக மாநிலத்திலும், மலையாளம் கேரள மாநிலத்திலும் பேசப்படுகின்றன.

பல ஐரோப்பிய மொழிகளுடனும் நெருங்கிய சம்பந்தம் கொண்ட ஆரிய இனமொழியாக சமஸ்கிருதம் விளங்குகிறது. இன்று நடைமுறைப் பேச்சுவாக்கில் இல்லாமலிருந்தாலும் பழங்கால முதல் முகலாயர் இந்தியாவை வெற்றி கண்ட இடைக்காலம்வரை அறிஞர்களிடையே நாடுமுழுவதும் வழங்கு மொழியாக அமைந்து பல சிறந்த இலக்கிய சமய நூல்களைத் தந்தது சமஸ்கிருதம். முகலாயர்கள் காலத்தில் அரபிக், பாரசீகம் போன்ற மற்ற மொழிகள் இந்தியாவில் சமஸ்கிருதத்திற்கும்

பதில் அரசு மொழியாகின. ஐரோப்பியர்களின் வருகையால் பிற்காலத்தில் ஆங்கில மொழியும் ஆங்கிலக் கல்வியும் நம் நாட்டில் வேர் ஊன்றின.

வட இந்தியாவில் ஆரிய மொழிகளில் ஒன்றான இந்தி பரவலாகப் பேசப்பட்டுவருகிறது. இந்தியில் பல வகை உட்பிரிவுகள் வடநாட்டின் பல வட்டாரங்களிலும் இருக்கின்றன. அவற்றுள் இந்துஸ்தானியே மிக அதிகமாகப் பேசப்படுகிறது. இந்துஸ்தானி தேவநகரி லிபியில் எழுதும் இந்தி என்றும் பெர்சியன் லிபியில் எழுதும் உருது என்றும் இருவகைப்படும். ஒன்றுக்கு சமஸ்கிருதம் அடிப்படையாகவும் மற்றொன்றிற்கு பெர்சியன் அடிப்படையாகவும் அமையும்.

அடுத்து மிக முக்கியமான மொழி வங்காள மொழியாகும். இது மேற்கு வங்க மாநிலத்திலும் வங்காள தேசத்திலும் பேசப்படுகிறது. பம்பாய்க்குக் கிழக்கேயும் தென்கிழக்கேயும் மராத்தியும் வடக்கே குஜராத்தியும் பேசப்படுகிறது. மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தில் ராஜஸ்தானியும், பஞ்சாபில் பஞ்சாபியும், காஷ்மீரில் காஷ்மீரியும், பீகாரில் பீகாரியும், ஒரிசாவில் ஒரிய மொழியும் பேசப்படுகின்றன.

மொழியின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் 179 மொழிகள் இருக்கின்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தி, உருது, பெங்காலி, ஒரியா, மராத்தி, குஜராத்தி, காஷ்மீரி, பஞ்சாப், நேபாளி, அசாமி, தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம் ஆகிய பதினான்கு மொழிகளை மட்டும்தான் அரசாங்கம் மொழிகளாக ஏற்றுள்ளது. இம் மொழிகளின் வளர்ச்சி அந்தந்த மாநிலங்களில் கல்வி முன்னேற்றத்திற்கும் வட்டார வழக்கு மொழிகளை வகைப்படுத்தி ஒருங்கிணைப்பதற்கும் பயனாக உள்ளது.

சாதித் தன்மைகள்

இந்திய சமூக அமைப்பில் குறிப்பாக இந்துச் சமூக அமைப்பில் அதன் சாதி அமைப்பு முறை ஒரு தனித்தன்மையாகும். சாதி முறை, உலகில் வேறு பல இடங்களிலும் காணப்படுகின்றது. என்றாலும் இந்தியாவில் நிலவும் சாதி அமைப்பு வேறுபட்ட ஒன்றாகும்.

சாதிமுறை, இந்தியச் சமூக நிறுவனங்களுள் (Social institution) ஒன்று. இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்தது; இந்திய கிராமங்களில் வாழ்பவர்களின் சமூக சமய பொருளாதார

நடவடிக்கைகள் சாதி சட்டத் திட்டங்களுக்குட்பட்டே இப்போதும் செயல்படுகின்றன. நகரப் பகுதிகளில் வாழ்வோர்களுக்கு இது சிறிதளவுதான் பொருந்தும். இந்தியச் சமூகத்தில் நிலவும் சாதி அமைப்பு நால்வகை வர்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. வர்ணம் என்றால் நிறம்; எனவே இது இன அடிப்படையையும் உள்ளடக்கியது. இதனால் ஆரியர்கள் படை எடுப்பின்போது நிலவிய சமூக அமைப்பை இது குறிப்பிடுகிறது என்று கூறுவோரும் உண்டு.

இறைவன் தனது உடலிலிருந்து மூன்று குழு (வர்ணங்களை) உறுப்பினர்களைத் தோற்றுவித்தான் என்று நம்பப்பட்டது. தலையிலிருந்து பிராமணர்களும்,உடம்பிலிருந்து சத்திரியர்களும், கை கால்களிலிருந்து வைசியர்களும் வந்தனர். ஒவ்வொரு குழுவும் ஒரு சாதியாக மாறியது எனவும் ஒரு சாரார் கூறுவர். பிராமணர்கள் சமய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். அடுத்த மதிப்பைப் பெற்ற சத்திரியர்கள் நாட்டின் பாதுகாப்புக்காகப் போரிட்டனர். இவர்களுக்குஅடுத்த மதிப்பைப்பெற்றவைசியர்கள் வேளாண்மை, கைத்தொழில், வணிகம் போன்றவற்றில் ஈடுபட்டனர். இந்த மூன்று சாதியினரும் "இரு-பிறவி" (Twice-born) எடுத்த சாதிகளாகக் கருதப்பட்டனர். இச் சாதியினர் சில சமயச் சடங்குகளைச் செய்து சமூகக் கடமையாற்ற வேண்டியிருப்பதனால்தான் இந்த மதிப்பு கிடைத்ததாக கருதப்பட்டது. வைசியர்களுக்கு அடுத்தபடியாக எந்தவித தரமதிப்பு (rank) இல்லாமல் இருக்கும் சாதி சூத்திரர்கள் என்றனர். வேலைக்காரர்களும் சிறு வேலைகளைச் செய்பவர்களும் இச்சாதியில் உட்படுவர் என்றனர்.

மக்கள்தொகைப் பெருகப் பெருக இந்த நால்வகைச் சாதியினையும் அடிப்படையாகக் கொண்டு பல கிளைச் சாதிகளும் அதன் உட் கிளைச் சாதிகளும் உருவாகின.

ஒரு சாதியின் மதிப்பு, அதுசெய்யும் தொழிலுக்கு சமய அடிப்படையில் தூய்மையானதா தூய்மையற்றதா என்ற காரணத்தால் ஏற்பட்டது. குப்பைக் கூட்டுதல், வெட்டியான் வேலைபார்த்தல், மாடுகளின் தோலை உரித்தல் போன்றவை கீழான வேலைகளாகக் கருதப்பட்டன. இத்தகைய தொழில் சமய அடிப்படையிலே கீழானவையாகக் கருதப்பட்டதால் இதனை மேற்கொண்டவர்கள் கீழானவர்களாகவும் கருதப்பட்டனர்.

இத்தகு தர அடிப்படையில் சமூகத்தில் ஆயிரக்கணக்கான சாதிப் பிரிவுகள் இருந்தன. இவற்றிற்கு தங்களுக்கே உரித்தான பழக்கவழக்கங்களும் அமைந்தன.

சாதி அதன் உறுப்பினர்களுக்கு இரண்டு தடைகளை விதித்தது; தன் சாதியிலுள்ளவர்களைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது ஒன்று; கீழ்ச்சாதியினரிடமிருந்துமேல் சாதியினர் உணவு பெறக்கூடாது என்பது பிறிதொன்று. கீழ்ச்சாதி என்று சொல்லப்பட்டவர்களுடன் சரிசமமாகப் பழகுவது"தீட்டு" என்று கருதப்பட்டது. அவர்களிடமிருந்து உணவைப் பெறுவதும் அவர்களின் வேலையைச் செய்வதும் தீட்டு என்றே கருதப்பட்டது. அத்தீட்டினை அகற்றிக்கொள்ள சில சடங்குகளையும் அமைத்துக் கொடுத்திருந்தனர். சொந்தச் சாதியில் திருமணம் செய்து கொள்ளும் அகமண (Endogamy) முறை உயர்சாதி மணமுறை (அனுலோமா)என்றுஅழைக்கப்படும். இது இயல்பானது. தன்னை விடக் கீழ்ச் சாதிப் பெண்ணை ஒருவன் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறான்: அந்தத் திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளின் சாதி அவனின் சாதியைவிடக் கீழானது, பெண்ணின் சாதியைவிட உயர்வானது. ஒரு பெண், கீழ்ச் சாதி ஆணைத் திருமணம் செய்துகொள்ள முடியாது. இத்தகைய கீழ்ச்சாதி திருமணத்தை(பிரதிலோமா) மனுவும் ஸ்மிருதி ஆசிரியர் களும் அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு சாதியினருக்கும் ஒவ்வொரு தொழிலையும் அவர்கள் வரையறை செய்துவைத்துள்ளனர். சாதிகளுக்குள் சமூகத் தொலைவினை (Social distance) நிலை நிறுத்திவைப்பதற்கு அகமணம் (Endogamy) மட்டுமே இப்போது உள்ளது.

கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்கள் பலவித தொல்லைகளைத் அனுபவித்தார்கள். இத்தகைய பல சாதியினரும் தாழ்த்தப்பட்ட மக்கள் (depressed caste) என்று அழைக்கப்பட்டனர். இதில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் 'தீண்டத் தகாத வர்கள்' என்று ஒதுக்கப்பட்ட சாதியினர்தான். இவர்கள் முன்பு கோயிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை. பொது கிணற்றில் நீர் எடுக்கவிடவில்லை. தேவையான பண்டங்களை எல்லாரும் வாங்கும் கடைகளிலிருந்து வாங்கவும்கூட அனு மதிக்கப்பட்டதில்லை. மேல்சாதியினரிடம் பேசும்போது தள்ளி நின்றுதான் பேசவேண்டும் என்றனர். பொதுமக்களின் வசதிக் கானச் சாலைகளையும், கல்விக்கானப் பள்ளிகளையும்கூட அவர்கள் பயன்படுத்த முடியாமல் இருந்தனர். அவர்களின் நிழல் கூடத் தீட்டு என்று கருதப்பட்டது. சில இடங்களில் அவர்கள் நடமாடும்போது உரக்கச் சத்தமிட்டு எதிரில் வரும் மேல்சாதி யினரை எச்சரிக்க வேண்டும் என்ற நிலைமையும் இருந்தது.

இப்போது நிலைமை மாறிவிட்டது. பொது இடங்களில் அவர்கள் தாராளமாகப் பழகுகின்றனர். தீண்டாமையைப் பின்

பற்றுவது சட்டப்படிக் குற்றம் என்று அரசாங்கம் அமலாக்கி விட்டது. பல ஆண்டுகளாக அரசு பல சலுகைகளையும் அளித்து வருகின்றது.

சாதியின் அடிப்படையில்லாமல் வாழ்க்கையில் மட்டும் முன்னேறியிருந்தால் அவர் சமூக மதிப்பைப் பெற்றுக்கொள்கின்றார். பல சாதியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், செல்வந்தர்கள் ஆகியோர் சம வாய்ப்பு பெற்று சமூக மதிப்பு பெற்றிருக்கின்றனர். பலர் சாதி அடிப்படையில்லாமல் கலப்புத் திருமணமும் செய்துள்ளனர்.

புதிய நவீனக் கோட்பாடுகளின் காரணமாக பல்வேறு சாதியினரிடையே சமூக உறவுகளில் மாற்றமும் சமபந்தி உணவு உண்ண வாய்ப்புகளும் இன்று ஏற்பட்டுள்ளன. கல்வி நிலையங்களில் சாதிவேறுபாடு இன்றி ஒரே இடத்தில் அமர்ந்து சம வாய்ப்புகளை எல்லோரும் பெற்று கல்வி பெறுகின்றனர்.

மக்கள்தொகை அமைப்பு

உலகில் இந்தியா மக்கள்தொகையில் இரண்டாவது நாடு; உலகில் உள்ள நிலப்பரப்பில் 2.4 சதவீதம் கொண்ட இந்தியா உலக மக்கள்தொகையில் 14 சதவீதத்தினரைக் கொண்டிருக்கிறது. உலக வருமானத்தின் 1.5 சதவீதத்தினுக்கு மேற்படாத வருமானத்தைக் கொண்டவர்கள் இந்தியர்கள். இந்திய மக்கள் தொகை தொடக்கத்தில் மெதுவாகவும் சில நேரங்களில் மாற்றங்கள் எதுவுமில்லாமலும் இருந்தது. கடந்த அரை நூற்றாண்டு காலமாகத்தான் மக்கள்தொகை மிக வேகமாக பெருகத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் மக்கள்தொகை 1971 ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 548 மிலியன். ஒரு சதுர கிலோ மீட்டரில் 178 பேர் வாழ்கின்றனர். வல்லுநர் குழு ஒன்றின் கணிப்பின்படி 1977ஆம் ஆண்டில் 616.5 மிலியன். 1981ஆம் ஆண்டில் 658 மிலியனாக உயரும் என்றும் அக்குழு வருமுன் உரைத்துள்ளது.

பிறப்பு இறப்பு விகிதங்கள் தற்போது குறைந்துவருகின்றன. இதனால் மக்கள்தொகை மெதுவாகத்தான் இந்தியாவில் பெருகி வருகின்றது.

ரிஜிஸ்திரார் ஜெனரலின் அறிக்கையின்படி 1971-ல் பிறப்பு விகிதம் 36.9, இறப்பு விகிதம்14.9 (1000 பேருக்கு) என்றும் வளர்ச்சி விகிதம் 22.0. (1000 பேருக்கு) என்றும் தெரியவருகிறது.

1974ஆம் ஆண்டில் பிறப்பு விகிதம் 34.5; இறப்பு விகிதம் 14.5; இதனால் வளர்ச்சி விகிதம் 20.0 (1000 பேருக்கு) என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

மக்கள்தொகை அமைப்பை கற்கவேண்டுமெனில் கீழ்க்குறிப்பிடும் தன்மைகளின் அடிப்படையில்தான் ஆராய வேண்டும். அவை: பாலினம் மற்றும் வயது விகிதம் (Sex and age ratio), திருமணநிலை (Marital Status), கல்வி நிலை (Literacy), வேலைப் பார்ப்பவர்கள் தொகை (Working Population) முதலியன.

பாலினமும் வயதும்

பாலினமும் வயதும் உயிரியல் அடிப்படையானவை. இவை மக்கள்தொகையை மட்டுமின்றி சமூக பொருளாதார அரசியல் துறைகளையும் பாதிக்கும் காரணிகளாகும்.

பாலின வயது சதவீத அட்டவணை (1971)

வயதுக் குழு	மொத்த மக்கள்தொகை			ஒரு சதவீத மாதிரி விவரம்		
	மக்கள்	ஆண்	பெண்	மக்கள்	ஆண்	பெண்
0-05				14.39	14.11	14.68
5-10	42.03	41.87	42.20	15.07	15.04	15.10
10-15				12.42	12.71	12.10
15-20	8.66	8.88	8.42	8.73	8.96	8.49
20-25	7.86	7.60	8.15	7.91	7.60	8.23
25-30	7.45	7.16	7.76	7.45	7.10	7.82
30-35	12.61	12.52	12.70	6.62	6.43	6.83
35-40				6.02	6.07	5.97
40-45	9.34	9.69	8.96	5.20	5.33	5.05
45-50				4.18	4.38	3.95
50-55	6.09	6.34	5.82	3.76	3.93	3.57
55-60				2.30	2.38	2.21
60-65	5.96	5.94	5.99	2.62	2.63	2.60
65-70				1.[illegible]4	1.25	1.23
70-				2.11	2.07	2.14

Source: Registrar General, Pocket book of Population Statistics, New Delhi. pp. 56-57, 78-80.

1000 ஆண்களுக்கு 930 பெண்கள் இருப்பதாக 1971 பாலின விகிதக் கணக்குக் காட்டுகிறது. கேரள மாநிலத்தில் 1000 ஆண் களுக்கு 1016 பெண்கள் வீதம் உள்ளனர். இங்குதான் உயர்ந்த பட்ச பாலின விகிதம் காணப்படுகிறது. குறைந்த பாலின விகிதம் உள்ள மாநிலம் பஞ்சாப். இங்கு 1000 ஆண்களுக்கு 865 பெண்கள் வீதம் உள்ளனர்.

இந்தியாவின் மக்கள்தொகை வயது அமைப்பு இளைஞர் களை அதிகம் கொண்டதாக இருக்கின்றது. கடந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஒப்பிடும்போது இதில் அதிகம் மாற்ற மில்லை. இந்தியாவில் 42 சதவீதத்தினர் 15 வயதுக்குட்பட்டவர் களாகவும் 6 சதவீதத்தினர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் உள்ளனர். ஆண் பெண் வயது அமைப்பில் குறிப்பிடத்தக்க வேறு பாடுகள் இல்லையாயினும் பெண்கள் ஆண்களைவிடக் குறைந்த வயதுடையவர்களாக உள்ளனர். இதற்கு ஆண் பெண் இறப்பு விகிதத்தில் உள்ள வேறுபாடே காரணமாகும். இந்தியாவில் ஆண் இறப்பு விகிதத்தைவிடப் பெண் இறப்பு விகிதம் அதிகம்.

திருமண நிலை (Marital Status)

ஒரு சமூகத்தில் திருமண நிலையைக் கணிப்பவை பல்வேறு உயிரியல் சமூக பொருளாதார சமய சட்டக் காரணிகளாகும். பொதுவாக இந்தியர்கள் எல்லாருமே திருமணம் செய்து கொள் கின்றனர். இதற்குரிய முக்கியக் காரணம் மத நம்பிக்கையே. இறுதி காலத்தில் இந்து ஒருவனுக்கு ஈமச் சடங்குகள் நடத்து வதற்கு குழந்தைகள் வேண்டும். விட்டுப்போகும் சொத்துகளை அனுபவிக்கவும் குழந்தைகள் வேண்டும். எனவே எல்லோரும் திருமணம் செய்துகொள்கின்றனர். பெண்ணுக்கும் திருமணம் அவசியம். ஓர் ஆண் பல சமயச் சடங்குகளைச் செய்துகொள் கிறான். திருமணம் ஒன்றுதான் பெண்ணுக்கு அனுமதிக்கப்படு கின்ற சமயச் சடங்காகக் கருதப்படுகின்றது. இளம் வயதிலேயே பெண் திருமணம் செய்துகொள்வதற்கும் இந்தியப் பண்பாடே ஒரு காரணம். இதனால்தான் திருமணமாகாத பெண்களின் விகிதம் இந்தியாவில் மற்ற நாடுகளைவிடக் குறைவாக இருக் கின்றது.

திருமண நிலை விவரத்தைக் கீழ்க்காணும் வகையில் வகைப் படுத்துவது வழக்கம் (1) திருமணமே செய்யாதவர்கள், (2) அண்மையில் திருமணம் செய்து கொண்டவர்கள், (3) விதவை, (4) விவாகரத்து செய்துகொண்டவர்கள் அல்லது தள்ளிவைக்கப் பட்டவர்கள்.

இந்தியாவின் பெண்களின் திருமண நிலையைக் கீழ்க்காணும் அட்டவணைமூலம் அறிந்துகொள்ளலாம்.

பெண்களின் வயதும் திருமண நிலையும் % (1971)

வயதுக்குழு	திருமண மாகாதவர்	தன்மையில் திருமணமானவர்	விதவை	விவாகரத்து அல்லது தள்ளி வைக்கப்பட்ட வர்கள்	மொத்தம்
10-14	88.24	11.66	0,06	0.04	100.00
15-19	42.95	56.33	0.34	0.38	100.00
20-24	9.06	89.40	0.90	0.64	100.00
25-29	1.95	95.56	1.85	0.64	100.00
30-34	0.85	94.53	3.95	0.67	100.00
35-39	0.54	91.76	6.99	0.71	100.00
40-44	0.58	84.57	14.19	0.66	100.00
45-49	0.43	78.50	20.43	0.64	100.00
50	0.42	45.26	53.92	0.46	100.00
எல்லா வயதினரும்	21.94	65.04	12.55	0.47	100.00

எழுத்தறிவும் கல்வியும்

எழுத்தறிவுள்ளவனாக ஒருவன் கருதப்பட வேண்டுமெனில் எந்த மொழியிலாவது ஒருவன் புரிந்து எழுதவும் படிக்கவும் தெரிந்தவனாக இருக்கவேண்டும் என்று 1971 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் எழுத்தறிவு மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பொதுவான எழுத்தறிவு 1951 – 61-ல் 24 சதவீதம் உயர்ந்து 1961 – 71-ல் 29 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்தியப்

பெண்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. ஆண்களின் எழுத்தறிவு சதவீதத்தைவிடவும் பெண்கள் சரி பாதிக்கும் குறைவாகத்தான் 1971 கணக்கெடுப்பின்படி எழுத்தறிவு வாய்ந்தவர்களாக உள்ளனர். பள்ளிக்கோ கல்லூரிக்கோ சென்று கல்வி பெறாதவர்களின் எண்ணிக்கையும் அதிக அளவில்தான் உள்ளது.

இந்தியாவில் எழுத்தறிவு முன்னேற்றம் 1901 முதல் 1971 வரை

மக்கள்தொகை ஆண்டு	மக்கள்தொகையில் சதவீதம்		
	மொத்தம்	ஆண்	பெண்
1901	5.35	9.83	0.69
1911	5.92	10.56	1.05
1921	7.16	12.21	1.81
1931	9.50	15.59	2.93
1951	16.67	24.95	7.93
1961	24.02	34.44	12.95
1971	29.46	39.45	18.72

Source : Registrar General and Census Commissioner of India Pocket Book of Population Statistics, Census Centenary 1972. p. 65.

வேலை பார்ப்பவர்கள் தொகை

ஒரு நாட்டின் மக்கள்தொகையை வேலை பார்ப்பவர்கள் வேலையற்றவர்கள் என்று வகைப்படுத்தி ஆராய்வதும் உண்டு. ஏதாவது பொருளாதார உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் வேலை பார்ப்பவர்கள் என்று கருதப்படுவர். இவர்கள் 18—60 வயதுக்குட்பட்டவர்கள். இதைத் தவிர்த்த மக்கள்தொகையினர் (வேலை பார்க்காத பெண்கள் உட்பட) வேலை பார்க்காதவர்கள் என்றும் அடுத்தவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள் என்றும் கருதப்படுவர்.

வேலை பார்ப்பவர்கள் எண்ணிக்கையின் அட்டவணை (1971)

ஆண்டு	வேலைபார்ப்பவர்		வேலையற்றவர்		மொத்தம்	
	மொத்தம் கோடி	%	மொத்தம் கோடி	%	மொத்தம் கோடி	%
1901	11.1	46.61	12.7	53.39	23.8	100
1911	12.1	48.07	13.0	51.93	25.2	100
1931	15.8	46.92	13.3	53.08	25.1	100
1951	13.9	39.10	21.8	60.90	35.6	100
1961	18.9	42.98	25.0	57.02	43.6	100
1971	18.03	33.54	36.63	6.46	54.7	100

Government of India, Census of India 1971.

வினாக்கள்

1. இந்தியச் சமூகத்தின் அடிப்படைக் கூறுகளை ஆய்க.
2. இந்தியக் கிராமங்களின் பொதுத் தன்மைகள் எவை?
3. வட்டாரத் தன்மையின் எழுச்சியை விளக்குக.
4. இந்தியச் சமூகத்தில் சமயத்தன்மைகள் எவ்வகையில் வேரூன்றியுள்ளன?
5. இந்தியப் பழங்குடியினரின் மரபு இனக் கூறுகள் எவை?
6. இந்தியாவின் மக்கள்தொகை அமைப்பை விளக்குக.

2. சமயம்

மனிதன் தன் அன்றாட நடவடிக்கைகளை நிறைவேற்ற சில வழிமுறைகளைப் பின்பற்றுகிறான். பொருளாதார அமைப்பு களையும் தொழில் நுணுக்க முறைகளையும் இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். தனது உயிரியல் அடிப்படையிலான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இந்த வழிமுறைகள்மூலம் மனிதன் இயற்கையுடன் தொடர்புகொள்கிறான். மனிதன் பிற மனிதர்களுடன் தொடர்புகொள்ள மொழி, கல்வி,சமூக அமைப்பு போன்றவற்றைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறான். இது தவிரவும் மனிதனின் வாழ்க்கையில் கண்ணுக்குப் புலனாகா தனவும் உணரமுடியாதனவும் ஊடாடுகின்றன. இவற்றினோடு மனிதன் தொடர்பு கொள்கின்ற கருவியே சமயம். இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மை குறித்து மனிதர்கள் கொண்டிருக்கும் கருத்தினைச் சமயம் விளக்குகின்றது. அதனோடு மனிதன் அனு சரித்துப் போகும் தன்மையைச் சமயம் வெளிப்படுத்துகின்றது என்றும் கூறலாம். நாகரிகம் (Civilization) சமயத்தைத் தோற்று வித்தது என்று முன்பு கருதப்பட்டது. பழங்குடியினருக்கும் தங்களுக்கே உரித்தான சமயங்கள் உண்டென்றும் அவை நாகரிக மடைந்த மக்களின் சமயங்களிலிருந்து அவ்வளவாக வேறுபாடுகள் கொண்டவை அல்ல என்றும் மானிடவியலாளர் டைலர் (Tylor) உறுதிப்படுத்தினார். இக்கருத்தை எந்த மானிடவியலாளரும் பின்பு மறுக்கவில்லை. இதன் மூலம் இந்த பூமியில் வாழும் எந்தச் சமுதாயமும் சமய நம்பிக்கை அற்றதாகயில்லை என்ற உண்மை உறுதி செய்யப்பட்டுவிட்டது.

நம்பிக்கையும் சடங்குகளும்

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியுடன் மனிதன் தொடர்பு கொள்கின்ற உளப்பாங்கைக் கொண்டதே சமயம். இந்த உள்ளத் தோரணையை (Attitude) நம்பிக்கை (Belief) சடங்குகள் (Rituals) என்ற இருவழிகளில் வெளிப்படுகின்றது. இந்த நம்பிக் கைகளைப் புனைந்துரை கதைகள் (Myths) என்று நாம் தவறாக அழைக்கின்றோம். நான் புனைந்துரைக் கதைகள் என்று அழைப்பனவற்றை மக்கள் உண்மையென நம்புகின்றனர். எனவே இவற்றை சமய நம்பிக்கைகள் என்று அழைப்பதே பொருத்தம்.

எல்லாச் சமயங்களுக்கும் நம்பிக்கைகளும் சடங்குகளும் அடிப்படையாக உள்ளன. சடங்குகள் என்பது, கண்ணுக்குப் புலனாகா சக்திகளுடன் மனிதன் இன்ன வகையில்தான் தொடர்பு கொள்ளவேண்டும் என்று உரைப்பது. நம்பிக்கைகள் இல்லையேல் சடங்குகளில்லை. சடங்குகளுக்கு நம்பிக்கைகள் தான் ஆதாரம். சடங்குகளுக்கும் காரண காரியங்களைக் கூறி நிலைநிறுத்துவன நம்பிக்கைகளேயாகும்.

உயர் சமயங்களுக்கும் பழங்குடிச் சமூகத்தினர் சமயத்திற்கு முள்ள வேறுபாடு தத்துவமாகும். உயர் சமூகங்களில் எல்லாம் தத்துவ விளக்கமாக இருக்கும். பழங்குடிச் சமயத்தில் இதனைக் காண முடியாது. பழங்குடிச் சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இத்தன்மையில்லை என்றாலும் ஏதாவது ஒரு வகையில் சமயத்தை அவர்கள் பின்பற்றித்தான் வருகின்றனர். மனிதர்களின் வாழ்வில் சமயம் இன்றியமையாதவை என்று உங்(Jung) கருத்து தெரிவித்துள்ளார். சமயம் இல்லையேல் மனிதனின் ஆளுமையில் ஒருங்கிணைந்த தன்மை உருவாகாது என்றும் அவர் கருதுகின்றார்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட (Supernatural) சமூகம் குறித்த கருத்துகள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும். சில சமூகங்களில் பேய்களும் ஆவிகளும் அதனை ஆளுவதாக நம்புகின்றனர். சில. வற்றில் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஆதிக்கம் செய்கின்ற கடவுளர்கள் வாழ்வதாக நம்புகின்றனர். சிலர் பல கடவுள் களையோ ஒரு கடவுளையோ அங்கு வாழ்வதாக நம்புகின்றனர்.

பல்வேறு பழங்குடியினரையும் ஆராய்ந்தபோது அவர் இரண்டுவிதமான அம்சங்களைவேறுபடுத்திஉணருவதாகத்தெரிய வருகின்றது. புனிதமானவை என்று சிலவற்றையும் சிலவற்றைப் புனிதமற்றவை என்றும் அவர்கள் கருதுகின்றனர். சமயம் புனித மானது என்று கருதப்படுகின்றது. மாய மந்திரம் (Magic) அல்லது பழங்குடியினரின் அறிவியல் புனிதமானது அல்ல என்று கருதப் படுகின்றது.

இந்தியாவில் சமயத்தின் சமூகச் செயல்பாடுகள் (The Social Roe of Religion in India)

சமயம் தனி மனிதர்களின் விருப்ப ஆர்வங்களை நிறைவேற்று கின்ற ஒன்று எனினும் அதில் சமூகத் தன்மைகள் பல உள்ளன. சமூகத்திற்காக அது பல செயல்களைச் செய்கின்றது. கடவுளின் இடத்தைத் திருக்கோயில்களோ திருச்சபைகளோ பெற்றுக்

கொள்கின்றன, என்று கூற முடியாது. மாறாக மனிதன் தோழமை உணர்வோடு பிறருடன் சேர்ந்து கடவுளை இந்த அமைப்புகள் மூலம் அடைந்துகொள்ள விழைகின்றான் என்றுதான் கூற வேண்டும்.

ஆர்னால்ட் டபிள்யூ. கிரீன் (Arnold W. Green) கருத்துப்படிச் சமயம் மூன்று செயல்பாடுகளை ஆற்றுகின்றது. இவை எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தும்.

முதலாவதாக உலகில் மனிதன் அனுபவிக்கும் துன்பங்களைப் பகுத்தறிவுக்குப் பொருந்தும் வகையில் கூறி பொறுத்துக் கொள்ளச் செய்கின்றது.

இரண்டாவதாகத் தான் எனும் தன்மையை (self) மேனிலைப் படுத்துகின்றது.

மூன்றாவதாகச் சமூக மதிப்பீடுகளை இணைத்து சமூகத்தை ஒருங்கிணைந்த சக்தியாக்குகின்றது.

தனி மனிதர்களின் துன்பங்களுக்கு விளக்கம்

மனிதன் அறிவின் துணையினால் மட்டுமே வாழமுடியாது. அவன் உணர்ச்சிகளின் மொத்த வடிவம். அவன் துன்பப்படும் போதும் ஏமாற்றத்திற்குள்ளாகும்போதும் அவனுக்கு ஏற்படும் உணர்ச்சிகளை சமயம் இதப்படுத்தி அமைதியளிக்கிறது. நம்பிக்கை களுக்கும் வெற்றிகளுக்குமிடையேகூட மனிதனுக்கு ஏமாற்றங் களும் மனச் சோர்வும் ஏற்படுகின்றன. அவன் விரும்புவது எப் போதும் கைக்கு கிட்டுவதில்லை. நம்பிக்கைகள் முறிந்துவிடும் போதும் திட்டங்கள் தவிடுபொடியாகிவிடும்போதும் அவனுக்கு அமைதிபடுத்த ஒன்று தேவைப்படுகின்றது. சமயம் அதனை நிறை வேற்றுகின்றது. பெருந்தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளா னவர்களுக்குச் சமய நம்பிக்கைகள் அரணாக நின்று மனம் குலையா மலிருக்க உதவி வருகின்றது. திடீரென குடும்பத்தில் சாவு வரும் போது சமயம்தான் இழப்பை ஈடு செய்து மனஅமைதி அடையச் செய்கின்றது. இறைவனின் திருவுள்ளம் இப்படியிருக்குமெனில் யாரால் மாற்றமுடியும் என அமைதிகொள்கின்றான். தனது இழப்பை ஈடு செய்து வேறு வகையில் கடவுள் துணை நிற்பான் என்று நம்பிக்கை கொள்கிறான். கடவுள்மீதுள்ள நம்பிக்கைதான் துன்பங்களைப் பொறுத்து உலக வாழ்க்கையில் அவன் மீண்டும் நம்பிக்கையோடு ஈடுபட உதவுகின்றது. பகுத்தறிவு ஓர் எல்லை வரைக்கும் சென்றுதான் துணைபுரியும். அறிந்துகொள்ள முடியாத எல்லைகளுக்குச் சமயம் ஒன்றுதான் விளக்கம் அளிக்க

முடியும். புரிந்துகொள்ள முடியாத புதிரானச் செயல்களைச் சமய நோக்குடன்தான் அணுகி அறிந்துகொள்ள முடியும். இந்த வகையில் துன்பத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும் சமயம் மனிதனுக்கு விடுதலை அளிக்கின்றது.

நான் எனும் தன்மையை மேனிலைப்படுத்துகின்றது

சமயம் மனிதனின் தான் எனும் தன்மையை விண்ணையும் மண்ணையும் கடந்த இறைவனுடன் ஐக்கியப்படுத்துகின்றது. இதனால் ஒருவன்தான் இந்தப் பூவுலகில் மிக நுண்ணிய பொருள் என்பதனை மறந்து ஐம்பூதங்களில் நாதனோடு இணைந்தவன் என்று எண்ணி இறுமாப்பு கொள்கின்றான். கடவுளின் படைப்பில் அருமையான படைப்பே மனிதன். கடவுளின் உருவத்தையே அவனும் பிரதிபலிக்கிறான்; தன் தாயும் தந்தையுமாகிய இறைவனுடன் ஐக்கியமாகி வீடு பேற்றை அடைவது தான் வாழ்க்கையின் பெரும் பேறு என்று மனிதன் பெருமகிழ்வு கொள்கிறான்.

இந்தச் சமய நம்பிக்கையால் மனிதன் தற்புகழ்ச்சி பெற்றுக் கொள்வதனால் சமூகத்திற்கும் மொத்தமாக நன்மை கிடைக்கின்றது. பூவுலகில் ஏற்படும் தோல்விகள் விண்ணுலகில் கிடைக்கும் வெற்றிக்குப் படிக்கட்டுகள் என்று சமயம் உறுதியளிக்கின்றது. உலக வாழ்க்கையில் வெற்றி கிட்டினால் அனுபவித்துக் கொள் என்றும் சமயம் போதனை செய்கின்றது. இதனால் மன வெறுப்புகளையோ வெற்றி தோல்விகளையோ கருத்தில் கொள்ளாமல் மனிதர்கள் சமூகத்தில் தங்களுக்குரித்தான பணிகளில் ஈடுபடுகின்றனர்.

சமூகத்தை ஒருங்கிணைந்த சக்தியாக்குகிறது

சமயம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துகின்றது. சமூக மதிப்பீடுகளை எல்லோரும் பொதுவானதாகக் கொண்டிருந்தால்தான் தனி மனிதர்களின் நடத்தை கட்டுப்படுத்தப்பட்டு சமூகம் தொடர்ந்து செயல்படும். சமூக மதிப்பீடுகள் அனைத்தும் அறிவியல் கண்ணோட்டத்தில் நிரூபிக்கப்படவில்லை. சமய நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் அவை இயங்குகின்றன. அறிவியல் இத்தகைய மதிப்பீடுகளை உருவாக்க முடியாது. சமூக மதிப்பீடுகளை ஆராயாமலிருப்பதும் அவை தீவிரமாகச் செயல்பட ஒரு வகையில் உதவுகின்றது என்றுதான் கூறவேண்டும்.

குழந்தைகள் பெற்றோர்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். பொய் சொல்லக் கூடாது. அடுத்தவர்களை ஏமாற்றக் கூடாது;

பெண்கள் கற்புடையவர்களாக நடந்துகொள்ள வேண்டும். மக்கள் நாணயமுள்ளவர்களாகவும் நல்லெண்ணம் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். இவைகள் சமூக மதிப்பீடுகளில் ஒரு சில. இத்தகு மதிப்பீடுகள் சமூக ஒற்றுமையை உருவாக்குகின்றன.

சமூகத்திற்கு ஒவ்வாத நடத்தைகளை மனிதன் ஒழிக்க வேண்டும் என்று சமயம் அறிவுறுத்துகின்றது. போதுமென்ற மனமே வேண்டும் என்று தனி ஆசைகளுக்கு வரம்பு கட்டச் சமயம்தான் கூறுகின்றது. சமயம் அன்பையும் தொண்டுள்ளத்தையும் பெற்றுக்கொள்ள வலியுறுத்துகின்றது. எல்லாச் சமயங்களும் இவற்றினை போதித்துள்ளன. சமூகத்தை ஒட்டி வாழ வேண்டும் என்ற எண்ணத்தைச் சமயம் விதைத்துள்ளது. நாகரிகமடைந்த சமூகத்திலும் பழங்குடியினர் சமூகத்திலும் சமயம் சமூகமயமாக்குதல் (Socializing) மூலமும் கட்டுப்படுத்துவதன் மூலமும் சமூகத்தை ஒருங்கிணைக்கிறது. என்று பிளாக்மார், கில்லின் (Blackmar and Gillin) ஆகியவர்கள் கூறுகின்றனர். சமூகக் கட்டுப்பாட்டைச் சமயத்தின் முக்கியமான செயல்பாடாகக் கூறலாம். காட்டுமிராண்டித்தனமான குழப்பத்தைச் சமூகத்திலிருந்து ஒழித்துப் பணிவையும் பக்தியையும் வளர்த்தது சமயமேயாகும்.

பொருளாதார அரசியல் இல்லற நிறுவனங்களை (Institutions) நன்முறையில் வடிவமைத்ததிலும் சமயத்திற்குப் பங்கு உண்டு. இல்லறத்தில் பல்வேறு சடங்குகள் சமயத்தின் பெயரால் நடைபெறுகின்றன. பிறப்பு, பெயர் சூட்டல், திருமணம், நோய், மரணம், வேட்டையாடுதல், மாடுகளைப் பராமரித்தல் போன்றவற்றினோடு சமயச் சடங்குகள் பின்னிப் பிணைந்துள்ளன. குடும்பத்திலுள்ள உறவினர்களோடும் அரசியல் அடிப்படையிலும் சமயச் சடங்குகள் விரவிக் காணப்படுகின்றன. நாகரிகத்தின் மையக் கருத்தாகவும் சமயம் நிலவிவருகின்றது.

சமூகத்தின் சேமநலம்

சமூகத்தின் சேமநலத்தைச் சமயம் மேம்படுத்துகின்றது. வேலைக்கு வாய்ப்பளித்தல், செல்வம் குவிதல், ஓய்வை அனுபவிக்கும் வகுப்பினரை உருவாக்குதல் போன்றவற்றிற்கும் சமயத்திற்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. சமய குருமார்கள் கலைப் பண்பாட்டிற்கு அதிகம் தொண்டாற்றியுள்ளனர் என்பதனையும் எண்ணிப் பார்க்கவேண்டும். மருத்துவத்திற்கு அடித்தளம் அமைத்தவர்களும் அவர்களே. நுணுகி ஆராய்ந்து சோதனைகள்

நடத்தும் அறிவியல் முறையை உலகிற்கு அளித்தது சமயத்தின் கூறான மாயமந்திரமாகும். கல்வியைப் பரப்பி மக்களின் அறியாமையை அகற்றியதும் சமயமேயாகும். மன்னித்து மறக்கவேண்டும், கொடுத்து உதவ வேண்டும் என்பதையெல்லாம் சமயங்கள்தான் மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. தான தருமங்களைச் செய்ய வேண்டும் என்று சமயங்கள் போதித்ததை ஏற்றுதான் பலர் அன்னசத்திரங்களையும், மருத்துவ நிலையங்களையும், திருக்கோயில்களையும் ஏற்படுத்தினர். இதனால் ஏழைகள் உதவி பெற்றனர்.

சமயத்தின் பலவீனம்

சமூகத்தை ஒன்றுசேர்க்கும் சக்தியாகச் சமயம் இருந்த போதிலும் சில நேரங்களில் சமூகத்தை அழிவுப் பாதையிலும் இழுத்துச் சென்றிருப்பதை மறந்துவிட முடியாது. சமயம் மக்களுக்கு அபினைப் போன்றது. என்று காரல் மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார். ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும் மக்களைக் கறையேற்றாமல் விதி என்று பேசி சமயம் முட்டாளாக்குகின்றது. சமயங்களின் வரலாற்றை ஆராய்ந்தால் அவை எவ்வளவு தூரத்திற்கு மக்களைத் துன்பத்திற்குள்ளாயிருக்கின்றன என்று அறிந்து கொள்ளலாம். சமயங்களின் பெயரில் போர்கள் நிகழ்ந்துள்ளன. பல நேரங்களில் சமயத்தின் பெயரால் சமூக முன்னேற்றம் தடை செய்யப்பட்டுள்ளது. சிந்தனைச் சுதந்திரம் பறிக்கப்பட்டு மக்கள் அல்லலுற்றிருக்கின்றனர். சமயங்கள் பல நேரங்களிலும் சுரண்டலையும் சோம்பேறித்தனத்தையும் வளர்த்துள்ளன. தற்கொலை, அடிமைத்தனம், தீண்டாமை போன்றவற்றிக்கு ஆதரவு அளித்துவந்திருக்கின்றது. சமயம் ஏதாவது ஒரு வகையில் தீநெறிக்கு அரணாக இருந்து வந்திருக்கின்றது. சமயங்கள் பழமையையும் மூட நம்பிக்கையும் விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு புதுமைக்கும் அறிவியலுக்கும் தடைக்கல்லாக இருந்திருக்கின்றது

நமது நாட்டில் சமயத்தின் பேரால் பிணக்குகள் ஏற்பட்டன. சமயத்தின் அடிப்படையில் நாடு கூறுபோடப்பட்டது. உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

சமயத்தின் பேரால், சமுதாயத்தில் பல சேதங்கள் விளைவிக்கப்பட்ட போதிலும் காலங்காலமாக சமயம் நிலைத்து நிற்பதனால் அதன் மதிப்பை உணர்ந்துகொள்ளலாம்.

கிராமச் சமயம் (Rural Religion)

கிராம மக்களுக்கு நகரில் வாழ்பவர்களைவிட சமயப்பற்று அதிகம் இருப்பதாகச் சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

இயற்கையை நம்பி வேளாண்மை செய்வதும் அறிவியல் அடிப் படையில் சமூக இயற்கை உலகைக் குறித்து அவர்கள் அறிந்து கொள்ளாமலிருப்பதும் அதிக சமய நம்பிக்கைக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

உலகைக் குறித்து விசித்திரமானக் கருத்துகளைக் கொண்ட சமயம் கிராம மக்களின் மனத்தில் வேரூன்றியிருக்கிறது. ஆவி யுலகக்கோட்பாடு, மாய மந்திரம், பல கடவுள் வழிபாடு, பேய்மீது நம்பிக்கை ஆகியவை கிராம மக்களின் நம்பிக்கையில் ஊறிப் போனவைகளாகக் காட்சியளிக்கின்றன.

கிராம மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் உணர்ச்சி மயமான வாழ்க்கை முறைகளும் சமயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நடைபெறுகின்றன. அவர்களின் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் சமய எண்ணங்களின் சாயல் படர்ந் துள்ளது. கிராமியக் கலை, நாடோடிப் பாடல்கள், திருவிழாக்கள் போன்றவற்றிலும்கூட சமய நம்பிக்கை பலமாக முத்திரை பதித்துள்ளது.

இந்தியக் கிராமங்களில் புரோகிதம் செய்யும் சாதியான பிராமணர்கள் தலைமைதான் பலவிடங்களிலும் காணப்படு கின்றது. சமயக் கோட்பாட்டின்படிதான் எல்லாரும் நடந்து கொள்ளவேண்டும் என்று போதிக்கப்படுகின்றனர். இதனால் சமூகம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில் கிராமங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பொருளாதார நடவடிக்கையில் மாற்றம் நிகழ்ந்தன. ஊர் பஞ்சாயத்து முறைகள் முன்புபோல் பின்பற்றப்படவில்லை. சமயச் சார்பற்ற நடவடிக்கைகள் மெல்லப் பரவத் தொடங்கின. சமய நம்பிக்கைகள் மெல்ல மெல்லத் தளர்ந்தன. கிராம மக்களின் வாழ்க்கையிலும் மாற்றங்கள் புகுந்தன.

போக்குவரத்து வசதிகள் பெருகி கிராமங்களை நகரங் களுடன் இணைத்தன. அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் கிராமங்களில் பெருகினர். கட்சிகளின் பல வர்ணக்கொடிகள் கிராமங்களில் தோரணங்களாகக் காட்சியளிக்கின்றன. இக்கட்சி களின் சமயச் சார்பற்ற கொள்கைகள் கிராம மக்களின் மனத்தில் பதிந்து, பழமையானச் சமய நம்பிக்கைகளின் பிடியைத் தளர்த்தி வருகின்றன.

இப்போது கிராமங்களில் இரண்டு சக்திகளுக்கிடையே போராட்டம் நடைபெறுகின்றது. பாரம்பரியமாக வந்த சமய

நம்பிக்கை ஒரு புறம். புதிய சமயச் சார்பற்ற கோட்பாடுகள் மறுபுறம். இதன் காரணமாக கிராமியச் சமயங்கள் குறித்து கற்க வேண்டியது இப்போது அவசியமாகி விட்டது.

கிராமச் சமயத்திற்கும் நகர்ப்புறச் சமயத்திற்குமுள்ள வேறுபாடுகள்

கிராமச் சமுதாயங்களில் பின்பற்றப்படும் சமயம் பழமையானவை. பல்வேறு நம்பிக்கைகள் பாரம்பரியமாகப் பின்னிபிணைந்துள்ளன. ஆவியுலகக் கோட்பாடுகளும் புராண இதிகாச நம்பிக்கைகளும் சமயத்தில் வேரூன்றிக் காணப்படுகின்றன. பேய் பூதங்களின் அச்சத்திற்கு கிராம மக்கள் ஆட்பட்டிருக்கின்றனர். நகர்புற மக்களின் சமயமோ இதற்கு முற்றிலும் மாறுபட்டது. சமயம் நுணுக்கமான தத்துவங்களாகப் பரிணமித்துள்ளது. மனித வாழ்க்கை, இறையுணர்வு ஆகியவை குறித்து புதிய சமய சித்தாந்தங்கள் எழுந்துள்ளன. சமயம் இலகுவானதாக எல்லோருக்கும் அறிவியல் அடிப்படையில் புரிந்துகொள்ளும் வகையில் போதிக்கப்படுகின்றது. மூடநம்பிக்கைகளோ, தனிப்பட்ட வகுப்பினரோ நகர்புறச் சமயத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பில்லை.

கிராமச் சமயம் கொள்கைகளைத் திட்டவட்டமாக வலியுறுத்துவதாக உள்ளது. இதன் அமைப்பு முறை பழங்காலத் தன்மை வாய்ந்தது. ஆனால் நகர்ப்புறச் சமயமோ அருவ நிலை (Abstract) கொண்டது. தத்துவங்கள்தான் சமயத்தை உணர உதவி செய்கின்றது. எண்ணற்ற கடவுள் உருவங்களின் முன்பு கிராம மக்கள் மண்டியிட்டு வழிபடுகின்றனர். நகர்ப்புற மக்கள் ஆத்மா, பரமாத்மா என்பது குறித்து தத்துவ விசாரணை மூலம் உலகைப் புரிந்துகொள்ள முயலுகின்றனர். காரண காரியங்களை ஆராயும் பகுத்தறிவுக் கோட்பாடுகளும் பொருள்சார் தத்துவங்களும் நகர்ப்புறங்களில் மதிப்புப் பெற்று வருகின்றன.

கிராமச் சமயங்கள் நிலையானதாகவும் தோன்றிய நிலைமையிலேயேயும்தான் காணப்படுகின்றன. நகர்ப்புறங்களில் பல்வேறு சித்தாந்தங்களின் காற்று வீசத் தொடங்கிவிட்டது. பகுத்தறிவு வாதமும் பொருள்சார் தத்துவங்களும் கிராமப் புறங்களில் அதிகமும் ஊடுருவவில்லை.

கிராமங்களில் நிலவும் சூழலுக்கு இயைந்தவாறுதான் சமயமும் இருக்கின்றது. அறியாமையிலும் அச்சத்திலும் கிராமச் சமயம் வேரூன்றித் தழைத்திருக்கின்றது. ஆனால் நகர்ப்புறச் சமயத்தின்

தத்துவ விளக்கத்தில் முரண்பாடுகளும் தவறுகளும் நிறைந்திருந் தாலும், அச்சத்தின் அடிப்படையில் அவை உருவாகவில்லை என்பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும். இந்த வகையில் உளவியல் அடிப்படையில் இரு சமயங்களுக்கும் வேறுபாடுகள் நிலவுகின்றன.

கிராமச் சமயத்தின் மூன்று தன்மைகள்

கிராமச் சமயங்களைக் கீழ்க்காணும் மூன்று அம்சங்களின் அடிப்படையில் ஆராய வேண்டும் என்று ஏ.ஆர். தேசாய் கூறுகின்றார். அவை :

1. அகிலம், உலகம் ஆகியவை குறித்துக் கிராமச் சமயம் அறிவுறுத்துவது.
2. கிராம மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கிராமச் சமயம் எவ்வகையில் வலியுறுத்துகின்றது.
3. கிராமச் சமயம் எவ்வகையில் நிறுவனத் தொகுப்பாக (Institutional Complex) இருக்கின்றது.

இந்த மூன்று தன்மைகளையும் கீழ்க்காணும் வகையில் விளக்கமாக உரைக்கலாம்:

1. உலகக் கண்ணோட்டம்

கிராமச் சமயம் கீழ்க்காணும் தன்மைகளை உள்ளடக்கி, உலகைப் பார்க்கின்றது; (அ) மாயமந்திரத் தன்மைகள்; (ஆ) ஆவியுலகக் கோட்பாடு; (இ) பேய் பூதங்களின் உலகம்; (ஈ) புராண இதிகாசங்கள். அகிலம் குறித்து கிராமச் சமயம் தனக்கே உரித்தான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கின்றது. இறந்த முன்னோர்கள் வாழும் உலகம் (பித்துருலோகம்), ஆவிகள் வாழும் உலகம் (பிரிதுலோகம்),கடவுள்கள் வாழும் உலகம்(தேவலோகம்), சொர்க்கலோகம் (வைகுந்தம்) ஆகிய பல்வேறு உலகங்களைச் சேர்ந்ததுதான் அகிலம் என்று கிராமச் சமயம் போதிக்கின்றது. கருவுற உதவும் தெய்வம், தொத்து நோய்களைப் பரப்பும் தெய்வங்கள், நதிகளின் தெய்வம், வனதெய்வங்கள் ஆகியவை வாழும் உலகங்களும் அகிலத்தில் உள்ளன என்று அச்சமயம் கருதுகின்றது. எல்லாத் தன்மைகளிலும் ஆவிகள் இருப்பதாக நம்புகின்றது.

இயற்கையின் தன்மைகள் குறித்து அறிவியல் அடிப்படையிலான அறிவு இல்லாததனால்தான் கிராம மக்கள் இத்தகைய

நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். இந்த அறியாமை அச்சத்தை வளர்த்து சமய நம்பிக்கைகளைப் பலப்படுத்துகின்றது.

2. நடைமுறைச் சடங்குகள்

கிராமச் சமயத்தில் நடைமுறைச் சடங்குகளாகப் பிரார்த்தனை, பலி கொடுத்தல், சடங்குகள் என்று மூன்று வகைச் சமய நடைமுறைச் சடங்குகள் உள்ளன.

தனி மனிதர்கள் பல்வேறு கடவுள் உருவங்களுக்கும் வீட்டிலும் வெளியிலும் பிரார்த்தனை செய்கின்றனர். வீட்டில் குலதெய்வங்களை வழிபடுகின்றனர்.

ஒவ்வொரு சாதியினரும் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை வழி படுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் சில இடங்களில் ஒவ்வொரு தெருவிற்கும்கூட சில்லறைத் தேவதைகள் உள்ளன.

எல்லோருக்கும் பொதுவாகக் கிராமத்தில் கோயில் உள்ளது. இங்கும் வழிபாடு நடத்தப்பெறும். ஆற்றோரக் கிராமங்களில் நதி தேவதைகளுக்கும், காட்டுப் பகுதி கிராமத்தில் வனதேவதை களுக்கும் வழிபாடு செய்யப்படும்.

கோயில்களில் நடத்தும் வழிபாடு தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளன. தீண்டத் தகாதவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் கோயில்களில் வழிபாட்டு உரிமை வேண்டும் என்று போராடி வென்றிருக்கின்றனர். சமய உரிமை பெற அரசியல் அடிப்படை தேவைப்பட்டிருக்கின்றது.

கிராமச் சமயம் பல்வேறு பலி கொடுத்து வழிபாடு நடத்த வலியுறுத்துகின்றது. இந்த வகையில் ஒரு துளித் தண்ணீரைத் தெளிப்பதும், இலைகளை கடவுள் உருவத்தின் முன்பு தூவுவது,பலி கொடுப்பது என்றுதான் கருதப்படும். தானியங்களை அளிப்பதும் மிருகங்களைப் பலி கொடுப்பதும் உண்டு. நரபலி கொடுக்கும் வழக்கமும் இருந்துவருகின்றது.

கிராமச் சமயங்களில் தெய்வங்கள் குறித்தும் சடங்குகள் குறித்தும் விளக்கங்கள் அதிகம் உள்ளன. இத்தகைய சடங்குகள் கிராமங்களில் தொகுப்புநிலை வாய்ந்தனவாக உள்ளன. வாழ்க்கையில் முக்கியமற்ற பலவற்றிற்கும்கூட சடங்குகள் உள்ளன. இவை ஒவ்வொரு சாதிக்கும் வேறுபட்டுக் காணப்படு கின்றன. இவற்றை மீறுபவர்கள் சாதியிலிருந்து விலக்கி வைக்கப் படுவதும் உண்டு.

உணவு அருந்தும்போதும் குளிக்கும்போதும் தொழில் செய்யும் போதும்கூட சில சடங்குகளை ஒருவன் செய்யவேண்டும். விவசாயிகள் வேளாண்மை தொடங்கும்போதும் அறுவடையின் போதும் சில சடங்குகளைச் செய்கின்றனர்.

3. நிறுவனத் தொகுப்பு

இந்து சமயத்தில் பல்வேறு கிளைச் சமயங்களும் உட்கிளைச் சமயங்களும் உள்ளன. இவைகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலையங்களும் கிராமப் புறங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரிச் சமய அமைப்புகள் பல தேசிய அளவில் உள்ளன. வேறு சில குறுகிய வட்டத்திற்குள் செயல்படுகின்றன. இவைகள் மடங்களையும் ஆசிரமங்களையும் ஏற்படுத்தியுள்ளன; நிலபுலன் களும் உள்ளன. இத்தகைய நிறுவனங்கள் சமயப்பிரச்சாரர் களை நிலையாக வேலைக்கு அமர்த்தியுள்ளன.

சங்கராச்சாரியார் மடம், திருப்பனந்தாள் மடம், திருவாவடு துறை ஆதீனம் என்பவை இத்தகைய வசதிவாய்ந்த இந்து சமய நிறுவனங்களாகும்.

இந்தியக் கிராமச் சமயங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நமது பழங்காலப் பண்பாட்டு முறைகளைத் தெளிவாக அறிந்துகொள்ள இத் தகைய ஆய்வு உதவி செய்யும்.

பழங்குடியினரின் சமயம்
(Tribal Religion)

இந்தியப் பழங்குடியினரின் சமயம் ஆவியுலகக் கோட் பாட்டைக் கொண்டது என்று அண்மைக் காலம் வரையிலும் நம்பப்பட்டது. இதனால் மாய மந்திரம் பழங்குடியினர் வாழ்க்கை யில் அதிக ஆதிக்கம் செலுத்திவந்ததாகவும் கருதப் பட்டது. வாழ்க்கையின் பல்வேறுத் துறைகளையும் பல ஆவிகள் ஆதிக்கம் செலுத்துவதாகவும் அவற்றினை மகிழ்ச்சிப்படுத்த வில்லையெனில் துன்பம் விளைவிக்கும் என்று நம்புவதே ஆவியுலகக் கோட்பாடு.

கோர்வா (Korwa) பழங்குடியினர் பயிர்களுக்கான ஆவி, நீர் வீழ்ச்சி ஆவி, கால்நடைக்கான ஆவி என்று பல ஆவிகள் உள்ளன என்று நம்புகின்றனர். நன்மைகளைச் செய்யும் ஆவிகள் என்றும் தீமைகள் செய்யும் ஆவிகள் என்றும் இருவகை ஆவிகள் உள்ளன.

இவ்வகையில் ஆவியுலகக் கோட்பாடு பழங்குடியினர் சமயத்தில் இணைந்துள்ளது உண்மையே. ஆவியுலகக் கோட்பாடு தான் அவர்கள் சமயம் என்று சொல்வது சரியாகாது. இத்தகைய கருத்தை முதலில் கூறியவர் ஹட்டன் (Hutton). பழங்குடியினர் சமயத்திற்கும் இந்து சமயத்திற்குமிடையே உள்ள வேறு பாட்டைத் தெளிவாகப் புலப்படுத்த முடியவில்லை என்றும் அவர் கூறுகின்றார். இந்த அளவுக்கு அவையிரண்டும் இணைந்து காணப் படுகின்றன. இந்து சமயத்தில் காணப்படாத பல்வேறு தன்மை கள் கூட பழங்குடியினர் சமயத்தில் காணப்படுகின்றன என்று அவர் கூறுகின்றார். வேத காலத்திற்கு முன்பு நிலவிய இந்து சமயக் கூறுபாடுகள்தான் இப்போது பழங்குடியினர் சமயத்தில் காணப்படுகின்றன.

பழங்குடியினர்க்கு இந்து கிறித்துவ சமயங்களின் அறிமுகம் உள்ளது. இச்சமயங்களைச் சேர்ந்தவர்கள் பழங்குடியினரைத் தங்கள் சமயத்திற்கு 'சமய மாற்றம்' செய்துள்ளனர். இதனால் பழங்குடியினர்க்குச் சொல்லொண்ணா இடையூறுகள் ஏற் பட்டுள்ளன. நிறையக் கடவுள்களை அவர்கள் வழிபட விரும்பு கின்றனர். இதனால் அவர்களுக்குப் பல வகையிலும் நன்மை கிடைப்பதாக நம்புகின்றனர். சமய மாற்றத்தின் காரணமாக அவர்களுக்கு ஒரு வெறுமைச் சமயம்தான் கிடைத்துள்ளது. அது மாய மந்திரத்திற்கு உட்பட்டதாகவுமில்லை சமயத்திற்கு உட்பட்டதாகவும் இல்லை. அறிவியலைச் சார்ந்ததாகவுமில்லை; போலி அறிவியலைச் சார்ந்ததாகவுமில்லை.

பொங்காயிசம் (Bongaism)

மானாவின் (mana) மீதுள்ள நம்பிக்கைதான் சமயம் தோன்றக் காரணமாக இருந்தது என்று சில மானிட வியலாளர் கள் கருதுகின்றனர். பொருட்களின் மீதுள்ள சக்தியை மானா என்று பழங்குடியினர் கருதுகின்றனர். இச் சக்தியை முண்டா (Munda), ஹோ (Ho) பழங்குடியினரும் சோட்டா நாகபுரியிலுள்ள பழங்குடியினரும் பொங்கா (Bonga) என்றழைக்கின்றனர். இச் சக்தி கண்ணுக்குப் புலனாகாதது. கனவுகள் மூலம் இச் சக்தி எதிர்வரும் நிகழ்ச்சிகளை வருமுன்னே உரைக்கும். கெட்ட சம்பவங்களைப் பகற்கனவுகள் மூலம் அறிவுறுத்தும். எல்லாச் சக்திக்கும் பொங்காதான் காரணம் என்று நம்பப்படுகின்றது. சைக்கிள் வண்டிக்கும் பொங்கா இருக்கின்றது. சக்தி வாய்ந்த நீராவி எந்திரத்திலும் பொங்கா இருக்கின்றது. இவை இரண்டை யும்விட விமானம் பெரிய பொங்கா என்று அவர்கள் கருது கின்றனர்.

தனி மனிதர்களிடையே காணப்படும் வேறுபாடுகளுக்கும் மதிப்புக்கும் அவரவர்களிடையே காணப்படும் பொங்காதான் காரணமாகும். புதிதாக ஒன்று வரும்போது சூழ்நிலையில் புதிதாக அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயம் ஏற்படு கின்றது. இதற்குத் தடையாக இருக்கும் சக்தியும் பொங்கா தான்.

பழங்குடியினர்க்கு வெளியார்த் தொடர்பு ஏற்பட்டதும் அவர்களின் சமயத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. சில பழங் குடியினர்க்கு இம்மாற்றம் முன்னேற்றமாக இருக்கின்றது. பல நன்மைகள் அவர்களுக்கு விளைந்துள்ளன. சோட்டா நாகபுரியி லுள்ள பழங்குடியினர்க்கு இந்து — கிறித்துவச் சமயங்களின் தொடர்பினால் நன்மையே விளைந்துள்ளன என்று ராய் (Roy) கூறுகின்றார். ஆனால் இத்தகைய தொடர்பினால் பல பழங் குடியினரின் சமுதாய அமைப்பில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மையே. நாகர்களின் வாழ்க்கை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். மத்திய பாரதத்தில் இதனால் பல பழங்குடியினர் தங்கள் சக்தியையே இழந்துவிட்டனர் என்று எல்வின் கூறுகின்றார்.

வினாக்கள்

1. சமயத்திற்கும் மாய மந்திரத்திற்குமுள்ள வேறுபாடுகள் எவை?
2. சமூகத்தின் சமூகச் செயல்கள் எவை?
3. கிராமச் சமயத்திற்கும் நகர்ப்புறச் சமயத்திற்குமுள்ள வேறு பாடுகளை விளக்குக.
4. ‘இந்தியப் பழங்குடியினரின் சமயம் குறித்து நீவிர் அறிவ தென்ன?

3. சாதி அமைப்பு

சாதி அமைப்பு இந்தியாவிற்கே உரித்தான ஒரு சமூக நிறுவனம். சாதி அமைப்பினைப் போன்ற வேறு அமைப்புகள் தென்கிழக்கு மற்றும் தென்ஆசிய நாடுகளில் காணப்படுகின்றன. இந்நாடுகளில் உள்ள சாதி அமைப்புகள் சாதித் தன்மைகளைக் கொண்டபோதிலும் முற்றிலும் சாதி அமைப்பு என்று கூற முடியாது. எனவே உலகிலேயே சாதி இந்தியாவிலேதான் அதன் முழுத் தன்மையை வெளிப்படுத்தும் வகையில் காணப்படுகின்றது.

இந்திய சமூக அமைப்பில் சாதித்தன்மைகள் எங்கும் ஊடுருவி உள்ளன. அதன் தன்மைகள் பாதிக்காத சமூகத்துறையேயில்லை என்று கூறலாம். இந்தியச் சமூகத்தில் சாதி முதலும் முடிவுமாகக் காணப்படுகின்றது. இந்துச் சமயத்திலுள்ளவனின் வாழ்க்கையில் தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் சாதி ஆதிக்கம் செலுத்து கின்றது. ஒருவனின் திருமணம், பிறப்பு, உணவு, வேலை, உடை, போன்ற எல்லாச் சமூகச் செயல்களையும் சாதி பாதிக்கின்றது.

சாதி அமைப்பிற்கு நீண்ட நெடுங்கால வரலாறு பின்னணி யாக உள்ளது. இதன் தொடக்கம் எப்போது எவ்வகையில் உருவானது என்பது குறித்துப் பலச் சிந்தனையாளர்களிடமும் வரலாற்று ஆசிரியர்களிடமும் ஒருமித்தக் கருத்துக் காணப்படு வதில்லை. இந்தியச் சமூகத்தில் ஏதாவது ஒருவகையில் சாதி அமைப்பு பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இந்தியாவில் சாதி அமைப்பு இல்லாத சமூகம் எப்போதாவது நிலவியிருக்குமா என்பது ஐயத்திற்குரியதே.

சாதி பல எதிர்ப்புகளைச் சமாளித்து வந்திருக்கின்றது என்பதை வரலாற்றின்மூலம் உணர்ந்துகொள்ளலாம். மன்னர் களும் மகான்களும் சீர்திருத்தவாதிகளும் சாதி அமைப்பை வேரோடு கிள்ளி எறிய வேண்டும் என்று பல காலம் முயன்றும் வெற்றிபெற முடியவில்லை.

மக்களாட்சி முறை இந்தியாவில் சாதி அமைப்பை ஒழித்து விடும் என்று வரலாற்று ஆசிரியர் கே. எம். பணிக்கர் கூறினார். இதுவும் பொய்த்து விட்டது. சாதி அமைப்பு மக்களாட்சி முறையை மாற்றித் தனக்குச் சாதகமாக ஏற்படுத்திக் கொண்டதையும் கண்டோம். பொருளாதாரப் போராட்டத்தில் இந்தியாவின் சாதி அமைப்பு பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்து விடும் என்று சுவாமி விவேகானந்தர் முழங்கினார். இதுவும் நடைபெறவில்லை.

இந்தியாவின் சாதி அமைப்பு பல்வேறு தன்மைகளையும் பரிமாணங்களையும் கொண்டது. இதனால் சாதி அமைப்பை விளக்கி இலக்கணப் படுத்துவது என்பது எளிதானதன்று. பல்வேறு ஆசிரியர்களும் சாதி குறித்து பல்வேறு இலக்கணங்களை அளித்துள்ளனர்.

சாதியின் இலக்கணம்

சாதி அமைப்பை விளக்க முயன்ற பலரும் அதன் பழமைத் தன்மையையும் சமயம் அவ்வமைப்பிற்கு அரணாக நின்றதையும் எடுத்துக்காட்டத் தவறுவதில்லை. இவ் விளக்கங்கள் பலவும் சாதி அமைப்பின் செயல்படும் உளவியல் தன்மைகளையும் வெளிக் கொணர்கின்றன.

''ஒருவரின் அந்தஸ்து முன்னமேயே தீர்மானிக்கப்பட்டும், தன்னுடைய வகுப்பிலிருந்து ஒருவன் மாற முடியாத நிலை ஏற்படும்போதும் சாதி முறை என்ற தீவிர நிலையை அடைகின்றது'' என்று மக்ஐவர் குறிப்பிடுகின்றார்.

ரிஸ்லி (Risley) கீழ்க்காணும் வகையில் சாதியை விளக்குகின்றார். ''புராண அடிப்படையில் மனிதர்களையோ தெய்வத்தையோ மூதாதையராக்கொண்டு பொதுவானப் பெயரைக் கொண்ட பலக் குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு குழு; பரம்பரையானத் தொழிலை மேற்கொள்வர்; ஒருங்கிணைந்த ஒரு குழுவாகவும் இது கருதப்படும்.''

கெட்கார் (Ketkar), சாதி என்பது இரண்டு தன்மைகளைக் கொண்ட ஒரு சமூகக் குழு என்று குறிப்பிடுகின்றார். அத்தன்மைகளாவன: (1) சாதிக் குழுவில் பிறந்தவர்களுக்கே அதன் உறுப்பினராகும் உரிமை. (2) வேறு குழுவில் உள்ளவர்களைத் திருமணம் செய்யத் தடை செய்யும் கடுமையானச் சட்டம்,

பேராசிரியர் குர்யே (Professor Ghurye) சாதியை விளக்கும் வகையில் அதன் ஆறு தன்மைகளைக் குறிப்பிடுகின்றார். அவை யாவன:

1. சாதிகள் ஒவ்வொன்றும் குழுக்கள்; ஒவ்வொன்றிற்கும் வளர்ச்சியடைந்த ஒரு வாழ்க்கை முறை உண்டு; வகுப்புகளைப் போன்று இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்கள்; இதில் பிறந்தவர்களே உறுப்பினராகக் கருதப்படுபவர்.
2. பிராமணர்களை முதன்மையாகக் கொண்ட சாதி வரிசை முறைதான் இந்தியாவில் பண்டு தொட்டுக் காணப் பட்டு வருகின்றது.
3. உணவு அருந்துவதிலும் உறவு முறையிலும் பல தடைகள் உள்ளன. எந்தச் சாதியிலிருந்து எந்தவகை உணவை ஒருவன் ஏற்றுக் கொள்ளலாம் என்பதற்கு நுணுக்கமான விதிகள் உள்ளன.
4. இந்தியக் கிராமங்களில் சாதிப் பிரிவினரை ஒதுக்கி வைத்து நடத்தும் வழக்கம் காணப்படுகின்றது.
5. எந்தத் தொழிலையும் ஒருவன் மேற்கொண்டு விட முடியாது. பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு விட்டு இலாபம் தருகிறது என்பதனால் ஒருவன் வேறு தொழில் செய்ய முடியாது.
6. ஒவ்வொரு சாதியிலும் பல பிரிவுகள் உள்ளன. ஒரு குழுவில் உள்ளவர் வேறு குழுவில் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. குழுவில் உள்ள உறுப்பினர் களைத் திருமணம் செய்துகொள்ளும் அகமண முறையே (Endogamous) நிலவுகின்றது.

பல்வேறு ஆசிரியர்கள் பல்வேறு இலக்கணங்களை அளித்துள்ள தால் சாதி முறை பற்றி நமக்குத் தெளிவான விளக்கம் கிடைப்ப தில்லை. சாதிமுறை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்றால் அதன் பல்வேறுத் தன்மைகளையும் நாம் அறிந்து கொள்ளல் வேண்டும்.

சாதிமுறையின் தன்மைகளாவன:

1. சாதியிலிருந்து நெகிழாமை அல்லது சாதியின் நிலையான தன்மை வகுப்பிலிருந்து அதனை வேறுபடுத்தும் முதலாவது தன்மையாகும். ஒருவன் எந்தச் சாதியில்

பிறக்கின்றானோ அச் சாதியைச் சேர்ந்தவன் என்ற முறையில்தான் இறக்கிறான்.

2. எந்த உணவை உட்கொள்ளலாம் எவற்றை உட்கொள்ளக்கூடாது என்று சாதி வரன்முறை செய்கின்றது. பிராமணர்கள் புலால் உணவு உட்கொள்ளக்கூடாது. சத்திரியர்களும் வைசியர்களும் மாட்டிறைச்சி போன்ற சில உணவு வகைகளை உட்கொள்ளக் கூடாது. ஆனால் சூத்திரர்கள் எந்தவிதமான உணவும் உட்கொள்ளலாம்.

3. அகமணம் (Endogamy) சாதி முறையின் முக்கியத் தன்மையாகும். தனது சொந்தச் சாதியின் கிளைப் பிரிவில்தான் ஒருவன் மணம் செய்துகொள்ள வேண்டும். கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

4. சாதி அமைப்பு தர வரிசையினால் உருப்பெற்றது. சாதி முறையில் ஒன்றன் மேல் ஒன்றாகப் பல படிவங்கள் உள்ளன. மேல் மட்டத்தில் இருந்தவர்கள் பிராமணர்கள். ஏனையச் சாதியினரின் உயர்வும் தாழ்வும் அவர்கள் பிராமணர்களுடன் கொண்டிருந்த உறவைப் பொறுத்தே அமைந்திருந்தது.

5. ஒவ்வொரு சாதியினரும் ஒரு தொழிலைப் பரம்பரையாகச் செய்து வந்தனர். மற்ற சாதியினர் அத்தொழிலைச் செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. இத்தொழில்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு தொழிலின் அடிப்படையில் ஆயிரக்கணக்கானச் சாதிகள் தோன்றின.

6. சாதி தனது உறுப்பினர்கள் மீதுஅதிகாரம் செலுத்துவது அதன் மற்றொரு தன்மையாகும். சாதி பஞ்சாயத்துக்கு உறுப்பினர்கள் மீது முழு அதிகாரம் உண்டு. சாதியின் சட்டதிட்டங்களை மீறுபவர்களைச் சாதி பஞ்சாயத்துத் தண்டிக்கும்.

சமயத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவதற்கென்று பிராமணர்கள் பல்வேறு சட்டதிட்டங்களையும், வழக்கங்களையும் ஏற்படுத்தினர். பின்னர் பல புதிய சாதிகள் உருவாயின. சாதி பாகுபாட்டிற்கு தருக்க முறையில் விளக்கங்கள் அளித்ததன் காரணமாக இவை நிலைபெறவும் வழி ஏற்பட்டது,

சாதியின் தோற்றம்

பாரதம் சாதி சமயப் பிரிவுகள் பல தோன்றிய பூமியாகக் கருதப்படுகின்றது. சாதி காற்றில் கூடக் கலந்து காணப்படு கின்றது என்று கூறப்பட்டதுண்டு. கிறித்துவர்களும் முஸ்லிம் களும்கூட சாதி முறைக்குப் பலியாகியுள்ளனர். ஏறத்தாழ மூவாயிரம் சாதிகள் இந்தியாவில் உள்ளன என்று சொல்வர். சாதியின் தோற்றம் குறித்தும் எண்ணிறைந்த கருத்துக் கோட் பாடுகள் (Theories) உள்ளன.

நினைவுக் கெட்டாதக் காலத்திலிருந்தே சாதிமுறை நிலவி வருவதாக நம்பப்படுகிறது. ரிக் வேதத்தில் இதனை உறுதிப் படுத்த ஆதாரங்கள் உள்ளன. நான்கு வகை வருணம் குறித்தும் ரிக் வேதத்தின் ஒரு பகுதியான புருஷ சுக்தாவில் குறிப்புள்ளது. இத்தகு நான்கு வகை வருணம் பண்டைய ஈரானில் நிலவி வந்தது. இங்கு குடியேறிய ஆரியர்கள் அதனையும் பின்பற்றினர் என்றும் கூறப்படுவதுண்டு.

1. இனக் கருத்துக் கோட்பாடு (Racial Theory)

சாதிக்கு வடமொழியில் வருணம் என்று கூறப்படுகின்றது. வருணம்-என்றால் நிறம் என்று பொருள் உண்டு. வெளி நாட்டிலிருந்து வந்த ஆரியர்கள் பாரதத்திலிருந்த திராவிடர் களிடமிருந்து விலகி வாழ்வதற்கு இம் முறையைக் கையாண்டனர் என்று கூறப்படுகின்றது. பிராமணர், சத்திரியர், வைசியர் என்று மூன்று வருணங்களும் ஆரியர் குலத்தைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கியது. நான்காவது வருணமான சூத்திரர்கள்தான் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள், இத்தகைய சாதிமுறை பழங்கால நிறவெறியை ஒத்தது என்று கூறுவாரும் உண்டு. பிராமணர்கள் எல்லா சாதியிலும் உயர்ந்தவர்கள்; கற்றலும் கற்பித்தலும் அவர்கள் தொழில். அடுத்து சத்திரியர்கள்; போர்த் தொழில் புரிந்து நாட்டைக் காக்க வேண்டியது அவர்களது கடன். மூன்றாவது சாதியினரான வைசியர் வணிகம் செய்வர். இம் மூன்று சாதியினருக்கும் குற்றேவல் புரிந்து தொண்டு செய்ய வேண்டியது சூத்திரர்கள் கடமை. இவர்கள் அடிமைகள், என்றும் கருதப்பட்டனர். இதனால் திராவிடர்களைத் தாழ்த்தி அடிமைகளாக வைக்க ஆரியர் செய்த சூழ்ச்சியே சாதிமுறை என்று கூறுவாரும் உண்டு.

2. அரசியல் கருத்துக் கோட்பாடு

சமூகத் தர வரிசையில் தங்களை மேல்நிலையில் வைத்துக் கொள்வதற்குப் பிராமணர்கள் செய்த தந்திரமே சாதிமுறை

என்ற கருத்தைக் கூறுவாரும் உண்டு. "கங்கைக் கரையில் இந்தோ-ஆரிய பண்பாட்டில் தொட்டிலாட்டப்பட்ட பிராமணக் குழந்தைதான் சாதி என்பது; பிராமணர்களின் நலனை விருத்தி செய்ய பிற இடங்களுக்கும் அது பின்பு பரப்பப்பட்டது'' என்று டாக்டர் குர்யே (Dr. Ghurye) கூறுகின்றார்.

ஆரிய வருணமான முதல் மூன்று பிரிவினரும் "இரு பிறப்பாளர்'' (துவிஜா) என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் மேற்கொள்கின்ற சிலச் சடங்குகள் மறுபிறவி எடுத்ததைக் குறிப்ப தாகும் என்று கருதப்பட்டது. ஆனால் சூத்திரர்களோ ஒரு முறை பிறந்தவர்கள் என்னும் பொருளில் (ஏகசாதி) என்று அழைக்கப்பட்டனர். சாதி என்னும் வடசொல் வருணத்தின் பல உட்பிரிவுகளையும் கிளைப் பிரிவுகளையும் குறிப்பிடுகின்றது.

பிராமணர்கள் உயர்ந்த நிலையிலிருந்து கொண்டு பல சலுகைகளை அனுபவித்துக் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கு வசதியாகப் பல சட்ட திட்டங் களையும் ஏற்படுத்திக் கொண்டனர். சமய குருமார்களின் ஆதிக்கம் பெருகப் பெருக இச் சட்ட திட்டங்களும் சிக்கல் நிறைந்ததாக மாறி பிராமணர்களுக்கே அதிக முக்கியத்துவம் என்ற நிலை ஏற்பட்டது.

உயர்சாதி ஆண் கீழ்ச்சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கும் உயர்சாதி மணம் (Hypergamy) சமூகச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் உயர்சாதிப் பெண் கீழ்ச்சாதி ஆணைத் திருமணம் செய்துகொள்வதை (Hypogamy) அனுமதிப்பதில்லை. திருமணத்தின் மூலம் கீழ்ச் சாதி ஆண்கள் உயர்சாதியில் இடம் பெறாமலிருக்கவே இத் தடை என்றும் கூறப்படுகின்றது.

3. தொழில் கருத்துக் கோட்பாடு (Occupational Theory)

சமூகத்தில் ஒவ்வொரு தொழிலுக்கும் இருந்த மதிப்பின் அடிப்படையில் அத்தொழிலைச் செய்தவர்களுக்கும் மதிப்பு ஏற்பட்டு சாதிகள் தர வரிசையில் உருவாகின என்பதே இக் கருத்துக் கோட்பாடு. மேலானத் தொழிலைச் செய்தவர்கள் மேல்சாதியாகினர். கீழானத் தொழிலைச் செய்தவர்கள் கீழ்ச் சாதியாயினர். "இந்தியாவில் தொழில் - தொழில் மட்டுமே சாதி தோன்றக் காரணமாக இருந்தது'' என்று நெஸ்பீல்டு (Nesfield) கூறுகின்றார்.

4. பரிணாமக் கருத்துக் கோட்பாடு (Evolutionary Theory)

இக் கோட்பாட்டின்படி சாதி திடீரென்று தோன்ற வில்லை. சமூகப் பரிணாமத்தின் விளைவாகவே சாதிதோன்றியது. இதற்குப் பல்வேறு காரணிகள் காரணமாகும். கீழ்க் குறிப்பிடுவன அவற்றில் சில:

1) பாரம்பரியத் தொழில்
2) தங்களைச் சுத்தமானவர்களாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பிராமணர்களின் விருப்பம்.
3) அரசாங்கம் ஒற்றுமை சக்தியாக இல்லாமலிருந்தது.
4) எல்லோருக்கும் ஒரே விதமானச் சட்டங்களைக் கொண்டுவராமல் வேறுபடும் வழக்கங்களை அரசர்கள் அனுமதித்தது.
5) கர்ம வினைகளிலும் மறுபிறவியிலும் கொண்டிருந்த நம்பிக்கை.
6) மூதாதையர்கள் வழிபாடும் புனித உணவு படையலும்.
7) தாய்வழி, தந்தைவழிப் பண்பாடுகளின் மோதல்கள்
8) இனநிற வேறுபாடுகளின் மோதல்கள்
9) ஆதிக்கக்காரர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்கள் பின்பற்றிய பொருளாதார நிருவாகக் கொள்கைகள்.
10) இந்தியத் துணைக்கண்டத்தின் பூகோள அமைப்பு.

இத்தகைய தன்மைகள் சிறுசிறு குழுக்கள் சிறிய வேறுபாடுகளுடன் தோன்றக் காரணமாக இருந்தன.

இந்தியாவில் தற்போதைய நிலை

இந்தியாவைப் போன்று வேறு எங்கும் எண்ணிலடங்காச் சாதி களையும் அதன் உட்பிரிவுகளையும் நாம் காணமுடியாது. நாகரிக வளர்ச்சி காரணமாகவோ வெளிநாட்டினர் படையெடுப்பின் காரணமாகவோ சாதி அமைப்பு முறை மாற்றங்கொள்ளாததும் வியப்பிற்குரியதாகும்.

சாதிமுறை இந்தியச் சமூக அமைப்பைப் பலத்த அச்சுறுத் தலுக்கு உள்ளாக்கி விட்டது. சமுதாயப் பண்பாட்டு—அரசியல்—பொருளாதாரத் துறைகளில் இதன் காரணமாகப் பல பிளவு கள் ஏற்படுகின்றன. அதிகம் படித்தவர்கள் கூட சாதிமுறைக்குப் பலியாகாமலிருப்பதில்லை. சீக்கியர்கள், சமணர்கள், முஸ்லிம்கள் கிறித்துவர்கள் ஆகியோரிடமும் சாதி வேறுபாடுகள் உள்ளன. சமயம், வகுப்பு, வட்டாரம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து எல்லோரிடமும் சாதி அமைப்பு நிலவி வருகின்றது.

சாதியின் காரணமாக சமுதாயத்தில் பல தீங்குகள் விளைந்துள்ளன. பல்வேறுச் சமூகச் சிக்கல்களுக்கும் அது முழு முதல் காரணமாக இருக்கின்றது. சமுதாயத்திலுள்ளவர்களுக்குள் நெருக்கம் ஏற்படாதவாறு சாதி பலரை வேறுபடுத்தி வைக்கின்றது. ஒரே சாதிக்குள் ஒற்றுமையும் மற்ற சாதியினரைப் புறக்கணிக்கும் விதமான நிலை ஏற்படுகின்றது.

ஒரு சாராரைத் 'தீண்டத்தகாதவர்கள்' என்று ஒதுக்கிவைத்தது சாதி ஏற்படுத்தியப் பயங்கரக் கொடுமையாகும். நகரப்புறங்களில் இத்தன்மை அவ்வளவாக உணரப்படாவிட்டாலும் கிராமப் புறங்களில் தீண்டாமை நிலவி வந்தது. இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் 'தீண்டத்தகாதவர்கள்' என்று கருதப்பட்டவர்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இன்று சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது. அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் சாதியின் கொடுமையை வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

பாரதத்தில் ஏற்பட்ட தொழிற் செயல்முறையாக்கம் சாதிக்குப் பேரிடியாக விழுந்துள்ளது. தொழிற்சாலைகளில் சாதி மத வேறுபாடில்லாமல் எல்லோரும் ஒன்றுக வேலை பார்க்கின்றனர். ஒன்றுக உணவு அருந்துகின்றனர். ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்ட உணவை அருந்துவதும் உண்டு.

நகர மயமாக்குதல் சாதி வேறுபாட்டை ஒழித்துக் கட்ட உதவுகின்றது. நகரங்களில் பல்வேறு சாதியினரும் ஒதுங்கி வாழ முடியாது. சாதியின் அடிப்படை அம்சமான 'தீட்டு' நகரங்களில் பின்பற்ற முடியாது. சமூக நடவடிக்கைகளில் சிலரை ஒதுக்கி வைக்கவும் முடியாமற் போய்விட்டது.

போக்குவரத்து வசதிகள் பெருகி விட்டதனால் கிராமங்கள் நகரங்களுடன் தொடர்புகொள்வது எளிதாகி விட்டது. கிராமச் சமூகங்களில் முன்பு ஆதிக்கம் செலுத்திக் கட்டுப்படுத்திய சக்திகள் சீர்குலைந்துவிட்டன. சாதியிலிருந்து ஒருவன் விலக்கப்பட்டால் அவன் எளிதாக வேறு இடங்களுக்குச் சென்று காலங்கழிக்க முடியும். இதன் காரணமாகக் கலப்புத் திருமணமும் சமபந்தி உணவும் ஓரளவுக்கு அனுமதிக்கப்படுகின்றது.

இத்தகைய நிலைமைகளினால் சாதியின் பிடி சமூகத்தில் தளர்ந்துவிட்டது என்று கருதிவிடக் கூடாது. சாதி வேறு வகையில் தலைதூக்குகின்றது.

ஊராட்சித் தேர்தலிலிருந்து பாராளுமன்றத் தேர்தல்வரையிலும் சாதி அமைப்பின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கின்றது. ஒரு தொகுதியில் எந்தச் சாதியினர் அதிகமிருக்கின்றனரோ அச் சாதியைச் சேர்ந்தவரையே அரசியல் கட்சிகள் வேட்பாளராக நிறுத்துகின்றன.

அரசியல் பலத்தினால் பல மாநிலங்களிலும் சில சாதியினர் தங்களுக்குத்தான் அதிகம் சலுகை தரவேண்டும் என்று பிணக்குகள் ஏற்படுத்தி வருகின்றனர். கேரளத்தில் ஈழவர்கள், நாயர்கள் ஆகியோர்களுக்கிடையே சாதிப்பிணக்கு நிகழ்கின்றது. உத்திரப் பிரதேசத்தில் பிராமணர்களுக்கும் காயஸ்தாசுக்குமிடையிலேயும் குஜராத்தில் பிராமணர்களுக்கும் பனியாவுக்குமிடையேயும் ஆந்திராவில் கம்மாதவுக்கும் ரெட்டிகளுக்குமிடையிலேயும் சாதிப்பிணக்குகள் ஏற்பட்டு வருகின்றன. தமிழகத்தில் பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதவர்களுக்குமிடையே பூசல் ஏற்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கல்விப் பொருளாதார முன்னேற்றத்தின் ஆர்வம் காரணமாகப் பல மாநிலங்களிலும் இச் சண்டை இன்றும் ஓய்ந்தபாடில்லை.

சாதியை ஒழிக்கும் வழி

சாதியை ஒழிக்க வேண்டும் என்று நெடுங்காலத்திற்கு முன்பே கௌதம புத்தர் பெரும் போராட்டத்தைத் தொடங்கினார். அவரின் போதனைகள் இன்றும் நின்று நிலவுகின்றன. அவர் வாழ்ந்த காலத்திலேயே சாதி மறைந்துவிடும் போலிருந்தது. ஆனால் புத்தரின் காலத்திற்குப் பின் சாதி மீண்டும் தலைதூக்கத் தொடங்கி விட்டது. பௌத்த சமயத்தினரே பல சாதி அமைப்பாக மாறிய நிலையும் ஏற்பட்டு விட்டது.

புத்தரின் காலத்திற்குப் பிறகு இந்தியாவின் பல பகுதிகளிலும் பலர் சாதியை ஒழிக்க முயன்றனர். மகாராஷ்டிரத்தில் சந்த் ஜானேஸ்வரம் நாமதேவும்,குஜராத்தில் நர்சிமேதா,வங்காளத்தில் சைதன்ய மகாப்பிரபு, உத்திரப் பிரதேசத்தில் கபீர், ஆந்திராவில் வல்லபாச்சாரியா, கர்னாடக மாநிலத்தில் பசவேஸ்வரா அக்க மகாதேவி, தமிழகத்தில் இராமானுசர், இராமலிங்க அடிகள் போன்றோர் சாதிகளற்றச் சமுதாயத்தை உருவாக்க முயன்றனர்.

அதன்பிறகு ராஜாராம் மோகன்ராய்,தேவேந்திரநாத் தாகூர் போன்றவர்கள் சாதியை ஒழிக்கப் போரிட்டனர். அண்ணல் காந்தி அடிகள், அம்பேத்கார், நாராயண குரு போன்றவர்கள் தங்கள் வாழ்நாளையே சாதியை ஒழிக்க செலவழித்தனர். தமிழகத்தில் தந்தை பெரியார் சாதியை ஒழித்து புதிய சமுதாயம் அமைக்க அரும்பாடு பட்டார்.

சமயத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள், ஞானிகள் எல்லோரும் பாடுபட்டும் சாதி பாரத மண்ணிலிருந்து ஒழிந்துவிடவில்லை. பல அரசியல் சட்டங்களாலும் சாதி ஒழிப்பைத் தீவிரப்படுத்த முடியாமற் போய்விட்டது.

சமூக அமைப்பில் மாற்றம் ஏற்படுத்த ரஷ்யா போன்ற பொதுவுடமை நாடுகளில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வெற்றியும் அடைந்துள்ளது. ஆனால் இந்தியாவில் சாதியை ஒழித்துச் சமூக மாற்றம் ஏற்படுத்த முயலும்போது அதிகக் கவனத்துடன் செயல்பட வேண்டியுள்ளது. நடவடிக்கை மேற் கொண்டால் சமூகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலத்த எதிர்ப் பைச் சமாளிக்க வேண்டியுள்ளது. உடனே பலன் அளிக்கும் யோசனையும் கூற முடியாத நிலையுள்ளது.

சாதியின் கொடுமை பற்றி மக்களுக்கு தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும். பத்து வயதுக் குட்பட்டக் குழந்தைகளுக்குச் சாதி வேறுபாடுகள் தோன்றுவதில்லை. பெற்றோர்கள், அண்டை வீட்டார் ஆகியோரிடமிருந்தும் பள்ளிக்கூடத்தின்மூலமும்தான் குழந்தைகள் சாதி வேறுபாட்டை உணருகின்றனர். இத்தகைய பருவத்தில் இளந்தலைமுறையினர்க்கு ஒரு புதிய கண்ணோட் டத்தை ஏற்படுத்த வேண்டும். சாதி வேறுபாடுகள் அவர்களுக்கு ஏற்படாதவாறு பக்குவப்படுத்த வேண்டும். கல்விக் கழகங்களில் சாதிப் பெயர் நுழையாமல் தடுக்க வேண்டும். சாதியை அறிவிக்கும் பெயர்களைக் கல்வி நிலையங்களில் பயன்படுத்தக்கூடாது.

கலப்புத் திருமணங்களை எல்லோரும் பின்பற்றும் வகையில் புதிய சமுதாயக் கண்ணோட்டத்தை ஏற்படுத்த அதிக காலம் பிடிக்கும். கலப்புத் திருமணங்கள் செய்துகொண்டவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்கும் வகையில் கேரள மாநிலத்தில் செயல்பட்டு வரும் 'கலப்புத் திருமண சங்கம்' (Inter Caste Marriage Association) போன்று பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அமைப்பு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் தொல்லைகளைப் போக்க உதவி வருகின்றது.

பொது நிறுவனங்களிலும், அரசு துறையிலும் சாதிக்கு முக்கியத்துவம் அளிப்பதை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும். சாதியை ஒழிக்க அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.

வினாக்கள்

1. சாதியை இலக்கணப்படுத்தி அதன் தன்மைகளை விளக்குக.
2. சாதியின் தோற்றம் குறித்தக் கோட்பாடுகள் எவை?
3. இந்தியாவில் சாதியின் தற்போதைய நிலையை ஆய்க.
4. சாதியை ஒழிக்கும் வழிகளைக் கூறுக.
5. 'இந்தியச் சமூக அமைப்பில் சாதித்தன்மைகள் எங்கும் ஊடுருவியுள்ளன' இக் கூற்றை ஆராய்க.

4. வகுப்புகள்

சாதியும் வகுப்பும் (Class) சமூகத்தில் நிலவும் அடுக்க அமைப்பின் (Stratification) இரு முக்கிய தன்மைகளாகும். ஒரு மனிதனின் சமூக மதிப்பு வகுப்பு, சாதி மூலம்தான் தீர்மானிக்கப்படுகின்றது.

சமூக அடுக்க அமைப்பு

எல்லா சமூகங்களிலும் சமூக அடுக்க அமைப்பு காணப்படும். மனிதர்கள் மேல் மட்டத்தைத் சேர்ந்தவர்கள் என்றும் கீழ்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வகைப்படுத்தப் பட்டிருப்பர்.

மனிதர்கள் எல்லோரும் சரிநிகர் சமமானவர்கள் என்பது கடவுளின் சந்நிதியிலும் சட்டத்தின் முன்பும் உள்ள நிலையையே குறிப்பிடும். மனிதர்கள் உடல் அமைப்பு, உளவியல் தன்மை, அறிவுக் கூர்மை போன்ற பலவற்றிலும் வேறுபாடு கொண்டவர்களாகவே உள்ளனர்.

சமூகத்தில் நிலவும் இத்தகைய வேறுபாடுகள் எல்லாம் தாமாகவே எவ்விதம் சிக்கல்களையும் ஏற்படுத்துவதில்லை. மனிதர்கள் மற்ற மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக் கொள்வதற்காக, ஒருமித்த பண்புடையவர்களைச் சேர்த்துக்கொண்டு பொதுவான விருப்பங்களை வளர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு உருவாகும் குழுக்கள்தான் சமூக அடுக்க அமைப்பை ஏற்படுத்துகின்றன.

வகுப்பின் தன்மை

ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்குள் ஒரேவிதமான சமூக மதிப்பைக் கொண்ட மனிதர்களின் குழு ஒரு கூட்டுத் தொகுதியாக அமைந்து, இக் கூட்டுத் தொகுதியில் உள்ள உறுப்பினர்கள் மற்ற கூட்டுத் தொகுதியில் உள்ளவர்களைவிட உயர்ந்தவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள் என்றும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் மதிப்பீடுகளினால் தீர்மானித்துக்கொள்வார்கள். அவற்றினைச் சமூக வகுப்புகள் என்றும் கூறலாம்.

ஒவ்வொரு சமூக வகுப்பிற்கும் தனக்கே உரித்தான சமுதாய நடைமுறை வழக்கங்கள் உண்டு. ஒரு வகுப்புக்கு மேலான மதிப்பு நிலவும். வேறொரு வகுப்பு கீழானது என்று மதிப்புக் குறைவாகக் கருதப்படும். ஒவ்வொரு வகுப்பு உறுப்பினர்களும் தங்கள் வகுப்பிற்குரித்தான நடைமுறைப் பழக்கங்களைப் பின்பற்றுவர். கீழான மதிப்புக் கொண்டவர்களைக் காணும்போது உயர்வு மனப்பான்மை கொள்வர். மேலான மதிப்புக் கொண்டவர்களுடன் பழக நேரிடும்போது தாழ்வு மனப்பான்மையுடன் நடந்துகொள்வர்.

இந்தச் சமூக மதிப்பு பல காரணிகளினால் ஏற்படுகின்றது. சமூகத்தில் உள்ள உறுப்பினர்களின் கருத்தே இத்தகைய மதிப்பு உருவாகக் காரணமாக உள்ளது. பிறப்பு, சாதி, குடும்பம், பாரம்பரியம், சமயம் ஆகியவற்றினால் ஒருவரின் மதிப்புத் தீர்மானிக்கப்படுமெனில் இயல்பான மதிப்பு (Ascribed status) என்றழைக்கப்படும். கல்வியினாலும் தொழிலினாலும் ஒருவரின் மதிப்புத் தீர்மானிக்கப்படும் எனில் அதனை அடைந்துகொள்ளப் பட்ட மதிப்பு (Achieved Status) என்றழைக்கப்படும்.

மதிப்பைத் தரும் சின்னங்கள், சமூகத்தில் எவ்வளவு பேர்கள் அதனை வைத்துள்ளனர் என்பதைப் பொறுத்தது. மேற்கத்திய நாடுகளில் பியானோ இசைக் கருவியை வைத்திருப்பது பெரிய மதிப்பாகக் கருதப்படுகின்றது. சமூகத்தில் குறைவானவர்களிடமே இக் கருவி உள்ளது. இந்தியாவில் வானொலிப்பெட்டி, ரேடியோகிராம், குளிர் சாதனப் பெட்டி போன்றவை மதிப்புத் தரும் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்புத் தீர்மானிக்கப்படுவதும் உண்டு. தொழிற்புரட்சிக்கு முன்பு செல்வம் என்பது நிலத்தினை மட்டுமே குறிக்கும். தற்போது விவசாயச் சமுதாயத்தில் நிலக்கிழார்களுக்கே பெரிய மதிப்பு உள்ளது. சமீப காலம் வரையிலும் இந்தியாவில் ஜமீன்தார்கள் உயர்ந்த இடத்தை வகித்து வந்தனர். அவர்களின் சாதி இத்தகைய மதிப்புக்குத் தடையாக இருந்ததில்லை. தொழிற்புரட்சிக்குப் பின் நிலத்தின் மதிப்புக் குறைந்து பணம் அந்த இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இத்தகைய மாற்றம் சமூகவியல் கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிறப்பையும், நிலத்தையும் மதிப்பிற்குரிய காரணங்களாகக் கூறும்போது இதனை மூடு குழு (Closed group) என்று அழைக்கின்றோம். ஆனால் நிலத்தினை

மட்டும் அடிப்படையாகக் கொள்ளும்போது இவ்வாறு கூறமுடியாது.

தொழிற் சமுதாயத்தில் வகுப்பு மாற்றம் கொள்வது எளிதானதாகும். இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்: முதலாவதாக, தொழிற் சமுதாயம் அதிகம் போட்டி நிரம்பிய தாகும். ஒரே வகுப்பில் ஒருவர் தொடர்ந்து அங்கம் வகித்து வர வேண்டுமென்றால் அதற்கானத் தன்மைகளை எப்போதும் கொண்டிருக்கவேண்டும். மற்றவர்கள் தங்கள் திறமைகள் மூலம் இந்தத் தன்மைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடை செய்ய முடியாது. அடுத்து, புதிய கண்டுபிடிப்புகளை உற்பத்தித் துறையில் சிலருக்குச் சாதகமான சூழலையும் சிலருக்குப் பாதகமானச் சூழலையும் ஏற்படுத்துவது உண்டு. இப்படிப்பட்ட நேரங்களில் மதிப்புத் தரும் காரணிகளைச் சிலர் இழந்து விடுகின்றனர்; சிலர் புதிதாக பெற்றுக்கொள்கின்றனர்.

சமூக வகுப்புகள் வருவாயைப் பொறுத்து மட்டுமல்லாமல் தொழிலின் தன்மையைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படுவதுண்டு, 'வெள்ளைக் காலர் சட்டை' வேலை பார்க்கும் ஒருவர் ஈட்டும் அதே தொகையை வேறொருவர் தினக்கூலி மூலம் பெற்றாலும் அதே மதிப்பைப் பெறுவதில்லை.

எல்லாச் சமூகத்திலும் 'கல்வி' மதிப்பளிக்கும் ஒரு காரணியாகும். செல்வர்கள் கல்வி பெறாமலிருந்தால் தங்கள் மதிப்பை உயர்த்திக் கொள்வதற்காக வேண்டிக் கல்வி நிலையங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வர். சில பெரிய செல்வந்தர்கள் கல்வி நிலையங்களைத் தொடங்குவதற்கும் இதுவே காரணமாகும்.

குடியிருப்புப் பகுதிகளைப் பொறுத்தும் சமூக வகுப்புகள் தீர்மானிக்கப்படுவதுண்டு. இந்தியாவில் வகுப்பின் அடிப்படையில் குடியிருப்புப் பகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சமூக மதிப்பில் உயர்ந்து செல்லும் ஒருவன் நன் வகுப்புக்கு ஏற்றபடி குடியிருப்பை மாற்றிக்கொள்வான். எனவே ஒருவனின் முகவரியை வைத்து அவனின் மதிப்பைத் தீர்மானித்துக் கொள்ளலாம். நமது நாட்டில் பலத் தொழில் நகரங்களில் ஒருவன் குடியிருக்கும் வீட்டை வைத்தே அவனின் மதிப்பையும் வேலையையும் தீர்மானித்துக் கொள்ளலாம்.

நடைமுறை வாழ்க்கையில் சமூக மதிப்பு ஒரு காரணியை மட்டும் வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. பல காரணிகளுள் சிலவற்றை வைத்துத் தீர்மானிக்கப்படுகின்றது. இவை சமுதாயம் மேற்கொள்ளும் மதிப்பீட்டு அளவைப் பொறுத்தது. இந்த அளவு மாற்றம் கொள்ளும்போது மதிப்பிற்கானச் சின்னங்களும் மாறும்,

ஒரு வகுப்பினர் தங்களுக்கு உரிய பழக்க வழக்கங்களையும் பொழுதுபோக்கு முறைகளையும், அணிகலன்கள், உடை அணியும் முறைகளையும் பின்பற்றுவதன் மூலம் மற்ற வகுப்புகளிலிருந்து வேறுபடுத்திக் கொள்கின்றனர். சில வகுப்பினர் இதனை மீறினால் சமூகம் அவர்களைக் கண்டிக்கும்.

தொழிற் வளர்ச்சி ஏற்படும்போது சமூகத்தில் நான்குவகையான மாற்றங்கள் ஏற்படும் என்று ஐக்கிய நாட்டு கல்விச் சமூகப் பண்பாட்டு அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்றின் ("Status, Images in changing India," UNESCO RESEARCH Centre, New Delhi) மூலம் தெரிய வருகின்றது. முதலாவதாக, வேளாண்மை அமைப்பிலிருந்து ஒரு சமுதாயம் தொழில் மயமாகும்போது மேல்மட்ட அமைப்புதான் பல புதியப் பிரிவுகளாகப் பிளவுபடும். இரண்டாவதாக, கிராமபுற அமைப்பிலிருந்து நகரப் புற அமைப்பாக சமுதாயம் மாறும்போது சமூகத் தரப் பிரிவு தனிப்பட்ட மனிதர்களின் தகுதியையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்படும். மூன்றாவதாக, வேளாண்மை — தொழிற் சமுதாயங்களில் சில குழுக்களின் மதிப்புத் தீர்மானிக்கப்படாமலேயே இருக்கும் நிலையைக் காணலாம். கடைசியாக, மதிப்பு அடிப்படையில் ஓர் இடைப்பட்ட தன்மை கொண்ட குழு வளர்ந்துகொண்டே இருக்கிறது.

வகுப்பின் வளர்ச்சி

சமூக வளர்ப்புகள் ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு வகையில் தோன்றி வளர்ந்துள்ளன. ஒரு சமூகத்தில் ஒரு பகுதி மக்களின் தன்மை உயர்ந்ததாகக் கருதப்படும் எனில் அங்கு வகுப்பு வேற்றுமை தொடங்கிவிட்டது என்று அறிந்துகொள்ளலாம். இலங்கையில் வாழும் வெட்டர்களுக்கும் பம்பாய்ப் பகுதியில் வாழும் கட்காரிகளுக்கும் (Katkaris) எந்த வகுப்பு வேற்றுமையுமில்லை. இவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவதும் வறுமையில் எளிய வாழ்க்கை நடத்துவதுமே இதற்குக் காரணமாகும். மாய மந்திரத் தன்மைகள், ஊர்க் கூட்டங்களில் நீண்ட நேரம் பேசும் திறன் ஆகியவற்றை ஒருவன் பெற்றிருந்தால் இம்மக்களிடையே மதிப்பு வாய்ந்தவனாகக் கருதப்படுவான். ஒழுக்க நடத்தை, நிலக்கிழார் அல்லது அரசாங்க அதிகாரிகளின் கீழ் வேலை பார்த்தல் போன்றவையும் ஒருவனுக்கு மதிப்பளிப்பவையாகும்.

தற்காலச் சமூக வகுப்புகள் எல்லாம், இடைக்காலத்தில் நிலவிய வகுப்புகளிலிருந்து தோன்றியவை ஆகும். நிலக்கிழார்கள்

மேல் மட்டத்திலும் அடிமைகள் கீழ்மட்டத்திலுமிருந்தனர் இவ்விரண்டு வகுப்புகளுக்குமிடையே வீட்டு வேலைக்காரர்கள், போர் வீரர்கள், கைவினைஞர்கள் ஆகியோர்களும் இருந்தனர். பதினோராம் நூற்றாண்டில் கைவினைஞர்களும் சிறு வணிகர்களும் நகரங்களில் செல்வாக்குப் பெற்றனர். இந்த நகரங்கள் அரசர்கள், பெருமக்கள் செல்வாக்கு அவ்வளவாக உட்படாமலிருந்தன. நகரங்களில் தொழிற் பிரிவின் அடிப்படையில் பல அமைப்புகள் ஏற்பட்டன; பல நூற்றாண்டுகளாக பொருளாதார சமூக அமைப்பு, இவைகளின் அடிப்படையிலேயே செயல்பட்டன. இவர்களுக்கும் மேலாக வழக்குரைஞர்கள், மருத்துவர்கள் லேவாதேவிக் காரர்கள் போன்றவர்கள் இருந்தனர்.

முதலாளிகள், தொழிலாளிகள் என்ற இரண்டு வகுப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி ஏற்பட்ட பகுதிகளில் நிலவியது. இந்த நிலையை நீண்டகாலம் தொடர முடியவில்லை. புதிய நடுத்தர வகுப்புகள் தோன்றின. தொழிற்சங்கங்களினாலும் புதிய சட்டங்களினாலும் இந்த வகுப்பினர் அரசியல் பொருளாதார அதிகாரங்களைப் பெற்றனர். முன்பு நகரப் பகுதிகளில் நிலவிய வணிகர் குழுவினைப் போன்று இந்த வகுப்பினர் அவ்வளவு ஒருங்கிணைந்த குழுவினராகக் காணப்படவில்லை; ஆனால் செல்வாக்கில் குறைந்தவர்களில்லை. இந்த வகுப்பில் பொறியியலாளர், மருத்துவர், கட்டடக் கலைஞர், ஆசிரியர், நிருவாக உறுப்பினர், பத்திரிகையாளர் போன்ற 'வெள்ளைக் காலர்ச் சட்டை' வேலைப் பார்ப்பவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்தியாவில் உள்ள நடுத்தர வகுப்பிலும் இதுவே நிலை. இந்த நாட்டின் முன்னேற்றம் இவர்கள் கையில்தான் இருக்கிறது என்று பலரும் நம்புகின்றனர். (B.B. Misra, The Indian middle class, Bombay, Oxford University Press) பழைய நடுத்தர வகுப்பில் உள்ள வணிகர்கள் இப்போது பல்வேறு நிலையில் காணப் படுகின்றனர்.

வருவாய், வாழ்க்கை வசதி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நடுத்தர வகுப்பினரை மூன்று வகையாக வகைப் படுத்தலாம். அவையாவன: உயர் நடுத்தர வகுப்பு (Upper middle Class), நடுத்தர வகுப்பு (middle class), கீழ் நடுத்தர வகுப்பு (Lower middle class). உயர் நடுத்தர வகுப்பினர் சமுதாயத்தின் மேல் மட்டத்தினரோடு தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள விழைகின்றனர். இதனால் இவ்விரு வகுப்பினரையும் வேறுபடுத்தி அறிந்துகொள்வது கடினம். கீழ் நடுத்தர வகுப்பினர் நடுத்தர வகுப்பினரைப் போன்று நடந்துகொள்ள முயலுகின்றனர்.

ஆனால் அவர்களையும் பாட்டாளி வகுப்பினரையும் அவ்வளவாக வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியாது. இந்தியச் சமூகத்திலும் இத்தன்மையே காணப்படுகின்றது.

சமுதாயத்தில் அரசியல், கலை, அறிவியல் முன்னேற்றம் நடுத்தர வகுப்பினரின் முயற்சியால் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது. கடந்த அறுநூறு ஆண்டுகளாக சமுதாயத்தில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விவசாயத் தொழிற்புரட்சி கண்டு பிடிப்புகள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களால்தான் ஏற்பட்டன. கலைத் துறையிலும் அறிவியல் துறையிலும் இதுவே உண்மை.

நமது சமுதாய வகுப்பு முறை முன்னையது போலல்லாமல் திறந்த குழுவாக மாறிவிட்டது; யார் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் உறுப்பினராகிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு வேண்டிய தன்மைகளை மட்டும் அடைந்துகொள்ள வேண்டும்.

வகுப்பின் செயல்பாடுகள்

சமூகத்தில் வகுப்பின் அடிப்படையில் மக்கள் ஏன் வேறு படுத்தப்படுகின்றனர்? ஒவ்வொருவரும் தங்களின் திறமைகளின் அடிப்படையில் சமூகத்தில் மதிப்பு பெறாமல் சில தன்மைகளை அடிப்படையாகக்கொண்ட வகுப்புகளின் அடிப்படையில் மதிப்பு பெறுவது ஏன்? தனி மனிதர்களிடையே அறிவு, கல்வி, ஆளுமை, திறமை, ஒழுக்கம் போன்றவற்றில் வேற்றுமை காணப்படுவதால் தனி மனிதர்களின் குணாதிசயங்களின் அடிப்படையில் மதிப்புத் தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் கூறப்படுகின்றது. இந்த யோசனை சிறந்ததுதான் என்றாலும் நடைமுறைக்கு உகந்தது அன்று.

உலகம் பரந்தது. வகுப்புகள் உலகத்தையும் சமூகத்தையும் நாம் புரிந்துகொள்ளும் வகையில் எளிமைப்படுத்துகின்றன. நாம் அறிமுகமில்லாதவர்களுடன் பல நேரங்களில் காரியமாற்ற வேண்டியுள்ளது. அப்போது அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்த வர்கள் என்பதை அறிந்து அதற்கியைந்தவாறு நடந்து கொள் கின்றோம். இத்தகு வகுப்புத்தன்மையில்லையெனில் ஒவ்வொரு வரின் மதிப்பையும் தீர்மானித்து அதற்கு இணைந்தவாறு பழகுவது என்பது எளிதன்று.

நமது நாட்டில் அரசுப் பணித் தேர்வுக்குழு சில வேலைகட்கு ஆள் திரட்டும்போது சில தன்மைகளைக் குறிப்பிட்டு அவை

உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கக் கோருகின்றது. ஒவ்வொருவரின் திறமைகளையும் தன்மைகளையும் தனிப்பட்ட முறையில் ஆய்ந்து கண்டுபிடிப்பது எளிதன்று. எனவேதான் இந்த முறையைக் கடைபிடிக்கின்றது. இதனைப்போன்றே சில பெரிய தனியார் நிறுவனங்களும், உயர் பதவிகளுக்காக விளம்பரம் செய்யும்போது சில தகுதிகளைக் குறிப்பிடுகின்றன. வேறொரு நிறுவனத்தில் வேலை பார்ப்பவர், ஒரு குறிப்பிட்ட ஊதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் இல்லையெனில் இந்த வேலைக்கு விண்ணப்பம் செய்யமுடியாது. வகுப்பின் அடிப்படையில் வேலைக்கு ஆள் சேர்ப்பதையே இது காட்டுகின்றது.

ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு மதிப்பும் செயல்முறைகளும் உள்ளன. எல்லா வகுப்புகளும் இதனைப் பின்பற்றும்போது சமூக வகுப்புகள் செம்மையாகச் செயல்படுகின்றன என்றே பொருள். இதன் மூலம் சமூகம் ஒருங்கிணைக்கப்படுவதையும் காணலாம்.

பல்வேறு வகுப்புகளை வகைபடுத்தி அதன் மதிப்புகளைத் தனி மனிதர்களுக்கு ஏற்றிச் சொல்வது சரியானதன்று என்று கூறப்படுகின்றது. இதனால் சிலருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது. வகுப்புகளை ஒழித்துவிடுவதுதான் இதற்கு ஏற்ற தீர்வு என்று கூறமுடியாது. சமுதாயத்தில் நுட்பமான, பொருத்தமான அடுக்கவமைப்பு ஏற்படுத்துவதன்மூலம் இக்குறையைக் களைந்துவிடலாம்.

தங்கள் திறமைகளின் அடிப்படையில் தனி மனிதர்கள் அதற்கேற்ற வகுப்பில் அங்கம் வகிக்க சுதந்திரம் நிலவவேண்டும். இந்த வாய்ப்பு இல்லையெனில் மக்களுக்கு மன நிறைவு இருக்காது. திறமையற்றவர்கள் தங்களுக்குப் பொருந்தாத வகுப்பு உரிமையைப் பெற்று மதிப்பு அடைந்து கொள்வதையும், திறமை பெற்றவர்கள் ஒதுக்கப்படுவதுமான நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே பொருத்தமான சுதந்திரமான படிவ அமைப்புகள் சிக்கல்களைத் தவிர்க்கும்.

வகுப்பு உணர்வு

வகுப்பு உணர்வு எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுகின்றது. வகுப்பு உணர்வு என்றால் என்ன? ஒருவன் தன் வகுப்பு உறுப்பினர்களுடன் எந்தவகைப் பற்றுணர்வுடன் நடந்துகொள்கிறானோ அதனை வகுப்பு உணர்வு என்று கூற வேண்டும் என்று மக்கைவர் கூறுகின்றார். தன்வகுப்பு உறுப்பினர்களுடன் ஒருமித்த

உணர்வே நிலவும்; இதுவே வகுப்பு உணர்வு. ஒரே மாதிரியான சமூக மதிப்புக் கொண்டவர்களிடையே தாங்கள் ஒன்று என்ற உணர்வு நிலவுவதினால் கூட்டாகச் சேர்ந்து செயல்படுவர். தொழிலாளர் வகுப்பினரிடையே இந்த உணர்வு நிலவுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். தங்கள் பொதுவான விருப்பார் வங்கள் ஒன்று என்று கருதுவதனால்தான் அவர்கள் வகுப்பு உணர் வுடன் எப்போதும் நடந்துகொள்கின்றனர். முதலாளி வகுப் பினரைப் பொது எதிரியாகவும் தொழிலாளர் கருதுவதற்கு வகுப்பு உணர்வே காரணம்.

தொழிலாளர்களிடையே வகுப்பு உணர்வு வேண்டும் என்றே காரல் மார்க்ஸ் வலியுறுத்தினார். பொதுவுடைமை அறிக்கையில் அவர், 'உலகப் பாட்டாளிகளே! ஒன்று சேருங்கள்' என்று அறை கூவல் விடுத்துள்ளார். ஒரு வகுப்பு தீவிரமாகச் செயல்படுவதற்கு வகுப்பு உணர்வு மட்டும் போதுமானதன்று. வகுப்பின் நலனுக்குப் பாடுபடும் சில இயக்கங்களே தீவிரமாக வகுப்புகள் செயல்படத் தூண்டும். வகுப்பு உணர்வு இத்தகைய இயக்கங்கள் அல்லது அமைப்புகள் தோன்றுவதற்கு வாய்ப்பான சூழலாக இருந்து உதவும்.

மூன்று நிலைகளில் வகுப்பு உணர்வு ஏற்படும் என்று கின்ஸ்பர்க் (Ginsberg) கூறுகின்றார். அவை:

1. ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்குச் செல்வது இலகுவாக இருந்தால், பல்வேறு வகுப்புகளிடையேயுள்ள வேறு பாடுகள் அவ்வளவு தெளிவாகப் புலப்படாது. ஒரு வகுப்பி லிருந்து வேறொரு வகுப்புக்கு மக்கள் துரிதமாக மாறிக்கொள் வர். வகுப்பு மாறுவது எளிதானதாக இல்லாமலிருந்தால் வகுப்பு உணர்வு அதிகமாகக் காணப்படும்.

2. இரண்டாவதாக உள்ள நிலைமை போட்டியும் சச்சரவு மாகும். ஒரு வகுப்பில் பொதுவான விருப்பார்வங்கள் இருக்கு மெனில், இவற்றைக் காப்பாற்றிக் கொள்ள பொது விரோதியை எதிர்த்து வகுப்பு உணர்வு தூண்டிவிடப்படும். தொழிலாளர்கள் தங்கள் நலனுக்காகப் பொது எதிரியான முதலாளி வகுப்பினரை எதிர்த்து வகுப்பு உணர்வுடன் போராடுவதே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

3. மூன்றாவதாக, பொது அனுபவம், மதிப்பீட்டுத் தரம் இவற்றின் காரணமாக வளரும் பொதுப் பாரம்பரியம். பாரம் பரியத்தின் அடிப்படைகளைப் பெற்றுக்கொள்ளும்போது சமூக

வகுப்பிலுள்ள உறுப்பினர்கள் வகுப்பு உணர்வையும் அடைந்து கொள்வர்.

ஒருவன் தனது திறமைக்கு ஏற்றவாறு வேலையையும் மதிப்பையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கும் சமுதாயமே நல்ல குறிக்கோளுடைய சமுதாயம் என்று சோரோகின் (Sorokin) கூறுகின்றார். ஒருவனது மதிப்பை உயர்த்திக்கொள்வதற்குச் சமுதாயம் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். வகுப்பு இடமாற்றத்திற்கு வாய்ப்பளிக்கும் சமுதாயங்களில்தான் இது இயலும். இம்மாதிரி சமுதாயத்தில் தகுதியை நிருணயிப்பதற்கான அளவைகள் சரியானவையாக இருப்பதில்லை. உண்மையிலேயே திறமையுள்ளவர்கள் பின்தங்கி விடவும், திறமையற்றவர்கள் மதிப்புப் பெற்றுவிடவும் கூடும். இதனால் வகுப்பு இடம் பெயர்தலை அனுமதிக்கும் சமுதாயத்தில் திறமைக்கு மதிப்பு இருக்கிறது என்று கூறமுடியாது. ஆனால் மூடிய குழுக்களைக் கொண்ட இந்தியாவில் மதிப்பு அளிக்கும் நிலை அவ்வளவு மோசமாக இல்லை என்றே கூற வேண்டும்.

நமது நாட்டில் வகுப்பு உணர்வு சாதி உணர்வுடனும் தொடர்புடையது. வகுப்பு உணர்வின் தீவிரத் தன்மை சாதி உணர்வின் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. சமுதாய வழக்கங்கள் ஒருவனது மதிப்பை நிலையானதாகவே வைத்திருக்கும் என்றால், அவன் தன் மதிப்புக்குத் தகுந்தவர்களுடன் தன்னை ஐக்கியப்படுத்தி வகுப்பு உணர்வை வளர்த்துக் கொள்வான். ஆதிக்கமிக்க சமயங்கள் இம்மாதிரி கட்டுப்பாட்டினைக் கொண்டுவந்து மேல் மட்டத்திலுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியும்படி வகுப்பினரை வலியுறுத்தும். சமயம், வழக்கம் போன்றவற்றின் பிடி தளருமெனில் சமூக மாற்றங்கள் ஏற்படும். கீழ் மட்டத்திலுள்ளவர்கள் திறமையை ஏணியாகக் கொண்டு மதிப்பில் உயர்ந்து கொள்வர். இவ்விதச் சூழ்நிலை நிலவும் சமூகங்களில் வகுப்பு உணர்வு தீவிரமாக இருக்காது.

வினாக்கள்

1. சமூக படிவமைப்பு என்றால் என்ன?
2. வகுப்பின் தன்மைகள் எவை?
3. வகுப்பின் தோற்றம் குறித்து விளக்குக.
4. வகுப்பின் செயல்பாடுகள் எவை?
5. வகுப்பு உணர்வு என்றால் என்ன?

5. திருமணமும் குடும்பமும்

குடும்பம் என்பது பெற்றோர்களையும் அவர்கள் குழந்தைகளையும் கொண்ட ஒரு சிறிய சமூகக் குழு. பொதுவாக இது நிலையானது. சிற்றின்பமும் குழந்தை அன்பும் குடும்பத்திற்கு அடிப்படையாக உள்ளன. குடும்பங்கள் பல அளவில் உள்ளன. பெற்றோர்களையும் குழந்தைகளையும்கொண்ட சிறிய குடும்பங்களும் காணப்படுகின்றன. உறவினர்களைக் கொண்ட பெரிய குடும்பங்களும் உள்ளன.

திருமணத்தின்மூலம் குடும்பங்கள் உருவாக்கப்படுகின்றன. திருமணம் என்பது "ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் ஓரளவு நிலையான தொடர்பு; குழந்தைகள் பேறு நடந்து இன விருத்திக்குப் பின்னும் இத்தொடர்பு நிலைத்திருக்கும்" என்று வெஸ்டர்மார்க் (Westermark) இலக்கணப்படுத்துகின்றார். திருமணம் என்பது "குழந்தைகளைப் பெற்று பராமரிப்பதற்கான உடன்பாடு" என்று மலினோஸ்கி (Malinoswki) கூறுகின்றார். திருமணத்திற்குச் சமூகத்தின் உடன்பாடு உண்டு; சமயம் உறுதுணையாக நிற்கின்றது. திருமணம் செய்துகொண்டு வாழ்வது தான் சிறந்தது என்பதனால்தான் எல்லோரும் திருமணம் செய்து கொள்கின்றனர். காதலினாலோ சமய நம்பிக்கையினாலோ மட்டுமே எல்லோரும் திருமணம் செய்து கொள்வதில்லை; எல்லோரும் குழந்தைகளாக இருந்து குடும்பத்தில் வாழ்ந்தவர்கள். குடும்பத்தில் வாழ்வதே சரியான வாழ்க்கை என்பதனால்தான் எல்லோரும் திருமணம் செய்துகொள்கின்றனர்.

திருமண முறைகள் பல வகைகளில் உள்ளன. இது சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டும் காணப்படுகிறது. பின்வருவன சிலவகைத் திருமண முறையாகும் :

(1) ஒருதார மணமுறை (Monogamy)

இந்தியாவில் ஒருதார மணமுறையே பின்பற்றப்படுகின்றது. ஓர் ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதே ஒருதார மணமுறையாகும். மனித சமுதாயத்தின் தொடக்கக் காலத்திலிருந்தே ஒருதார மணமுறையே நிலவி வருவதாக வெஸ்டர்மார்க் (Westermark) குறிப்பிடுகின்றார். குழந்தைகள்மேல் அதிகம் கவனம் செலுத்தி வளர்ப்பதற்கு ஒருதார மணமுறைதான் சிறந்தது என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். குடும்பத்திலுள்ளவர்களிடையே அன்பும் பரிவும் வளர இந்தத் திருமண முறையே உகந்தது. ஒருதார மணத்தின் மூலம் குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். நாகரிக வளர்ச்சியடைந்த சமுதாயங்களிலெல்லாம் ஒருதார மணமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

(2) பலதார மணம் (Polygyny)

ஓர் ஆண் பல பெண்களை ஏக காலத்தில் திருமணம் செய்துகொள்வது பலதார மணம் என்று அழைக்கப்படும். வேத கால இந்தியாவில் இம்முறை நிலவியது. ஒருவனின் மனைவி மலடியாக இருந்தால் இரண்டாவது முறையாக திருமணம் செய்யத் தூண்டப்படுவதுண்டு. சில சமுதாயங்களில் வசதி வாய்ந்தவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்துகொள்வதுண்டு. இதனால் அவனின் செல்வம் பெருகும். பல மனைவிகளும் உழைப்பதன் மூலம் கணவனின் செல்வம் சிறக்க வழி உண்டு. இதனால் பல மனைவிகளைத் திருமணம் செய்துகொள்வது சில சமுதாயங்களில் மதிப்பு கொடுப்பதாகவும் உள்ளது.

இந்தத் திருமண முறையில் பல தீமைகளும் உண்டு. பல மனைவிகளும் சச்சரவு செய்தால் குடும்பத்தில் அமைதி குலையும். மனைவி கணவனை கைவிட்டுவிட்டு ஓடி குடும்பத்திற்கு அவமானத்தை உண்டாக்குவாள். கணவனுக்கு எல்லா மனைவிகள்மீதும் உண்மையான அன்பு ஏற்பட வழியில்லை.

(3) பலகணவர் மணம் (Polyandry)

பல ஆண்கள் ஒரே பெண்ணை திருமணம் செய்துகொள்வது பல கணவர் மணம் என்றழைக்கப்படும். திபெத்தில் பல சகோதரர்களும் ஒரே மனைவியைத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் உண்டு. கேரளத்தில் ஒருசாராரிடையே இந்த வழக்கம் நிலவியது. தமிழகத்தில் நீலகிரியில் வாழும் தோடர் (Todas) களிடையேயும் இந்தத் திருமண முறை உள்ளது.

சில சமூகங்களில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிட குறைவாக இருப்பதனால் இம்மணமுறை நிலவுகின்றது. பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கத்தினால் பெண்கள் எண்ணிக் கைக் குறைகிறது. தோடர்களிடையே இவ்வழக்கம் உண்டு. ஆண்கள் மனைவிகளை வைத்து வாழ்வ தற்குள்ள வசதியில்லாமல் வறுமை நிலவினாலும் பலகணவர் மணம் ஏற்படும்.

புறமணம் (Exogamy)

ஒரே குருதி உறவு (Blood relation) கொண்ட உறுப்பினர்கள் தங்களுக்குள் திருமணம் செய்துகொள்வது தடை செய்யப் பட்டுள்ளது. இத்தகைய குழுக்கள் புறமணக் குழுக்கள் என்ற ழைக்கப்படும். குருதி உறவில் மிகவும் நெருங்கியவர்களுக்கு இத் தடை மிக அதிகமாக உள்ளது. உலகெங்கிலும் இத்தடைகள் உள்ளன. ஒ ரே கால்வழி (Clan, Gotra) வந்தவர்களிடையே திருமணம் நடக்கக்கூடாது.

நமது நாட்டில் இத்தகு புறமணக் குழுக்கள் உள்ளன. தனது கால்வழியை (கோத்திரம்) சேர்ந்தவர்களை ஒருவன் திருமணம் செய்யக் கூடாது. வேறு கால்வழியிலிருந்துதான் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

அகமணம் (Endogamy)

ஒருவன் தனது குழுவைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதே அகமணம் என்றழைக்கப்படும். வேறு குழு உறுப்பினர்களைத் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்ட ஒன்றாகும்.

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு இனத்தைச் சேர்ந் தவர்களைத் திருமணம் செய்வதில்லை. காலப்போக்கில் இனக் கலப்பு ஏற்பட்டதை மறுப்பதற்கில்லை.

வேறு சமயத்தவர்களைத் திருமணம் செய்வதை இஸ்லாம் சமயம் அனுமதிப்பதில்லை. இந்து சமயத்தைச் சேர்ந்தவன் வேறு சாதியிலோ கிளைச்சாதியிலோ திருமணம் செய்வதில்லை.

சமூக வகுப்புகளிடையும் அகமணம்தான் வலியுறுத்தப்படு கின்றது. உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் சாதாரணக் குடும்பங் களில் திருமணம் செய்யும் வழக்கமில்லை. பழங்காலத்தில் அடிமை ஆண் அடிமைப் பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டும்.

மைத்துனி மணம் (Sororate)

ஒருவன் தனது மனைவி இறந்த பிறகு மனைவியின் சகோதரியைத் திருமணம் செய்துகொள்வது மைத்துனி மணம் என்று அழைக்கப்படும்.

மைத்துனித் திருமணம் குடும்ப ஒற்றுமையைப் பலப்படுத்துகின்றது. ஒருவனின் மனைவி இறந்த பிறகு அவளின் குழந்தைகளைப் பேணி வளர்த்துக்கொள்ள மைத்துனி மணம் வாய்ப்பளிக்கின்றது. சகோதரியின் குழந்தைகளாக இருப்பதனால் இம் மனைவி கண்ணுங்கருத்துமாகக் கவனித்துக்கொள்வாள். சந்தால் (Santal) பழங்குடியினர்களிடம் இத்தகையத் திருமணம் காணப்படுகின்றது.

தனி மணம் (Levirate)

இறந்துபோன சகோதரனின் மனைவியை ஒருவன் திருமணம் செய்துகொள்வதை மதனி மணம் என்கிறோம். இறந்துபோன சகோதரனின் உடமைகளைப் பெற்றுக்கொள்வதைப் போன்று மனைவியையும் ஒருவன் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு என்று கருதப்படுகின்றது.

அண்ணன் இறந்து போனால் தம்பி மதனியைத் திருமணம் செய்துகொள்ளலாம். அந்த விதவை குடும்பத்திலேயே சொத்து போன்று இருக்க இது வழி செய்கின்றது.

உயர்சாதி மணம் (Hypergamy)

இம்மணமுறை இந்தியாவில் பழங்காலத்தில் நிலவியது. ஓர் உயர்சாதி ஆண் தன்னைவிட கீழான சாதிப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வது உயர்சாதி மணம் என்றழைக்கப்பட்டது. இந்தத் திருமணம் அனுலோமா (Anuloma) என்றும் அழைக்கப்பட்டது.

உயர் சாதியைச் சேர்ந்தவன் கீழ்ச்சாதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்வதன்மூலம் பிறக்கும் குழந்தைகள் 'அனுலோமாஜாக்கள்' என்றழைக்கப்பட்டனர்.

கீழ்சாதி மணம் (Hypogamy)

மேல்சாதிப் பெண் கீழ்ச்சாதி ஆணைத் திருமணம் செய்துகொண்டால் அது கீழ்ச்சாதி மணம் அல்லது பிரதிலோமாத் திருமணம் என்று அழைக்கப்படும். இம்முறைத் திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் 'பிரதிலோமாஜாக்கள்' (Pratilomajas)

என்றழைக்கப்படுவர். இக்குழந்தைகளுக்கு அனுலோமத் திருமணம் மூலம் பிறக்கும் குழந்தைகளைவிட மதிப்பு குறைவு.

இந்தியாவில் திருமண முறை

இந்துப் பாரம்பரியச் சட்டத்தின்படி திருமணம் என்பது புனிதமான ஒன்று; சிவில் உடன்படிக்கையன்று. ஒவ்வோர் இந்துவும் புனிதப்படுத்திக்கொள்வதற்காகத் திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டும். திருமணமாகாதவர்கள் சில முக்கிய மானச் சமயச் சடங்குகளைச் செய்ய முடியாது. எனவே திருமணம் என்பது நமது நாட்டில் சமயச் சடங்குகளைச் செய்வதற்கான புனிதமான இணைப்பு என்று கருதப்படுகின்றது. இந்த உறவு பிரிக்க முடியாதது; கணவன் இறந்த பிறகும் உறவு நிலவுவதாக நம்பப்படுகின்றது.

பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். பெற்றோர்கள் உறுதிப்படுத்தும் திருமணத்தைப் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். திருமணம் என்பது இரண்டு குடும்பங்களுக்கிடையே ஏற்படும் பிணைப்பு என்ற அளவில் கருதப்படுகின்றது; இரு மணமக்க ளிடையே மட்டும் ஏற்படும் இணைப்பு அன்று.

இந்துத் திருமணத்தில் காதலுக்கு இடமில்லை. மணமக்கள் ஒருவரையொருவர் பார்க்காமலே திருமணம் உறுதிப்படுத்தப் படுகின்றது. திருமணத்திற்குப் பிறகுதான் காதல் இந்துத் திருமணத்தில் அனுமதிக்கப்படுகின்றது. காதலுக்குப் பின் திருமணம் என்பதில்லை.

இந்தியாவில் தொடக்கக் காலத்திலிருந்தே திருமணம் குறித்துக் கட்டுப்பாடுகள் நிலவிவருகின்றன. வேத காலத்தில் மணமக்களே தங்கள் திருமணத்தைத் தீர்மானித்துக்கொண்டனர். வரதட்சணை கொடுக்கும் வழக்கமும் இருந்தது. ஸ்மிருதியில் எட்டு வகைத் திருமணம் கூறப்பட்டுள்ளது. அவையாவன: பிரமம், பிரஜாபத்யம், அர்சம், தெய்வம், அசுரம், கந்தர்வம், ராட்சசம், பைசாஸாட்சம் முதலியன. இதில் நான்கு வகைத் திருமணங்களுக்குத்தான் சமயத்தின் தன்மைகள் உள்ளன. இவற்றுள் பிரமா (Brahma) திருமணம்தான் சிறந்தது.

இந்துத் திருமணம் புறமணமுறையை வலியுறுத்துகின்றது. தந்தை வழியில் 7 தலைமுறைக்கும் தாய் வழியில் 5 தலைமுறைக் கும் சகோதர சகோதரிகளாக உறவுமுறையைக் கொண்ட

ஆணும் பெண்ணும் திருமணம் செய்யக்கூடாது. இந்துத் திருமணச் சட்டத்தின்படி இந்தத் தடை தந்தை வழியில் 5 தலைமுறைக்கும் தாய் வழியில் 3 தலைமுறைக்கும் என்றும் மாற்றப்பட்டுள்ளது. உயர்சாதியினரான பிராமணர்களும் அசாம், நீலகிரியில் வாழும் பழங்குடியினரும் இம்மணமுறையைப் பின்பற்றுகின்றனர். பிராமணர்களும் வைசியர்களும் புறமணக் குழுக்களைக் கோத்திரம் (Gotra) என்றழைக்கின்றனர்.

திருமணச் சடங்குகள்

இந்துத் திருமணம் சில சடங்குகளின்படித்தான் நடைபெறுகின்றது. இச்சடங்குகள் இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வகைச் சடங்குகளுள் சில விளையாட்டுத்தனம் வாய்ந்தவையாகவும் கேலிக்குரியதாகவும் தோன்றும். ஆனால் ஒவ்வொன்றும் சமயச் சார்புடையனவாகவும் பொருள் பொதிந்ததாகவும் இருப்பதை ஆழ்ந்துநோக்கினால் அறிந்துகொள்ளலாம். எல்லாச் சடங்குகளையும் விளக்குவது கடினம். இவற்றுள் சத்பதி (Satpadi) என்னும் சடங்கு மிகவும் முக்கியமானதாகும். மணமகனும் மணமகளும் நெருப்பினை வலம் வருதல் வேண்டும். ஏழு அடிகள் மணமக்கள் வலம் வந்தால்தான் திருமணம் முழுமை பெறும்.

கருக்குடும்பமும் கூட்டுக் குடும்பமும் (Nuclear family and Joint family)

கணவன் மனைவி, அவர்களின் குழந்தைகள் கொண்ட குடும்பத்தைக் கருக்குடும்பம் என்று அழைக்கிறோம். இது தாம்பத்தியக் குடும்பம் (Conjugal family) என்றும் அழைக்கப்படும். இந்தக் குடும்பம் சிறிய அளவிலானது. இந்தக் குடும்பத்தில் வளர்ந்து பெரியவனானதும், ஒருவன் திருமணம் செய்துகொண்டு தனியாகப் போய் தன் குடும்பத்தை அமைத்துக் கொள்வான்.

நமது நாட்டில் நகரப் புறங்களில் இப்போது இத்தகைய சிறிய குடும்பங்களே அதிகம் காணப்படுகின்றன. கூட்டுக் குடும்பங்கள் நகரங்களில் அதிகம் காணப்படுவதில்லை.

திருமணம் முடிந்தவுடன் கருக்குடும்பங்கள் உருவாகின்றன. தம்பதிகள் இறந்தவுடன் அக் குடும்பமும் மறைந்துவிடுகின்றது. பொருளீட்டும் தலைவன் இறந்துபோனால் இக் குடும்பத்திற்குப் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும். வேறொருவர் பொருளீட்டுவது வரையிலும் இக் குடும்பத்தில் பணச் சிக்கல் நிலவும்.

இந்தச் சிக்கலின் அடிப்படையில் கருக்குடும்பங்கள் மிகவும் ஆபத்தான நிலையிலே இயங்குகின்றன என்று கூறலாம்.

குறைவான உறுப்பினர்களே இக்குடும்பத்தில் இருப்பதால் அவர்களிடையே நெருக்கமான அன்பு நிலவும். இக்குடும்பத்தி லுள்ள நன்மை இதுதான்.

கணவன், மனைவி, அவர்களின் குழந்தைகள், உடன்பிறப்புகள் பெற்றோர்கள் ஆகியோர் கொண்ட குடும்பமே கூட்டுக்குடும்பம் என்றழைக்கப்படும். அவர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தின் வழி வந்தவர்களாகவும் இருப்பர்.

கூட்டுக் குடும்பம் (Joint Family)

நமது நாட்டில் கூட்டுக் குடும்பங்கள்தான் அதிகம் காணப் படுகின்றன. இந்தியச் சமூகத்தின் சிறப்புத் தன்மையாக இது கருதப்படுகின்றது. ஒருவன் திருமணமானவுடன் தனியான குடும்ப மாக செல்வதில்லை. பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் சேர்ந்தே வாழ்கிறான். சொத்து முழுவதும் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒருவன் பிறந்தவுடனேயே அவனுக்கு அந்தச் சொத்தில் உரிமை வந்துவிடுகிறது. குடும்ப உறுப்பினர்களின் வருமானம் சேர்த்து முதலீடு செய்யப்படுகின்றது. உழைக்காதவர்களுக்கும் சம பங்கு உண்டு.

இந்தியாவில் குடும்பங்கள் தந்தை தாயத்தைக் (Patrilineal) கொண்டது. தந்தை பெயர் வழியே குடும்பத்தினர் அழைக்கப் படுவர். சொத்துத் தந்தையின் குடும்ப உறுப்பினர்களிடையே தான் கைமாறி வரும். குடும்பத்தினர்க்குக் குலதெய்வம் உண்டு. எல்லோரும் இதனையே வழிபடுவர்.

கூட்டுக் குடும்பங்களில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருப்பர்: :

(1) பொதுவான மூதாதையர்களைக் கொண்ட பல தலைமுறையைச் சேர்ந்த குடும்பத்தினர்.

(2) ஆண் வழியில் இடையுறவு (Collatral relation) கொண்டவர்கள் சித்தப்பா, பெரியப்பா போன்றவர்கள்.

(3) சொந்த குழந்தைகளும் தத்து எடுக்கப்பட்டவர்களும்.

(4) ஆண்களின் மனைவிமார்கள், தாய்மார்கள், விதவை யான அல்லது திருமணமாகாத பெண்கள் முதலியோர்.

கூட்டுக் குடும்பங்களிலுள்ள சொத்தைக் கீழ்க்காணும் வகையில் மூன்றாகப் பிரிக்கலாம்:

(1) தந்தை அல்லது பாட்டன் அல்லது முப்பாட்டன் வழியில் வந்த மூதாதையர்களின் சொத்து.

(2) மூதாதையர்களின் சொத்து வருமானத்தில் வாங்கப் பட்ட சொத்துக்கள்.

(3) தனி உறுப்பினர்களின் வருவாய் கூட்டுக் குடும்பத்தின் பொதுச் சொத்தாக முதலீடு செய்யப்பட்டு, எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை கொண்ட சொத்துகள் வருமானம் இல்லாத உறுப்பினர்களுக்கும் இந்தச் சொத்தில் உரிமை உண்டு.

கூட்டுக் குடும்பத்தின் சொத்துகளைத் தந்தை அல்லது வயதில் மூத்தவர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். அவர் கருத்தா (Karta)என்றழைக்கப்படுவார். அவருக்குச் சில சிறப்பு உரிமைகள் உண்டு. வருமானத்தை எவ்வகையில் செலவு செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய அவருக்கு உரிமை உண்டு. வருமானத்தைவிட மிகுதியாகச் செலவு செய்யவும் அவருக்கு உரிமை உண்டு. குடும்பத்தை நடத்துவதற்கு அவர் கடனும் வாங்கலாம். கருத்தாவின் நடவடிக்கையை உறுப்பினர்கள் விரும்பவில்லையெனில் சொத்துகளைப் பங்கிடக் கோர உரிமை உண்டு. எல்லோருக்கும் சமஅளவில் சொத்துகள் பிரிவினை செய்யப்படும். மிதகசாரச் சட்டப்படிப் பெண்களுக்குக் கூட்டுக் குடும்பத்தின் சொத்தில் உரிமை கிடையாது. ஆண்களுக்கு மட்டும் சொத்தில் பங்கு உண்டு.

கூட்டுக் குடும்பத்தில் ஏற்படும் நன்மைகள்

கீழ்க்குறிப்பிடுவனவற்றை கூட்டுக்குடும்பத்தினால் ஏற்படும் நன்மைகளாகக் கூறலாம்.

(1) வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட சமூகங்களுக்குக் கூட்டுக் குடும்பங்கள் பெரும் நன்மையை விளைவித்திருக்கின்றன. வேளாண்மைக்குரிய நிலங்கள் துண்டு படாமல் மொத்தமாக இருந்ததனால் குடும்பத்தினர்க்கு நன்மை ஏற்பட்டது. தந்தை வழியில் பிள்ளைகளும் வேளாண்மை செய்ய உதவியது. குடும்பத்திலுள்ளவர்கள் ஆண்களும், பெண்களும், வயது வந்தவர்களும் வேளாண்மை வேலைகளில் ஈடுபட்டு வருமானம் பெருக்க முடிந்தது.

(2) கூட்டுக் குடும்ப உறுப்பினர்களிடையே பொதுவாக நெருக்கமும் அன்பும் காணப்படும். குடும்பத்தில்

ஒற்றுமை நிலவும். ஒரே பாத்திரத்தில் சமைத்த உணவை உண்டு ஒரே வீட்டில் தங்கி, ஒரே குலதெய்வத்தை எல்லோரும் வழிபாடு செய்வதால் அவர்களிடையே அன்பும் ஒற்றுமையும் நிலவுவதில் வியப்பில்லை.

(3) கூட்டுக் குடும்பத்திலுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு நிலவும். நெருக்கடி நேரங்களில் குடும்பத்திலுள்ளவர்கள் கைகொடுத்துக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை நிலவும். குடும்பத் தலைவன் இறந்து போனால் அவனின் விதவையையும் குழந்தைகளையும் பிற உறுப்பினர்கள் கவனித்துக் காத்துக்கொள்வர்.

தீமைகள்

(1) கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெருகும்போது அது கட்டுப்படுத்த முடியாமற் போய் விடும். சிலர் புறக்கணிக்கப்படலாம். பெண்களும் குழந்தைகளும் கூட்டுக் குடும்பத்தில் அதிகம் துயரமடைவர்.

(2) சோம்பல் உள்ளவர்கள் சிலரும் கூட்டுக் குடும்பத்தில் இருப்பர். அவர்கள் அடுத்தவர் உழைப்பில் வாழும் ஒட்டுண்ணிகள் போன்றவர்கள். அவர்கள் பிற உறுப்பினர்களுக்குப் பாரமாகவும் தொல்லையாகவும் இருப்பர்.

(3) சிலர் தன்னலப் போக்கும் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகவும் காணப்படுவர். தங்கள் வசதியை மட்டும் கவனித்துக் கொள்வர். குடும்பத்தை இதற்கு வசதியாகப் பயன்படுத்திக் கொள்வர். குடும்பத்தில் வேறு சிலர் தொல்லைகளை ஏற்று அல்லலுறுவர். குடும்பத் தலைவனின் குழந்தைகளுக்குத் தனிச் சீராட்டும் பாராட்டும் கிடைக்கும். வேறு குழந்தைகள் புறக்கணிக்கப்படுவர். குடும்பத்தில் மனக் கசப்பும் வெறுப்பும் இதனால் வளரும்.

கூட்டுக் குடும்பம் சிதைவுறக் காரணம்

கூட்டுக்குடும்பங்கள் எங்கும் சிதைவுற்று வருகின்றன. மேற்கு நாடுகளில் கூட்டுக் குடும்பம் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தியாவிலும் இக்குடும்பம் காலத்திற்கு ஏற்றதல்ல என்று ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது இதற்கு வரலாற்று அடிப்படையில் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் சில பின்வருமாறு:

1. தொழில்மயமாக்கம் (Industrialization)

வேளாண்மைச் சமூகங்களுக்குத்தான் கூட்டுக் குடும்பங்கள் பொருத்தமானவை. இந்தியா இப்போது தொழில் மயமாகிக் கொண்டிருக்கிறது. நகரங்களில் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டதன் காரணமாகக் கிராமங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து செல்லுகின்றனர். இதனால் கூட்டுக் குடும்பங்கள் சிதைவுறுகின்றன.

2. போக்குவரத்துத் தொடர்புச் சாதனங்கள் அதிகரிப்பு

முன்பு போக்குவரத்துத் தொடர்பு சாதனங்கள் வசதி குறைவாக இருந்தன. மக்கள் ஒரே குடும்பமாக இருந்து பரம்பரை வேளாண்மைத் தொழிலைப் பின்பற்றினர். இப்போது இவ்வசதிகள் பெருகியதன் காரணமாக எல்லோரும் ஓரிடத்திலேயே ஒரே தொழிலைச் செய்யவேண்டிய நிலை இல்லை. நகரங்களுக்குச் சென்று புதிய தொழிலில் ஈடுபடுகின்றனர். சில சமயம் கிராமங்களிலேயே வேறு தொழில் செய்கின்றனர். இம்மாதிரி வேளைகளில் கூட்டுக் குடும்பங்களிலிருந்து பிரிந்து தங்களுக்குத் தனியானக் குடும்பங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

3. வேளாண்மை மற்றும் கிராம வணிகத்தின் வீழ்ச்சி

கிராமத்தில் வணிகமும் வேளாண்மையும் சிறப்பாக இருந்த போது கூட்டுக் குடும்பமும் நல்ல நிலையில் இருந்தது. நகரப் புறத் தொழிற்சாலைகள் பெருகின. அவற்றுடன் போட்டிபோட முடியாமல் கிராம வணிகம் நசிந்தது. கிராமத்தில் உள்ள தொழிலாளிகள் வேலை தேடி நகரப் புறங்களில் குடியேறினர். இதன் காரணமாகக் கூட்டுக் குடும்பமும் சிதைவுற்றது. வேலை வாய்ப்பு மட்டுமில்லாமல் நகரங்களில் வேறு சில கவர்ச்சியும் வாய்ப்பும் இருந்தன. பொழுதுபோக்குக் கல்வி போன்றவற்றில் நகரப் புறங்களில் அதிக வசதி இருந்தது. இதனால் கிராமங்களிலிருந்து அதிகமான மக்கள் நகரத்திற்குக் குடியேறவும் கூட்டுக் குடும்பம் சிதைவுற்றது.

4. மேற்கத்திய நாகரிகத்தின் பாதிப்பு

மேற்கத்திய கருத்துகளும் கோட்பாடுகளும் இப்போது இந்தியாவை மிகுதியாகப் பாதித்துள்ளன. மேற்கத்திய முறையில் நமது திருமணச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நமது கல்வி முறை மேற்கத்திய கல்வி முறையை அடியொற்றியது. திருமணம் புனிதமானது என்ற கருத்து மாறிவிட்டது; ஆணும் பெண்ணும் வாழ்க்கை நடத்த ஏற்படுத்தும் ஒப்பந்தம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இளைய தலைமுறையினர்க்குப் பாலின

உணர்ச்சி, குடும்பம் ஆகியவை குறித்த கருத்துகளில் பல மாற்றங்கள் விளைந்துள்ளன. தனி மனிதர்களின் சுதந்திரம் நமது மக்களின் கண்ணோட்டத்தில் அதிகம் இப்போது வலியுறுத்தப் படுகின்றது. இதனால் கூட்டுக் குடும்பங்களில் சேர்ந்து வாழும் எண்ணம் பழமையானதாகக் கருதப்படுகிறது. கூட்டுக் குடும்பம் இந்திய மண்ணில் வலிவிழப்பதற்கு இத்தகைய மேற்கத்தியக் கோட்பாடுகளும் காரணமாகும்.

5. புதிய சமூகச் சட்டங்கள்

இந்தியாவில் நிறைவேற்றப்பட்ட பல சட்டங்கள் கூட்டுக் குடும்பத்திற்கு மரண அடியாக விளங்கின. சிவில் திருமணச் சட்டம் (1872), இந்து திருமணச் சட்டம் (1955), இந்து வாரிசு உரிமைச் சட்டம் (1956) ஆகியவை முக்கியமான சட்டங்களாகும். பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக வயதுவந்த ஆணும் பெண்ணும் சிவில் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்துகொள்ள வசதி இருக்கின்றது. ஒரு பெண் மணமுறிவு பெற்றுக்கொள்ள இந்து திருமணச் சட்டம் அனுமதிக்கிறது. இந்து வாரிசு உரிமைச் சட்டம் பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று கூறுகின்றது. இத்தகைய புதிய உரிமைகள் கூட்டுக் குடும்பங்கள் நலிந்துபோகக் காரணமாக இருந்தன.

வினாக்கள்

1. திருமணம் என்றால் என்ன? அதன் வகைகள் எவை?
2. இந்தியாவில் திருமணமுறை குறித்து நீவிர் அறிவதென்ன?
3. கருக்குடும்பம், விரிந்த குடும்பம் என்றால் என்ன?
4. கூட்டுக்குடும்பத்தினால் ஏற்படும் நன்மை தீமைகள் எவை?
5. கூட்டுக்குடும்பம் எதனால் சிதறுண்டது?

6. உறவுமுறை

இந்தியச் சமூக அமைப்பில் குடும்பத்தினைப் போன்று உறவு முறையும் (Kinship) பண்டுதொட்டே அடிப்படையாக இருந்து வருகின்றது. பழங்காலத்தில் தனி மனிதர்கள் உறவுமுறையில் சமுதாயமாக இயங்கினர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே குடும்பத்திற்கு உறவு முறைதான் அடிப்படை விதியாக இருந்துவருகின்றது.

உறவுமுறை என்பது உரிமைகள் - கடமைகள், கடப்பாடுகள்- முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கொண்ட முறமை ஆகும். ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உறவை மட்டுமல்லாமல் பல்வேறு குடும்ப உறுப்பினர்களின் உறவையும் இது வரையறை செய்கின்றது. தனி மனிதர்கள் குடும்பங்களுடன் இணைந்து நலமாக வாழ்வதற்கு உறவுமுறை உதவுகின்றது.

உறவுமுறை இரண்டு வகைப்படும்: குருதி உறவு என்பது ஒன்று (Consanguineous kinship). மற்றொன்று மண உறவு (Affinal kinship). பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையேயும் உடன்பிறப்புகளுக்குமிடையேயும் உள்ள உறவு குருதி உறவு. ஒரே குருதியினால் விளைந்த உறவு. திருமணத்தினால் ஏற்படும் உறவு மண உறவு என்றழைக்கப்படும்.

உறவு முறை முக்கியமாக உயிரியல் தன்மையிலான இனப் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தபோதிலும், சமூக ஒப்புதல் அதனைவிட மிக முக்கியமானதாகும். பல்வேறு எடுத்துக் காட்டுகள்மூலம் இதனை உறுதிப்படுத்தலாம்.

நீலகிரியில் வாழும் தோடர்கள் பல கணவர் மணமுறையைப் பின்பற்றுபவர்கள் - ஒரு பெண்ணுக்குப் பல கணவர்கள். பல கணவர்கள் அப் பெண்ணிடம் உடலுறவு கொள்வதால் தந்தை - பிள்ளை உறவு முறையைத் தெளிவுபடுத்துவது அவர்களிடம் இயலாது. குழந்தையின் தந்தை யார் என்று பல கணவர்களுள் ஒருவரைக் குறிப்பிட்டுக் கூறமுடியாது. இச் சிக்கலைத் தீர்க்க தோடர்கள் ஒரு வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

அவர்கள் வில் - அம்புச் சடங்கு (Bow and arrow ceremoney) என்று ஒன்றை நடத்துகின்றனர். இச் சடங்கை யார் செய்கிறார் களோ அவரே குழந்தையின் தந்தை என்று கருதப்படுவார். குழந்தை கருத்தரிக்கும் காலத்தில் அவர் வெளியூர் சென்றி ருந்தாலும் இறந்திருந்தாலும் அவரே தந்தை என்றுக் கருதப்படுவார்.

உறவுமுறையின் வகைகள்

குடும்ப அமைப்பை விடவும் உறவுமுறை செயல்படும் அளவு பெரிது. இது செயல்படும் முறையும் சிக்கலானது. குடும்பத்தை வெளிப்படையாக உணர்ந்து கொள்ளலாம். உறவுமுறை கண்ணுக்குப் புலப்படாது. அன்றாட நடவடிக்கையில் உறவு முறைக்கு அதிகம் முக்கியத்துவமில்லை. உறவுக்காரர்களும் வெளியார்களைப் போன்றுதான் கருதப்படுவார்கள். ஒருவனுக்கு சிக்கல்கள் ஏற்படும்போது மறைந்திருக்கும் உறவுமுறைத் தொடர்புகள் வெளிவந்துவிடும். உறவு அடிப்படையில் மக்கள் ஒன்று சேர்ந்துகொள்வார்கள். சிக்கல்கள் தீர்ந்தபின்பு பழைய நிலை நீடிக்கும்.

உறவு முறைக்கும் பொது நடவடிக்கைகளுக்கும் தொடர்பு உண்டு: உறவுமுறைத் தொடர்பு நெருக்கமாக இருந்தால் உறுப்பினர்களிடையே சமூகத் தொடர்பும் இணக்கமாக இருக்கும். சமூகத் தொடர்பு நெருக்கமாக இருந்தாலும் உறவுமுறைத் தொடர்பு வலுப்படுத்தப்படும். இரண்டும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையது.

உறவுமுறைத் தொடர்பு இரண்டு தன்மைகளை அடிப்படையாகக் கொண்டது. குடிவழித் தொடர்பும் (Genealogical depth), நிலஎல்லைத் தூரமும்(Territorial)உறவுமுறையின் நெருக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாகும்: உறவுமுறை பெரிய அளவில் பரவினால் உறுப்பினர்களிடையே உள்ள தொடர்பு விட்டுப் போகும்; நாளடைவில் மறைந்தே போகலாம். உறவுக்காரர்கள் பக்கத்தில் வாழ்ந்து வந்தால் குடிவழித் தொடர்பில் மிக நெருக்கம் வேண்டும் என்பதில்லை. அடுத்தடுத்து வாழ்வதால் உறுப்பினர் களிடையே இயல்பாக நெருக்கம் வந்துவிடும்: ஆனால் மிக நெருங்கிய உறவினர்கள் தொலைதூர இடங்களில் வாழ்பவர் களாக இருந்தால் தொடர்பு நெருக்கமாக இருக்காது. எனவே, உறவுமுறையை வரிசைப்படுத்தும்போது குடிவழித் தொடர்பைப் போன்று நில எல்லைத் தொடர்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

உறவுமுறையில் பல வகைகள் உள்ளன. நான்கு வகைகள் முக்கியமானவை. அவை: ஒருதலைச் சார்பான உறவு (Unilateral kinship), இருதலைச் சார்பான உறவு (Bilateral kinship), இடையுறவு அல்லது ஒன்றுவிட்ட உறவு (Collateral kinship), நேர்வழி உறவு (Lenial kinship).

தாய்வழி அல்லது தந்தைவழி உறவு முறையைத் தீர்மானிப்பது ஒருதலைச் சார்பான உறவு என்றழைக்கப்படும். தாய் வழியும் தந்தை வழியும் உறவும் பாராட்டப்படும்போது அது இருதலைச் சார்பான உறவு. சித்தப்பா, மாமா, மைத்துனன் என்ற வழியில் வரும் உறவு ஒன்றுவிட்ட உறவு ஆகும். தந்தை, மகன், பேரன் உறவு நேர்வழி உறவு.

உறவுமுறைத் தொடர்பும் பல தன்மைகளைக் கொண்டது: பெற்றோர்களும் குழந்தைகளும், உடன் பிறப்புகள் தம்முள்ளும் முதனிலைக் குருதி உறவு கொண்டவர்கள் (Primary Consanguineous kinship). கணவனும் மனைவியும் முதனிலை லநெருக்க உறவு கொண்டவர்கள் (Primary affinal kinship). ஒருவனுக்கு தன் தந்தையின் சகோதரனுடன் (சித்தப்பா அல்லது பெரியப்பா) தொடர்பு இடைநிலைக் குருதி உறவு (Secondary consanguineous kinship). ஒருவன் தனது மனைவியின் சகோதரனுடன் கொண்ட உறவு இடைநிலை மண உறவு (Secondary a ffinal kinship). இந்த வகையில் உறவுமுறை கணக்கிலடங்கா எண்ணிக்கையில் விரிந்து கொண்டே செல்லும்.

உறவுமுறை எல்லையையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். கால்வழி (sib) என்பது ஒன்று அல்லது பல மூதாதையர்களின் வழி வந்தவர்களாகக் கருதப்படும் ஒருதலைச் சார்பான உறவு முறைக் குழுவாகும். ஒரே இடத்தில் வாழ்பவர்களாகவும் இக் கால்வழியினர் இருக்கலாம்; சிதறி பல இடங்களில் வாழ்பவர்களாகவும் இருக்கலாம். உறவுமுறையில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதனைப் பரந்த எல்லையைக் கொண்டது என்றும் குறுகிய எல்லையைக் கொண்டது என்றும் மதிப்பிடுவதுண்டு. அதிக எண்ணிக்கை கொண்ட குழு பரந்த குழு; குறைந்த எண்ணிக்கை குறுகிய குழு.

உறவுமுறை வழக்கு

உறவுமுறைக் குழுவான குடும்பத்திலும் கால்வழியிலும் சில நடத்தை முறைக் கோலங்கள் (patterns) காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளாக இவை காணப்படுகின்றன. இவை ஓரளவிற்கு நிலையானவை. இந்த

நடத்தை முறைகள் வாய்மொழி வழக்காகவும் இருக்கலாம்; வாய் மொழியில்லாத வழக்காகவும் இருக்கலாம். எல்லாச் சமூகங் களிலும் இவை காணப்படுகின்றன. உறவுமுறை உறுப்பினர் களிடையே சச்சரவு ஏற்படாமல் சுமூகமான நிலையில் தொடர்பு கொள்ள இந்த வழக்குகள் உதவுகின்றன. அவற்றுள் கீழ்க் குறிப்பிடுவன சில :

தவிர்ப்பு (Avoidance)

எல்லாச் சமூகங்களிலும் மாமனார் - மருமகள் உறவுமுறை யில் தவிர்ப்பு அனுசரிக்கப்படுகின்றது. மாமியார்-மருமகன் உறவு முறையும் இதே வகையைச் சேர்ந்ததாகும். மருமகன் இருக்கும் இடத்தில் மாமியார் வந்து பேசுவது கூடாது. ஒதுங்கியிருந்து பேசுவதே வழக்கம். நமது சமூகத்தில் சகோதரன் - சகோதரி களிடையேயும் தவிர்ப்பு முறை உறவே நிலவி வருகின்றது.

கேலி செய்யும் உறவு (Joking relationship)

தவிர்ப்பு முறைக்கு நேர் எதிரிடையாக ஒருவரை ஒருவர் கேலி செய்து உறவாடும் வழக்கமும் நிலவிவருகிறது. கேவல மான முறையில் திட்டிக்கொள்வதும், பாலின உணர்வில் கேலி பேசிக்கொள்வதும் சில உறவினர்களிடையே அனுமதிக்கப்படு கிறது. முறைப் பெண்ணிடம் அத்தானுக்கு இவ்வுரிமை உண்டு. "அறுகம் சம்பா நெல்லைக் கண்டால் கையும் சும்மா இருக்காது அத்தை மகளைக் கண்டால் வாயும் சும்மாயிருக்காது" என்பது தமிழர் பழமொழியாகும்.

மனைவியின் சகோதரியுடன் ஒருவன் இந்தக் கேலி செய்யும் உறவு உண்டு. இதனைப் போன்று கணவனின் தம்பியுடன் ஒருத்தி கேலி பேசிக் கொள்ளலாம். தாத்தா பேத்தியுடன் கேலி செய்யும் வழக்கம் எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகின்றது.

கிண்டல் கேலி மூலம் ஒருவரைக் கட்டுப்படுத்துவதற்கு இவ் வழக்கம் உதவுகின்றது.

சேய்வழிப் பெயர்மை (Teknonymy)

நமது நாட்டில் கிராமங்களில் ஒருவன் அவனது பிள்ளை யின் தந்தை என்றும் ஒருத்தி அவனது பிள்ளையின் தாய் என்றும் கூறி அழைக்கப்படுவார்கள். (எடுத்துக்காட்டாக, ஒருவனை "கண்ணனின் அப்பா" வென்றும், தாயை "கண்ணனின் அம்மா வென்றும்" கூறுவர்.)

முன்பு நிலவிய பெண்களின் ஆதிக்கத்தை இது காட்டுகிறது என்று டைலர் கூறுகின்றார். மருமகனைக் குடும்பத்தில் ஒருவனாக மாமியார் கருதாமல் தனது பேரன் அல்லது பேத்தியின் தந்தை என்று குறிப்பிட்டு வந்ததனால் ஏற்பட்ட வழக்கம் இது. பின்பு தாயாரும் சேய்வழி குறிப்பிடப்பட்டாள்.

தாய்மாமன் உரிமை (Avunculate)

இந்தியாவில் தாய்மாமனுக்குத் தனது மருமகன், மருமகள் மீது அவர்களின் தந்தையைவிடத் தனி உரிமைகள் இருந்தன. மாமனின் சொத்தில் மருமகளுக்குத்தான் உரிமை. மாமன் வீட்டில் வளர்ந்து அவருக்காகவே மருமக்கள் உழைத்தார்கள். இந்த வழக்கம் தாய்வழி (matrilenial) சமூகங்களில் மட்டுமே காணப்பட்டது. கேரளத்தில் நாயர் சமூகத்தில் முன்பு இந்த வழக்கம் நிலவியது. நாஞ்சில் நாட்டில் வேளாளர் சமூகத்தில் ஒரு பிரிவினரிடையே இவ்வழக்கம் முன்பு நிலவியது. இப்போது சட்டப்படி இது நீக்கப்பட்டது.

தந்தைவழிச் (patrilenial) சமூகங்களில் தந்தையின் சகோதரிக்கு (அத்தை) இம்மாதிரி உரிமைகள் இருந்தன.

கோவேதே (Govade)

இந்த வழக்கம் வேடிக்கையானது. இது 'பேறுகால நோய்' வழக்கம் என்று கூறப்படும். காசி (Khasi), தோதுவர் (Todas) பழங்குடியினரிடம் காணப்படுகின்றது. மனைவி குழந்தை பெறும் போது கணவனும் அவளைப்போன்று மருத்துவம் பார்த்துக் கொள்ள வேண்டும். மனைவி உண்பதுபோன்ற உணவையே அவனும் உட்கொள்ள வேண்டும். வெளியில் நடமாடக்கூடாது. சிலவற்றைத் தவிர்க்க வேண்டும்.

தாய்வழிக் குடும்பத்தில் தந்தையை அடையாளம் காண்பிக்க இவ்வழக்கம் பயன்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். தந்தைப் பாசத்தை வளர்க்க இது உதவியது என்று கூறுவாரும் உண்டு.

வினாக்கள்

1. உறவுமுறை என்றால் என்ன?
2. உறவுமுறையின் வகைகள் எவை?
3. உறவுமுறை வழக்குகள் சிலவற்றை விளக்குக.

7. இந்தியச் சமூகத்தில் இஸ்லாம் ஏற்படுத்திய விளைவு

இஸ்லாத்துடன் ஏற்பட்டத் தொடர்பு காரணமாக இந்தியாவில் பல மாற்றங்கள் விளைந்துள்ளன. நவீனகாலம் என்று கருதப்படும் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே இம் மாற்றங்கள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. பாரதம் முழுவதும் ஓரளவுக்கு முஸ்லிம் ஆட்சி பரவியிருந்த போதிலும் இஸ்லாம் சமயத்தின் பாதிப்பு வட இந்தியாவில்தான் அதிகம் காணப்படுகின்றது.

முகலாயப் பேரரசர் அக்பர் (1542—1605) இந்துப் பெண்ணைத் திருமணம் செய்து மக்களிடையே இந்து-முஸ்லிம் நல்லெண்ணத்திற்கு வித்திட்டார். பல சமயங்களிலிருந்த சிறந்த தத்துவக் கருத்துகளைத் தேர்ந்தெடுத்து ஒரு புதிய சமயம் தொடங்கினார். தென் இந்தியாவில் இஸ்லாத்தின் பாதிப்பு குறைவாகத்தான் உள்ளது.

பின்னர் முஸ்லிம்கள் பாரதநாட்டின் பல இடங்களிலும் பரவினர். முதலில் நகரங்களில் பரவி இந்திய நகர வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கினர். முஸ்லிம்களின் வேறுபாடான உடை பழக்கவழக்கங்கள் இந்து மக்களோடு நெருங்கிய உறவு கொள்வதற்குத் தடையாக இருந்தன. நகரங்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது அவர்கள் கிராமங்களுக்கு இடம்பெயர்ந்தனர். கிராமங்களில் சமய மாற்றம் ஏற்பட்டது. கலப்பு மணங்களும் அதிகரித்தன. இதனால் முஸ்லிம்களின் எண்ணிக்கைப் பெருகியது. நாளடைவில் முஸ்லிம்கள் இந்திய மொழிகளைப் பேசி இந்தியப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றத் தொடங்கினர். முஸ்லிம்களின் வழக்கம் இந்துக்களைப் பாதித்தது போன்று இந்து வழக்கம் முஸ்லிம்களையும் பாதித்தது. துருக்கி, ஆப்கான் சுல்தான்களின் நாணயங்களில் ஸ்ரீ, தாமரை, சுவஸ்திக் போன்ற சொற்களும் சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. இந்து-முஸ்லிம் தொடர்பு ஒன்றுக்கு ஒன்று உதவும் வகையில் உள்ளது.

பழைமையில் நம்பிக்கைக் கொண்ட இந்துக்களும் அராபிய பர்சிய மொழிகளைக் கற்கத் தொடங்கினர். பதின்மூன்றாவது நூற்றாண்டில் இந்து - முஸ்லிம் தொடர்பு காரணமாக ஒரு புதிய மொழியாக உருது மொழி இந்திய மண்ணில் உருவானது.

இந்துப் பெண்கள் முக்காடிட்டுக்கொள்ளும் வழக்கம் முஸ்லிம் தொடர்பால் ஏற்பட்டதாகும். சதி, பலதார மணம் போன்ற இந்திய வழக்கங்களில் மாற்றம் ஏற்படவில்லை. பலதார மணம் முஸ்லிம்களிடையேயும் நிலவிவந்த வழக்கமாகும்.

முஸ்லிம்கள் ஆட்சியில் இந்துக்களிடையே சாதி அமைப்பு பலமாக வேரூன்றியது. பசுவை வழிபடும் வழக்கம் தீவிர மடைந்தது. பசுவைக் கொன்று அதன் இறைச்சியைச் சாப்பிடக் கூடாது என்பதில் முஸ்லிம்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. இந்துக்கள் இச்செயலை மிகக் கொடுஞ்செயலாகக் கருதினார்கள். இந்துக்கள் பசுவை வழிபடும் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள்.

இந்துச் சமயத்தின் தத்துவத்தில் முஸ்லிம் தொடர்பினால் ஏற்பட்ட விளைவுகளைச் சரியாகக் கணிக்க முடிவதில்லை. ஆனால் இந்துச் சமயத்தில் பல கடவுள் வழிபாட்டை நீக்கிவிட்டு ''உருவமற்ற ஒருவனே தேவன்'' என்ற சமயநோக்கு முஸ்லிம் களின் தொடர்பால் செல்வாக்குப் பெற்றது. வேதகால இந்துச் சமயத்திலிருந்தே இவ்விதத் தத்துவ எண்ணம்இருந்து வருகின்றது. எனவே இஸ்லாத்தின் தொடர்பால் இந்தத் தத்துவம் புதிதாக உருவானது என்று சொல்வது எளிதன்று. ஆனால் இந்தத் தத்துவம் புதுப்பிக்கப்பட்டது என்று கூறலாம்.

புதிய பக்தி இயக்கமும் 'ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தை எங்கும் பரப்பியது. பாரசீக சூபிகளின் தொடர்பு ஓரளவுக்கு இதற்குக் காரணமாகும். உலகில் அன்பும் ஒற்றுமையும் தழைக்கவேண்டும் என்று பல சமயக் குரவர்களும் ஞானிகளும் பக்தியை எங்கும் பரப்பி இந்த சமய உண்மையைப் போதித்தனர். ராமானந்தர், கபீர் போன்றவர்கள் இந்த இயக்கத்தின் முன்னோடிகள்.

கபீரின் ஒரு கடவுள் கோட்பாடு இந்து — இஸ்லாம் சமயத்தை இணைக்கும் ஒரு பாலம். அவர் இந்து சமயத்தின், பல வெளிப்புற ஒழுக்கங்களையும், சாதி அமைப்பையும் கடுமையாகச் சாடினார். ஆனால் உண்மையில் அவர் வைணவராக விளங்கினார். அவர் தான் அல்லா இராமனுடையக் குழந்தை என்று கூறினார். அவர்

போதித்த சமய உண்மைகள் அனைத்தும் சத்தானக் கவிதைத் துளிகள். கபீரின் சீடர் குருநானக்; சீக்கிய சமயத்தை ஏற்படுத்தியவர். கபீரின் போதனைகள் சீக்கிய சமயத்தின் புனித நூலான குரு கிரந்தசாகிப்பில் காணப்படுகின்றன. ஆனால் குருநானக்கின் போதனைகள் இந்துச் சமயத் தத்துவத்துடன் தான் நெருங்கிய உறவுகொண்டதாக விளங்குகிறது. கபீர் வழி வந்த 'கபீர் பந்திகள்' (Kabirpanthis) என்ற பிரிவினர் இந்துக் கோயில்களுக்குச் செல்வதில்லை. உருவமற்றக் கடவுளைத் தங்களுக்கே உரித்தான இடங்களில்தான் வழிபடுகின்றனர்.

நானக்கின் காலத்தில் வாழ்ந்த இரு பெரும் சமயக் குரவர்களான ஸ்ரீவல்லபரும், ஸ்ரீசைதன்னியரும் பக்தி நெறியையே பரப்பினர். ஸ்ரீ சைதன்னியருக்கு எல்லாச் சாதியிலிருந்தும் சீடர்கள் இருந்தனர். இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த இருவர் சீடர்களாக இருந்தனர்.

பதினாறாம் நூற்றாண்டில் இந்துக் கடவுள் குடும்பத்தில் இஸ்லாத்தின் அல்லாவையும் அங்கமாக்க முயற்சி செய்யப்பட்டது. இந்த கடவுளுக்கு சத்திய நாராயணா அல்லது சத்தியாபிர் என்று பெயர் சூட்டப்பட்டது. 'பிர்' என்பது இஸ்லாத்தின் ஞானியைக் குறிப்பிடும். பின்பு வந்த பக்தி இயக்க சமயக்குரவர்களும் பிற சமயத்தினரைப் புண்படுத்தவில்லை. தங்கள் பாடல்களில் இறைவனை ராம் என்று அழைத்தபோதிலும் கிறித்துவ — இஸ்லாமியக் கடவுள்களைக் கேலி செய்யவோ, தாழ்த்திக் கூறவோ இல்லை.

நவீன இந்துச் சமயத்தில் உருவ வழிபாட்டை எதிர்ப்பதும் உருவமற்ற ஓர் இறைவனை வழிபடுவதும் புதியதாகும். இந்த சமய நோக்கைக் கொண்டுவந்தவர் ராஜாராம் மோகன்ராய். இஸ்லாமியச் சமய அடிப்படையில் கல்வி பெற்ற அவர் இந்த சமயக் கோட்பாட்டைப் பரப்பினார். ஆனால் பின்பு அவரின் போதனைகள் கிறித்துவச் சமய தத்துவத்தையும் இந்துச் சமயத் தத்துவத்தையும் இணைப்பதாக மாறிவிட்டது.

கலைகள் (Arts)

இஸ்லாத்தின் பாதிப்பு இந்தியக் கட்டடக் கலையிலும் பளிச்சிட்டது. துருக்கி—ஆப்கானியக் கால இந்தியக் கலையில் இது விளங்குகின்றது. மத்தியஆசிய இஸ்லாமிய கலையும் இந்தியக் கலையும் கலந்த ஒரு புதிய கலை தோன்றியது. துருக்கியிலிருந்து வந்தவர்கள் வளைவு, குமிழ் கட்டடக் கலையின் அறிவையும் கொண்டு வந்தனர். புதிதாகக் கட்டடம் எழுப்பியபோது முஸ்லிம்கள்

இந்தியாவில் உள்ள கட்டடக் கலைஞர்களையே வேலைக்கு அமர்த்தினர். வெளிநாட்டுக் கட்டடக் கலையின் நுட்பத்தை அறிந்துகொண்ட இந்தியக் கலைஞர்களும் இங்குள்ள கட்டடங்களை அந்த முறையில் புதுப்பித்தனர். புதிய கட்டடங்களை வெளிநாட்டுமுறையில் கட்டினர். இதனால் இந்தியாவில் பல பகுதிகளிலும் தேவைகளுக்கு ஏற்ப பலவிதக் கட்டடக் கலைகள் உருவாகின. டில்லியிலுள்ள குதுப்மினார் இத்தகையக் கட்டடக் கலையின் நினைவுச் சின்னமாக விளங்குகின்றது. இந்துக் கட்டடக் கலையின் பாணியை முஸ்லிம் கட்டடத்தில் காண்கின்றோம்.

இலக்கியம் (Literature)

முஸ்லிம்கள் ஆட்சியின்போது இலக்கிய வளர்ச்சி, சமய அடிப்படையிலும், சமயச் சார்பற்ற முறையிலும் — இரண்டு திசைகளிலும் ஏற்பட்டது. சமயச் சார்பற்ற இலக்கியத் துறையில் கவிதையும் வரலாறும் வளர்ச்சியுற்றது. அமீர் குஸ்ரு கவிஞராகவும், இசை வல்லுனராகவும், வரலாற்று அறிஞராகவும் விளங்கினார். துருக்கி மொழியில் எழுதப்பட்ட பாபரின் நினைவுகள் வரலாற்று இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்தது.

பாமினி சுல்தான்கள், ஆதரவிலும் பிஜப்பூர் அடில் ஷாகிஸ் ஆதரவிலும் உருது இலக்கியம் வளர்ந்தது. பிஜப்பூர் மன்னர்கள் பலரும் கவிஞர்களாக விளங்கினார்கள். சமய இலக்கியத்தில் நிஜாமுதீன் ஆலியாவின் 'உரையாடல்கள்' (Conversation) இலக்கிய மதிப்பு வாய்ந்தது.

விஜயநகர மன்னர்களும் அவர்களின் சமகாலத்து ரெட்டி அரசர்களும் சமஸ்கிருத, தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கு உதவியளித்தனர். சமஸ்கிருத மொழி முஸ்லிம்களுக்குப் புரியாததனால் வட்டார மொழியை அவர்கள் பயன்படுத்தினார்கள். நாளடைவில் அவை வளர்ச்சியடைந்தன. தமிழிலக்கியமும் இஸ்லாத்தின் பாதிப்பால் வளர்ச்சியடைந்தது. உமறுப் புலவர் இயற்றிய 'சீறாப்புராணம்' பெருங்காவியமாகக் கருதப்படுகின்றது.

வினாக்கள்

1. முஸ்லிம்கள் தொடர்பால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
2. இஸ்லாமியத் தொடர்பால் இந்துச் சமயத்தில் என்ன மாற்றங்கள் ஏற்ப்பட்டன?
3. இந்துக்கள் தொடர்பால் முஸ்லிம்களிடையே ஏற்பட்ட விளைவுகள் எவை?

8. இந்தியச் சமூகத்தில் மேற்கத்திய விளைவு

இந்தியச் சமூகத்தில் மேற்கத்தியப் பாதிப்பு குறித்து வேறுபட்ட இரண்டு கருத்துகள் நிலவுகின்றன. நவீன இந்துச் சமயத்தில் காணப்படும் சமூக, ஒழுக்க, சமயக் கோட்பாடுகளுக்கெல்லாம் மேற்கத்திய நாடுகளின் தொடர்புதான் காரணம் என்பது ஒன்று. இப்போது இக்கருத்து நிலவவில்லை. மேற்கத்திய குடியேற்றக் கொள்கையுடன் வந்த எல்லாக் கருத்துகளுமே தீங்கானவை என்பது இன்னொரு கருத்து. இத்தகைய கருத்து அரசியல் கொள்கையோடு தொடர்புடையவை என்பதனால் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை.

இந்துச் சிந்தனை, தற்போது நிலவிவரும் மேற்கத்தியச் சிந்தனைகளை எந்த வகையில் ஏற்றுக்கொண்டது, எந்த வகையில் ஒதுக்கித் தள்ளியது என்று ஆய்ந்து கண்டறிந்தால்தான் நவீன இந்துச் சமயம் குறித்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்குரிய காலம் இன்னமும் கனியவில்லை என்று கூறுவோரும் உண்டு. எனினும் சில துறைகளில் மேற்கத்திய பாதிப்புகளை நாம் உணராமலில்லை. கவியரசர் இரவீந்திரநாத தாகுரின் கருத்தை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்; "மேற்கத்திய உணர்ச்சிகள் புயலின் உருவத்தில் நமது வயலில் வந்தபோதிலும் காலம் காலமாக நிலைத்து நிற்கும் உயிருள்ள விதைகளைத் தூவியுள்ளது என்பதே உண்மை" என்று அவர் கூறியுள்ளார்.

இந்தியச் சிந்தனைகளை இரண்டு மேற்கத்தியத் துறைகள் பாதித்தன; ஒன்று, மேற்கத்திய அறிவியல்; மற்றொன்று, பிராட்டெஸ்டென்டுச் சமயம். பால கங்காதரத் திலகர் இது குறித்து, "நமது சமயம் எதிர்ப்பு விமரிசனங்களால் அச்சுறுத்தப் பட்டதென்றால், அது இவ்விரு காரணங்களினாலும்தான் ஏற்பட்டது" என்று கூறியிருக்கின்றார்.

இந்தியச் சிந்தனைகளுக்கு எதிர்ப்பு இருந்தது உண்மைதான். ஆனால் நாளடைவில் மேற்கத்தியச் சிந்தனைகளை இந்தியா கடன் வாங்கிக்கொண்டது. ஆகவே இதனைச் சரியாக வகைப் படுத்தி விளக்குவது என்பது எளிதன்று.

வரலாற்றுக் காலம்

புதிய இந்தியா ஒன்று 1757ஆம் ஆண்டுக்கும் 1857-க்குமிடையில் எழுந்தது. 1757ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அதற்கு முன்பு மொகலாயப் பேரரசு ஒரு வலிமைமிக்க சக்தியாக விளங்கியது. மொகலாயக் காலவண்ணங்களை (fashions) மேட்டுக்குடி மக்கள் பின்பற்றி வந்தனர். அதன்பிறகு மேற்கத்திய முறைகளும் கோட்பாடுகளும் அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டன. 1838 - க்குப் பிறகு பாரசீக மொழி செல்வாக்கிழந்தது. ஆங்கிலமும் வட்டார மொழிகளும் அதன் இடத்தைப் பிடித்தன. 1829-க்குப் பிறகு இந்து விதவைகள் உடன்கட்டை ஏறும் வழக்கம் மாய்ந்தது. வயதுக்கு வந்த பெண்கள் பள்ளிக்கூடங்களில் சென்று கல்விப் பயிலத் தொடங்கினர். இதனை எவ்விதத்திலும் தடை செய்ய முடியவில்லை. இரயில்வேப் போக்குவரத்தும் தந்தித் தொடர்பும் வந்தன. தொலைதூர இடங்களுடன் போக்குவரத்துத் தொடர்பு வசதி விரைவாக நடைபெற்றது. உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் செய்தியாக மக்கள் விரைவாக உணர வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தியச் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் இதனால் ஏற்பட்டன. இந்திய மக்களின் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் மிக முக்கியமானவையாகும். பல பழைய பொருளாதார அமைப்புகள் சிதைந்தன; புதிய அமைப்புகள் உருவாகின. எண்ணற்றவர் வேலையிழந்தனர். பாரதம் வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நாடாக மாறியது.

ஆங்கிலேயர்களின் ஆட்சி பாரத மண்ணில் வலிமையுடன் வேரூன்றத் தொடங்கியது. நாட்டின் பொருளாதாரம் வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்தியாவிலிருந்து தங்கமும் வெள்ளியும் வெளிநாடு சென்றடைந்தன. கிழக்கிந்தியக் கம்பெனிகளில் வேலை பார்த்தவர்கள் தங்கள் சேமிப்பை இந்த உலோகங்களின் வடிவத்தில் தாயகத்திற்கு அனுப்பினர். கம்பெனியின் உபரி வருமானமும் தங்கம் வெள்ளியாக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. கம்பெனி சீனாவிலும் வேறு நாடுகளிலும் முதலீடு செய்வதற்காக இங்கிருந்து தங்கம் கான்டனுக்கு (Canton) அனுப்பபப்பட்டது. இவற்றின் காரணமாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்தில் வெள்ளிப் பற்றாக்குறை ஏற்பட்டது.

தொழிற்புரட்சி ஏற்பட்டதன் காரணமாக இந்தியக் கைத்தறித் தொழில் நசிந்தது. இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் உலகின் பல இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டன. அதனோடு போட்டியிட முடியாமல் இந்தியத் துணி வாணிகம் நசிந்தது.

இந்தியச் சமுதாயம் பதினெட்டாம் நூற்றாண்டில் பல்வேறு மூட நம்பிக்கைகளில் உழன்றது. குழந்தை மணம், பலதார மணம், சதி, பெண்குழந்தைகளைக் கொல்லல், நரபலி போன்ற கொடிய வழக்கங்கள் தலைவிரித்தாடின. சாதியின் பயங்கரச் சட்ட திட்டங்கள் மக்களை அலைக்கழித்தன. கலப்பு மணங்கள் தடை செய்யப்பட்டன; விதவைக்கு மறுமணம் மறுக்கப்பட்டது. வெளிநாட்டுப் பயணம் செல்லல் தீது என்று கருதப்பட்டது; நரகத்திற்குச் செல்வதற்கொப்பானது என்று நம்பப்பட்டது. சமூகத்தின் கொடிய சட்ட திட்டங்களைப் பொறுக்க முடியாமல் பலர் இந்துச் சமயத்திலிருந்து சமயம் மாறினர். முஸ்லிம்கள் ஆட்சியின்போது இஸ்லாம் சமயத்திற்கும் ஆங்கிலேயர் ஆட்சியின் போது கிறித்துவச் சமயத்திற்கும் சமயம் மாறினர்.

மேற்கத்திய சுயமரியாதைச் சிந்தனைகளின் அறிமுகத்தின் காரணமாக இந்தியப் பழக்க வழக்கங்களை பல இந்திய சமூகத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர். ராஜாராம் மோகன்ராய் அவர்கள் முன்னோடும் பிள்ளையாக விளங்கினார்.

கல்வி

இந்தியாவில் பல பகுதிகளிலும் வட்டார மொழிப் பள்ளிகள் பல கல்வி கற்பித்து வந்தன. இப்பள்ளிகளில் பழைய முறைப் பாட போதனைகளே மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தன. அவை மாணவனின் சிந்தனா சக்தியைக் கூர்மையாக்க உதவவில்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி அரசு கல்வித் துறையில் கவனம் செலுத்தவேயில்லை. ஆனால் அதிலிருந்த பல அதிகாரிகளும் கல்வித் துறையில் ஈடுபாடு கொண்டு பல மாற்றங்களை ஏற்படுத்தினர். வாரன் ஹேஸ்டிங்ஸ் 1781 - ல் கல்கத்தா மதரசாவை நிறுவினார். ஜொனாதன்டங்கன் 1792 - ல் காசியில் வடமொழிக் கல்லூரியை நிறுவினார். கல்விக்காக ஒரு சிறு தொகையை கம்பெனி 1813 - ல் ஒதுக்கியது.

சில ஐரோப்பியர்களும், கிறித்துவப் பிரச்சாரச் சபைகளும், இந்தியர்களும் கல்வியைப் பரப்பும் முயற்சியை மேற்கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்காலே யின் பரிந்துரைப்படி ஆங்கிலக் கல்வி எங்கும் பரவியது. மேட்டுக் குடி மக்கள் ஆங்கிலக் கல்வியை அதிகம் பெற்றனர். இதனால் சமூகத்தில் பல விளைவுகள் ஏற்பட்டன. தேசியப் பற்றுமிக்க இந்தியர்கள் பலர் உருவாயினர். சமயச் சார்பற்றத் தன்மை எங்கும் பரவியது.

பள்ளிகளும் கல்லூரிகளும் மேற்கத்தியக் கல்வி முறையில் அறிவியல், புவியியல், பொருளாதாரம், வரலாறு ஆகியவற்றைப் பாடமாகக் கற்பித்தன. இதுவன்றி கிறித்துவச் சமயமும் போதிக்கப்பட்டது.

பழைய வழக்கங்களை இந்தியர்கள் பின்பற்றியபோதிலும் அவற்றில் குற்றங் காணாமலிருக்கவில்லை. அரசியல் துறையில் தேசிய இயக்கம் வளர்ச்சியுற்றது. சமயத் துறையில் பலர் கிறித்துவச் சமயத்திற்கு மாறினர். இந்துச் சமயத்திலும் கிறித்துவச் சமயச் சிந்தனைகள் பல மாற்றங்களை ஏற்படுத்தின. கிறித்துவச் சமயச் சிந்தனையில் நிலவிய உலகம் தழுவியக் கோட்பாட்டுகள் இந்துக்களையும் கவர்ச்சித்தன. இதனால் இந்துச் சமயத்திலும் பல புதிய மாற்றங்கள் விளைந்தன. மேற்கத்தியக் கல்விதான் இதற்கு முக்கியக் காரணமே தவிர கிறித்துவப் பிரச்சாரகர்களின் பணி காரணமல்ல என்பதும் முக்கியமானதாகும்.

கிறித்துவச் சமயப் பணி

கிறித்துவச் சமயப் பிரச்சாரகர்களின் பாதிப்பையும் நாம் குறைவாக மதிப்பிட முடியாது. இந்துச் சமூகத்தில் கீழ்மட்டத் திலிருந்தவர்களிடையே பல மாற்றங்கள் ஏற்பட்டன. கிறித்துவச் சமயப் பிரச்சாரகர்கள் பலரும் சமுதாய முன்னேற்றத்திற்குத் தங்களையே அர்ப்பணித்துள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. சில நேரங்களில் அவர்களின் செயல்கள் எதிர் மறையான விளைவு களையும் ஏற்படுத்தியது.

கிறித்துவ தேவாலயங்கள் தோன்றியதன் காரணமாக இந்துச் சமயத்தினரும் சுறுசுறுப்படைந்தனர். கிறித்துவச் சமயத்தைப் பின்பற்றி இந்துச் சமயத்தினரும் செயல்பட்டனர். இதனைக் கண்ணுற்ற, கிறித்துவப் பிரச்சாரகர்கள் இந்துச் சமயம் ஆட்டம் கண்டுவிட்டதென்று கருத்துத் தெரிவித்தனர். ஆனால் இந்துச் சமயம் காலத்திற்கு ஏற்றவாறு தன் அமைப்பை மாற்றிக்

கொண்டு புதிய வேகத்துடன் செயல்படத் தொடங்கியது. இந்துச் சமயம் தனது தன்மைகளை இழக்காமல் கிறித்துவச் சிந்தனைகளையும் இந்துச் சமயம் ஏற்றுக்கொண்டது.

சமூகச் சீர்திருத்தம்

மேற்கத்திய வள்ளல்தன்மையினாலும் சமூகச் சீர்திருத்தத்தினாலும் இந்தியச் சமூகத்தில் எண்ணற்ற மாற்றங்கள் விளைந்தன. உடன்கட்டை ஏறும் வழக்கம் (சதி) ஒழிக்கப்பட்டது. கொலை கொள்ளையில் ஈடுபட்ட பிண்டாரிகள், தக்கர்கள் ஒடுக்கப்பட்டனர். இந்துத் திருமணச் சட்டம் திருத்தி அமைக்கப் பட்டது. விதவைகளும் மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இவற்றிற்கெல்லாம் கிறித்துவ பிரச்சாரச் சபையும் அரசுமே காரணம். சமூகச் சிந்தனை வாய்ந்த பல இந்தியத் தலைவர் களும் இதற்கு உறுதுணையாக நின்றனர்.

போக்குவரத்துத் தொடர்பு

போக்குவரத்துத் தொடர்பு, மொழி, சட்டம், நிருவாகம், தொழில், வாணிகம் ஆகியத் துறைகளில் மேற்கத்திய செல்வாக்கினால் ஏற்பட்ட விளைவுகள் கணக்கற்றன. மேற்கத்தியத் தொடர்பினால் இந்திய மொழியில் உரைநடை இலக்கியம் வளர்ச்சியடைந்தது. தமிழில் 'இரட்சணிய யாத்திரிகம்' போன்ற புகழ் பெற்ற காவியங்கள் உருவாகின.

இந்தியாவில் வெள்ளையர்கள் செய்தவையெல்லாம் பாராட்டத்தக்கவை என்று கூறமுடியாது. பல வெள்ளையர்களும் இந்தியச் சமூகம் குறித்து எள்ளளவும் கவலைப்பட்டதில்லை, இந்தியச் சமூகத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்கள் குறித்தும் சிந்தனை செய்யவேயில்லை. பலரும் இந்துச் சமயத்தை முழுக்க முழுக்க எதிர்த்தனர்.

மேற்கத்திய கிறித்துவ தொடர்பினால் இந்துச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆராயத் தக்கதாகும். இந்தியாவின் சமயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உணர இது உதவும்.

வினாக்கள்

1. மேற்கத்திய தொடர்பால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
2. மேற்கத்திய தொடர்பால் இந்தியா நசிந்தது — இக்கூற்றை ஆராய்க.
3. மேற்கத்திய தொடர்பால் இந்தியக் கல்வி முறையிலும், சமூக சீர்திருத்தத் துறையிலும், ஏற்பட்ட விளைவுகள் எவை?

9. சமூகச் சமயச் சீர்திருத்த இயக்கங்கள்

மேற்கத்தியத் தொடர்பின் காரணமாக இந்தியாவிற்குப் புதிய கல்வி முறையும் கிறித்துவச் சமயமும் கிடைத்தன. கிறித்துவச் சமயப் பிரச்சாரகர்கள் தொடக்கத்தில் இந்துச் சமயத்தைக் கடுமையாகச் சாடினர். பள்ளிகளைத் திறந்து சமயச் சார்பற்ற கல்வியையும், கிறித்துவச் சமயத்தையும் அவர்கள் போதித்தனர். இவ்விரு துறைகளும் இந்தியர்களிடையே புதிய விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணியது. முதலில் கிறித்துவச் சமயத்தின்மீது அவர்கள் ஆர்வம் கொண்டபோதிலும், நாளடைவில் இந்துச் சமயத்தை தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பவேண்டும் என்ற உணர்வு அவர்களிடையே மலர்ந்தது.

மேற்கத்திய அறிஞர்கள் பலரும் இந்துச் சமயத்தின் பழம் பெருமைகள் குறித்து வெளியிட்ட ஆராய்ச்சிகள் இதற்கு உறுதுணை செய்தன. சர் வில்லியம் ஜோன்ஸ், சர் சார்லஸ் வில்கின்ஸ், கோல்புருக், வில்சன், முயிர், மானிர், வில்லியம்ஸ், மாக்ஸ்முல்லர், போப் போன்றவர்கள் இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்தனர். இந்திய மொழியிலிருந்த அரிய நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டனர்.

ஜேம்ஸ் பெர்கூசன், ஆனந்த குமாரசுவாமி போன்றவர்கள் இந்தியாவின் பழங்காலச் சின்னங்கள் கலைகள் ஆகியவற்றை உலகறியச் செய்தனர்.

இத்தகைய வாய்ப்பான சூழலினால் இந்துச் சமயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல சமூகச் சீர்திருத்தவாதிகள், சமயக் குரவர்கள், ஞானிகள், அறிஞர்கள் ஆகியோர் தோன்றினர். காலத்திற்கொவ்வாததும் மக்கள் வாழ்வுக்குப் பயன்படாத பல இந்துச் சமயக் குறிப்புகளைக் களைந்தனர். நிலையான உண்மைகளை வெளிநாடுகளுக்கும் சென்று நிலை நாட்டினர். இந்துச் சமூகத்திலும் சமயத்திலும் சீர்திருத்தம் எனும் புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டது.

புதிய விழிப்புணர்ச்சிக் காலத்தை இருவகையாகப் பிரிக்கலாம் என்று டி. எஸ். சர்மா குறிப்பிடுகின்றார்: 1750—1885 வரை சமூகச் சீர்திருத்தக் காலம்; 1885—1950 வரை மறுமலர்ச்சிக் காலம்.

பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம் போன்றவை முக்கியமான சீர்திருத்த இயக்கங்களாகும். சமூகச் சீர்திருத்தவாதிகளில் விடிவெள்ளியாகத் தோன்றியவர் ராஜாராம் மோகன்ராய். பிரம்ம சமாஜத்தை அவர் தோற்றுவித்தார்.

பிரம்ம சமாஜம்

இந்தியச் சமுதாயச் சீர்திருத்தவாதிகளுள் ராஜாராம் மோகன்ராய் முன்னோடும் பிள்ளையாக விளங்கினார். அவர் 1772 - ல் வங்காளத்தில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியில் சிறிது காலம் வேலை பார்த்தார். பின்பு வேலையினின்றும் நீங்கி சமூகச் சீர்திருத்தத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

இந்திய இலக்கியத்தில் மட்டுமன்றி அராபிய ஆங்கில மொழியிலும் அவர் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். இவ்வறிவுதான் இந்தியச் சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற உந்துதலை அவரிடம் ஏற்படுத்தியது. அவர் முதலில் கல்கத்தாவில் ஆத்மீக சபையைத் தொடங்கினார். பின்பு 1828 - ல் பிரம்மஞான சபையைத் தொடங்கினார். இச்சபை தொடங்கியதிலிருந்தே உருவ வழிபாடு, சாதி, குழந்தை மணம், படுதா முறை ஆகியவற்றை எதிர்த்தது. மேற்கத்திய முறையில் அறிவியல் கல்வியைப் பரப்பவேண்டும் என்று ராஜாராம் முயன்றார்.

இந்தியச் சமூகச் சீர்திருத்தத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை (சதி) நீக்குவதற்கு ராஜாராம் மோகன்ராய் பாடுபட்டார். இந்தக் கொடிய வழக்கத்தை எதிர்த்து அவர் சிறு வெளியீடுகள் வெளியிட்டு பொதுமக்கள் கருத்தைத் திரட்டினார். சதியை எதிர்த்து ஸ்மிருதி ஆசிரியர்கள் கருத்தை அவர் ஆதாரமாகக் காட்டினார். இந்துச் சமய நூல்களின் கருத்தைக் கூறியே இதுபோன்ற உருவ வழிபாட்டையும் அவர் எதிர்த்தார். உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிப்பதில் அவரின் முயற்சி வீண் போகவில்லை. உடன்கட்டை ஏறும் வழக்கத்தை வில்லியம் பெண்டிங் 1829 - ல் சட்டப்படி தடைசெய்தார்.

அக்காலத்தில் பலதார மண வழக்கமும் நிலவி வந்தது. யாக்ஞவல்கியர் போன்றவர்கள் கூறியவற்றை சான்று களாகக் காட்டி ராஜாராம் மோகன்ராய் இதனையும் எதிர்த்தார். குழந்தைப் பேறு இல்லாமலிருந்தாலோ, தீராத நோய் இருந் தாலோ, தான் ஒருவன் வேறு பெண்ணைத் திருமணம் செய்ய இந்துச் சமயச் சட்டம் அனுமதிக்கிறது என்று அவர் வாதாடினார்.

இந்துச் சமயத்தின் பாரம்பரியத்தை தான் எதிர்க்கவில்லை யென்றும் நாளடைவில் அதில் வந்து ஒட்டிய கேடுகளை ஒழிக்க விரும்புவதாகவும் அவர் தெளிவுபடுத்தினார். இந்த வகையில் தான் அவர் உருவ வழிபாட்டையும் எதிர்த்தார்.

உபநிடதத்திலிருந்தும் பிரம சூத்திரத்திலிருந்தும் இதற்கு உரிய சான்றுகளைக் காட்டினார். இதன் அடிப்படையில்தான் பிரம்மசமாஜத்தையும் தோற்றுவித்தார். பரம்பொருளை அடைய வேண்டுமெனில் தியானமே சிறந்த வழி என்றும் உருவ வழிபாடு சரியான வழியல்லவென்றும் அவர் விளக்கினார்.

இல்லற சமூக நடவடிக்கைகளை ஒருவன் சாத்திரங்களிலும் ஸ்மிருதிகளிலும் கூறியவாறு நிறைவேற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பிரம்ம சமாஜத்தினர் பின்பற்றக் கூறிய 'சாதனா' வேதாந்தத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். சமாஜத்தின் சமயச் சடங்குகள் இந்துச் சமய நடவடிக்கைகளை அடியொற்றியே மேற்கொள்ளப்பட்டது. பிராமணர்கள்தான் வழிபாடு நடத்த அனுமதிக்கப்பட்டனர். தனியான அறையில் வேதங்களை பிராமணர்களே ஓதினர். இம்மாதிரி பழமைப் பிடிப்புடன் இந்துச் சமய விதிகளைப் பின்பற்றியதனால் சமாஜத்திற்கும் பிற இந்துக்கள் தீங்கு விளைவிக்காமல், காப்பாற்றினார்கள் என்று சிலர் கருதுகின்றனர். அவர் போதித்த கொள்கைகள் இந்துச் சமயத்திற்கு எதிரானவை அல்லவென்று பல நேரங்களிலும் அவர் உணர்த்தினார்.

ராஜாராம் மோகன்ராய் ஒரு சமய குரவரோ தத்துவ ஞானியோ அன்று. அவர் ஒரு சமூகச் சீர்திருத்தக்காரர். தனது கருத்துக்குச் சான்றாக விளங்கிய இந்துச் சமய நூல்களின் கருத்து களை மட்டுமே அவர் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஆத்மா, பரமாத்மா என்ற தத்துவ விளக்கங்களைப் பற்றி அவர் ஒன்றுமே கூறவில்லை.

சமயத்தின் சமூக அரசியல் தன்மைகள் குறித்துதான் அவர் மிகுந்த கவனம் செலுத்தினாரேயொழிய உணர்ச்சிபூர்வமான

சமயத் தன்மைகள் குறித்து ஏதும் கூறவில்லை. இதனால் அவர் நிறுவிய பிரம்ம சமாஜமும் இந்துச் சமூக அமைப்பில் ஒரு புதிய சாதியைத்தான் தோற்றுவித்தது. இந்த அமைப்பினைப் பின் பற்றியவர்கள் நாளடைவில் ஒரு சாதியாக மாறியதை யாராலும் தடுக்க முடியவில்லை.

ராஜாராம் மோகன்ராய் மறைந்த பிறகு தேவேந்திரநாத தாகுர் (ரவீந்திரநாத தாகுரின் தந்தை) பிரம்ம சமாஜத்தின் தலைவரானார். அதன் பிறகு கேசவசந்திரசேன் தலைவ ரானார். அதன் பின்னர் சமாஜத்தில் பல்வேறு உட்பிரிவுகள் தோன்றி சண்டையிட்டுக் கொண்டதன் காரணமாக பிரம்ம சமாஜம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்தது. இந்துச் சமயத் திற்கும் சமூகத்திற்கும் சமாஜம் ஆற்றிய தொண்டை இந்தியர் ஒருபோதும் மறக்க முடியாது.

பிரார்த்தனை சமாஜம்

கல்கத்தாவில் தோன்றிய பிரம்ம சமாஜத்தினைப் போன்று பம்பாயிலும் ஓர் அமைப்பு தோன்றியது; அதன் பெயர் பிரார்த் தனை சமாஜம். கேசவ சந்திரசேன் 1864 இல் பம்பாயில் பேசிய பேச்சினால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் பலர் இதனைத் தொடங்கினர்.

இந்த அமைப்பு நான்கு கொள்கைகளுக்காகப் பாடுபட்டது. அவை: (1) சாதியை ஒழித்தல், (2) விதவை மறுமணம், (3) பெண் கல்வி, (4) குழந்தை மணத்தை ஒழித்தல்.

பல்வேறு கூட்டங்கள் நடத்திய பிறகு இந்தச் சமாஜத்தினர் சமூகச் சீர்திருத்தத்திற்குச் சமயச் சீர்திருத்தமே அடிப்படைஎன்று கருதினர்; ஆகவே உண்மையான ஒரு கடவுளை வழிபடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக வாராந்திர வழிபாட்டுக் கூட்டம் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்கன் என்பவர் வீட்டில் தொடங்கியது. நான்கு மாதங்கள் கடந்த பிறகு சமாஜத்தின் சட்டத் திட்டங்கள் அமைக்கப்பட்டன.

இந்த சமாஜத்தில் சேர்ந்து சமூகச் சீர்த்திருத்தத்திற்கு உழைத்தவர்களுள் மகாதேவ கோவிந்த ரானடே போன்ற பேரறிஞர்களும் ஆவர். அவர் பின்பு பம்பாய் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியானார். ராஜாராம் மோகன்ராயைப் போன்றே ரானடேயும் சிறந்த அறிஞர்; நல்லொழுக்க சீலர்.

பிரம்ம சமாஜத்தில் நிலவிய சில குறைகளைப் பார்த்து பிரார்த்தனை சமாஜத்தினர் அக்குறைகள் தங்கள் அமைப்பில் அமையாமல் பார்த்துக்கொண்டனர். இதுவும் ஒரு புதிய சாதி யாக மலராத வண்ணம் தங்கள் கொள்கைகளை அமைத்துக் கொண்டனர்.

ஆரிய சமாஜம்

ஆரிய சமாஜத்தை 1875ஆம் ஆண்டில் சுவாமி தயானந்தர் நிறுவினார். இது பிரம்ம சமாஜத்திற்கு நேர் முரணானது. இந்தியாவிலுள்ள பல சமயத் தலைவர்களைப் போன்று தயானந்தரும் ஒரு துறவி; வடமொழிப் புலமை மிக்கவர். அவர் தனது கொள்கைகளை வேதத்தின் அடிப்படையிலேயே கூறினார். பழைய முறையான பிரம்மசரியத்தையும் துறவறத்தையும் அவர் வலியுறுத்தினார். உபநயனம், தீ வழிபாடு ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டினார். கிறித்துவ இஸ்லாமியச் சமயங்களிலிருந்து எந்தவித சமயச் சடங்குகளையும் அவர் கடன் வாங்கிப் போதிக்கவில்லை. இவ்விதச் சடங்குகள் ஆரிய நம்பிக்கை களைச் சீர்குலைப்பனவென்றும் அவர் கருதினார். அவருக்கு ஆங்கில அறிவு இல்லாமையால் அவருடைய கருத்துகள் அனைத்தும் இந்திய மண்ணின் தன்மையைக் கொண்டனவாக இருந்தன. இதுவன்றி அவருடைய கொள்கைகள் கற்றறிந்த சிலருக்காக மட்டுமல்லாமல் சாதாரண எளிய மக்களுக்காகவே போதிக்கப்பட்டன. சத்தியார்த்தா பிரகாசா (SATYARTHA PRAKASHA) என்ற தனது நூலில் அவர் தனது கோட்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார். அவை 51 கிளைப்பிரிவுகளைக் கொண்டது .

ஆரிய சமாஜம் தனது கொள்கைகளைப் பரப்ப மூன்று முனைகளில் போராடவேண்டும் என்பதை தயானந்தர் தொடக்கத்திலேயே உணர்ந்துகொண்டார். முஸ்லிம் முல்லாக்கள் ஒரு புறம், இன்னொரு புறம் ஆங்கில அரசின் ஆதரவு பெற்ற கிறித்துவச் சமயப் பிரச்சாரங்கள், மறுபுறம் அறியாமை மிகுந்த இந்துச் சமயப் பண்டிதர்கள்.

இந்தி மொழியையும் வட மொழியையும் கற்கவேண்டும் என்று தயானந்தர் வலியுறுத்தினார். ஒரு சார்பானக் கருத்து களைக்கொண்ட மேற்கத்தியர்கள் எழுதிய ஆங்கிலத்தின் மூலம் இந்தியப் பண்பாட்டை இந்தியர்கள் அறிந்துகொள்ள முடியாது என்று அவர் கருதினார். இந்துக்கள் தங்களது சமயம், பண்பாடு, மதிப்பீடுகள் குறித்து பெருமைகொள்ளல் வேண்டும் என்று அவர் கூறி வந்தார்.

குருகுல கல்வி முறை சிறந்தது என்று அவர் அதனைப் பின்பற்றினார். இந்திய இளைஞர்கள் ஆங்கிலேயர்களுக்கு குற்றேவல் செய்தும் முகமன் கூறியும் காலங்கழிக்காமல் சமூகத்திற்குப் பயன்படும் முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று கூறினார். பெண்கல்வி வேண்டும் என்றார். சமூகச் சுதந்திரமின்றி அரசியல் சுதந்திரம் பெற முடியாது என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

திலகரும் காந்தி அடிகளும் சுதந்திர சங்கநாதம் முழங்குவதற்கு முன்பே பூரண சுதந்திரம் வேண்டும் என்று குரல் கொடுத்தவர் தயானந்தர். ஆங்கிலேயர்கள் ஆரிய சமாஜத்தினரின் எதிர்ப்பை உணர்ந்துகொண்டு அதனை நசுக்கி ஒடுக்க முனைந்தனர். ஆரிய சமாஜத்தை நாசவேலைக் கும்பல் என்று விளம்பரப் படுத்தினர். பொய்யான குற்றவியல் வழக்குகளை ஆரிய சமாஜ ஊழியர்மீது தொடர்ந்து அச்சுறுத்தினர்.

ஆரிய சமாஜத்தினரின் சமூகச் சீர்திருத்தம் பல்வேறு கொள்கைகளை உள்ளடக்கியது. பசுவதைத் தடை, பெண்கல்வி, குழந்தை மணத் தடை, விதவை மறுமணம், தீண்டாமை ஒழிப்பு, மரக்கறி உணவு, மது அருந்தாமை ஆகியவை முக்கியமானச் சீர்திருத்தக் கொள்கைகளாகும். பிறப்பின் அடிப்படையில் ஒருவனை மதிப்பிடக் கூடாது என்றும் குணகர்மத்தின் படியும் சுபாவத்தின் படியும் மதிப்பிட வேண்டும் என்றும் ஆரிய சமாஜத்தினர் கூறினர்.

ஆரிய சமாஜத்திற்கு எதிரிகள் பெருகினர். தயானந்தரின் அறிவின் முன்னால் அவர்கள் பகலவனைக் கண்ட பனிபோல் மறைந்தனர். இதனால் சதித்திட்டத்தின் மூலம் சுவாமிகளை ஒழிக்க நினைத்தனர். பல சதித் திட்டங்களிலிருந்தும் அவர் தப்பிவிட்டார். இறுதியாக சுவாமியின் சமையல்காரனுக்கு இலஞ்சம் கொடுத்து சுவாமிக்கு நஞ்சு கொடுத்து கொன்றனர். இந்த நேரத்தில் சதியை உணர்ந்துகொண்ட சுவாமிகள், சமையல்காரனுக்கு சிறிது பணத்தைக் கொடுத்து ஓடிவிடுமாறு கூறினார். அவர் கடைசியாக, "கடவுளே, அவர்களின் ஆசை நிறைவேறட்டும்" என்று கூறி இறுதி மூச்சை விட்டார். இத் துயரச் சம்பவம் 1883 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் நடந்தது.

சுவாமிகளின் எதிரிகள் கனவு பலிக்கவில்லை. அவரின் மரணத்தோடு ஆரிய சமாஜம் மறைந்துவிடவில்லை. நாடு முழுவதிலும்

புதிய விழிப்புணர்ச்சி பரவியது. தயானந்தரின் சொற்களைப் புறக்கணித்தால் இந்துச் சமயம் மறைந்து மண்ணோடு மண்ணாகி விடும் என்பதைப் புரிந்துகொண்டனர்.

தயானந்தரின் கொள்கைகள் நாடெங்கிலும் சமூக, சமயப் பண்பாட்டு மறுமலர்ச்சியை மட்டுமல்லாமல் அரசியல் விழிப் புணர்ச்சியையும் கொண்டு வந்தது. 1857 இல் நடைபெற்ற முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு காரணமானவர்களே ஆரிய சமாஜத்தினர்தான் என்று ஆங்கில எழுத்தாளர் ரீன் கோர்ட் தனது "இந்தியாவின் ஆத்மா" (The Soul of India) என்ற நூலில் கூறியுள்ளார்.

இன்று ஆரிய சமாஜம் வலிமை வாய்ந்த இயக்கமாக உள்ளது. நமது நாட்டில் மட்டுமன்றி கிழக்கு ஆப்பிரிக்கா, தென் ஆப்பிரிக்கா, பீஜி, மௌரீஷஸ், கயானா, டிரினிடாட், சிங்கப்பூர், பாங்காங் போன்ற இடங்களிலும் ஆரிய சமாஜம் வேரூன்றி யுள்ளது. உலகம் முழுவதும் 4,000 ஆரிய சமாஜ அமைப்புகள் உள்ளன. எண்ணிறந்த கல்விக் கூடங்களை சமாஜம் நடத்தி வருகின்றது.

வினாக்கள்

1. இந்தியச் சமூகச் சமயச் சீர்திருத்த இயக்கங்கள் எவை?
2. பிரம்ம சமாஜம் குறித்து நீவிர் அறிவதென்ன?
3. ஆரிய சமாஜத்தின் பணிகளை ஆய்க.

10. சமூக மாற்றம்

மாற்றம் என்பது இயற்கை விதி, உலகத்தில் எல்லாமே மாற்றம் அடைந்துகொண்டேதான் வருகின்றது. மாற்றம் அடையாதது என்பது ஒன்றுமேயில்லை. சமூகமும் மாற்றத்திற்குட் பட்டதுதான். கால ஓட்டத்தில் சமூக நிறுவனங்களும் நிலையங் களும் மாற்றம் அடைந்துகொண்டே இருக்கின்றன. சில சமூக மாற்றங்கள் துரிதமாகவும் தெளிவாகவும் புலப்படும். சில உள்ளார்ந்ததாகவும் மெதுவானதாகவும் இருக்கும்.

சமூகத்தின் நவீனமயமாகும் தன்மையை நாம் இப்போது சமூக மாற்றம் என்று கூறுகின்றோம். மனித நடவடிக்கையில் பல்வேறு அம்சங்களை இது உள்ளடக்கியது. இந்தியச் சமூகத்தின் மாற்றம் என்று நாம் கூறுவது, இருபதாம் நூற்றாண்டில் இந்தியச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையேயாகும். இம் மாற்றத்தின் தன்மையை ஒவ்வொரு நாளும் நாம் இன்று கண்டு வருகின்றோம்.

நமது சமூகத்தில், கல்வி, பெண் சுதந்திரம், நவீனத் தொழில் நுணுக்கம், நகரமயமாகுதல், அரசியல் விழிப்புணர்ச்சி, நவீன வாழ்க்கை முறைகள், மேற்கத்தியச் சிந்தனைகள் போன்ற பல ஏற்பட்டு வருகின்றன.

நவீனமயமாகுதல் (Modernization)

நவீனமயமாகுதலை அறிய மேற்கத்திய மயமாகுதலை (Westernization) முதலில் அறிந்துகொள்ளல் வேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணில் இருந்ததால் இந்தியச் சமூகத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் கொண்டு வந்த புதிய தொழில் நுணுக்க முறை அறிவு, புதிய நம்பிக்கைகள், புதிய மதிப்பீடுகள் போன்றவை இதற்குக் காரணமாகும். போக்குவரத்துத் தொடர்பில் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. இதனால் இந்தியாவை முதன்முறையாக ஒருங்கிணைக்க ஆங்கிலேயர்களால் முடிந்தது.

ஆங்கிலேயர்களால் ஏற்பட்ட மாற்றங்களை மேற்கத்திய மயமாகுதல் என்று எம். என். சீனிவாஸ் குறிப்பிடு

கின்றார். சமூக நிறுவனங்கள், செய்முறை, கருத்துக் கோட்பாடுகள், மதிப்பீடுகள் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்க அவர் அச்சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

மேற்கத்திய மயமாகுதல் என்பதை நகரமயமாகுதல் (Urbanisation), தொழில்மயமாகுதல் (Industrialization) ஆகிய வேறு இரண்டு முறைமைகளுடன் சேர்த்து சிலர் தவறாக வழங்கி வருகின்றனர். நமது நாட்டில் சில கிராமப் பகுதிகளில் நகரப் பகுதிகளைவிட மேற்கத்திய முறைகள் அதிகம் காணப்படுகின்றன. தோட்டப்பயிர் அல்லது பணப்பயிர் போடப்பட்ட பகுதிகளிலும் இந்திய இராணுவத்தினர் மிகுதியாக வாழும் பகுதிகளிலும் மேற்கத்திய மயமாகுதல் அதிகம் காணப்படுகின்றது. பஞ்சாப் மற்றும் தென்னகத்தின் சிலப் பகுதிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மேற்கத்திய மயமாகுதல் என்பது செய்தித்தாள், தேர்தல், வானொலி போன்றவற்றைப் பயன்படுத்துதல் மட்டுமல்ல; பழைய சமூக நிறுவனங்களில் ஏற்படும் மாற்றங்களையும் அது குறிக்கும் என்று எம்.என். சீனிவாஸ் கூறுகின்றார். மேற்கத்திய செய்முறை அறிவியல் சோதனையையும் அது சுட்டும்.

மேற்கத்திய மயமாகுதல் என்பது சில மதிப்பீடுகளைப் (Values) பின்பற்றுவதையும் குறிப்பிடும். மேற்கத்திய மதிப்பீடுகள் அனைத்தும் சேர்ந்த ஒரு மதிப்பீடாக மனிதாபிமானத்தைக் (Humanism) கூறலாம். நாம் இதனை அதிகமாக இப்போது நமது நாட்டில் வலியுறுத்துகின்றோம். சாதி சமய ஆண் பெண் வேறுபாடின்றி மொத்தமான சமுதாயத்தின் நலனைப் பேணுவது தான் மனிதாபிமானம் என்று கூறப்படுகின்றது. சமத்துவமும், சமயச் சார்பற்றத் தன்மையையும் இச்சொல் உள்ளடக்கியதே.

மேற்கத்திய நாட்டின் தொடர்பால் ஏற்படும் மாற்றங்களை நவீனமயமாகுதல் (Modernization) என்றே அழைக்கவேண்டும் என்று டானியல் லெர்னர் (Daniel Lerner) கூறுகின்றார். நவீன மயமாகுதல் பொது நிறுவன மாற்றங்களிலும் தனியார் நடவடிக்கைகளிலும் ஏற்படும். நகரமயமாகுதல் அதிகரித்தால் கல்வி அறிவு பரவும். இதனால் செய்தித் தொடர்பு சாதனங்கள் அதிகரிக்கும். இதன் காரணமாக மக்கள் பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் அதிக அளவில் பங்கேற்பர்.

நவீனமயமாகுதல் என்பது சமூகத் தர வரிசையில் ஒருவன் இடம் பெயர்ந்து செல்வதையும் உட்படுத்தும். இதனால் ஒருவன் தன் நடத்தையைச் செம்மைப் படுத்திக்கொள்கிறான். பரம்பரையைக் கணக்கிடாமல் ஒருவன் சொந்த முயற்சியினால் மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றுக்கொள்ள இவ்விதத் திறந்த குழுக்கள் கொண்ட சமூகங்களில் வாய்ப்புள்ளது.

மேற்கத்திய மயமாகுதல் அல்லது நவீனமயமாகுதல் என்பது ஒருவழிப் பாதைப் போன்றது அன்று. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியர்கள் சில நூற்றாண்டு காலமாக இருந்த போதிலும் கண்ணை மூடிக்கொண்டு ஆங்கிலேயர் வழக்கங்கள் அனைத்தையும் நாம் பின்பற்றவில்லை. சமூகத்தின் எல்லா பகுதியினரும் மேற்கத்திய மயமாகவில்லை. ஒரு சாரார் இந்தப் புதியப் பண்பாட்டு வழிமுறைகளால் கவரப்பட்டு மேற்கத்திய மயமாகினர். வேறு பலரும் இது குறித்து எள்ளளவும் கவலைப் படவில்லை.

இங்கிலாந்து சென்று கல்வி கற்று வந்தவர்கள் புதிய பண்பாட்டு முறைகளையும் தங்களுடன் கொண்டுவந்தனர். இந்தியச் சமூகத்திற்குப் பல புதிய தன்மைகளை அறிமுகப்படுத்தினர். இத்தன்மைகளில் சிலவற்றை இந்தியச் சமூகம் ஏற்றுக் கொண்டது. சிலவற்றைப் புறக்கணித்து விட்டது. இவ்வகையில் கடன் வாங்கப்பட்டப் பண்பாட்டுத் தன்மைகளும் இங்கு மாற்றங்களைக்கூட அடைந்தன.

ஆங்கிலேயர்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட இந்திய அலுவலர்களும் தங்களின் கருத்துகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைத்தான் மாற்றிக்கொண்டனர். அவர்களின் இல்லற வாழ்க்கை பரம்பரை வழக்கங்களின்படியேதான் ஒழுகியது.

கிறித்துவச் சமயத்திற்குச் சமயம் மாறியவர்களின் நம்பிக்கைதான் மாற்றம் அடைந்தது. அவர்களின் வழக்கங்களும் பொதுப் பண்பாடுகளும் மாற்றம் கொள்ளவில்லை. அவர்களின் சமூக மதிப்பிலும் மாற்றம் ஏற்படவில்லை. ஏனெனில் அவர்களில் பெரும்பான்மையோர் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்கள். சமய மாற்றமும் மதிப்பில் மாற்றத்தைக் கொணரவில்லை.

சமூகத்தில் மற்ற பகுதியினர்க்கு மேற்கத்திய மயமாகுதல் மெள்ள மெள்ள மறைமுகமாகத்தான் ஏற்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்றி போக்குவரத்து தொடர்பில் புரட்சி ஏற்பட்டதுமே இதற்கு அடிகோலப்பட்டுவிட்டது.

தொழிற்புரட்சி, வேளாண்மை முன்னேற்றம் போன்றவையும் மேற்கத்திய மயமாகுதலுக்குத் துணை செய்தன. புதிதாகக் கல்வி பெற்று அரசு அலுவல்களில் ஈடுபட்டவர்களும், நகரங்களில் வணிகத்தில் ஈடுபட்டு புதிதாகப் பொருளீட்டியவர்களும் நவீன வழிமுறைகளைப் பின்பற்றினர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள், நீதிமன்றங்களில் வழக்குகளில் ஈடுபட்டவர்கள் போன்றவர்களும் இவ்வித புதிய வழிமுறைகளைப் பின்பற்றினர். இவர்களைப்போன்று செய்தித்தாள்கள், நூல்கள் ஆகியவற்றைப் படித்தும் நவீன வழிமுறைகளுக்கு உட்பட்டவர்கள் உண்டு. ஆனால் இவர்கள் இந்த புதிய வழிமுறைகளுக்கு இரண்டாவது நிலையில்தான் ஆளாகினர்.

சாதிகளிடையே ஏற்பட்ட நவீனமயமாகுதலை ஆராய்ந்தால் சில சாதியினர் நவீன வழிமுறைகளை மிகுந்த அளவில் பின் பற்றுகின்றனர். எல்லா உறுப்பினர்களும் இவ்வகையில் இல்லை. பல இடங்களிலும் பிராமணர்கள் புதிய வழிமுறைகளைப் பின் பற்றுகின்றனர். வட இந்தியாவில் காயஸ்தாவும், வங்காளத்தில் வைத்தியாக்களும், மேற்கத்திய இந்தியாவில் பார்சிகளும் பனியாக் களும், கேரளத்தில் சிரியன் கிறித்துவர்களும் நாயர்களும் மேற்கத்திய கல்வியைப் பெற்று மிக வேகமாக நவீன வழிமுறை களைப் பின்பற்றத் தொடங்கினர்.

புதிய இலக்கியங்கள்

பாரதத்தில் தோன்றிய புதிய இலக்கியங்கள் சமூக மாற்றத் தையும் மேற்கத்திய மயமாகுதலையும் கொண்டு வந்தன. காங்கிரஸ் கட்சியில் தோன்றிய மறுமலர்ச்சித் தலைவர்களும் ஆரிய சமாஜம் போன்ற இயக்கத் தலைவர்களும் இத்தகையச் சமூக மாற்றங்களை ஏற்படுத்தினர். இதனைப் போன்றே பெண்கள் புதிதாகப் பெற்ற உரிமைகளும் மேற்கத்திய மய மாகுதலைத் துரிதப்படுத்தியது.

பெண்கல்வி முதன்முதலாக வலியுறுத்தப்பட்டது. பெண் களுக்கு வாக்குரிமையும் சமத்துவமும் வேண்டப்பட்டது. அரசியலில் மிகுதியாகப் பெண்கள் பங்கேற்றதன் காரணமாக சமூக மாற்றத்தில் புதிய அத்தியாயம் தொடங்கியது. பெண்கள் புதிய பதவிகளில் அதிகாரம் பெற்றனர். இதனால் புதியச் சட்டங்கள் நிறைவேறின. இவையொன்றும் இந்திய வரலாற்றில் புதிதல்ல என்றாலும் இவை வந்த விதம் புதிதானது என்றுதான் கூற வேண்டும்.

சமுகத்தில் அறிவாளர்கள்தான் சாதாரண மக்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வது எல்லா நாடுகளிலும் வழக்கம். நமது நாட்டிலும் இந்தியச் சிந்தனை, தத்துவம், கோட்பாடு, பாரம்பரியம் ஆகியவைக் குறித்துப் புதிய விளக்கங்களை இந்த தலைவர்கள் அளித்தனர். நமது நாட்டுப் பண்பாட்டை புகழ்பாடிய போதிலும், மேற்கத்தியப் பண்பாட்டில் உள்ள சிலத் தன்மைகளை அவர்கள் கடன் வாங்கத் தயங்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கத்திய மயமாகிய புதிய அறிவாளிகள் தோன்றினர். இவர்கள்தாம் புதிய இந்தியாவை உருவாக்கியச் சிற்பிகள். ஆட்சி செய்து வந்த ஆங்கிலேயர்கள் குறித்து இந்தத் தலைவர்கள் விருப்பத்தையும் வெறுப்பையும் கொண்டவர்களாக விளங்கினர். அவர்கள் மேற்கொண்ட சுய திறனாய்வினால்தான் இந்தியாவில் நிலவிய பல சமூக நிறுவனங்களுள் வேண்டத்தகாதவை என்று கருதப்பட்டவை புறக்கணிக்கப்பட்டன.

தேசிய எண்ணம் மலர்ந்ததோடு வட்டார, சமூக, சாதிய எண்ணமும் பரவியது. இத்தகையச் சக்திகள் பல நேரங்களிலும் நவபாரதத்திற்குச் சிக்கலை ஏற்படுத்தி வருகின்றன.

மேற்கத்திய மயமாகுதல் காரணமாகத்தான் இந்தியச் சமூகத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணம் தீவிரமடைந்தது. இது ஒரு இயக்கமாக மாறி இன்றும் தொடர்கிறது என்றும்கூடக் கூறலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்தியாவில் சமயச் சார்பற்றத் தன்மை (Secularism) முக்கியத்துவம் பெற்றது. இந்திய அரசியலின் அடிப்படையாக அது மாறியது. ஆனால் அதே நேரத்தில் இந்துச் சமயம் மீண்டும் புதிய கோணத்தில் புகழப்பட்டது. சமஸ்கிருத வழிமுறைகள் போற்றப்பட்டன என்றும் டாக்டர் சீனிவாஸ் குறிப்பிடுகின்றார்.

இந்துச் சமயத்தின் அமைப்பு வலிமையுடன் சமூகத்தில் அடிகோலப்பட்டிருக்கின்றது. சாதி, குடும்பம், கிராமம் ஆகிய மூன்று அமைப்புகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இந்துச் சமயத்தையும் பாதித்துள்ளன. ஆனால் இந்துச் சமயம் ஆட்டம் காணாமல் பலமாகச் செயல்படுவதற்கு வேறு பல புதிய அமைப்புகள் தோன்றிவிட்டன.

இந்தியப் பண்பாட்டைப் பரப்பும் அரசியல் கட்சிகள், சமூகப் பணி இயக்கங்கள் முதலியவை சமயத்தைக் காக்கும் அரணாக மாறிவிட்டன. செய்தித்தாள்கள், திரைப்படங்கள், வானொலி, சமயச் சிந்தனைக் கழகங்கள் போன்றவை சமயக் கோட்பாடுகளை பரப்பும் கருவிகளாகச் செயல்படுகின்றன. இவையன்றி இந்துச் சமயத்தைப் புதிய கோணத்தில் விளக்கி மக்களிடையே புத் துணர்ச்சியை ஊட்டுகின்றது.

சமூக மாற்றம் தொடர்ந்து பல துறைகளிலும் ஏற்பட்டு வருகின்றது. சமூக, சமய, அரசியல் துறைகள் எங்கும் மாற்றம் நிகழ்ந்து வருகின்றன. இவற்றுள் ஒன்றைத் தனிமைப் படுத்தி ஆராயமுடியாது. பல்வேறுச் சக்திகள் இம்மாற்றங்களை உருவாக்கி வருகின்றன.

தொழில்மயமாகுதல் (Industrialization)

இந்தியச் சமூகம் வேகமாகத் தொழில்மயமாகிக்கொண்டு வருகின்றது. இதன் காரணமாகச் சமூகம் பல மாற்றங்களைக் கண்டு வருகின்றது. ஒரு சமூகம் தொழில் மயமாகிறது என்றால் தொழில்நுட்பத்தில் (Technology) மாற்றம் ஏற்படுகிறது என்று பொருள். நமது சமூகத்திலும் இதுவே உண்மை. இத்தகு மாற்றம் எந்தத் திசையில் செல்கிறது என்று ஆராய்வது நலம் பயக்கும்.

தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதன் காரண மாக உற்பத்தியில் திறமையும் வேகமும் ஏற்பட்டிருக்கின்றன; உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலையை மக்கள் அனு சரித்துப்போக வேண்டியக் கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

கிராமங்களிலிருந்து மக்கள் நகரத்திற்கு அதிகமாக இடம் பெயர்கின்றனர். பல சாதி மக்களும் குலத்தொழிலை விட்டு தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் புதியத் தொழில்களில் ஈடு படுகின்றனர். தொழிலின் அடிப்படையில் ஒருவனது சமூக மதிப்பு இருப்பதால், கீழ்சாதியினரும் உயர்பதவி மூலம் சமூக மதிப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

தொழில்மயமானதால் இந்தியாவில் வேறொரு விளைவும் ஏற்பட்டுள்ளது. முன்பு இருந்ததை விட பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது; அதிக ஓய்வை அனுபவிக் கின்றனர். வாங்கும் சக்தியும் அதிகரித்துள்ளது. ஆலைத் தொழி லாளர்களும் அலுவலர்களும் தங்கள் குழந்தைகளின் மதிப்பும்

உயரவேண்டுமென்று கருதி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

முன்னேற்றமான தொழில்நுட்பம் காரணமாகச் சமூக அமைப்பும் விரிவடைந்துள்ளது. நகரத்தில் சமூக அமைப்பு சிக்கலானதாக மாறியுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு ஏழையாகவும், செல்வாக்கில்லாமலிருந்த சிலர் கையில் இப்போது அரசியல் பொருளாதார ஆதிக்கம் உள்ளது. தொழிற்சங்கங்கள் உருவாகின. அரசாங்கத்திற்கும் முன்பு இருந்ததை விட அதிக அளவில் தொழிற்சாலைகள் தொடர்பாக உரிமை உள்ளது. தொழிற்சாலை அலுவலக வேலை நேரம் குறித்து அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளது.

தொழில்மயமாகுதல் மூலம் வந்தப் புதிய தொழில்நுட்பங்களைச் சமூகத்தில் எதிர்பார்த்தவாறு வேகமான மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. ஆங்கிலேயர்களின் அறிமுகம் இந்தியாவிற்கு இருந்தபோதிலும் தொழிற் புரட்சி இங்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இது வியப்புக்குரியதாகும். ஆங்கிலேயர்கள் தங்கள் வசதிக்காக இந்தியாவில் இரயில், தந்தி, அஞ்சல் தொடர்புகளை ஏற்படுத்தியதுதான் குறிப்பிடத்தக்க மாற்றம். இதனாலும் எண்ணற்றவர் பாதிக்கப்படாமலேயிருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கது. 1854 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற துணி ஆலைகள் குடிசைத் தொழில்களை மட்டுமே பாதித்தன. சமூகத்தில் மொத்தமாக வேறு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இந்தியாவில் தொழிற்புரட்சியை ஆங்கிலேயர்கள் தொடங்குவதற்கு அரசியல் பொருளாதாரக் காரணங்கள் ஏதுமில்லை என்பது உண்மையாகும். இந்தியா கிராமங்களையும் கல்வி அறிவில்லாத மக்களையும் கொண்ட நாடு என்பது அதைவிடப் பெரிய உண்மையாகும். இதனால்தான் சுதந்திரமடைந்து பல ஆண்டுகள் ஆகியும், பல ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியும் இந்தியா ஒரு வேளாண்மை நாடாகவே இருந்து வருகின்றது. தொழில்நுட்ப மாற்றம் வேண்டும் என்ற நினைப்பு ஒரு சிலரிடையே ஏற்பட்டிருப்பதுதான் குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கூறவேண்டும். மக்களில் பெரும்பான்மையோர் இதனால் பாதிக்கப்படவேயில்லை. இதன் காரணமாகத் தொழில்நுட்பத்தில் இந்தியாவில் புதியக் கண்டுபிடிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

பாரதத்தில் வேளாண்மைத் தொழிலை மக்கள் இப்போதும் மிகவும் பழமையான முறையில்தான் நடத்தி வருகின்றனர். ஒரு சில இடங்களில்தான் வேளாண்மைப் புரட்சி ஏற்பட்டு வருவதற் கான அறிகுறிகள் உள்ளன. மிகவும் மந்தமான முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதற்கு நமது மக்களின் பரம்பரைப் பொறுமைதான் காரணமாக இருக்குமோ என்றும் எண்ணம் தோன்றுகிறது. அண்டை அயலார்கள் திருந்திய விதைகளையும் நவீன உரவகைகளையும், பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தி வேளாண்மைச் செய்வதைப் பார்த்துவிட்டு பெரும்பான்மையான வேளாண்மையினர், 'நமக்கென்ன' என்ற மனப்போக்கில் காலங் கழிக்கின்றனர்.

கல்வி அறிவை நடைமுறைக்குப் பயன்படுத்த இந்தியப் பண் பாடு ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறது. நெடுங்காலமாகவே இதுவே நிலை. இப்போதும் தேசிய ஆய்வகங்களில் ஆராய்ச்சி நடத்தும் அறிவியலாளர்கள் மக்களின் சிக்கலைத் தீர்க்கும் வகையில் புதியக் கண்டுபிடிப்புகள் காண முயலுவதில்லை. 'அறிவு' அறிவுக்காகவே என்ற பதினெட்டாம் நூற்றாண்டுக் கொள்கையை சிக்கெனப் பிடித்து வைத்துள்ளனர். இதே எண்ணத்தை மேற்கு நாடுகளில் அறிவியலாளர்கள் கடைப்பிடித்திருந்தால் தொழிற்புரட்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் அந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கவே முடியாது.

தொழிற்சாலைகளுடன் இந்த தேசிய ஆய்வகங்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் தொடர்பில்லை. இந்தியத் தொழில் அதிபர்களிடமும் குறைகள் உள்ளன. முதலீடு, தொழிலாளர் பயிற்சி குறித்துதான் அவர்கள் அதிகம் கவனம் கொள்கின்றனர். புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் உற்பத்தியைப் பெருக்க எண்ணுவதில்லை.

இந்தியாவில் தொழிற்புரட்சி வேகமாக ஏற்படாததற்கு நமது மக்களின் மனோநிலையும் ஒரு முக்கியக் காரணமாகும். நாம் கடந்த காலத்தின் புகழ் பாடியே காலங் கழிக்கின்றோம். புத்துலகை, நவபாரதத்தை உருவாக்கும் எண்ணம் எல்லோரிடமும் மலரவில்லை.

கல்வியினால் மாற்றம்

பாரதம் பண்டைய நாளில் கல்வியில் சிறந்து விளங்கியது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் கல்வி கற்க மாணவர்கள்

இந்தியாவை நோக்கி வந்த காலமும் இருந்தது. நாளந் தா தட்சசீலம், காஞ்சி ஆகியவை உலகப்புகழ் பெற்றப் பல்கலைக் கழகங்களாக ஒரு காலத்தில் விளங்கின. முன்பு கல்வி என்பது சமயம், தத்துவம், மொழியியல் ஆகியவற்றை மட்டுமே மூலாதாரமாகக் கொண்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான் நவீனக் கல்வியை கிறித்துவச் சமயப் பிரச்சாரகர்கள் எங்கும் பரப்பினர். இரண்டாவது உலகப்போருக்குப் பின் அறிவியல் கல்வியை இந்திய அறிவியலாளர்களான போஸ், பி.சி.ரேய், சி.வி.ராமன் போன்றவர்கள் நமது நாட்டில் உருவாக்கினர்.

இந்தியச் சமூகத்தில் கல்வியினால் பலத்த மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. கட்டாயக் கல்வியும் ஒரு குறிப்பிட்ட நிலைவரையிலும் கல்விக் கழகங்களில் இலவசக் கல்வியும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் எல்லாப் பிரிவினரும் கல்வி வசதிப்பெற வாய்ப்புள்ளது. தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் முன்பு இருந்ததைவிட அதிக அளவில் இப்போது உள்ளன. உயர்கல்வியும் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கையும் சுதந்திர இந்தியாவில் பெருகியுள்ளன. சாதி சமய வேறுபாடின்றி எல்லோரும் உயர்கல்வியும் பெற்றுக்கொள்கின்றனர். ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் எல்லாவகைக் கல்வியையும் பெற்றுக் கொள்கின்றனர்.

கல்வி அறிவு பெருகியதன் காரணமாக இந்தியச் சமூக அமைப்பில் உள்ள சாதி, கூட்டுக் குடும்பங்கள், வேலைமுறைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் விளைந்துள்ளன.

கல்வி அறிவு பெற்றவர்கள் ஒரே சாதியில் திருமணம் செய்யவேண்டும் என்ற சாதி விதிகளை அவ்வளவாக ஏற்றுக் கொள்வதில்லை. பெற்றோர்கள் பார்த்து உறுதி செய்யும் திருமணத்தையும் புறக்கணிக்கின்றனர். காதல் திருமணத்தையும் கலப்புத் திருமணத்தையும் விரும்புகின்றனர். இதனால் குடும்பத்தில் முதியோர் முன்புபோல் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டிக்கொள்ள முடிவதில்லை.

படித்து வேலை பார்க்கின்றவர்களுக்கு சுயவருவாய் இருப்பதனால், குடும்பத்தினைச் சாராமல் தங்கள் விருப்பப்படி மணமுடித்து தனியாகக் குடும்பம் அமைத்துக் கொள்ளவே இப்போது இளைஞர்கள் விரும்புகின்றனர். படித்துப் பட்டம் பெற்ற பெண்ணைத் திருமணம் செய்வதால் குடும்ப வருவாய் அதிகரிக்க

வும் சமூக அந்தஸ்து உயரவும் வழி இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

கல்வியினால் இந்தியச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுள் பெண்களின் நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். முன்பு ஆண்களுக்கு மட்டும் என்று நினைக்கப்பட்டு வந்த பல கல்வித் துறைகளில் இப்போது பெண்கள் சேர்ந்து பட்டம் பெற்றுக்கொள்கின்றனர். இதனால், ஆண்களுக்கு மட்டுமே என்றிருந்த வேலைகளில் பெண்களும் வேலை பார்க்கமுந்துகின்றனர். வேலை வாய்ப்பு நிலையில் பலத்த போட்டி நிலவுகின்றது. காவல்துறை, நிருவாகத் துறை போன்றவற்றிலும் பெண்கள் உயர் பதவி வகிக்கின்றனர். பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற துறைகளில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் வேலையைப் பெற்றுச் செயல்படுகின்றனர். இதனால், இந்தியச் சமூகத்தில் ஆண்களின் ஆதிக்கம் வீழ்ச்சியடைந்துவருகிறது என்று கூறலாம். அரசியலிலும் பெண்கள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தியச் சமூகம் குறித்தும், வேறு சமூகங்களின் நிலை குறித்தும் எல்லோரும் அறிந்துகொள்ள கல்வி வசதியளிக்கின்றது. இதனால், பல்வேறு சிந்தனைகளை அறிந்து நமது நாட்டிலும் புதிய கருத்துகள் பல மாற்றங்களைக் கொண்டுவர கல்வி துணைசெய்கின்றது.

சட்டமும் சமூக மாற்றமும்.

சட்டம் சமூகத்தில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். எல்லோரும் சமூகத்தில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளும்போது ஒற்றுமை நிலவும். பழங்காலத்தில் நமது நாட்டில் சமூகக் கட்டுப்பாடு, தர்மம், ஆசாரம்: (ஒழுக்கம்) ஆகியவற்றினால் ஏற்பட்டது.

சட்டத்தின் செயல்முறைக் குறித்து இரண்டு விதமானக் கருத்துகள் நிலவுகின்றன. சட்டத்தை மீறுகிறவர்கள் எல்லோருக்கும் ஒரே விதத் தண்டனையைக் கொடுக்கவேண்டும் என்பது ஒரு கருத்து. சமூகத்தில் சட்டத்தை மீறுவதைக் குறைத்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியதுதான் சட்டம் இயற்றுவதற்கான முக்கிய நோக்கம்.

சமூகத்தில் கட்டுப்பாட்டினை மட்டுமின்றி மாற்றத்தையும் கொண்டுவர சட்டம் உதவவேண்டும் என்பது வேறொரு கருத்

தாகும். மனிதர்களின் நம்பிக்கைகளையும் மதிப்பீடுகளையும் சட்டத்தின் மூலம் மாற்றி நடத்தை முறைகளை மாற்றினால் சமூக மாற்றம் ஏற்படும்.

சமூக மாற்றத்தைக் கொண்டுவரும் சட்டம் இரண்டு தன்மைகளைக் கொண்டது. புதிய விதிகளைச் சட்டமாக்குவதன் மூலம் புதிய மதிப்பீடுகளை நாம் சமூக நிறுவனமாக ஏற்றுக் கொள்கின்றோம். இது ஏட்டளவில் மட்டுமிருந்தால் போதாது, மக்களின் பண்பாட்டின் அம்சமாக மாறி சமூக சக்தியாக மாறினால் தான் சட்டத்தின் தன்மைகளை எல்லோரும் பின்பற்றுவர்.

இந்திய அரசியல் சட்டத்தின்படி எல்லோரும் சமம். ஆண் பெண் வேறுபாடுகளோ சாதி சமய வேறுபாடுகளோயின்றி எல்லோருக்கும் அரசியல் பொருளாதார சமத்துவம் வழங்கப்பட வேண்டும். அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் இந்த அடிப்படை உரிமைகளை ஒட்டி சட்டங்கள் இயற்ற வேண்டுமென்பது 1950ஆம் ஆண்டுமுதல் அரசாங்கத்தின் புதிய கொள்கையாகும். இதன் காரணமாக நமது நாட்டில் ஏராளமானச் சட்டங்கள் புதிதாக இயற்றப்பட்டன. இவைச் சமூக மாற்றங்களை பலப்படுத்தும் வகையிலும் உள்ளன.

சாதி விதிமுறைகளை 1955இல் நிறைவேற்றப்பட்ட இந்து திருமணச் சட்டம் உடைத்தெறிந்தது. எல்லாச் சாதியினருக்கும் திருமணம் குறித்துச் சட்டத்தில்ஒரே வித உரிமைமுதன் முதலாக வழங்கப்பட்டது. கலப்புத் திருமணங்களும் செல்லும். திருமணச் சடங்குகள் குறித்து இச்சட்டம் ஏதும் கூறாததால் சமயச் சார்பற்ற சடங்குகளை இச்சட்டம் ஊக்குவித்தது. திருமணத்தைப் பதிவுசெய்யவும் இச்சட்டம் வழி செய்தது. ஒரு தார மணத்தைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் இச் சட்டம் ஆணும் பெண்ணும் சமம் என்று உறுதிப்படுத்துகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் மணமுறிவு உரிமையையும் வழங்குகின்றது. இந்து என்ற சொல்லுக்கு இச்சட்டம் பரந்த அளவில் பொருள் கூறுகிறது. பல்வேறு பிரிவுகளையும் இந்துச் சமயத்தில் அங்கமாக ஏற்றுக் கொள்கின்றது.

1956இல் நிறைவேற்றப்பட்ட இந்து சொத்துரிமைச் சட்டத்தின் படி இந்துப் பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு. தந்தையின் சொத்தில் மகளுக்கு உரிமை இல்லை என்ற நிலை இச்சட்டத்தின் மூலம் மாறிவிட்டது.

இந்து தத்து எடுத்தல் பராமரிப்புச் சட்டமும் (1956) பெண்களின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மகன் அல்லது மகளைத் தத்து எடுப்பது சமயச் சார்பற்ற முறையில் நடத்த இச் சட்டம் வழி செய்கிறது. இச்சட்டத்தின்படி மனைவியின் இசைவும் வேண்டும். விதவைகளுக்கும் தத்து எடுக்க உரிமை கிடைத்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பே பல மாநில அரசாங்கங்கள் சீதனத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளன. 1961இல் மத்திய அரசு சீதனத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தின்படி சீதனம் வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்குரியது. இச்சட்டம் ஏட்டளவில்தான் உள்ளது. மக்கள் மனநிலை மாறாததால் இச்சட்டம் மீறப்பட்டு வருகின்றது.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம் (1955) தீண்டாமையைக் கடைப்பிடித்தால் தண்டனை அளிக்க வகை செய்கிறது.

தொழிற்சாலைச் சட்டங்கள் பலவற்றையும் அரசு நிறைவேற்றியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்பு நிறைவேற்றப்பட்டப் பல தொழிற்சாலைச் சட்டங்கள் தொழிலாளர் நலனை மேம்படுத்தின. 1948இல் நிறைவேற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டம் தொழிலாளரின் குறைந்த வயது 14 ஆக இருக்க வழி செய்தது. ஆண்டுதோறும் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட தொழிலாளர்களுக்கு மருத்துவச் சோதனை செய்யவேண்டும். மோட்டார் வாகனத் தொழிலாளர்ச் | சட்டம் (1966) நாளொன்றுக்கு தொழிலாளர் 8 மணி நேரமும் வாரத்திற்கு 48 மணி நேரமும் வேலைப் பார்க்கும் வசதியை அளிக்கிறது.

சுதந்திரத்திற்குப் பின்பும் முன்பும் அரசாங்கம் பல சட்டங்களை நிறைவேற்றின. இதில் சில சட்டங்கள் சமூகத்தில் நிலவி வந்த பல சமூக நியதிகளை வலுப்படுத்துவனவாக உள்ளன. வேறு சிலச் சட்டங்கள் புதிய விதிகளின் படி சமூக நியதிகளை மேம்படுத்துவனவாக உள்ளன, இந்த நோக்கங்களைக் கொண்டப் பலச் சட்டங்களும் சமூகத்தில் ஒரு சக்தி வாய்ந்தக் கருவியாக மாறாதது வருந்தத்தக்கதாகும். தண்டனைக் கிடைக்கும் என்ற அச்சம் மட்டும் ஒரு சட்டத்தின் விதிகளை ஒழுங்காகப் பின்பற்றச் செய்யாது என்ற உண்மையும் வெளிப்பட்டிருக்கின்றது. இச் சட்டங்களின் நலன் குறித்து மக்களுக்குத் தெளிவு ஏற்பட்டு அதனைநடைமுறைப் பழக்கமாகக் கொண்டால்தான் சட்டத்தின் முழுப்பலனும் சமூகத்தில் ஏற்படும்,

ஒருதார மணம் எங்கும் நிலவியதால் ஒருதார மனச் சட்டம் வெற்றியை அளித்தது. ஆனால் திருமண வயது வரம்புக் குறித்தச் சட்டம் (சாரதாச் சட்டம்) வெற்றி பெறவில்லை. ஏனெனில் சமூகத்தில் நிலவி வந்த வழக்கத்திற்கு மாறாக இச் சட்டம் இருந்தது.

திட்டமும், சமூக மாற்றமும் (Planning and Social Change)

இருபதாம் நூற்றாண்டில் பல நாடுகளிலும் திட்டமிட்டே சமூக மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. ரஷ்யாவில் பல திட்டங்கள் மூலம் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஜெர்மனி, ஜப்பான், போன்ற நாடுகளிலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது.

காந்தி அடிகள் இந்தியச் சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். அவரின் பேச்சும் செயலும் பல புதிய மாற்றங் களை ஏற்படுத்தியது. சமூகக் கண்ணோட்டத்திலும் மக்கள் மனத்திலும் அவரின் கருத்துகள் மாபெரும் விழிப்புணர்ச்சியை உருவாக்கி மாற்றங்களுக்குத் துணை செய்தன.

சுதந்திரத்திற்குப் பின் இந்திய அரசு பல திட்டங்களை நிறை வேற்றி மாற்றம் கொண்டுவர முயன்று வருகின்றது. இந்திய அரசியல் அமைப்பே, சமத்துவம், சமூக நீதி போன்றவற்றை நிலைநாட்டும் உயர்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள் ஆகியவையும் சமூக மாற்றத்தைக் கருத்தில் கொண்டே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திட்டமிட்ட சமூக மாற்றம் குறித்து நாம் ஒன்றைக் கவனத்தில் கொள்வது நலம். சமூக மாற்றம் என்பது பல தன்மை களிலும் பல துறைகளிலும் ஏற்படும் மாற்றம். சமூகத்தின் எல்லாத் தன்மைகளையும் மாற்ற முயலுவது முடியாது. ஏதாவது ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முயலும்போது அது எதிர் பாராதத் துறைகளிலும் விளைவுகளை ஏற்படுத்தி விடும். எனவே திட்டமிட்ட சமூக மாற்றம் என்பது சிலக் குறிப்பிட்டத் தன்மை களில் வரயறை செய்யப்பட்ட மாற்றம் என்றே பொருள்படும்.

சமூக மாற்றம் என்பது பொதுவாக இருவகைப்படும். சமூக அமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட்டு சமூக உறவு முறைகளில் ஏற்படும் மாற்றம் ஒருவகை. பிறிதொருவகை, உள்ளத் தோரணை (attitudes) களிலும் ஊக்கிகளிலும் ஏற்படும் மாற்றம் — இதுவே மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றம் என்று கருதப்படும்.

சமூக நடத்தை முறை மாற்றமடைகிறது என்னும்போது அதன் தன்மைகளை உணர்ந்து கொள்ளல் சிறப்பாகும். சமூக நடத்தை முறையை ஒருவன் உணர்ந்து மேற்கொள்வதுமுண்டு; உணராமல் எல்லோரையும்போல் மேற்கொள்வதும் உண்டு. உணராமல் நடக்கும்போது மனிதன் காரணகாரியங்கள் குறித்துக் கவலைப்படுவதில்லை. மனிதன் உணர்ந்து நடந்து கொள்ளும் துறைகளில் மட்டுமே திட்டமிட்ட மாற்றங்களைக் கொண்டுவர முடியும். சமூகத்தில் இதன் எல்லை மிகவும் குறைவானதாகவும் காணப்படுகிறது என்பதை உணர்தல் நலம்.

திட்டமிடுதல் என்றால் என்ன? திட்டமிடுதல் ஓர் அறிவு பூர்வமான நடவடிக்கை தேவையானதாகவும் திறமை மிக்க தாகவும் உள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சியே திட்டமிடுதல் என்றழைக்கப்படும். சமூகத் திட்ட மிடுதலுக்கு சமூகத்தின் பெரும்பான்மையோரின் ஒப்புதல் வேண்டியது இன்றியமையாதது. மக்கள் தாங்கள் வாழும் நிலை மனநிறைவைத் தருவதில்லை என்று கருதி மாற்ற நினைக்கும் போது திட்டமிடுவர். எவ்விதத் தியாகத்தைச் செய்யவும் தயாராக இருப்பர். மக்களாட்சி முறை நாடுகளிலும் சர்வாதிகார முறை நாடுகளிலும் இதுவே நிலை. திட்டத்தின் குறிக்கோள்களை ஏற்றுக்கொண்டு விட்டால் அரசு தீவிரமாக அதனைச் செயல் படுத்தத் தொடங்கிவிடும்.

நமது நாட்டிலும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகத் திட்டமிட்டு சமூகத்தை மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பல ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் இரண்டு குறிக்கோள்களை வலியுறுத்தியது. உற்பத்தியை அதிகரிப்பதும் ஏற்றத்தாழ்வை ஒழிப்பதுமே அந்த நோக்கங்கள். இவை பொருளாதார அம்சத்தை யும் சமூகத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டவை.

நமது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்,

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்கள் பல்வேறு நிலையில் நல்வாழ்வு நடத்த வாய்ப்பளிப்பதே இந்தியாவின் திட்டமிடுவதன் உள்நோக்கமாகும்" என்று கூறப்பட்டுள்ளது.

சமதர்ம பாணிச் சமுதாயத்தை (Solialistic Pattern) அமைப்பதுதான் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையாகும்

என்று 1954 இல் நாடாளுமன்றம் அறிவித்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இக் குறிக்கோள் வலியுறுத்தப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவுக் குறிப்பில் கல்வி, பொது சுகாதாரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் குறிக்கோள்கள் பொருளாதார வளர்ச்சிதான் என்றாலும் சமூக அமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் திட்டமிட்டவர்களின் நோக்கமாக நமது நாட்டில் இருந்து வருகின்றது.

நமது சமூக அமைப்பிலும் பல மாற்றங்கள் ஐந்தாண்டுத் திட்டங்கள் காரணமாக ஏற்பட்டு வருகின்றன. அதில் மிகவும் முக்கியமானது நகரமயமாகுதலாகும். இரண்டாவது உலகப் போருக்குப் பின் நமது நாட்டில் நகர மக்களின் எண்ணிக்கை மிகுந்து வருகின்றது. நகர மக்களின் எண்ணிக்கை 1941 இல் 14 சதவீதத்திலிருந்தது. 1951 இல் 24 சதவீதமாக உயர்ந்தது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. 1971 இல் 24.8 சதவீதம் உயர்ந்துள்ளது.

தொழில்துறையிலும் நமது சமூகத்தில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. உற்பத்தி மற்றும் வீட்டமைப்பு வேலைகளில் மூன்றில் ஒரு பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களின் எண்ணிக்கை 1901—1971 ஆண்டு களில் மாற்றம் கொள்ளவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு பார்த்தால் இந்தியப் பொருளாதாரத்தில் தேக்கநிலைதான் நிலவுகின்றது என்று கூறவேண்டும்.

மக்களுக்குப் பயிற்சியும், ஒத்துழைப்பு தரும் நல்லெண்ணமும் இருந்தால்தான் பொருளாதார திட்டங்கள் வெற்றிபெறும். அறியாமையில் உழன்றுகொண்டு ஒருநாள் உணவுக்கும் அல்லல் படும் மக்களைக் கொண்ட நாட்டில் இத்தகைய ஒத்துழைப்புக் கிடைப்பது என்பது கடினமே! இதனால்தான் நல்லெண்ணத்தில் மலர்ந்த பல திட்டங்கள் நிறைவேறாமல் உள்ளன; நிறைவேற்றப் பட்டவைகளும் முழுப் பலனை அளிக்காமல் இருக்கின்றன.

குடும்பத்தில் மாற்றம்

பல்வேறுத் துறைகளிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குடும்பத்தையும் விட்டு வைக்கவில்லை. இந்தியக் கூட்டுக் குடும்ப

அமைப்பு பலத்த மாற்றத்திற்குள்ளாகிக்கொண்டே வருகின்றது. தற்போது குடும்பம் கருக்குடும்பமாக (Nucleus) மாறிவிட்டது என்று கருதுவோரும் உண்டு. சீனிவாஸ் இக் கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. குடும்பத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மிகவும் சிக்கலானதாகத் தோன்றுவதால் இது குறித்து தெளிவாக உணர்ந்துகொள்ள முடியவில்லை. குடும்பத்தில் இம்மாற்றங் களைக் குறித்து பல்வேறு வட்டாரங்களிலும் ஆய்வு நடத்தாத தும் இதற்குக் காரணமாகும்.

நகரங்களில் கருக்குடும்பங்களே அதிகம் காணப் படுகின்றன. ஆனால் உறவுமுறை வலுவடைந்துள்ளது. குடும்ப உறுப்பினர்களுக்குப் பல கடமைகளைச் செய்வதில் இக்குடும்பத் தினர் கண்ணுங் கருத்தாகவும் இருக்கின்றனர். தொலைதூரத்தில் வாழும் குடும்பத்தினரோடு இந்தக் குடும்பத்தினர் உறவு அறுந்து போகாமல் காப்பாற்றிக் கொள்கின்றனர்.

கிராமங்களில் உள்ள குடும்பத்தினரின் சூழலிலிருந்து வேறு பட்டச் சூழலில் நகரக் குடும்பத்தினர் வாழ்கின்றனர். பல்வேறு புதியப் பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வேறுபட்ட சமூகப் பண்பாட்டுக் குடும்பங்களுடன் தாராளமாகப் பழகுகின்றனர்.

இப்போது பெண்கள் பலரும் கல்வி கற்க வாய்ப்பு உள்ளது. ஆனால் கல்வி கற்பதில் அவர்கள் அதிகம் கவனம் செலுத்து வதால் பழையச் சடங்கு முறைகளை அவர்கள் உணர்ந்துகொள்ள நேரம் இருப்பதில்லை. அவற்றினை உணர்த்துவதற்கும் வயது முதிர்ந்த பெண்கள் இக்குடும்பத்தில் இல்லை.

தங்கள் குழந்தைகளுக்கு இந்தியப் பண்பாட்டு முறைகளை உணர்த்துவதற்குப் போதிய அறிவை இக்காலப் படித்த பெண்கள் பெறவில்லை. கல்வி, வேலை வாய்ப்பில் அதிகம் போட்டி நிலவுவதால் இத்துறையில்தான் குடும்பத்தினர் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். நவீன கல்வியை அளிப்பதிலும் விளையாட்டுப் போன்ற துறைகளில் பிள்ளைகளை ஊக்குவிப்பதற்குமே பெற்றோர்களுக்கு நேரம் சரியாக இருக்கின்றது. பண்பாட்டைப் போதிப்பதற்கு அவர்களுக்கு குறைவான காலமே உள்ளது. குடும்ப நடத்தையில் உள்ள பெரிய மாற்றமாக இதனைக் கூறலாம்.

இக்குறையை நீக்குவதற்குப் பல முக்கிய நகரங்களில் ஏற்பட்டு வரும் சில அமைப்புகள் முயலுகின்றன. டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களில் சில வட்டாரப் பிரிவினரின் அமைப்புகள் தோன்றியுள்ளன. வேறு பகுதிகளிலிருந்து இந்த நகரங்களில் குடியேறியவர்கள் இதில் உறுப்பினராகி, தங்கள் வட்டாரப் பண்பாடுகளை அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கின்றது. மலையாள சமாஜம், ஆந்திர மகிளசபா போன்றவை இத்தகைய அமைப்புகளாகும். மலையாளம், தெலுங்கு மொழி பேசுவோர் இதில் உறுப்பினராகி தங்கள் பண்பாட்டு முறைகளைப் புரிந்து கொள்கின்றனர். ஆனால் இந்தச் செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சூழல் பெற்றோர்களுக்குத்தான் பயன்படுகின்றதே தவிர இளையத் தலைமுறையினர் இதில் அதிகம் ஈடுபாடு கொள்வதில்லை. முதனிலைக் குழுக்களுக்குப் பதிலாக இடைநிலைக் குழுக்கள் பண்பாட்டைப் பாதிக்கின்றன.

கிராமத்தில் வாழும் குடும்பங்களும் இப்போது தனித்துச் செயல்படவில்லை. நவீனச் சமுதாயக் கோட்பாடுகளும் நகர நாகரிகங்களும் கிராமங்களுக்குள்ளும் நுழைந்து விட்டன. நகரங்களுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள கிராமங்கள்தான் மிகுதியாக நகரத்தின் தன்மைகளால் ஊடுருவப்பட்டுள்ளன.

குடும்பத்தில் பரம்பரையாக நிலவிவந்த அதிகார அமைப்பு இப்போது மாற்றம் கொண்டுள்ளது. மேற்கத்திய கல்விமுறையும், நகர வாழ்க்கை முறையும் இதற்குக் காரணமாகும்.

புதியக் கருத்துகள் குடும்ப அமைப்பை மாற்றி நகரங்களும் இடம் பெயரச் செய்துள்ளன. கீழ்க்குறிப்பிடுவன இதற்குக் காரணமாக உள்ளன. (1) மேற்கத்தியக் கல்வி முறை, (2) தொழில் முறைகள், (3) புதியப் போக்குவரத்து வசதி காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்தல், (4) புதிய வேலை வாய்ப்புகள், (5) நகரங்கள் உள்ள நல்ல வாய்ப்பானச் சூழல்கள்.

புதிய மதிப்பீடுகளைப் பின்பற்றுவதன் மூலம் சமூகத்தில் மதிப்பு ஏற்படுகின்றது என்பதனால் கீழ்ச் சாதியினர் புதிய சமூக வழக்கங்களையும் பின்பற்றுகின்றனர். இதற்கு வாய்ப்பாக நகரங்கள் உள்ளன. எனவே அவர்கள் அங்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

குடும்பத்தில் முன்பு நிலவி வந்ததைப் போன்று இப்போது சிலரால் அதிகாரம் செலுத்தமுடிவதில்லை. எனவே குடும்பத்திலுள்ளவர்கள் அதிகச் சுதந்திரத்துடன் நடந்துகொள்கின்றனர்.

திருமணங்களைத் தாங்களாகவே நிச்சயத்துக்கொள்கின்றனர். இத்தகையத் திருமணங்கள் மூலம் புதிய உறவுகள் ஏற்படுகின்றன; புதியக் கருத்துகளின் பரிமாற்றம் குடும்பங்களிடையே ஏற்பட வசதி கிடைக்கின்றது.

நகரமயமாகுதலும், தொழில் மயமாகுதலும் குடும்பத்தில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன. கல்வி, வேலை, மதிப்பு போன்றவைகளில் மாற்றங்கள் விளைந்துள்ளன. தன்னிச்சையாகச் செயல்பட்டு இவற்றினைப் பெற்றுக்கொள்ள நவீனக் குடும்பங்களிலுள்ளவர்கள் முயலுகின்றனர். இதற்குக் கூட்டுக் குடும்பங்கள் ஓரளவுக்குத் தடையாக இருக்கிறது என்பதனால், அவை செல்வாக்கிழந்து விட்டன. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் குடும்ப அமைப்பை மாற்றுவதற்கும் காரணமாக உள்ளன என்றும் கூறப்படுகின்றது. இளைஞர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் இப்புதிய கருத்துகளை ஏற்று, புதியக் குறிக்கோள்களை அடைய முயலுகின்றனர்.

குடும்ப அமைப்பில் துரிதமான பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்குப் பல்வேறு சக்திகள் காரணமாக உள்ளன. இந்த மாற்றங்களினால் சில குடும்ப அமைப்பே மாறியுள்ளது. வேறு சில குடும்பத்தின் செயல்முறைகளையே மாற்றிவிட்டன.

சாதி, வகுப்புகளில் மாற்றம்

சாதி அமைப்பு பழமையானது. இதைப் போன்றே சாதியை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணமும் பழமையானதாகும். பல ஞானிகளும், சமயச் சீர்திருத்த வாதிகளும் இதற்காக முயன்றனர். பல அமைப்புகளும் சுயமரியாதை இயக்கம் போன்றவையும் சாதியை ஒழித்துக் கட்ட முயன்றன. ஆனால் சாதி ஒழியவில்லை; பல மாற்றங்கள் எடுத்து வருகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சியில் நிறைவேற்றிய இந்தியக் குற்றவியல் சட்டம் (Indian Penal Code Act, — 1860) சாதி அமைப்பில் மாபெரும் புரட்சியைக் கொண்டுவந்தது. இச்சட்டத்தின்படி நீதியின் முன்னால் எல்லோரும் சமமே; ஒரு குற்றமும் சாதிக் கண்ணோட்டத்தில் கருதப்படக்கூடாது.

இருபதாம் நூற்றாண்டில் சாதி அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு சாதியில் நிலவிய கிளைச் சாதிப்பிரிவுகளின் தடைகள் உடைந்தன. இதைப்போன்றே 'தீட்டு' என்று கருதப் பட்டவைகளும் மறைந்தன. உயர்கல்வி, அரசு வேலைவாய்ப்பு,

நகரங்களின் வளர்ச்சி போன்றவை சாதி கிளைப் பிரிவுகளை உடைத்தெறிந்தன. அனைத்து இந்திய சாதி மாநாடும் சாதி உட்பிரிவுகளை ஒழித்து சாதியமைப்பை புதிய வழியில் வலுபடுத்த முயன்றது. சாதி உட்பிரிவுகளிடையே திருமணம் நடைபெற இருந்தத் தடையை இம்மாநாடு மாற்றியது. சாதி அமைப்பில் வட்டார, மொழி வேறுபாடு நிலவியதும் மாறியது. தேசிய இயக்கம் தீட்டு குறித்து நிலவி வந்த நம்பிக்கைகளைத் தகர்த்தது. காந்தி அடிகள் தீண்டாமைக் குறித்து பெரும் போராட்டமே நடத்தினார்.

அரிசன மக்களின் நல்வாழ்வுக்காக உயர்சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து வலுவான இயக்கம் தோற்றுவிக்கப்படவில்லை. உயர்சாதியினரின் ஆதிக்கத்தைக் கீழ்ச்சாதியினர் ஏற்றுக் கொண்டு வந்தனர். கர்ம தத்துவங்களை மக்கள் நம்பியது இதற்கு ஒரு காரணமாகும். மேல்சாதியினரிடம் நில உரிமை இருந்ததால் அதிகாரம் செலுத்த முடிந்தது. கீழ்ச்சாதியினர் மேல் சாதியினரின் ஆதிக்கத்தை ஏற்றுப் பணிந்து நடந்ததால் அவர்களுக்குச் சமூகத்தில் பாதுகாப்பும் கிடைத்து வந்தது.

கீழ்ச்சாதியினரிடம் எதிர்ப்பு இயக்கம் ஒன்று 1848 இல் மகாராஷ்டிரத்தில் தோன்றியது. ஜோதி ராவ் புலே (Jyoti Rao Phule) இதனைத் தொடங்கி வைத்தார். இது ஒரு பிராமணர் எதிர்ப்பு இயக்கம். சாதி வேறுபாடின்றி எல்லோரும் சமம் என்று 1873 இல் அவர் சத்திய சோதக் சமாஜம்' (Satya sodak Samaj) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். பிரமணரல்லாதார் தங்கள் திருமணச் சடங்குகளுக்குப் பிராமாணர்களை அழைக்கக் கூடாது என்று அவர் பிரச்சாரம் செய்தார்.

தமிழகத்தில் இதனைப் போன்று பிராமணர் எதிர்ப்பு இயக்கம் 1916 இல் தொடங்கப்பட்டது. இதன் பெயர் 'தென் இந்திய நல உரிமைச் சங்கம்'. இது நீதிக் கட்சி என்றழைக்கப்பட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலும் இவ்வியக்கம் செய்தித்தாள்களை வெளியிட்டு பிரச்சாரம் செய்தது. தந்தை பெரியார் நீதிக் கட்சியைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்றித் தமிழகத்தில் சாதி ஒழிப்பு இயக்கம் நடத்தினார். இதற்கு உறுதுணையாக அறிஞர் சி. என். அண்ணாதுரை விளங்கினார்.

இவ்வியக்கங்கள் எல்லாம் கல்வி, வேலை வாய்ப்புகளில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டி போராடின. இந்த வகையில் சமயத்தை அடிப்படையாக வைத்து வகுப்புவாரி பிரதிநிதித்

துவம் கேட்ட முஸ்லிம் லீக் கட்சியைப் போன்றே இவ்வியக்கங்களும் விளங்கின என்று கூறலாம்.

கேரளத்தில் சாதி அமைப்பை எதிர்த்து நாராயண குரு போராடினார். அம்மாநிலத்தில் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்ட ஈழவர்களின் தலைவராக அவர் விளங்கினார். மேற்கத்தியக் கல்வி முறையையும் சமஸ்கிருத வழிமுறைகளையும் ஈழவர்கள் பின்பற்றினர். இதனால் சமூக தர அமைப்பில் அவர் உயர முடிந்தது. வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொள்வதன் மூலம் ஒரு சாதி சமூகத் தர வரிசையில் உயர்ந்து செல்லலாம் என்பதற்கு ஈழவர் சாதி நல்ல எடுத்துக் காட்டாகும்.

அரிசன மக்களின் தலைவராக கருதப்படுபவருள் டாக்டர் அம்பேத்கார் முக்கியமானவர். அமெரிக்காவில் கல்வி பயின்ற பின்பு அம்பேத்கார் மகாராஷ்டிரத்திலுள்ள மகர் (Mahar) சாதியினரின் தலைவராக விளங்கினார். அவர்களைச் சீர்திருத்தி முன்னேற்றுவதற்கு அவர் அரும்பாடு பட்டார். இன்றும் அவர் அரிசன மக்களின் தலைவராகக் கருதப்படுகின்றார்.

தீண்டாமையை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியவர்களுள் காந்தி அடிகளும் ஒருவர். தீண்டத்தகாதவர்களுக்குத் தனித் தொகுதி ஒதுக்கீடு செய்வதை எதிர்த்து 1932 இல் அவர் உண்ணா நோன்பு மேற்கொண்டது சாதி வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். பல பல்கலைக்கழகங்களிலும் சாதித் தர அமைப்பைப் பின்பற்றுவதில்லை என்று மாணவர்கள் உறுதிமொழி எடுத்தனர்.

இவ்வித இயக்கங்களின் முயற்சி வீண்போகவில்லை. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் 1936 இல் கோவில் நுழைவு பிரகடனப் படுத்தப்பட்டது. இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி கோயில்களில் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர். அதற்கு முன்பு தீண்டத் தகாதவர்கள் கோயிலினுள் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்திய அரசு 1955 இல் நிறைவேற்றியச் சட்டத்தின்படி தீண்டாமையைப் பின்பற்றுகிறவர்களைத் தண்டிக்க வழி உள்ளது. 1956 இல் நிறைவேற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தின்படி கலப்புத் திருமணங்களும் சட்டப்படிச் செல்லும்.

கல்வியையும் சமூக உயர்வையும் பெற்றுக்கொள்ள பல சாதியினர் முந்துகின்றனர். பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு விட்டு புதிய வேலைகளில் ஈடுபட எல்லோரும் விரும்புகின்றனர்.

ஏழ்மையையும் அறியாமையையும் விரட்டி வாழ்க்கை வசதியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று எல்லாத் தரத்தினரிடையும் புதிய உத்வேகம் எழுந்துள்ளது. இதற்கு எதிராக இயங்கும் சக்திகளின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற உணர்ச்சிகரமான நடவடிக்கைகளில் பல பிரிவினரும் நடந்துகொள்கின்றனர். சாதிச் சண்டை புதிய வடிவம் எடுத்து வருகின்றது.

சமயம், திருமணம் ஆகியவற்றில் மாற்றம்

இந்தியா பல புராதனமான சமயங்களின் தாயகமாக விளங்கி வருகின்றது. பல சமயங்கள் இந்திய மண்ணில் தழைத்து உலகெங்கிலும் பரவியுள்ளன. இந்தியர்கள் அனைவரும் சமய நம்பிக்கைக் கொண்டவர்கள் என்றபோதிலும், நாஸ்திக வாதங்களுக்கும் இந்துச் சமயம் இடமளிக்கிறது.

பல்வேறு உலகச் சமயச் சிந்தனைகள் தற்போது இந்தியாவில் பலத்த மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. ஞானிகளுக்கும் துறவிகளுக்கும் மட்டுமே புரிந்து வந்த சமய உண்மைகளைச் சாதாரண மக்களுக்கும் புரியும்வகையில் போதிக்கப் பல சமய இயக்கங்கள் இப்போது நமது நாட்டில் தோன்றியுள்ளன.

இராமகிருஷ்ணர், விவேகாநந்தர் போன்றவர்கள் நமது மக்களிடையே சமயம் குறித்தும், நம்பிக்கைகள் குறித்தும் புதிய விழிப்புணர்ச்சியைக் கொண்டுவந்தனர். இந்துச் சமயத்தின் பெருமையை உலகெங்கும் நிலைநாட்டினர். இதன் காரணமாக நமது சமயத்தில் உள்ள பல்வேறு சமயத் தலைவர்களும் மக்களிடையே சமுதாய விழிப்புணர்ச்சிக்கு வித்திட்டனர். அறிஞர் இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் இந்துச் சமயத்தின் தத்துவங்களைப்பற்றி விளக்கம் செய்தனர்.

சாதியின் பெயரால் சமயம் மேற்கொண்டுவந்த பல தடைச் சட்டங்கள் இப்போது தளர்த்துவிட்டன. கீழ்ச்சாதியினரும் கோயில்களில் இறைவழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். சமரச சன்மார்க்கச் சிந்தனைகள் அதிகம் வலியுறுத்தப்படுகின்றன. சமயக் காழ்ப்புணர்ச்சி மறைந்து பிற சமயச் சிந்தனைகளைச் சகித்துக்கொள்ளும் மனநிலை அதிகரித்து வருகின்றது. நவீன அறிவியல் கல்வி பெற்றவர்களுக்கும் சமய நம்பிக்கை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். முன்பு சமயம் எந்த வகையில் நமது மக்களின் தினசரி வாழ்க்கையில் ஊடுருவியிருந்ததோ அதில் மாற்றங்கள் ஒன்றும் அதிகம் ஏற்பட்டுவிடவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் பல புதிய சமய இயக்கங்கள் தோன்றி உலகெங்கிலும் பரவியுள்ளன. இந்தியாவிலும் இத்தகைய நவீனச் சமய இலக்கியங்களுக்கு அதிகம் ஆதரவுள்ளது.

திருமண நடவடிக்கைகளில் முன்பு சமயம் அதிக ஆதிக்கம் செலுத்தியது. இப்போது நிலைமை மாறிவிட்டது. அரசு பல சட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாக, சிவில் திருமண முறை நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றது.

சமயம் தடைசெய்த கலப்புத் திருமணங்கள் பெருகி வருகின்றன. வேறுபட்ட சமய நம்பிக்கைக் கொண்டவர்களிடையேயும் திருமணம் நடைபெறுகின்றது.

இந்து திருமணச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக விதவைகளும் திருமணம் செய்ய வாய்ப்புள்ளது. தம்பதிகள் விரும்பினால் மனமுறிவு செய்துகொள்ளவும் வசதியுள்ளது.

பெற்றோர்களின் விருப்பப்படியில்லாமல் தங்கள் விருப்பப்படி திருமணம் செய்துகொள்ள வயது வந்த இளைஞர்களுக்கு இப்போது உரிமை கிடைத்துள்ளது.

வினாக்கள்

1. சமூக மாற்றம் என்றால் என்ன?
2. மேற்கத்திய மயமாகுதலுக்கும், நவீன மயமாகுதலுக்குமுள்ள வேறுபாடுகள் எவை?
3. தொழில்மயமாகுதல் என்றால் என்ன?
4. இந்தியச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எவை?
5. சாதி வகுப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஆய்க.

11. மக்கள்தொகைப் பிரச்சனை

சமூகப் பிரச்சனைகள்

இன்றைய இந்தியச் சமுதாயத்தில் உள்ள பல பிரச்சனை களில் வகுப்புவாதப் பிரச்சனையும், மொழிப் பற்றால் வரும் பிரச்சனையையும், பிரதேசப் பற்றால் வரும் பிரச்சனையையும், ஏழ்மையாலும், அறியாமையாலும் ஏற்றதாழ்வாலும் ஏற்படும் பிரச்சனையையும், சமூகப் பிரச்சனைகள் என்ற தலைப்பில் இங்கு ஒன்றன்பின் ஒன்றாகக் காணலாம். மக்கள்தொகைப் பிரச்சினையை முதன் முதலில் இங்கு ஆராய்வோம். உலகின் நிலப்பரப்பில் 2.4 சதவிகிதத்தைக் கொண்டது இந்தியா. உலக மக்கள்தொகையில் 14.6 சதவிகித மக்கள் இந்தியாவில் இருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சோவியத் யூனியன், ஜப்பான், ஈரான் ஆகிய நாடுகளின் மக்கள் தொகையைவிட இந்தியாவின் மக்கள்தொகை மிகுதி. இந்தியா வில் மக்கள்தொகை அதிகரிப்பு, பஞ்சம், பட்டினி, பிணி, வேலை யின்மை, வறுமை, போன்ற பல சமூகக் கேடுகளுக்கு அடித்தள மாக விளங்குகிறது. எனவே இப்பிரச்சனையை மக்கள்தொகை வளர்ச்சி எந்தெந்த காரணங்களால் ஏற்பட்டது என்பதையும், ஜனநெருக்க விளைவுகளையும், மாறிவரும் பாலின விகித விளைவு களையும், ஊரக நகரக வளர்ச்சி வித்தியாசங்களையும், வயது அமைப்புப் போக்கையும், படித்தோர் எண்ணிக்கை விகிதத்தையும், ஆயுட்கால அதிகரிப்பையும், மக்கள்தொகையால் வாழ்க்கைத் தரம் எவ்வாறு பாதிக்கப் படுகிறது என்பதையும், மக்கள்தொகைப் பெருக்கம் குறைய அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் அதன் சமூக விளைவுகள் பற்றியும் காண்போம்.

இந்தியாவில் மக்கள்தொகை வளர்ச்சி

ஒரு நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சிக்கு அடிப்படையா அமைவன மூன்று. அவை பிறப்பு விகிதம், இறப்புவிகிதம், மற்றும் மக்கள் குடிப்பெயர்ச்சி என்பவை.

பிறப்பு விகிதம் : பிறப்பு விகிதம் என்பது சராசரி 1000 மக்களுக்கு எத்தனைக் குழந்தைகள் ஓராண்டில் பிறக்கின்றன என்பது.

இறப்புவிகிதம்: இறப்பு விகிதம் என்பது சராசரி 1,000 மக்களில் எத்தனைபேர் ஓர் ஆண்டில் இறக்கின்றனர் என்பது.

அதிகரிப்பு விகிதம்: பிறப்பு விகிதத்தில் இருந்து இறப்பு விகிதத்தைக் கழித்தால் அதிகரிப்பு விகிதம் கிடைக்கும். இயற்கையான அதிகரிப்பு விகிதத்தோடு குடிப்பெயர்ச்சியின் விளைவையும் கூட்டினால் மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கிடலாம்.

குடிப்பெயர்ச்சி விளைவு: குடிப்பெயர்ச்சி விளைவு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டை விட்டுக் குடிபெயர்வோர் தொகைக்கும் அந்நாட்டிற்குக் குடி புகுவோர் தொகைக்கும் உள்ள வித்தியாசம். இவ்வித்தியாசத்தையும் விகிதமாக்கி மக்கள்தொகை அதிகரிப்பு விகிதத்தோடு நிலைமைக்கேற்ப கூட்டவோ கழிக்கவோ செய்யின் மக்கள்தொகை வளர்சியைக் கணக்கிடலாம்.

எடுத்துக்காட்டாக ஒருநாட்டில் பிறப்பு விகிதம் 45 . 5. இறப்பு விகிதம் 31.3 என்று வைத்துக் கொண்டால் அதிகரிப்பு விகிதம் (பிறப்பு விகிதம் — இறப்பு விகிதம்) 14.2 ஆகும்.

குடிப்பெயர்ச்சி விளைவு குறிப்பிட்ட காலத்தில் 1000 மக்களுக்கு 4.8 விகிதம் கூடுதலாக இருப்பின் அந்த நாட்டில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் (45.5 — 31.3 + 4.8) 19.0 ஆகும். அதாவது அந் நாட்டில் 1000 மக்களுக்குச் சராசரி வருடத்திற்கு 19 மக்கள் என்ற விகிதத்தில் மக்கள்தொகை வளர்ச்சி அமையும்.

இந்தியாவிலும் தமிழக மாநிலத்திலும் 1901ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டுவரை மக்கள்தொகையும் மக்கள்தொகை வளர்ச்சி சதவிகிதமும் அட்டவணை 1 - ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அட்டவணை 5 ஐ நோக்கினால் இந்திய மக்கள்தொகை 238.40 மில்லியனாக 1901 இல் இருந்தது. 1911க்கும் 1921க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் வளர்ச்சி குன்றியது. மற்ற வருடங்களில் வளர்ச்சி அதிகரித்துக்கொண்டே வந்திருக்கின்றது. தமிழகத்திலும் 19.25 (1901) மில்லியன் மக்கள்தொகையில்

அட்டவணை 5

மக்கள்தொகையும் மக்கள்தொகை வளர்ச்சியும் 1901 - 1971

வருடம்	தமிழ்நாடு மாநிலம்		இந்தியா	
	மில்லியனில்	வளர்ச்சி சதவிகிதம்	மில்லியனில்	வளர்ச்சி சதவிகிதம்
1901	19.25	—	238.40	—
1911	20.90	+8.57	252.09	+ 5.75
1921	21.63	+3.47	251.32	— 0.31
1931	23.47	+8.52	278·98	+11.00
1941	26.27	+11.91	318 66	+14.22
1951	30.12	+14.66	316.09	+13.31
1961	33.69	+11.85	439.23	+21.64
1971	41.20	+22.30	547.95	+24.89

இருந்து 41.2 (1971) மில்லியன் மக்கள்தொகையாக வளர்ந்துள்ளது. வளர்ச்சி விகிதம் 3.47 (1911-21) முதல் 22.3 (1961-71) சதவிகிதம் வரை அதிகரித்து வந்திருக்கிறது. 1911 க்கும் 1921க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதுமே பிளேக்கு என்னும் கொடிய தொற்றுநோய் பரவியிருந்ததும், இந்தியாவில் ஆங்காங்கு கொடிய வறட்சியும் அதன் விளைவாகப் பஞ்சமும் பட்டினியும் பரவலாக இருந்ததும், முதல் உலகப்போரின் விளைவுகளும் சேர்ந்து மக்கள்தொகை வளர்ச்சியை மிகவும் பாதித்து விட்டன. அடுத்து வந்த வருடங்களில் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றது.

இந்தியாவில் பிறப்பு இறப்பு விகிதத்தை அட்டவணை 6 காட்டுகிறது. இதில் 1901 முதல் 1971 வரை இந்தியாவின் பிறப்பு இறப்பு விகிதங்களைக் காணலாம்.

அட்டவணை 6

இந்தியாவின் பிறப்பு இறப்பு விகிதம் (1000 பேர்களுக்கு)

ஆண்டுகள்	பிறப்பு விகிதம்	இறப்பு விகிதம்
1901—1911	51.3	43.1
1911—1921	49.2	48.6
1921—1931	46.4	36.3
1931—1941	45.2	31.2
1941—1951	39.9	27.4
1951—1961	40.0	18.0
1961—1371	40.1	16.8

கடந்த 70 ஆண்டுகளில் பிறப்பு விகிதம் 51.3-ல் இருந்து 40.1 ஆகக் குறைந்துள்ள போதிலும் இறப்பு விகிதம் 43.1-ல் இருந்து 16.8 ஆகக் குறைந்திருப்பதால் பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள வித்தியாசம் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது.

இறப்பு விகிதம் வேகமாகக் குறைவதற்கும் பல காரணங்களைச் சொல்லலாம். நாட்டில் போக்குவரத்து வசதிகளும், செய்தித் தொடர்பு வசதிகளும் மேன்மேலும் பெருகி வருவதால் வறட்சியும் வெள்ளமும் மற்றும் இயற்கையின் சீற்றங்களும் மக்களை அதிகம் பாதிப்பதற்கு முன்பு தற்காப்பு நடவடிக்கைகளும் உதவிகளும் விரைவில் செய்ய முடிவதால் இயற்கையின் சீற்றத்தால் வரும் இறப்பு குறைக்கப்பட்டிருக்கிறது.

அம்மை, காலரா, பிளேக், மலேரியா, போன்ற கொள்ளை நோய்களும் தொற்றுநோய்களும் தடுப்பு நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

குழந்தைப் பேறு காலத்தில் தாய்மார்களின் இறப்பும் சிறு குழந்தைகளின் இறப்பும் (Infant mortality) மிகுதியாக இருந்தன. மகப்பேறு மருத்துவ உதவிகளைப் பணியாளர்களைக் கொண்டு விரிவுபடுத்தியதாலும், தாய் சேய் நலவிடுதிகள் மூலம் மகப் பேற்றிற்கு முன்னும் பின்னும் தாயும் சேயும் ஆரோக்கியமாக இருப்பதற்கு ஏற்ற முறையில் கவனித்துக் கொள்ளப்படுவதாலும் குழந்தை நோய்கள் பலவற்றிற்கு முறைப்படி தகுந்த தடுப்பு நட வடிக்கைகள் கைக் கொள்ளப்படுவதாலும் இந்நாட்டில் மகப் பேற்றால் மங்கையர் இறப்பும் சிறு குழந்தைகள் இறப்பும் மிகவும் குறைந்து விட்டது.

நம் நாட்டில் பொது சுகாதார ஒழுங்கு முறைகள் அமல் படுத்தப்படுவதாலும், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுவதாலும் சுற்றுப்புறச் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தெருக்கூட்டல், தகுந்த கழிப்பிடங்கள் அமைத்தல். கழிவுநீர் அகற்றும் சாக்கடை வசதி செய்தல், போன்ற பொது சுகாதாரப் பணிகள் செயல்படு வதால் மக்களின் சுகாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட் டுள்ளது.

நோய் தடுப்புக்காகவும், நோயுற்றோர் நலம் பெறவும் ஏற்ற வழியில் ஆங்காங்கே பொது மருத்துவமனைகளும், மருத்துவ நிலையங்களும், சிறப்பு மருத்துவ வசதிகளும் அரசாங்கம் அமைத்துக் கொடுப்பதால் நோயாளிகள் இறப்பும் கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது.

இம்முயற்சிகளின் காரணமாக இறப்பு விகிதம் படிப்படியாகக் குறைந்ததோடல்லாமல் இந்தியாவில் பிறந்தவர்களின் சராசரி வயது 27 - ல் (1921) இருந்து 52 (1971) வருடங்களாக உயர்ந்திருக்கின்றது. முன்னேற்றமடைந்த மேலை நாடுகளில் சராசரி வயது 70 ஐயும் 75 யையும் தாண்டிச் செல்லும்பொழுது நம் நாட்டுச் சராசரி வயது மிகக் குறைவே என்றாலும் கடந்த முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதே.

இந்தியாவில் பிறப்பு விகிதம் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

திருமணம் செய்துகொள்வதை இந்தியர்கள் மிக முக்கியக் கடமையாகக் கருதுகின்றனர். திருமணம் செய்துகொள்ளாமல் இருக்க முடிவதுமில்லை. அவ்வாறு இருக்கச் சமுதாயம் விடுவது மில்லை. இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் இங்கு நிலவிவருகின்றது. பெண்களுக்கு 45 வயது வரை

குழந்தைகள் பிறக்கின்றன. பெண்களில் 15 வயதுக்குக் குறைவான வர்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று சாரதா சட்டம் இயற்றியும் பலர் 14 வயதுக்கு முன்பே தம் குழந்தை களுக்குத் திருணம் செய்தனர். மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப பெண்களுக்குத் திருமண வயதை18 என அரசு மாற்றியிருக்கின்றது. மேலும் திருமண வயதை உயர்த்தலாமா என வல்லுணர்கள் சிந்தித்து வருகின்றனர். இச் சமூகச் சட்டங்களை மக்களின் மன மாற்றத்தாலன்றிச் செயல்படுதலறிது.

பொதுவாக இந்தியக் குடும்பங்களில் சராசரி நான்கு அல்லது ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். இந்நாட்டில் குழந்தை மோகமும் குறிப்பாக ஆண் குழந்தை வேண்டும் என்ற ஆசையும் மிக அதிகம். குழந்தை இல்லாதவரை சமுதாயம் தாழ்த்தி மதிக்கும் குணமும் இங்கு உண்டு.

இந்தியாவில் கல்வி அறிவற்றோர் தொகை மிக அதிகம். கற்றோரிடையே சிறிய குடும்பம் அமைக்கும் வழி முறைகளைக் கடைபிடிக்கும் ஆர்வம் அதிகம். எனவே படிக்காத மக்களிடையே குடும்ப அளவு பெரியதாக இருப்பதைக் காண்கிறோம்.

ஏழை, எளியவர்கள் குழந்தைச் செல்வத்தை விரும்பி வரவேற்கும் நிலையைக் காண்கிறோம். குழந்தைகள் எதிர் காலத்தில் வேலைசெய்து குடும்பத்திற்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் ஏழைகள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளு கின்றனர். மேலும் கூட்டுக் குடும்பங்களில் ஒருவர் வருமானத்தைப் பலர் பகிர்ந்துண்டு வாழ்வதால் எத்தனைக் குழந்தைகள் பிறந் தாலும் கவலை கொள்வதில்லை.

தீவிர சமய நம்பிக்கையின் காரணமாக இந்திய மக்கள் குழந்தைகளை இறைவன் தரும் பரிசாகக் கருதுவதால் மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் மிகுந்த கவனம் செலுத்துவதில்லை. இந்நாட்டின் தட்பவெப்ப நிலையும் மக்கள்தொகை வளர்ச்சிக்குத் துணையாக அமைந்துள்ளது. பெண்கள் சிறு வயதிலேயே (12-15) பருவம் எய்தி விடுகின்றனர். எனவே சிறு வயதில் திருமணம், அடுத்தடுத்து மகப்பேறு என்று பல காரணங்களாலும் பிறப்பு விகிதம் குறையாமல் இருக்கின்றது.

மக்கள் நெருக்கம்

இந்தியா உலக நாடுகளில் மிகுதியான மக்கள் நெருக்கத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்று. மக்கள் நெருக்கமானது ஒரு இடத்தின் தட்பவெப்ப நிலை நீர்ப்பாசன வசதிகள்

பொருளாதார முன்னேற்றம் போன்ற காரணிகளைப் பொருத்து அமையும்.

அட்டவணை 7-ல் உலகில் குறிப்பிட்ட சில நாடுகளின் ஜன நெருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை — 7

குறிப்பிட்ட நாடுகளின் மக்கள்தொகையும் மக்கள் நெருக்கமும் (1960)

நாடுகள்	மக்கள் தொகை (மில்லியனில்)	மக்கள் நெருக்கம் (ச. கி. மீட்டர்)
ஜப்பான்	93	252
இங்கிலாந்து	53	215
இத்தாலி	49	164
இந்தியா	436	142
பாகிஸ்தான்	93	98
பிரான்ஸ்	46	83
சீனா	678	71
இந்தோனேஷியா	93	62
அமெரிக்கா	181	19
ரஷ்யா	214	10

இந்தியாவில் மக்கள் நெருக்கம் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 142 பேர்களாக 1961இல் இருந்தது. பாகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற இந்தியாவைவிட பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில்கூட மக்கள் நெருக்கம் குறைவாகவே இருந்தது. பொருளாதாரத்தில் மிகவும் வளர்ச்சி அடைந்த சோவியத் யூனியன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும்கூட நிலப்பரப்பு மிக அதிகமாக இருப்பதால் மக்கள் நெருக்கம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. ஜப்பான், இங்கிலாந்து போன்ற பொருளாதார

வளர்ச்சி பெற்ற சிறிய நாடுகளில் இந்தியாவை விட மிகுதியான மக்கள் நெருக்கம் காணப்படுகிறது.

மக்கள் நெருக்கமானது நாட்டின் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரி அமைவதில்லை. மக்கள்தொகை வளர்ச்சியைப் பொருத்தும் பொருளாதார முன்னேற்றத்தைப் பொருத்தும் அதிகரித்தோ குறைந்தோ வருகிறது. அட்டவணை 8-ல் இந்தியாவிலும் தமிழகத்திலும் 1901 இல் இருந்து மக்கள் நெருக்கம் எவ்வாறு மாறி வந்திருக்கின்றது என்பது கொடுக்கப்பட்டிருக்கிறது.

அட்டவணை — 8

இந்தியாவிலும் தமிழகத்திலும் மக்கள் நெருக்கம் (1901—1971)

(ச. கி. மீட்டருக்கு)

வருடம்	தமிழ்நாடு மாநிலம்	இந்தியா
1901	148	77
1911	161	82
1921	167	81
1931	181	90
1941	202	103
1951	232	117
1961	259	142
1971	317	178

இந்தியாவின் சராசரி மக்கள் நெருக்கத்தைப்போல் கிட்டத்தட்ட இரண்டு பங்கு தமிழகத்தில் மக்கள் நெருக்கம் மிகுதியாக இருக்கிறது. தமிழகம் இந்தியாவில் உள்ள பொருளாதார முன்னேற்றமடைந்த மாநிலங்களுள் ஒன்றாகும். இங்கு தட்பவெட்ப நிலை மிகக் குளிரும் மிக வெப்பமுமின்றி நடுத்தரமாக அமைந்துள்ளது. நீர்ப்பாசன வசதி உடைய வேளாண்மைக்

குரிய நிலங்களைத் தன்னகத்தே பெற்று செழிப்பு மிக்க மாநிலங் களுள் ஒன்றாகத் திகழ்வதே காரணமாகும்.

இந்தியாவில் மக்கள் நெருக்கம் மிக அதிகமாக உள்ள பகுதி களில் வாழும் மக்கள் மற்ற பகுதிகளில் வேலை வாய்ப்புகள் தேடிச் சென்று வாழும் போக்கு காணப்படுகிறது. சில வளமான மக்கள் நெருக்கம் மற்ற பகுதிகளில் பொருளீட்டி வாழச் செல்லும்போது மண்ணின் மைந்தர் கொள்கையும் பிராந்தியப் பற்றும் தடையாக அமைகிறது.

பால்இன விகிதம் (Sex Ratio)

மக்கள் தொகையில் ஆண்களும் பெண்களும் சம அளவில் இருக்கவேண்டும். ஒரு நாட்டில் ஆண்கள் மிகுதியாகவோ அல்லது பெண்கள் மிகுதியாகவோ இருந்தால் பால்இன விகிதம் குறை பாடாக அமையும். இதனால் பல சமூகப் பொருளாதாரக் கேடு களும் சிக்கல்களும் நேரிடலாம்.

அட்டவணை — 9

இன விகிதம் (1901—1971)

வருடம்	1000 ஆண்டுகளுக்கு பெண்களின் எண்ணிக்கை	
	தமிழக மாநிலம்	இந்தியா
1901	1044	972
1911	1042	964
1921	1029	955
1931	1027	950
1941	1011	945
1951	1007	946
1961	992	941
1971	978	930

பால்இன விகிதம் என்பது ஒரு இடத்தின் மக்கள்தொகையில் சராசரி ஆயிரம் ஆண்களுக்கு எத்தனைப் பெண்கள் இருக்கின்றனர் என்ற விகிதத்தைக் குறிக்கும். அட்டவணை 9-ல் இந்தியாவில் 1901 முதல் 1971 வரை உள்ள இன விகிதம் கொடுக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் பெண்கள் பற்றாக்குறை கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகவே இருந்து வருகிறது. கொடிய தொற்று நோய்களுக்கு ஆண்களைவிட மிகுதி பெண்களே பலியாகின்றனர். இளமையிலேயே திருமணம் நடப்பதால் மகப்பேறு காலத்தில் மிகுதியாகப் பெண்கள் இறந்துவிடுவதாலும் பெண்களின் எண்ணிக்கை குறைகிறது. பிறக்கும் குழந்தைகளில் ஆண் குழந்தைகளின்மேல் தனிக் கவனம் செலுத்தும் கலாச்சாரப் போக்கு பரவலாக இந்நாட்டில் காணப்படுகிறது. பெண் குழந்தைகள் உணவு, உடை, சமூக முக்கியத்துவம் முதலிய வற்றில் ஆண் குழந்தைகளைவிட புறக்கணிக்கப்படுகிறார்கள். இக்காரணங்களினால் பெண்களின் எண்ணிக்கை பால்இன விகிதத்தில் குறைவாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை 1961 ஆம் ஆண்டுவரை இன விகிதத்தில் பெண்களின் எண்ணிக்கை சற்று மிகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. 1961 லும் 1971லும் இவ்விகிதம் சற்று குறைந்து காணப்படுகிறது.

இந்தியாவில் கிழக்கு மேற்கு மற்றும் வடக்கு மண்டலங்களை விடத் தென் மண்டலத்தில் பாலின விகிதத்தில் வித்தியாசம் குறைவே. பாலின வித்தியாசம் மிகஅதிகமாக இருக்கும் பகுதிகளில் பெண்கள் பற்றாக்குறையும் குறிப்பாக நகரங்களில் இதன் விளைவாகப் பரத்தையர் அதிகரித்தல் பாலின நோய்கள் பரவுதல் போன்ற பிரச்சனைகள் இருக்கின்றன.

ஊரக நகரக் விகிதம் (Rural Urban Ratio)

தொழிற்புரட்சியின் காரணமாக நகர வளர்ச்சியும் உலகம் முழுவதும் வரலாறு காணாத அளவு விரைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் வளர்ந்து வருகிறது. நகரக வளர்ச்சி ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இந்நூற்றாண்டில் கருதப்படுகிறது. உலகிலுள்ள வேளாண்மை நாடுகளிலெல்லாம் ஊரக மக்களின் விகிதம் மிகுதி யாகவும், தொழில் வளர்ச்சியில் முன்னேற்றமடைந்த நாடுகளி லெல்லாம் நகரக மக்களின் விகிதம் மிகுந்தும் இருக்கின்றன.

அட்டவணை — 10

இந்தியாவில் ஊரக நகரக மக்கள் சதவிகிதம்

வருடம்	ஊரகம் சதவிகிதம்	நகரகம் சதவிகிதம்
1872	91.28	8.72
1881	90.59	9.41
1891	90.54	9.46
1901	90.21	9.79
1911	90.65	9.35
1921	89.70	10.30
1931	89.00	11.00
1941	87.28	12.78
1951	82.70	17.30
1961	82.03	17.97
1971	80.09	19.91

இந்தியாவில் ஊரக மக்கள் சதவிகிதம் 91.3 (1872) லிருந்து கிட்டதட்ட பத்து வருடங்களுக்கு ஒரு சதவிகிதம் என்ற அளவில் குறைந்துகொண்டு வந்திருக்கிறது. இதேபோல் நகரக மக்கள் சதவிகிதம் மிகக் குறைந்த அளவிலேயே படிப்படியாக அதிகரித்து வந்து இன்று ஐவரில் ஒருவர் நகரில் வாழும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இங்கிலாந்து நாட்டில் 1851 ஆம் ஆண்டில் ஊரக மக்கள் தொகை 49.8 சதவிகிதமாக இருந்தது. நூறு ஆண்டுகளில் (1951) 19.3 சதவிகிதமாகக் குறைந்து அந்நாட்டின் தொழில் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியது. அமெரிக்காவில் இதே காலக் கட்டத்தில் ஊரக மக்கள் விகிதம் 75 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதத்திற்குக் குறைந்தது. அதாவது நால்வரில் மூவர் ஊரகங்களில் வாழ்ந்த நிலையிலிருந்து நால்வரில் மூவர் நகரங்களிலும் ஒருவர் ஊரகங்களிலும் வாழும் நிலைக்கு நூற்றாண்டுகளில் மாற்றம் ஏற்பட்டது.

இந்தியாவில் நகரக வளர்ச்சி மாட்டு வண்டி வேகத்தில்தான் கடந்த நூறு ஆண்டுகளாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இவ் வேகம் நம் நாட்டில் தொழில் வளர்ச்சி ஆமை வேகத்தில்

தமிழகத்தில் ஊரிய நகரிய மக்கள் விகிதமும்
குடியிருப்புப் பகுதிகளும் (1971)



படம். 1

நகரங்களின் பிரிவு

மக்கள் தொகை	நகர வகுப்பு	எண்ணிக்கை
1,00,000க்கு மேல்	I	17
50,000 முதல் 99,999 வரை	II	27
20,000 முதல் 49,999 வரை	III	79
10,000 முதல் 19,999 வரை	IV	118
5,000 முதல் 9,999 வரை	V	97
5,000க்கு கீழ்	VI	101

கிராமங்களின் பிரிவு

மக்கள்தொகை	கிராமங்களின் எண்ணிக்கை
5000க்கு மேல்	3901
2000 முதல் 4999 வரை	7973
500 முதல் 1999 வரை	2969
500க்குக் கீழ்	892

முன்னேறிக்கொண்டு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இன்னும் நம் நாட்டில் வேளாண்மையையே நம்பிக் கொண்டிருப்பவர்கள் நான்கில் மூவராக இருக்கின்றனர்.

நம் நாட்டில் நகரங்களை மக்கள்தொகையைக் கொண்டு பல பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். ஒன்று முதல் ஆறு வகுப்பு வரை பிரித்திருக்கின்றனர். படம் 1-ல்கொடுக்கப்பட்டுள்ள சக்கரப் படம் தமிழகத்து மக்கள் எந்தெந்த ஊரக நகரகக் குடியிருப்புப் பகுதிகளில் வாழ்கிறார்கள் என்பதை விளக்கும்.

வயது அமைப்பு (Age Composition)

ஒரு நாட்டு மக்களின் வயது அமைப்பை வயது பிரமிடு (Age Pyramid) மூலம் தெரிந்துகொள்ளலாம். இந்தியாவின் வயது பிரமிடு (படம் 2-ல்)கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொகைப் பிரமிடு (1971)



படம். 2

இந்தியாவின் வயது பிரமிடு கீழ்ப்பகுதி அகலமாகவும் மேல் பகுதி மிகவும் குறுகியும் காணப்படுகிறது. நம் நாட்டில் குழந்தைகள் விகிதம் மிகவும் அதிகமாகவும் வயதானவர் விகிதம் மிகக் குறைவாகவும் இருப்பதே இதற்குக் காரணம். முன்னேற்ற மடைந்த நாடுகளின் வயது பிரமிடு நடுப்பகுதி அகலமாகவும் கீழ்ப்பகுதி சற்று குறைந்தும் மேல்பகுதி நம் நாட்டுப் பிரமிடை

விட சற்று அகலமாகவும் அமைந்திருக்கும். நம் நாட்டில் 41 சதவிகித மக்கள் 15 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள். ஆனால் அமெரிக்காவில் இவ் வயதினர் 25.1 சதவிகிதம்தான். நம் நாட்டில் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் 7.9 சதவிகிதம்தான். ஆனால் அமெரிக்காவில் இவர்கள் 16. 9 சதவிகிதம் இருக்கிறார்கள்.

படித்தவர்கள் (Literates)

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு எழுத்தறிவு மிக மிக முக்கியம். குறிப்பாக இந்தியா போன்ற குடியாட்சியில் மக்கள் எல்லோரும் படித்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எல்லோரும் படித்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அட்டவணை 11-ல் இந்தியாவிலும் தமிழகத்திலும் 1901ஆம் ஆண்டு முதல்1971ஆம் ஆண்டுவரை படித்தவர் சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது

அட்டவணை — 11

இந்தியாவிலும் தமிழகத்திலும் படித்தவர் சதவிகிதம் (1901—1971)

வருடம்	தமிழ்நாடு மாநிலம்	இந்தியா
1901	7.64	5.35
1911	9.18	5.92
1921	10.38	7.16
1931	11.34	9.50
1941	16.19	N. A.
1951	20.85	16.67
1961	31.41	24.02
1971	39.46	29.46

இந்தியாவில் படித்தோர் சதவிகிதம் 1901இல் 5.35 ஆக இருந்தது. இது ஐம்பது ஆண்டுகளில் 16.67 சதவிகிதமாக உயர்ந்தது. இந்திய மக்கள் குடியாட்சியில் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து முதியோர் கல்வி, பொதுக்கல்வி, தொழில் கல்வி, பெண்கள் கல்வி, முறைசாரார் கல்வி, போன்று பல கல்வித் திட்டங்களின் மூலம் எழுத்தறிவைப் பரப்பினர். மேலும் மக்கள் வசதிக்கு ஏற்ப பள்ளிக் கல்வி, மாலை நேரக் கல்வி, இரவு பாடசாலைக் கல்வி, தொழிற்சாலையில் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி, திறந்த கல்வி, வானொலிமூலம் கல்வி, பத்திரிக்கைகள் மூலம் கல்வி போன்ற பல விதமான வழிகளில் மக்களுக்குக் கல்வி கிடைக்க வழி செய்கின்றனர். கற்போர் வசதிக்காக மதிய உணவுத் திட்டம், சீருடைத் திட்டம், இலவசப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம், பள்ளிக்கு வராத குழந்தைகளைக் கணக்கெடுத்து பள்ளிக்கு அழைத்து வரும் திட்டம், இலவசக் கல்வித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமும் ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கப்படுகிறது. பலதரப்பட்ட முயற்சிகளின் காரணமாக 1951 இல் 16.67 சதவிகிதமாக இருந்த படித்தோர் விகிதம் 1971 இல் 29.46 சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது. தமிழகத்திலும் இதே போன்ற முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழகம் இந்தியாவில் உள்ள பல மாநிலங்களை விட முன்னேற்றம் அடைந்த மாநிலமாக இருப்பதால் இங்கு 1971 இல் 39.46 சதவிகித மக்கள் படித்தோராக இருக்கக் காண்கிறோம்.

அட்டவணை 12இல் தமிழகத்தில் உள்ள 15 மாவட்டங்களிலும் (1971) ஊரக நகரக மக்கள்தொகையும் படித்தவர் சதவிகிதமும் படித்தவர்களிடையே ஆண் பெண் சதவிகிதங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்து மக்களில் 30.26 சதவிகிதத்தினர் நகரங்களில் வாழ்கின்றனர். சராசரியை விட அதிக சதவிகித மக்கள் நகரங்களில் வாழும் மாவட்டங்கள் முறையே சென்னை, நீலகிரி, கோவை, செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி முதலியன வாகும். மிகக் குறைவாக நகரக மக்களைக் கொண்ட மாவட்டங்கள் முறையே தருமபுரி, புதுக்கோட்டை, தென்னாற்காடு, கன்னியாகுமரி முதலியன வாகும்.

தமிழகத்து மாவட்டங்களில் தருமபுரியைத் தவிர மற்றெல்லா மாவட்டங்களிலும் அகில இந்தியச் சராசரியைவிடப் படித்தவர் சதவிகிதம் மிகுதியே. படித்தவரின் சதவிகிதம் மிகுதியாகக்

அட்டவணை—12

தமிழக மாவட்டங்களில் ஊரக நகரக மக்கள் விகிதமும் படித்தவர் விகிதமும் — 1971.

வ. ரிசை எண்	மாவட்டங்கள்	ஊரகம்	நகரகம்	மக்கள் தொகையில் நகரக மக்கள் தொகை விகிதம்	படித்தவர்களில்				மொத்த மக்கள் தொகையில் படித்தவர்கள் விகிதம்.
					ஆண்கள்	சத விகிதம்	பெண்கள்	சத விகிதம்	
1	சென்னை	—	2,469,449	100.00	915,488	59.78	615,918	40.22	62.01
2	செங்கல்பட்டு	1,896,909	1 010,690	34.76	772,791	6690	382,345	33.10	39.73
3	வட ஆற்காடு	2,972,702	783,095	20.85	906,028	69.59	395,893	30.41	34.66
4	தென் ஆற்காடு	3,104,726	512,997	14.18	809,388	71.86	317,009	28.14	31.14
5	சேலம்	2,197,234	795,382	26.58	650,511	68.55	298,491	31.45	31.71
6	தருமபுரி	1,533,834	143,941	8.58	269,841	72.06	104,612	27.94	23.32
7	கோயமுத்தூர்	2,816,936	1,556,242	35.59	1,147,232	67.44	553,856	32.56	38.90
8	நீலகிரி	250,780	243,235	49.24	148,613	63.96	83,729	36.04	47.03
9	மதுரை	2,614,003	1,324,194	33.62	1,091,901	66.79	542,959	33.21	41.51
10	திருச்சிராப்பள்ளி	2,433,755	758,379	23.76	841,860	67.97	396,651	32 03	38.80
11	புதுக்கோட்டை	832,372	114,979	12.14	216,932	72.93	80,511	27.07	31.40
12	தஞ்சாவூர்	2,778,375	771,688	21.74	953,688	66.66	477,032	33.34	40.30
13	இராமநாதபுரம்	2,113,545	746,662	26.11	766,476	67.43	370,153	32.57	39.74
14	திருநெல்வேலி	2,171,019	1,029,496	32.17	895,581	62.42	539,226	37.58	44.83
15	கன்னியாகுமரி	1,018,144	204,405	16.72	397,453	55.85	314,223	44.15	58.21
	தமிழ்நாடு	28,734,334	12,464,834	30.26	10,783,783	66.34	5,472,610	33.66	39.46

கொண்டது சென்னை மாவட்டம் (62 .01 சதவிகிதம்). இதனை அடுத்து முறையே கன்னியாகுமரி, நீலகிரி, திருநெல்வேலி மதுரை, தஞ்சை சிறப்பு பெறுகின்றன.

தமிழகத்துப் பெண்களில் மூவரில் ஒருவரும் ஆண்களில் மூவரில் இருவரும் படித்தோராகத் திகழ்கின்றனர். 44.15 சதவிகிதம் பெண்கள் படித்தவர்களாக இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம் பெண்களின் படிப்பில் முதலிடம் பெறுகிறது. அடுத்து சென்னை, திருநெல்வேலி, நீலகிரி, தஞ்சை, மாவட்டங்கள் முறையே சிறப்பிடம் வகிக்கின்றன.

அறியாமை பல சமூகப் பிரச்சனைகளுக்கு அடிப்படையாக அமைகிறது; படித்தோர் விகிதம் அதிகரித்து வருவது அறியாமை குறைய வாய்ப்பை உண்டுபண்ணும். இது சமூகத்தில் பல சமூகப் பொருளாதார பண்பாட்டுச் சிக்கல்கள் குறைய வழி செய்யும். இந்தியாவில் படித்தோர் எண்ணிக்கை மிகுதியாக உள்ள மாநிலங்களில் முன்னேற்றம் இருப்பதைக் காணலாம். பெண்கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டதின் பலனாக அவர்களின் சமுதாய நிலை உயர வழி ஏற்பட்டிருக்கிறது.

ஆயுட்காலம் (Life Expectancy at birth)

ஆயுட்காலம் மக்களின் இறப்பு விகிதத்தைப் பொறுத்தது. குழந்தைகள் இறப்பும், பெண்களிடையே மகப்பேற்றின்போது இறப்பும் குறையும்பொழுது சராசரி ஆயுட்காலமும் அதிகரிக்கிறது. இந்திய மக்களிடையே சராசரி ஆயுட்காலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கணக்கிடப்பட்டு அட்டவணை எண் 13இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியர்களின் ஆயுட்காலம் 23இல் இருந்து படிப்படியாக உயர்ந்து 51ஆக 1971ஆம் ஆண்டில் வந்திருக்கின்றது.

ஆண்களின் சராசரி வயதைவிட பெண்களின் சராசரி வயது சற்று குறைவாகவே இருக்கின்றது. மேலை நாடுகளில் ஆண்களின் சராசரி வயதைவிடப் பெண்களின் சராசரி வயது சற்று அதிகமாகவே காணப்படும். இந் நிலைக்கு முக்கியக் காரணம் மகப்பேறுக் காலத்தில் இறப்பு விகிதம் இந்தியாவில் மிகுதியாக இருக்கின்றது. மேலும் பெண்களைப் பிள்ளைகள் பெறும் எந்திரம் போன்று கருதும் எண்ணம் இந்தியரிடையே இருப்பதால் அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெறும் தாய் போதிய சத்துணவின்றிப் பல நோய்களுக்கு ஆளாகின்றாள். மேலும் இந்தியர்களிடையே

பெண்களைத் தாழ்த்தி வைக்கும் பழக்கமும் பெண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலிருக்கும் பழக்கமும் காரணங்களாகும். இந்தியரின் ஆயுட்காலம் பிற நாட்டவர்களின் ஆயுட்காலத்தோடு ஒப்பு நோக்கின் மிகக் குறைவே.

அட்டவணை — 13

இந்தியரின் சராசரி ஆயுட்காலம் (1901—1971)

பத்தாண்டுகள்	ஆண்கள்	பெண்கள்
1901—11	22.6	23.3
1911—21	19.4	20.9
1921—31	26.9	26.6
1931—41	32.1	31.4
1941—51	32.5	31.7
1951—61	41.9	40.6
1961—71	53.2	51.9

மக்கள்தொகையும் வாழ்க்கைத் தரமும்

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மக்கள்தொகையையும் உணவு உற்பத்தியையும் மட்டும் பொறுத்ததில்லை. இது அந்நாட்டின் இயற்கை வளங்கள், அறிவியல் முன்னேற்றம், சமுதாய அமைப்பு, மக்கள்தொகை ஆகிய நான்கு முக்கியக் காரணங்களைக் கொண்டது.

ஒரு நாட்டில் நல்ல வளமான வேளாண்மைக்குரிய நிலம், நிலக்கரி, இரும்பு, தங்கம், பித்தளை, ஈயம் போன்ற கனிவளங்கள் பெட்ரோலியம், யுரோனியம், இயற்கை எரி வாயுக்கள் போன்ற எரி சக்தி தாதுப்பொருள்கள் முதலியவை மிகுதியாகக் கிடைத்தால் அந்நாட்டின் வாழ்க்கைத் தரம் உயர்வாகவே அமையும்.

ஒரு நாட்டில் அறிவியல் வளர்ச்சியும் அதன் பயனாகப் புதுப் புது கண்டுபிடிப்புகளும் இருந்து அவை ஆக்கபூர்வமாகப் பயன் படுத்தப்பட்டாலும் வாழ்க்கைநிலை உயர்ந்ததாக அமையும்.

ஒரு நாட்டின் வாழ்க்கைநிலைக்கு நல்ல சமுதாய அமைப்பும் இன்றியமையாதது. நாட்டில் சமாதானமும், சட்டம் ஒழுங்கு கடைபிடித்தலும் பணப் புழக்கமும், தொழில்திறமைமிக்க உழைக்கும் தொழிலாளர்களும், மூலதனமும் இருத்தல் வேண்டும். நாட்டில் நிலையற்ற பணமதிப்பும் நாணயமற்ற கொடுக்கல் வாங்கலும் ஒரு வரையறைக்குட்படாத உற்பத்தியும் பொருளாதார முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்தும்.

ஒரு நாட்டின் மக்கள்தொகை மிகக் குறைவாக இருந்து நாட்டு வளங்களைப் பயன்படுத்த முடியாமல் போனாலும் மக்கள்தொகை மிகுந்திருந்து நாட்டு வளங்கள் பற்றாமல் போனாலும் வாழ்க்கைத்தரம் குறைவாகவே இருக்கும். எனவே ஒரு நாட்டில் இயற்கை வளங்களைத் திறம்படப் பயன்படுத்துவதற்குப் போதுமான அளவு மக்கள் தொகை இருத்தல் வேண்டும்.

மேலை நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியோடு பொருளாதார முன்னேற்றமும் இணைந்து வளர்ந்தது. ஜப்பான் போன்ற நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சியை விட பொருளாதார வளர்ச்சி மிகுதியாகவும் வேகமாகவும் அமைந்த தால் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே வந்தது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. மக்கள் வருமானம் அவர்கள் அன்றாடத் தேவைகளுக்கே பற்றாக்குறையாக இருப்பதால் முதலீடு செய்யும் அளவுக்கு சேமிப்பு இல்லை. புதிய புதிய தொழில்நுட்ப அறிவியல் கண்டுபிடிப்புக்களை உபயோகித்து இயற்கை வளங்களை முழுமையாகப் பயன் படுத்தி கடினமாக உழைத்து, சிக்கனமாக வாழ்க்கை நடத்தினாலன்றி வாழ்க்கைத்தரம் உயர வழியில்லை.

குறைந்து வரும் மக்கள்தொகைப் பெருக்கம்

உலகின் பல பகுதிகளிலும் இப்பொழுது மக்கள்தொகை வளர்ச்சியோடு வாழ்க்கைத்தரம் உயரும் என்ற நிலையைத் தாண்டி விட்டனர். எனவே உலகில் எல்லாப் பகுதிகளிலும் குடும்பத்தின் அளவைக் குறைத்துக்கொள்ளும் கருத்து பரவலாகப் பின்பற்றப்படுகிறது.

கருத்தடைச் சாதனங்கள், கருச்சிதைவு, அறுவைச் சிகிச்சை போன்ற செயற்கை முறைகளினால் வசதியானவர்கள், முதலில்

தங்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்தினர். படிப்படியாகச் சமூக சீர்திருத்த வாதிகள் ஏழ்மை நிலையிலுள்ள பெண்களைப் பாதுகாக்கக் கருத்தடை முறைகளைப் பரப்பினர்.

காந்தியடிகள் போன்றோர் கருத்தடைக்குப் பதிலாகச் சுய கட்டுப்பாடு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று விரும்பினார். கருத்தடை கடவுளின் எண்ணத்திற்கு எதிர்ப்பு போன்றது என்று சில சமயத்தினரும் இதை எதிர்க்கின்றனர். இந்தியாவில் மிக அவசியமாக மக்கள்தொகைக் கொள்கை ஒன்று தவைப்படுகிறது.

குடும்பநலத் திட்டம்

இந்நாட்டில் இறப்புக் கட்டுப்பாடு ஓரளவு செயல்பட்டு வெற்றியும் கண்டுள்ளது. எனவே பிறப்புக் கட்டுப்பாடும் தீவிர மாகச் செயற்படுத்தப்பட வேண்டும். பொருளாதார முன் னேற்றம் எவ்வளவுதான் திட்டமிட்டப்படி செயல்படுத்தப் பட்டாலும் இன்றுள்ள மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஈடுகட்ட முடியவில்லை. எனவே இந்நாட்டில் சராசரி உற்பத்தியும் மக்கள் தொகை விகிதத்திற்குக் குறைவாகவே இருக்கிறது. மக்கள் தொகை வளர்சியைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் இந் நாட்டில் சராசரி வருமானமும் வாழ்க்கைத் தரமும் குறைவதைத் தவிர வேறு வழியில்லை. இவற்றைக் கருத்தில் கொண்டுதான் இந்திய அரசும் குடும்பநலத் திட்டத்தை அரசாங்கக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு தீவிரமாகச் செயல்படுத்துகிறது.

குடும்பநலத் திட்டம் விரிவாக்கப் பணியாகவும் ஆங்காங்கு அமைந்துள்ள மருத்துவ மனைகளில் ஒருங்கிணைந்த குடும்பநல மருத்துவப் பொது சுகாதாரப் பணியாகவும் செயலாக்கப் படுகிறது. இத் திட்டத்தின்கீழ் எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், பொது மருத்துவமனைகளிலும், நகரக மருத்துவ நிலையங்களிலும், கணிசமான அளவு மக்கள் வேலை பார்க்கும் பொதுப்பணி அல்லது தனியார் துறை நிறுவனங் களிலும் குடும்பநலத் திட்ட அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றின் மூலம் மக்களுக்கு மக்கள்தொகைக் கல்வி, திட்டமிட்ட குடும்பத்தின் அவசியம் போன்றவை எடுத்துச் சொல்லப்படுகிறது.

பல்வேறு குடும்பநலத் திட்டங்களின் மூலமும் நம் நாட்டில் பிறப்புவிகிதத்தை 40-லிருந்து (1971) படிப்படியாகக் குறைந்து ஆயிரத்திற்கு 22 முதல் 25 வரைக்கும் கொண்டுவருவதே குறிக் கோளாகும்.

வினாக்கள்

1. இந்தியாவில் மக்கள்தொகை வளர்ச்சி எதனைப் பொறுத்துள்ளது.
2. ஓரிடத்தில் மக்கள் நெருக்கம் எதனைப் பொறுத்து அமைகிறது.
3. இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் எதனைப் பொறுத்துள்ளது.
4. குடும்பநலத் திட்டத்தின் அவசியம் என்ன?

12. சமூகப் பிரச்சனைகள்

இந்துச் சமயத்தின் பிறப்பிடமாக உள்ள இந்தியா பல சமயங்கள் பிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் வெளிநாடுகளில் அவை வளர்வதற்கும் பல வழிகளில் உதவியிருக்கின்றது. பௌத்த சமயமும், சமண சமயமும் கடல் கடந்து பிற நாடுகளிலும் வளர்ச்சியுற இந்தியர்கள் துணை நின்றனர். சீக்கிய சமயமும் பிற்காலத்து இந்தியாவில் தோன்றிய முக்கியச் சமயங்களுள் ஒன்று. இந்தியாவிற்கு வந்து வேரூன்றி வளர்ந்த சமயங்களுள் இஸ்லாமும், கிறித்துவமும் முக்கியமானவை.

இந்தியாவின் சமய அடிப்படையில் மக்கள்தொகைக் கணக்கின் விகிதாசாரத்தை அட்டவணை 14 இல் காணலாம்.

வரலாற்றுக்காலம் தொட்டே முஸ்லிம்களின் படையெடுப்பாலும் அவர்களின் ஆளுகையாலும் இஸ்லாம் இந்தியாவில் நன்கு நிலைத்து விட்டது. அதுபோல் இரண்டு நூற்றாண்டுகள் ஆங்கிலேயேர்களின் தொடர்பால் குறிப்பிட்ட அளவு கிறித்துவ சமயத்தையும் இந்தியர்கள் தழுவினர். முதல் கணக்கெடுப்பின் போது (1881) நான்கில் மூவர் இந்துக்களாகவும் ஐந்தில் ஒருவர் முஸ்லிம்களாகவும் இருந்தனர். முஸ்லிம்களின் விகிதம் படிப்படியாக உயர்ந்து பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு நான்கில் ஒருவர் முஸ்லிமாக இருந்த நிலை காணப்பட்டது. பிரிவினைக்குப் பிறகு எடுக்கப்பட்ட கணக்கில் (1951) பத்து இந்தியரில் ஒருவர் முஸ்லிமாக இருக்கும் நிலை காணப்பட்டது. சமய அடிப்படையில் மக்கள் வளர்ச்சியை நோக்கினால் 1951 இல் 85 சதவிகிதமாக இருந்த இந்துக்கள் 1971 ஆம் ஆண்டில் 82.72 சதவிகிதமாகக் குறைந்து காணப்படுகின்றனர். முஸ்லிம்கள் கிட்டதட்ட இரண்டு சதவிகிதம் இக்காலத்தில் அதிகரித்துள்ளனர். மற்றெல்லா சமயப் பிரிவினரிலும்கூட மக்கள்தொகையில் சற்று மிகுந்திருப்பது காணப்படுகிறது. கிறித்துவர்களிடையே 0.3 சதவிகிதமும் சீக்கியர்களிடையே 0.15 சதவிகிதமும் பிற சமயத்தவர்களிடையே 0.45 சதவிகிதமும் மக்கள்தொகை விகிதம் மிகுந்துள்ளதைக் காண்கிறோம்.

அட்டவணை — 14

இந்தியாவில் சமய அடிப்படையில் மக்கள்தொகை விகிதம் (1881—1971)

மதங்கள்	1881	1891	1901	1911	1921	1931	1941	1951	1961	1971
இந்து சமயம்	74.3	72.3	70.4	69.4	68.6	68.2	65.7	84.99	83.50	82.72
இஸ்லாமிய சமயம்	19.7	20.2	21.2	21.3	21.7	22.2	24.2	9.93	10.70	11.20
கிறித்துவ சமயம்	0.7	0.8	1.0	1.2	1.5	1.8	1.4	2.30	2.44	2 60
சீக்கிய சமயம்	0.7	0 7	0.8	1.0	1.0	1.2	1.1	1.74	1.79	1.89
பிற சமயங்கள்	4.6	6	6.6	7.1	6.9	6.6	7.6	1.04	1.47	1.59

ஒவ்வொரு சமயப் பிரிவிலும் உட் பிரிவுகள் பல உண்டு. இவர்களிடையே கருத்து வேறுபாடும் அதன் காரணமாக உட்பூசலும் போட்டியும் சில சமயங்களில் கலவரங்களும் ஆங்காங்கே நடைபெற்று வந்திருக்கின்றன.

இந்து பிராமணர்களிடையே வடகலை, தென்கலைப் போராட்டம் தமிழக மக்கள் எல்லோருக்கும் தெரிந்ததே; சைவ வைணவச் சண்டைகளும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையே. வழிபாட்டு முறையில் தமிழ் அர்ச்சனை என்றும் சமஸ்கிருத அர்ச்சனை என்றும் தமிழ் நாட்டில் பாகுபாடு வந்தது; பொதுக் கோயில்களுக்கு அரிசனங்களை அழைத்துச் சென்று ஆலயப் பிரவேசம் செய்வித்த காந்தியடிகள் மற்றும் தந்தை பெரியார் பேன்றவர்களின் சீர்திருத்தப் போராட்டம் இவைகளின் ஒன்றே. அரிசனங்களும் கோயிலில் அர்ச்சகர்களாக வர உரிமை பெற்றவர்களே என்ற தமிழக அரசின் கருத்து உச்ச நீதிமன்றம் வரைச் (Supreme Court) சென்றதும் இது போன்ற போராட்டங்களில் ஒன்றே. இதுபோல் கிறித்துவர்களிடையேயும், முஸ்லிம்களிடையேயும், சீச்கியர்களிடையேயும் உட்பூசல்கள் பல தோன்றி மறைவதுண்டு.

மாறுபட்ட சமயத்தவர்களிடையே சாதாரணமாகத் தோன்றும் கருத்து வேறுபாடுகளும், பொருளாதாரச் சிக்கல்களும் சில சமயங்களில் சமயச் சாயம் பூசப்பட்டு வேறுபட்ட சமயத்தவர்களிடையே பெரிய போராட்டங்களிலும் வகுப்புக் கலவரங்களிலும் கொண்டுசென்றன.

வகுப்புக் கலவரங்களுக்குப் பல காரணங்கள் கூறலாம். முக்கியமாக ஒரே சமய இன வகுப்பைச் சார்ந்தவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் தங்களை வேறுபடுத்திக்கொண்டு மற்றவர்களிடமிருந்து தனித்து வாழ்வதைக் குறிப்பிடலாம்.

மேலும் வரலாற்றுக் காலம் முதல் நிகழ்ந்து வரும் பகைமை உணர்வும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், காழ்ப்புணர்ச்சிகளும் சில சமயங்களில் பல வகுப்பினர்களிடையே கலவரத்தை உண்டாக்கிவிடுவதுமுண்டு.

மனத்தளவிலே ஆழப் பதிந்துவிட்ட வெறுப்புணர்ச்சியும் பகைமையுணர்வும், தவறான கருத்துகளும், ஆதாரமற்ற நம்பிக்கையின்மையும், நாம் சிறுபான்மையினர் என்ற அச்சமும் வதந்திகளை நம்பச்செய்து கலவரங்களுக்குத் துணை போகின்றன,

வகுப்புக் கலவரங்களையும் சமய வேறுபாட்டுணர்வுகளையும் குறைப்பதற்கு இந்திய தேசியக் கலாச்சாரத்தையும் நட்புணர்வையும் மிகுதியாக விளம்பரப்படுத்தவேண்டும். மாறுபட்ட கருத்துகளைக் கொண்ட சாதி, சமயத்தவர்களை ஒருங்கிணைத்துப் பழகவிடுவதன் மூலம் அவர்களுக்குள்ள அடிப்படை ஒற்றுமைகளைப் புரிந்துகொள்ளவும் ஆதாரமற்ற பகைமையுணர்வுகளை மாற்றிக்கொள்ளவும் வாய்ப்பளிக்கலாம்.

சாதிப் பற்று

இந்தியா சுதந்திரம் அடையுமுன்பே பல்வேறு சாதிகள் பல சங்கங்களை அமைத்துக்கொண்டு ஆங்கில அரசாங்கத்தில் சில சலுகைகள் பெற ஆரம்பித்தன. இந்த நிலைமை தொடர்ந்து இந்தியாவில் சுதந்திரம் அடைந்த பிறகும் கடைபிடிக்கப்பட்டது. பல சாதி சங்கங்கள் தங்கள் சாதி மக்கள் மேல்நிலை அடைய முயற்சி எடுத்துக்கொண்டது மட்டுமின்றி அரசாங்கத்தைத் தங்களுடைய சாதியைப் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க முயற்சித்தன. இதனால் சில சாதிகள் கல்வி மற்றும் அரசாங்கப் பதவி பெற ஏதுவாயிற்று.

மேலும் தேர்தல் சமயங்களில் சாதிப் பற்று தலைதூக்க ஆரம்பித்ததோடு மந்திரி சபையிலும் தங்கள் தங்கள் சாதியைச் சார்ந்தவர்கள் மந்திரியாக இருக்கவேண்டும் என்ற எண்ணமும் வளரத் தலைப்பட்டது. பல்வேறு சமயங்களில் பல கிராமங்களில் சாதியின் பெயரால் கிளர்ச்சியும் சண்டை சச்சரவுகளும் ஏற்பட ஆரம்பித்தன. இது அவ்வப்போது பெரும் சமூகப் பிரச்சனையாக மாறி சட்ட ஒழுங்குப் பிரச்சனையாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக அரிசனங்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் மீது மற்ற சாதியினர் அடக்க முற்படுகின்றனர். பல சமயங்களில் இது பெருங் கலவரமாக மாறிவிடுவதுமுண்டு. இதன் காரணமாகப் பல உயிர்கள் பலியாவதும் அவ்வப்போது பத்திரிக்கை வாயிலாக அறிகின்றோம். இத்தகைய பிரச்சினைகளைச் சமாளிக்கவும், தோன்றாது தடுக்கவும் மத்திய, மாநில அரசாங்கங்கள் பல்வேறு சட்டங்களை இயற்றி அதன்மூலம் இப்பிரச்சனையைக் குறைக்க பெருமுயற்சி எடுத்துக்கொள்கின்றன.

மொழிப்பற்றால் வரும் பிரச்சனை

மாநிலங்கள் எல்லாம் ஒன்றொடொன்று போட்டி போட்டுக் கொண்டு மாநில மொழியை அரசு மொழியாக்கி அரசாட்சி

செய்து வருகின்றனர். மத்தியிலும் இந்திமொழி படிப்படியாக ஆங்கிலத்தை அகற்றிக்கொண்டிருக்கிறது. தாய்மொழிக் கல்வி முறையைப் பல்கலைக்கழகக் கல்விவரை விரிவுபடுத்தும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மைய மாநில உறவுகளில் இணைப்பு மொழியாக இந்தியும் ஆங்கிலமும் செயல்பட்டு வருகின்றன. ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் பரவலாக இந்தி பேசாத மாநிலங்களில் இருக்கிறது. இந்தி பேசும் மாநிலங்களில் விரைவாக ஆங்கிலம் அகற்றப்பட்டு இணைப்பு மொழியாக இந்தியே திகழவேண்டும் என்ற தீவிரம் இருந்து வருகிறது. இதனால் பிறமொழி பேசும் மாநிலங்களுக்கும் மைய அரசுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்து வருவதால், இந்தி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளும்வரை இரு மொழிகளுமே இணைப்பு மொழி; ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று அரசாங்கம் உறுதி கொடுத்துள்ளது.

மாநிலங்களிடையே நல்லுறவை நிலைநாட்டவும் மக்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கவும் மும்மொழித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இந்தியர்கள் எல்லோரும் மூன்று மொழிகளைப் படிக்கவேண்டும்; இந்தி பேசாத மாநிலத்தவர்கள் தம் தாய்மொழியோடு இந்தியையும் ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் படிக்கவேண்டும். அதுபோல் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மாநிலத்தவர்கள் இந்தியோடு ஆங்கிலத்தையும் வேறு ஒரு இந்திய மொழியையும் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். மைய அரசு கல்வி சம்பந்தமாக ஆலோசனை கூறுகிறது. தமிழ் நாட்டில், தமிழர்களுக்கு இருமொழிகளே போதும். தமிழும் ஆங்கிலமும் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற கொள்கை பின்பற்றப்படுகிறது.

செய்தித்தாள் மூலமாகவும், வானொலி மூலமாகவும், திரைப் படங்கள் மூலமாகவும் மக்களிடையே நல்ல பொதுமக்கள் கருத்துகள் (public opinions) உருவாகவும் அவை நிலைத்து நிற்கவும் முயற்சி செய்யலாம்.

வட்டாரப்பற்று (Regionalism)

மக்களுக்குத் தாங்கள் வாழும் மாநிலத்தின்மேல் பற்று இருப்பது இயற்கையே. இந்தியாவின் பல மாநிலங்களில் வாழும் மக்களுக்கு அந்தந்த இடங்களின்மேல் பற்று இருந்தாலும் அப்பற்று தேசிய நலனுக்குக் கேடு விளைவிக்கும் வகையில்

அமைந்ததில்லை. நாடு பல குறுநிலங்களாகத் துண்டு பட்டிருந்த காலத்தில் அப்பற்றால் தீங்கு இல்லை. நாடு ஒன்றுபட்டு ஒரே தேசமாக அமைந்தபின் அவ்விதப் பற்று தீவிரமாகுமானால் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் தீங்கு விளைவிக்கும்.

வட்டாரப்பற்று என்பது ஒரு வட்டாரத்தில் வாழும் மக்கள் தங்களுக்குள் ஒரு பிடிப்பையும் அரவணைப்பையும் ஏற்படுத்திக்கொண்டு மற்றைய வட்டார மக்களை ஒரு வெறுப்புணர்வோடு நோக்குதலும் செயல்படுதலுமாகும். இந்தியாவில் ஒரு வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற வட்டார மக்களை வெளிநாட்டவர்களைக் கண்காணிப்பதுபோல் நோக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் வெளி மாநிலங்களிலிருந்து குடிவருபவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகவேண்டி இருக்கிறது. நாகர்கள் அதிகமிருக்கும் பகுதியில் மக்கள் கிளர்ச்சி செய்து நாகாலாந்து பெற்றுவிட்டனர். பஞ்சாப் இரண்டாகப் பிரிந்து பஞ்சாப், ஹரியானா மாநிலங்களாயின. மகாராஷ்டிரத்தில் சிவசேனையும் கர்நாடகத்தில் கன்னடச் சலுவலிகர் இயக்கத்தவரும் மற்ற மாநிலங்களிலும் ஆங்காங்கே பல இயக்கங்களும் தோன்றி மண்ணின் மைந்தருக்கே (sons of the soil) முன்னுரிமை என்ற கொள்கையைப் பரப்புகின்றனர். மண்ணின் மைந்தர்களுக்கே வேலை வாய்ப்பு, பொருளாதார வசதிகள் முதலியவற்றில் முதலிடம் கொடுக்கவேண்டும் என்று கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் தூண்டிவிடுகின்றனர்.

இந்தியாவின் ஒற்றுமை இந்தியர்கள் எல்லோரும் தத்தம் வட்டாரப் பற்றைக் குறைத்துக்கொண்டு தேசம் முழுவதும் ஒன்று என்ற எண்ணமும் தேசத்தில் எங்கும் எவரும் பொருளாதார, கலாச்சார உறவுகளை அமைத்துக்கொள்ள உதவ வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுபட்டால்தான் நிலைத்து நிற்கும். அவ்வித உணர்வோடு செயல்படாவிட்டால் தேசம் ஒன்றாகச் செயல்பட முடியாது.

வட்டார உணர்வு, தேசிய ஒருமைப்பாட்டையே மிஞ்சும் நிலையில் தீவிரமடைவதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

வரலாற்றுக் காலம் முதல் வடநாடு, தென்னாடு என்ற உணர்வும் ஆரியர், திராவிடர் என்ற எண்ணமும் வலுப்பெற்று வந்ததால் சிறு சிறு பொருளாதாரச் சிக்கல்கள், அரசியல் கருத்து வேறுபாடுகள் போன்றவை தோன்றும்பொழுது பிரதேச உணர்வு தூண்டிவிடப்படும் நிலையைக் காண்கிறோம்.

பொதுவாக மக்களிடையேயும் தங்கள் உறவு முறைகளையும் பழக்க வழக்கங்களையும் தத்தம் வட்டாரம் என்ற குறுகிய வட்டங்களுக்குள்ளேயே அமைத்துக்கொள்ளும் பண்பு மிக அதிகமாகக் காணப்படுகிறது. மாநிலம் விட்டு மாநிலங்களில் மண உறவு வைத்துக்கொள்வதும், கல்வி கற்கச் செல்வதும், வேலை வாய்ப்புகளைத் தேடிச் சென்று குடியேறுவதும் பரவலாகப் பின்பற்றப்படுவதில்லை. அங்கொன்றும் இங்கொன்று மாகத்தான் பிரதேசம் விட்டு பிரதேசத்தில் உறவுகள் அமை கின்றன.

சில மாநிலங்கள் வளர்ச்சியில் பின்தங்கி யிருக்கின்றன. ஒரு சில மாநிலங்களில் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டுள்ளதாலும் இம்மாநிலங்களிடையே ஏற்றத் தாழ்வும் காழ்ப்புணர்ச்சியும் உண்டாகியிருக்கின்றன. மேலும் சில மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் விழிப்புணர்ச்சியோடு சில தொழில்களிலும் வாணிபங் களிலும் சிறந்து விளங்கி, தங்களுக்குள்ளேயே சில கட்டுத் திட்டங் களை அமைத்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்குச் சென்று வெற்றிகரமாகத் தொழிலும் வாணிபமும் செய்து நல்ல வருவாய் ஈட்டுகின்றனர். இவர்களுடைய ஒற்றுமையும் குறுகிய காலத்தில் ஏற்படும் தொழில் வாணிப வெற்றிகளும் இவர்கள் அனுபவிக்கும் வாழ்க்கை வசதிகளும் சில நேரங்களில் இவர்கள் தத்தம் சொந்த மாநிலங்களுக்குத் திரட்டிச் செல்லும் செல்வமும் இவர்கள் தொழில் செய்யும் மாநில மக்களை இவர்கள்மேல் வெறுப்புக் கொள்ளச் செய்கிறது. இவ்வெறுப்புணர்ச்சி அதிக மானால் சில நேரங்களில் குறிப்பிட்ட பிரிவினரைச் சில மாநிலங் களிலிருந்து பொதுமக்களே விரட்டியடிக்கும் அளவுக்கு நிலைமை போய்விடுகிறது.

ஏழ்மையும் ஏற்றத்தாழ்வும் அறியாமையும்

(Inequality, Illiteracy and Poverty)

உலகில் பல நாடுகளையும் குறிப்பாக இந்தியாவையும் பற்றியுள்ள மிக முக்கியமான பிரச்சினை ஏழ்மை. "ஒரு மனிதன் தன் வருமானம் போதாததாலோ அல்லது அறிவற்ற செலவினங் களாலோ தன்னுடைய மன நிலையையும் உடல் நிலையையும் ஏற்றதாக வைத்துக்கொள்ளவும், தன்னைச் சார்ந்தவர்களைத் தான் வாழும் சமுதாயம் எதிர்பார்க்கும் அளவுக்கு வசதிகளோடு காப்பாற்றவும் முடியாத நிலையே ஏழ்மை'' என்று ஜான் எல்கில்லன் என்பவர் வரையறுக்கின்றார். எனவே ஏழ்மை என்பது ஒருவருடைய வருமானத்தை மட்டும் பொறுத்திருக்காது அவரைச்

சார்ந்திருப்பவர்களையும் அவர் வாழும் சமுதாயத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்தையும் பொறுத்திருக்கும். எனவே பல நாடுகளிலும் ஏழ்மை நிலை ஒன்றாக இருக்காது. பொருளாதார நிலையைப் பொறுத்து மாறுபட்டிருக்கும்.

இந்தியாவில் ஒரு நபர் உயிர்வாழக் குறைந்த தேவைகள் எவையோ அவற்றைப் பெறத் தேவையான அளவு வருமானத்தை வரையறுத்து அதற்குக் கீழ் வருமானம் உள்ளவர்களை ஏழ்மைக் கோட்டிற்குக் (Poverty line) கீழ்நிலையில் உள்ளவர்கள் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள்.

இந்திய மக்களின் சராசரி வருமானம் அமெரிக்க மக்களின் சராசரி வருமானத்தில் 49- ல் ஒரு பங்காக இருக்கிறது. மக்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குமேல் சராசரி வருமானத்திற்குக் குறைவாகவே வருமானம் உள்ளவர்கள். வருமானமும் கிராமங்களைவிட நகரங்களில் அதிகமாகவும், கிராமங் களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், கூலிவேலை செய்யும் உழவர்களுக்கும் மற்றவர்களைவிட மிகக் குறைவான வருமானமும் இருக்கிறது.

இந்திய மக்களின் சராசரி வருட வருமானம் 1975—76-ல் ரூ.1005 ஆக இருந்தது. ஆனால் 1961 ஆம் வருடத்தின் பண மதிப்பின்படி இது ரூ.366-க்குச் சமம். இதுவே தமிழகத்தில் 1975—76- ல் ரூ.851 ஆகவும் அதன் பண மதிப்பு 1961 ஆம் ஆண்டின்படி ரூ.338 ஆகவும் இருந்தது. தமிழக மக்களுள் ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே 52.5 சதவிகிதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி (National sample survey) ஒரு நபருக்குச் சராசரிச் செலவு மாதம் ரூ. 33 ஆக இருந்தது. நகரகத் தொழிலாளர்களில் 35.5 சதவிகிதத்திலும் ஊரகத் தொழிலாளர்களில் 64.5 சதவிகிதத்தினரும் ஏழ்மைக் கோட்டிற்குக்கீழ் வாழ்க்கை நடத்தினர்.

அட்டவணை 15- ல் இந்தியாவில் ஊரகங்களில் வாழும் மக்களின் மாதச் செலவுப் பட்டியலும் எத்தனை சதவிகித மக்கள் எந்தெந்த அளவு செலவு செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய ஊரக மக்களிடையே தேசிய மாதிரிக் கணக் கெடுப்பின்படி 70 சதவிகிதத்தினர் ஏழ்மைக் கோட்டிற்குக் குறை வாகவே செலவு செய்து பரம ஏழைகளாக வாழ்ந்து வருகின்றனர் என்பது தெரிய வருகிறது.

அட்டவணை—15

மாதச் செலவு அடிப்படையில் இந்திய ஊரிய மக்கள் விகிதம்

எண்	சராசரி தலைக்கு மாதச் செலவு ரூபாயில்	மக்கள் (மில்லியனில்)	சதவிகிதம்	கூட்டுச் சதவிகிதம்
1	11.83	20.6	5	5
2	16.19	20.6	5	10
3	20.25	41.3	10	20
4	24.40	41.3	10	30
5	30.49	82.6	20	50
6	40.02	82.6	20	70
7	49.96	41.3	10	80
8	60.72	82.6	20	100
9	90.63			

இந்தியாவில் மேலும் வருமானப் பங்கீட்டை நோக்கினால் அதிக வருமானப் பிரிவைச் சேர்ந்த 20 சதவிகித மக்கள் மொத்த வருமானத்தில் 50 சதவிகிதத்தைத் தங்களுடையதாக்கிக்கொண்டு மீதம் 50 சதவிகித வருமானத்தை மற்றைய 80 சதவிகித மக்களை எடுத்துக்கொள்ளச் சொல்லும் நிலை காணப்படுகிறது. இங்கும் அடி மட்டத்திலுள்ள 20 சதவிகித மக்களுக்கு நாட்டு வருமானத்தில் 5 சதவிகிதம்தான் கிடைக்கிறது. இதேபோல் விளைநிலம் பங்கீட்டிலும் ஐந்தில் ஒரு நிலக்கிழார் ஐம்பது சதவிகிதம் நிலத்தை அனுபவிக்கும் நிலை காணப்படுகிறது. இந்த இருபது சதவிகித வேளாண்மையினரே அரசாங்கமும் வங்கிகளும் கொடுக்கும் நிலக் கடன்களின் பெரும் பகுதியைப் பெற்றுப் பயன் பெறுகிறார்கள். இதன் விளைவாக 1961-ல் 95.5 மில்லியனாக இருந்த வேளாண்மையினரின் எண்ணிக்கை1971-ல் 78.7 மில்லியனாகக் குறைந்துவிட்டது. கிட்டத்தட்ட 20 சதவிகித வேளாண்மையினர் தங்கள் நிலங்களை விற்றுவிட்டு உழவர் கூலிகளாகவோ அல்லது பொதுத் தொழிலாளிகளாகவோ மாறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எனவே வருமானம் குறைவாக உள்ள ஏழை நாடாகிய இந்தியாவில் ஏழ்மையில் வாழும் ஏழைகளின் எண்ணிக்கை அதிக மாகிக்கொண்டு செல்வதோடு நடுத்தர மக்கள் ஏழைகளாக்கப் படும் அதிசயமும் நடைபெறுகிறது. இந் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் பலன் பரவலாக எல்லோருக்கும் கிடைக்காமல் வசதியுடைய சிலரால் அனுபவிக்கப்படுவதால் பணக்காரர்கள் மேலும் பணம் சேர்ப்பதற்கும் ஏழைகள் மேலும் ஏழ்மை நிலையை அடையவும் ஏற்ற வகையில் வருமானப் பங்கீடு அமைந்துள்ளது. நாளுக்கு நாள் ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்கும் உள்ள வித்தியாசம் அதிகமாகிக்கொண்டே செல்லும் நிலையைக் காண்கிறோம்.

அறியாமை (Illiteracy)

அறியாமை என்பது பொதுவாக எழுதப்படிக்கத் தெரியாதவர்களைக் குறிக்கும். இந்தியாவில் 1901ஆம் ஆண்டில் இருபதுக்குப் பத்தொன்பது பேர் கற்றறிவற்றவர்களாக இருந்தனர். இவர்கள் விகிதம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. 1971 ஆம் ஆண்டில் இதே இருபது பேரில் பதினான்கு பேர் கற்றறியாதவர்களாக இருந்தனர். தமிழ்நாட்டில் இருபதில் பன்னிரண்டு பேர் கற்றறியாதவர். ஆண்களில் இவ்விதம் சிறிது குறைவாகவும் பெண்களில் சிறிது அதிகமாகவும் காணப்படுகிறது.

அறியாமைக்கும் ஏழ்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏழையாய் இருப்பதால் கல்வி அறிவு பெற வாய்ப்பில்லை. கல்வி அறிவு பெறாததால் அதிக வருமானமின்றியும் உலகறிவு வளராமலும் இருக்கிறான்; இதனால் ஏழையாகிறான் என்று ஒரு வட்டமாகச் சுற்றிச் சுற்றி வரும் நிலையைக் காண்கிறோம்.

அறியாமையால் மூட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் நம் மக்களிடையே தங்கிவிடுகின்றன. இந்திய மக்களாட்சி முறை செவ்வனவே இயங்க, அரசியல் உணர்வை வளர்க்கவும் அறியாமை யைப் போக்குதலும் அவசியம். மேலும் நவீன வேளாண்மை வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அறிவுடைய மக்கள் அவசியம் தேவை என்ற நிலையைக் காண்கிறோம். அறியாமையை அகற்றும் பணி மிக விரைவாக, புரட்சிகரமாக நடைபெற வேண்டியது அவசியம்.

வினாக்கள்

1. சமூகப் பிரச்சனை என்றால் என்ன?
2. மொழிப் பிரச்சனை ஏன் ஏற்பட்டது?
3. ஏழ்மை என்றால் என்ன?

13. பிற்படுத்தப்பட்டோர் பிரச்சனைகள்

வருணாசிரம தருமத்தைக் கடைபிடித்து வந்த இந்து சமூ அமைப்பில் மக்களின் பல்வேறு உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டும் ஒரு வரையறைக்குள் சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டும், சமூகக் கட்டுக்கோப்பு பாதுகாக்கப்பட்டும் வந்தது. பழங்குடி மக்கள் என்றுமே இந்து சமய கட்டுப்பாட்டுக்குள் வந்ததில்லை. ஆங்காங்கு இப்பழங்குடி மக்கள் சமவெளி மக்களோடு வாணிப உறவு வைத்திருந்தனரேயன்றி சமூகக் கலாச்சார வாழ்வில் சுதந்திரமாகத் தனித்தியங்கி வந்தனர்.

பிற்காலத்தில் ஒருசில மேல் சாதியினரின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் வசதிகளை அதிகரித்துக்கொள்ளவும் கீழ்ச்சாதியினர்களின்மேல் கட்டுப்பாடுகளை அதிகரித்தும், மீறியவர்களைத் தருமத்தின் பெயரால் தண்டித்தும் சாதியை விட்டு வெளியேற்றியும், மற்றவர்கள் அவர்களுக்குத் துணை போகாதவாறு தடுத்தும் சாதி அமைப்பைப் பாதுகாத்து வந்தனர்.

இந்தச் சாதிச் சமய அமைப்பில் அடிமட்டத்தில் இருந்த மக்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கண்டு காந்தியடிகளும் மற்றும் சமூகச் சீர்த்திருத்த வாதிகளும் கொதித்தெழுந்தனர். மனிதர்கள் என்ற நிலையில் அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று போராடினர். காந்தியடிகள் இவர்களை இறைவனின் பிள்ளைகள் என்ற பொருள்படும்படி "அரிசனங்கள்" என்று அழைத்தார். இவர்களின் அடிப்படை உரிமைப் பாதுகாப்பையும் சுதந்திரப் போராட்டக் குறிக்கோள்களில் ஒன்றாக்கினார்.

சுதந்திரம் பெறும் முன்பேயே தாழ்த்தப்பட்டவர்கள் கோவில்களில் சென்று வழிபட வகை செய்யும் ஆலயப் பிரவேசம் என்ற போராட்டத்தைத் தந்தை பெரியார் தென்னகத்தில் முன்னணியில் நின்று நடத்தி வெற்றியும் கண்டார். சுதந்திர இந்தியாவில் இவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு இவர்கள் மற்றவர்களோடு இணையாகப் போட்டிபோட முடியாது என்பதால் சிறப்புச்சலுகைகள் பலவற்றிற்கும் டாக்டர் அம்பேத்காரின் முயற்சியால் அரசியலமைப்புச் சட்டத்தில் சரத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நான்காவது பகுதியில் 46ஆவது சரத்தில் அரசாங்கம் நலிவுற்ற மக்களின் பொருளாதாரத்தையும் கல்வியையும் தனிச் சிரத்தையோடு அபிவிருத்தி செய்யும். குறிப்பாக ஷெட்யூல்டு சாதியையும் (Scheduled caste), ஷெட்யூல்டு பழங்குடி மக்களையும் (Scheduled Tribe) சமுதாயக் கொடுமைகளிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் என்று கூறுகிறது. அரசியல் சட்டத்தின் 16 ஆவது பகுதியில் ஷெட்யூல்டு சாதிகளுக்கும் ஷெட்யூல்டு பழங்குடியினருக்கும் ஆங்கிலோ இந்தியர்களுக்கும் மாநிலச் சட்ட மன்றங்களிலும் நாடாளுமன்ற அவையிலும் தனித்தொகுதிகள் ஒதுக்க வகைசெய்கிறது. 338ஆவது ஷரத்து குடியாட்சித் தலைவர் இப் பாதுகாப்புகள் செயல்படச் செய்யத் தனி அதிகாரியை நியமித்துக் கண்காணிக்க வகை செய்கிறது. 339 ஆவது ஷரத்து அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டுகள் கழித்து குடியாட்சித் தலைவர் தனி விசாரணைக் குழுவை நியமித்துப் பாதுகாப்பு செயல்படும் விதம்பற்றி அறிக்கை கேட்கலாம். 340 ஆவது ஷரத்து பிற்படுத்தப்பட்ட (Backward classes) மக்களைப் பற்றியது. இதன்படி குடியாட்சித் தலைவர் ஓர் ஆய்வுக் குழுவை நியமித்து சமூக நிலையிலும் கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்தெந்தப் பகுதிகளில் எவ்விதம் இன்னல்படுகிறார்கள் என்பதைத் தெரிந்தும் அவற்றைப் போக்கி அவர்கள் நிலை மேம்பட என்னென்ன செய்யவேண்டும் என்றும் அதற்காக மைய அரசும் மாநில அரசுகளும் எவ்வளவு பொருளுதவி செய்யவேண்டும் என்ற ஆலோசனைகளைக் கூறும் அறிக்கை தயார் செய்து கொடுக்கவும் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யவும் வகை செய்கிறது.

இச்சட்டத்தின்கீழ் 1953 - ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு சமூக நிலையிலும் கல்வி நிலையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைக் கண்டுகொள்வதற்குக் கீழுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியது.

1. ஆங்கில அரசால் குற்றப் பரம்பரையினர் (Criminal tribes) என்று பிரித்து வைக்கப்பட்டவர்களை முன்னாள் குற்றப் பரம்பரை என்றும், குற்றப் பரம்பரையில் இருந்து பிரிக்கப்பட்டவர்கள் என்றும் பகுத்தது.

2. ஒரே இடத்தில் தங்காத சமுதாயத்தில் எந்த மதிப்புமில்லாத பிச்சை எடுத்தல், வித்தை காட்டுதல், நாட்டியமாடுதல் போன்ற தொழில்களைச் செய்யும் நாடோடிகள்.

3. உழவுசெய்யும் கூலிகளாகவும் சிறு வேளாண்மையினர்களாகவும் இருக்கும் சாதியினர்.

4. குத்தகைக்கு வேளாண்மைசெய்யும், நிரந்தரமில்லாத குத்தகை வேளாண்மையினரை அதிகமாகக் கொண்ட சாதியினர்.

5. சிறு வேளாண்மையினர்களையும் பொருளாதார ஆதாய மற்ற நிலச்சுவான்களையும் கொண்ட சாதியினர்.

6. தொன்றுதொட்டு வரும் தொழில் வல்லுனர்கள் தொழில் நலிந்துள்ள நிலையிலுள்ளோரையும் நிரந்தரத் தொழில் இல்லாத சாதியினர்.

7. மிக அதிகமாகக் கல்வியறிவு பெறாத, அரசாங்க வேலைகளில் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெறாத சாதியினர்.

8. முஸ்லிம்கள், கிறித்துவர், சீக்கியர்போன்ற சமயப்பிரிவுகளில் சமுதாய நிலையிலும் கல்வி நிலையிலும் பின்தங்கிய வகுப்பினர்.

9. சமுதாய அமைப்பில் அடித்தளத்தில் இருக்கும் சாதியினர் ஆகியவர்களை வரையறுத்துக் கூறியது.

இவ்வழிமுறைகளின்படி மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியல்கள் தயார் செய்யப் பட்டன. இந்தியாவில் 1961ஆம் ஆண்டு 55.3 மில்லியன் ஷெட்யூல்டு வகுப்பினர் 818 சாதிகளில் இருந்தனர். 52.5 மில்லியன் பழங்குடியினர் 304 பழங்குடிமக்கள் பிரிவுகளில் இருந்தனர். முன்னாள் குற்றப்பிரிவைச் சேர்ந்த 4 மில்லியன் மக்கள் 17 குற்றப் பிரிவுச் சாதிகளில் இருந்தனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 120 மில்லியன் மக்கள் 1426 சாதியினர் இருந்தனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் எண்ணிக்கையும் சாதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

ஷெட்யூல்டு பழங்குடியினர் (Scheduled Tribes)

இந்தியாவில் 1971ஆம் ஆண்டில் 3,80,15,162 ஷெட்யூல்டு பழங்குடியினர் இருந்தனர். இவர்கள் 6.94 சதவிகிதமாகும். தமிழகத்தில் 0.76 சதவிகிதமே ஷெட்யூல்டு பழங்குடியினர் இருக்கின்றனர்.

தமிழகத்தில் நீலகிரி, சேலம், வடஆற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் விகிதம் அதிகமாகக் காணப்படுகிறது. பழங்குடியினர் சமவெளி மக்களோடு பொருளாதாரத் தொடர்பு ஏற்படுத்திக்

அட்டவணை—16

தமிழகத்தில் அரிசனங்கள், ஆதிவாசிகள் விகிதம் (1971)

எண்	மாவட்டம்	சதவிகிதம் மொத்த மக்கள்தொகை	
		அரிசனங்கள்	ஆதிவாசிகள்
1	சென்னை	10.49	0.04
2	செங்கல்பட்டு	26.28	0.94
3	வட ஆற்காடு	19.33	1.88
4	தென் ஆற்காடு	25.92	0.39
5	சேலம்	16.05	3.15
6	தர்மபுரி	13.58	1.80
7	கோயமுத்தூர்	15.74	0.60
8	நீலகிரி	18.76	4.02
9	மதுரை	14.93	0.17
10	திருச்சிராப்பள்ளி	18.18	0.46
11	புதுக்கோட்டை	15.97	0.03
12	தஞ்சாவூர்	22.76	0.03
13	ராமநாதபுரம்	16.07	0.04
14	திருநெல்வேலி	15.78	0.05
15	கன்னியாகுமரி	3.89	0.23
	தமிழ்நாடு	17.76	0.76
	இந்தியா	14.60	6.94

கொண்டுள்ளனர். இத்தொடர்பால் அவர்களில் பலரின் அடிப்படைப் பொருளாதாரமே ஆட்டம் கண்டு அவர்கள் சாதாரணக் கூலிக்காரர்களாக வேலை பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் வணிகர்களும் இடைத் தரகர்களும் அவர்களிடம் பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியும் அவர்களின் தேவைகளைக் கொள்ளை விலைக்கு விற்றும் அவர்களின் அறியாமையைப் பயன்படுத்திப் பல மடங்கு லாபம் சம்பாதிக்கின்றனர். சிலர் அவர்களுக்குக் கடன் கொடுத்து வட்டியின் பெயரால் அவர்களைச் சுரண்டித் தின்னும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர்.

சமூக நிலையில் இந்துக்களோடு தொடர்பு ஏற்பட்டதால் சில பழங்குடியினர்களிடையே பெண் விலை அதிகமாதலும் பெண்களைக் கடத்திச் செல்லும் பழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. சிலர் குழந்தைத் திருமண முறையையும் கடைபிடிக்க முற்பட்டுள்ளனர். திருமணத்திற்கு முன் உடலுறவும் பல பெண்களோடு உடலுறவும் அதிகமாக இப்பொழுது பழங்குடியினரிடையே ஏற்பட்டதோடல்லாமல் திருமண முறிவும் பாலின நோய்களும் வந்திருக்கின்றன.

கிறித்துவ சமயவாதிகளின் ஊடுறுவலால் சில பழங்குடியினர் சமயம் மாறியும் சிலர் இந்து சமயக் கோட்பாடுகளைக் கடைபிடித்தும் வருகின்றனர். இதனால் பழங்குடிகளிடையே தம் சமய நம்பிக்கை குறைந்தும் சமூகக் கட்டுப்பாடு சிதைந்தும் போக வழி ஏற்பட்டிருக்கிறது.

நமது அரசாங்கம் இவர்களைப் பாதுகாக்கவும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்யவும் தேசிய வாழ்க்கை நெறியில் ஈடுபடச் செய்யவும் பல திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. பழங்குடி மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் பழங்குடிச் சமூக வளர்ச்சித் திட்டங்களை (Tribal Development blocks) ஏற்படுத்தி அவர்களுக்குத் தனிக் கல்வி நிலையங்கள், மருத்துவ வசதிகள், பொருளாதார திட்டங்கள் சமூகக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பு, கலை, பண்பாடுகளைப் பாதுகாக்க ஏற்பாடு போன்றவற்றைச் செய்துவருகின்றனர். ஆந்திர மாநிலத்தில் இவர்களைக் கிரிசனங்கள் என்று அழைத்துப் பல முன்னேற்றத் திட்டங்களும் செயல்படுத்துகின்றனர். தமிழகத்தில் கல்வராயன் மலைப்பகுதியிலும் தீவிரச் செயல் திட்டம் ஏற்படுத்திப் பழங்குடி மக்கள் முன்னேற்றத்திற்குத் தமிழக அரசு பாடுபடுகிறது.

ஷெட்யூல்டு வகுப்பினர் (Scheduled Caste)

ஷெட்யூல்டு வகுப்பினர் பரவலாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றார்கள். இந்திய மக்கள்தொகையில் 1971 ஆம் ஆண்டு 14.6 சதவிகிதம் ஷெட்யூல்டு வகுப்பினர் இருந்தனர். இதே விகிதம் தமிழகத்தில் 17.76 ஆக அமைந்தது. செங்கல்பட்டு மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் முறையே 26.28, 25.92, 22.76 என்ற விகிதத்தில் மிக அதிகமாக ஷெட்யூல்டு வகுப்பினர் இருக்கின்றனர். இவர்களின் விகிதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகக் குறைவாக (3.89) உள்ளது.

ஷெட்யூல்டு வகுப்பினர் எங்கும் பரவியிருப்பதாலும் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளதாலும் சமுதாயத்தில் பல இன்னல்கள் அனுபவிக்கின்றனர். 1955 ஆம் ஆண்டு இந்நாட்டில் தீண்டாமைத் தடுப்புக் குற்றச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி தீண்டாமையைக் கடைபிடிப்பவர்கள் குற்றவியல் பிரிவின்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தீண்டாமை முன்பு நம் மண்ணில் பல காலமாக இருந்து வந்ததாலும் மக்கள் மனநிலையிலும் நன்கு ஆழப் பதிந்துவிட்டதாலும் இங்குமங்குமாக ஒருசிலர் இக் குற்றம் புரிகிற நிலை இருக்கிறது.

ஷெட்யூல்டு வகுப்பினர் பொருளாதாரச் சிக்கல்கள் மற்றைய நலிந்த சமூகங்களில் உள்ளதைப் போன்றதே. ஷெட்யூல்டு வகுப்பினர் முன்னேற்றத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள், (1) கல்வி, (2) பொருளாதார முன்னேற்றம், (3) சுகாதார வசதிகள், (4) வீட்டு வசதிகள் போன்றவையே.

கல்வி: ஷெட்யூல்டு வகுப்பினருக்குக் கல்வி புகட்டுதல் மிகமிக முக்கியம். கல்வியின் மூலம் நிலமில்லாத அவர்கள் வேலை வாய்ப்புகளை அதிகரித்துக்கொள்ள முடியும். கல்வியின் மூலம் அரசாங்க அலுவல்களில் அவர்களுக்காக ஒதுக்கி வைத்திருக்கும் வேலைவாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேற உபயோகமாக இருக்கும். இலவசக் கல்வி, உதவிப்பணம், புத்தகம், நோட்டு மற்றும் உபகருவிகள் வாங்க மானியம் போன்றவை கொடுக்கப்படுகின்றன. போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்வதற்காகச் சிறப்புப் பயிற்சி நிலையங்கள் நடத்தப் படுகின்றன.

பொருளாதார முன்னேற்றம் : நிலங்கள் வழங்குவதில் ஷெட்யூல்டு வகுப்பினருக்குத் தனிச் சலுகை கொடுக்கப்படுகிறது. வேளாண்மையினராக விளங்க மானிய உதவியும், பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. பொருள் உதவியும், கைத்தொழில்களிலும், சிறு தொழில்களிலும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. பலதரப்பட்ட கைவேலைகளிலும் தொழில்களிலும் மைய அரசு ஷெட்யூல்டு வகுப்பினருக்குச் சிறப்புப் பயிற்சியும் உற்பத்தி மையங்களும் அமைத்துக் கொடுத்து உதவுகின்றது.

மைய மாநில திட்டங்களில் அரிசன நலத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப்படி வசதிகள் செய்துகொடுக்கின்றனர். இவையல்லாது மைய அரசின் உள்துறை அமைச்சகம் சில சட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சுத்த மற்ற தொழில் (Unclean occupation) களில் ஈடுபட்டிருக்கும் அரிசனங்களின் வசதிக்காக மலம் தூக்கும் வேலையை ஒழித்தது. தோட்டிகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க உதவித்தொகை கொடுக்கிறது. சுத்தமற்ற தொழில் செய்யும் ஷெட்யூல்டு வகுப்பினருக்கு இலவச வீட்டு மனை வழங்குகிறது. நிலமில்லாதோருக்கும் நிலப் பட்டா வழங்குகிறது. மேலும் மைய அரசு அரிசன நலனுக்காகப் பாடுபடும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் உதவுகிறது.

முன்னாள் குற்றப் பரம்பரையினர் (Ex-Criminal Tribes)

பரம்பரையாகத் திருடுதல், கொள்ளையிடுதல் போன்ற குற்றங்களையே செய்து வாழ்வை அமைத்துக்கொண்டு வாழ்ந்த குடியினரை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குற்றப் பரம்பரையினராக அறிவித்தனர். அவர்களின் கொள்ளை, திருட்டுப் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு அவர்களைப் பதிவுசெய்து கண்காணித்து வந்தது.

இவர்களில் ஒவ்வொரு உட்பிரிவினரும் ஒவ்வொரு விதமான குற்றங்கள் புரிவதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் பார்த்துவந்த தொழில்களுக்கு மாறி வரும் பொருளாதார நிலையில் அதிக வாய்ப்பு இல்லாமையும், தொழிலில் வருமானம் குடும்பம் நடத்தப் போதுமானதாக இல்லாமையும், தொழிலே இல்லாமல் இருக்கும் நிலைமை ஏற்படுவதாலும் இவர்கள் குற்றங்கள் புரியலாயினர். இவர்களை ஓர் இடத்தில் நிரந்தரமாகத் தங்கச் செய்து, மாற்று வேலைகளையும் கொடுத்துச் சீர்திருத்த அரசாங்கம் முயற்சி செய்தது.

இவர்களில் நாடோடிக் கூட்டங்களும் சிலகாலம் நாடோடியாகத் திரிந்தும் சில காலம் ஒரே இடத்தில் இருக்கும் கூட்டங்களும்

நிலையாக ஒரே இடத்தில் தங்கும் கூட்டங்களும் ஆக மூன்று வகையினர் இருந்தனர். இவர்களைச் சீர்த்திருத்தி பொருளாதார புனரமைப்புச் செய்தல்மூலம் திருந்தினர். மேலும் இவர்கள் சந்ததியினரைக் கல்விக் கூடங்களில் சேர்த்து கல்வி கற்கச் செய்து வேறு தொழில்களில் ஈடுபடச் செய்வதின் மூலம் அவர்களின் பெற்றோர் தொழில்களிலிருந்து பிரிக்கும் முயற்சி நடைபெறுகிறது. வேலைவாய்ப்புகள் கொடுப்பதன் மூலமும் ஒரே இடத்தில் குடியிருக்கச் செய்வதன் மூலமும் இவர்களைச் சீர்திருத்திவிடலாம் என்று வல்லுநர்கள் முயற்சி செய்து நல்ல பலனும் ஏற்பட்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்காக அவர்களின் பொருளாதார கலாச்சார சமுதாய, அரசியல் புறக்கணிப்புகளை நீக்கி முன்னேற்றம் ஏற்படுவதற்கு ஏற்ற ஒருங்கிணைந்த முன்னேற்றத் திட்டம் தீட்டி அரசாங்கம் செயல்படுகிறது.

பொருளாதார முன்னேற்றம், சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், கல்விச் சலுகைகளின் மூலம் கல்வியில் அபிவிருத்தி, மதிப்பும் பொறுப்பும் மிக்க செல்வாக்கான பதவிகளில் அவர்களுக்கு உரிய இடம் கொடுத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று மைய அரசு அமைத்த குழு ஆலோசனை கூறியது. மேலும், கல்விக்கு இலவசப் படிப்பு, உபகாரச் சம்பளம், தங்கிப் படிக்க விடுதிகள், படிப்புக்கு இடம் ஒதுக்குதல், அரசு அலுவலில் இட ஒதுக்கல், குடிசைத்தொழில், கைத்தொழில் போன்றவற்றை ஊக்குவித்து முழு அளவு வேலை வாய்ப்புக் கொடுத்தல், குடியிருப்பு வசதிகள் செய்தல், வேளாண்மையில் குறைந்த கூலி, குத்தகைதாரர் பாதுகாப்பு, கடன் வசதி, வேளாண்மை பொருள்களுக்குத் தகுந்த விற்பனைக் கூடங்கள், லேவாதேவிக்காரர்களின் கொடுமையிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை ஆலோசனையாகக் கூறினர்.

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அமைச்சு செயலால் உயர்கல்வியில், குறிப்பாகத் தொழில்நுட்பம், பொறியியல், வேளாண்மை, மருத்துவம், கால்நடை மருத்துவம், ஆசிரியப் பயிற்சி போன்று போட்டி அதிகமுள்ள கல்வித் துறைகளில் அரிசனங்களுக்கும் பழங்குடிகளுக்கும் 18 சதவிகிதம் இடம் ஒதுக்கியிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதம் இடம் ஒதுக்கி மீதம் உள்ள 49 சதவிகிதம் இடத்தையும் பொதுவாக்கி எல்லோரும் போட்டியிட வாய்ப்புக்

கொடுத்தது. மிக அண்மையில் மாநில அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகிதம் இடம் ஒதுக்கியிருக்கிறது.

வினாக்கள்

1. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட பெரியார்கள் யாவர்?
2. ஷெடியூல்டு வகுப்பினர் சிக்கல்கள் மறைய அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?
3. குற்றப் பரம்பரையினர் என்றால் என்ன?
4. அரசாங்கம் பிற்பட்ட இன மக்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்குகிறது?

14. இந்தியாவில் பெண்களின் நிலை

பெண்மையைப் போற்றிப் பாராட்டி பெண்மைக்குத் தனிச் சிறப்பிடம் கொடுத்தது இந்திய நாடு. பெண் தெய்வங்களுக்குத் தனிச் சிறப்புக் கொடுத்து, கோயில் எழுப்பி வழிபட்டு வருகின்றனர் இந்நாட்டு மக்கள். உலக சமயங்களிடையே பெண்மைக்குத் தனிச் சிறப்புக் கொடுத்து, சக்தியின் உருவாய்க் கருதி வழிபட்டு வருவது இந்து சமயம்.

இந்தியரும் தம் சமுதாய அமைப்பிலும் பண்பாட்டிலும் பெண்மைக்குத் தனிச் சிறப்பிடம் கொடுத்திருந்தனர். பூமியைத் தாயாகவும் நாட்டைத் தாய்நாடாகவும் கருதும் பழக்கம் இருந்தது. சரித்திர ஓட்டத்தோடு பெண்களின் நிலையும் சிக்கிச் சுழன்றது. முஸ்லிம்களின் வருகைக்குப் பிறகும், மேலும் இந்து சமயத்தில் விரும்பத்தகாத பல கட்டுப்பாடுகள் பின்னர் கொண்டு வரப்பட்டதாலும் பெண்களின் நிலை பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மிகவும் பின்தங்கியிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் பின் சுதந்திர இந்தியாவிலும் படிப்படியாகப் பெண்கள் நிலைமை முன்னேறப் பல சட்டதிட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

படுதா முறை (purdah)

படுதா என்பது அந்நியர் பார்வையிலிருந்து பெண்களை மறைத்து வைக்கும் முறையைக் குறிக்கும். பெண்களை மானிட இனத்தின் அங்கம் என்று கருதாது தனிப்பட்ட மனிதனின் சொத்து என்று மக்கள் கருதிய காலத்தில் அச்சொத்தைப் பாது காக்க வேண்டியிருந்தது. நாம் நம் சொத்தின் மதிப்பிற்கும் அளவுக்கும் ஏற்பப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்கிறோம் அல்லவா? சிறு பொருள்களாக இருந்தால் பெட்டிகளில் பூட்டி வைக்கிறோம். ஏனைய நகரும் பொருள்களை அடைத்து வைக்கிறோம். சிலவற்றைச் சுற்றி வேலி அமைத்துப் பாது காக்கிறோம். இதுபோன்றே தனி மனிதனின் சொத்தாகிவிட்ட பெண்ணைக் கூடுமானவரை வீட்டில் அடைத்து வைத்திருந்தனர். பெண்களின் வாழ்க்கையும் பொழுதுபோக்கும் பெரும்பாலும் வீட்டின் பின் பகுதியில் நான்கு சுவர்களுக்குள்ளேயே கழிந்து வந்தது. பெண்கள் ஜடப்பொருளாக இல்லாமல் உயிருள்ள

நகரும் பொருளாக இருப்பதாலும் சமூகக் கலாச்சாரப் பண்புகள் காரணமாக இன்றியமையாத சில முக்கிய காரணங்களுக்காக வெளியிலும் செல்லவேண்டியதாய் இருக்கிறது. அவ்விதம் செல்லுங்கால் பிற ஆடவர் கண்களில் இருந்து தங்களை மறைத்துக்கொள்வதற்காகவும் அந்நியர்கள் பார்வையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்காகவும் தங்கள் முகத்தையும் சில நேரங்களில் தலை முதல் கால்வரை எல்லா அங்கங்களையும் மறைக்கும் விதத்தில் திரையைப் போர்த்திச் செல்லுவர்.

இந்தியாவில் அந்நியர் படையெடுப்பின்போது அவர்கள் இந்தியாவின்திரண்டசெல்வங்களைத்தங்கள்நாடுகளுக்குஎடுத்துச் சென்றனர். செல்வம் திரட்டுவதற்காகவே படையெடுக்கும் பழக்கம் பல காலம் இருந்து வந்தது. அக்காலங்களில் போர் வீரர்கள் அழகிய பெண்களையும் கவர்ந்து செல்வதுண்டு. கொள்ளையர்களிடமிருந்து தங்களை மறைத்துக் கொள்வதற்காக வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்த பெண்கள் வெளியில் செல்ல நேரிட்டால் திரை அணிந்து சென்றனர்.

பின்பு வந்த முஸ்லிம்கள் ஆட்சி காலத்தில் முஸ்லிம் பெண்களின் கலாச்சாரப் பண்பில் திரையணிதல் ஓர் அங்கமாக இருந்தது. இந்துக்களும் திரையணியும் பண்பைக் கடை பிடிக்க முற்பட்டனர். எனவே இந்துக்களில் உயர்சாதிப் பெண் களிடையே இது ஒரு பழக்கமாக நிலைத்து விட்டது. படுதாப் பெண்களைத் தனிமைப் படுத்தி ஒதுக்கி வைக்கும் கொள்கையின் சின்னமாகக் கருதும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு தனித்து வாழ்ந்த பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளி னின்றும் தங்களைப் பாதுகாக்கும் சக்தியற்றவர்களானார்கள்; வெளியுலகத்தொடர்பு குறைந்ததால் பண்பாட்டு முன்னேற்றமும் நாகரிக வளர்ச்சியும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இவர்கள் பழமைப் பண்பிலேயே இருந்து வந்தனர். இதன் காரணமாக இவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பு மிகவும் குறைந்தது. இவர்கள் புதிய கருத்துகளைத் தெரிந்து செயல்பட முடியாத காரணத் தால் பிற்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தனர்.

சமுதாயச் சீர்திருத்த வாதிகள் படுதா பழமையின் சின்னம், அடிமைத்தனத்தின் அச்சாணி, பெண்கள் முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை என்றெல்லாம் கருதினர். பெண்களைப் படுதாவை விட்டு புதிய சமூக அமைப்புக்கு வருமாறு அறைகூவல்இட்டனர். எனவே படிப்படியாகப் படுதா முறை மறைந்து வருகிறது.

வரதட்சணை (Dowry)

வரதட்சணை என்பது ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுவதற்காக மாப்பிள்ளைக்குக் (அவரைச் சார்ந்தவர் களுக்கு) கொடுக்கப்படும் பணம்.

ஒரு காலத்தில் பெண்களை மணந்துகொள்ள விரும்பும் ஆண்கள் பெண்களின் பெற்றோருக்குப் பணம் கொடுத்துச் சம்மதம் பெறும் நிலை இருந்தது. இதை மணப்பெண் விலை (Bride price) என்று இன்றும் பழங்குடி மக்கள் வசூலிப்பதைக் காண்கிறோம். இவ்வாறு பணம் கொடுத்து வாங்க வசதியற்ற ஆண்கள் சிலர் சேர்ந்து ஒரு பெண்ணை வாங்கி மனைவியாக்கிக் கொள்ளும் பழக்கமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்றும் சில பழங்குடிகளிடையே பல கணவரை மணத்தல் (Polyandry) என்று பழக்கத்தில் இருக்கிறது. இந்து சமயத்தில் கூட கன்னிப் பெண்ணைத் தகப்பன் தானமாகக் கொடுக்கும்பொழுது தானமாகப் பெறும் ஆண்பிள்ளை அதற்குப் பதிலாகச் சில மாடு களையோ அன்றி வேறு செல்வங்களையோ கொடுக்க வேண்டும் என்ற பழக்கம் உண்டு.

பெண்கள் பட்டியில் அடைக்கப்பட்டுத் தங்கள் உரிமைகளை யெல்லாம் இழந்து ஆண்களின் கைப்பாவைகளாக ஆட்டுவிக்கப் பட்டனர். பெண்களின் விருப்பமும் எண்ணமும் கேட்கப்படாமல்) பெற்றோர் விரும்பியவர்களுக்குத் (ஆடுமாடுகளை விற்பதுபோல் திருமணம் செய்து கொடுக்கப்பட்டனர். காலம் செல்லச்செல்ல பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டானோ என்ற பயத்தாலும் திருமணம் செய்துவைத்தல் என்ற தங்கள் கடமையை விரைவில் முடிக்க வேண்டும் என்ற அவசரத்தாலும் பெண்களுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்காவிட்டால் எங்கே நடத்தை கெட்டுவிடுவார்களோ என்ற அச்சத்திலும் பெண்களின் திருமணத்தைப் பெரிய சுமையாகக் கருதினர். இச்சுமையை எவ்வளவு விரைவில் தள்ளிவிட முடியுமோ அவ்வளவு விரைவில் தள்ளிவிட முயற்சித்தனர். இதன்விளைவாகப் பெண்களின் திருமண வயது வேகமாகக் குறைந்துகொண்டே வந்து பச்சிளங் குழந்தைகளுக்கே திருமணம் முடிக்கும் அவலநிலை இந்நாட்டில் இருந்தது. இதைத் தடுக்கவே சாரதாச் சட்டம் என்று அழைக்கப்படும் குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம் (Child Marriage Restraint Act, 1929) கொண்டுவரப்பட்டது. இதன்படி 15 வயதுக்குக் குறைந்த பெண்களுக்கும் 18 வயதுக்குக் குறைந்த ஆண்களுக்கும் திருமணம் செய்வது தடை செய்யப் பட்டது. தற்போது பெண்களுக்கு 18 வயது என்றும் ஆண்களுக்கு 21 வயது என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திருமணச் சந்தையில் பெண்களைப் பெற்றவர்கள் தீவிரமாக மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டிருக்கும் காலத்தில் மாப்பிள்ளைகளுக்குக் கிராக்கி அதிகமாகவே மாப்பிள்ளைகளின் மதிப்பை வரதட்சணையின் அளவைக்கொண்டு நிர்ணயிக்கும் அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. தற்சமயம் வரதட்சணை என்பது வெறும் பணத்தை மட்டும் குறிக்காமல் அதன் பொருள் விரிந்துள்ளது.

"சொத்தாகவோ பொன்னாகவோ வாழ்க்கைக்குத் தேவையான நவீன ஆடம்பரப் பொருள்களாகவோ திருமணத்தின் முன்போ திருமணத்திற்குப் பின்போ நேரிடையாகவோ மற்றவர்கள் மூலமோ திருமணத்தில் சம்பந்தப்பட்ட ஒரு சாரார் மற்றொரு சாராருக்குக் கொடுக்கும் வெகுமதியாகும்" என்று வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தில் (Dowry Prohibition Act, 1961) வரையறை செய்யப்பட்டுள்ளது.

வரதட்சணை இருப்பதால் அழகற்ற பெண்களும் அதிக வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கல்வி அறிவற்ற பெண்களும் வரதட்சணையால் வசதியான படித்த மணமகனை மணந்துகொள்ள வாய்ப்புப் பெறுகின்றனர். புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்கும் தம்பதிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு வரதட்சணை ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிறது.

வரதட்சணை கொடுக்க முடியாத பெற்றோர் தம் பெண்களுக்குத் திருமணம் முடிக்க முடியாமல் அவதியுறுகிறார்கள். பல பருவ மங்கையர் தமக்குத் திருமணம் நிகழாது என்று விரக்தி அடைந்து தற்கொலை செய்துகொள்கின்றனர். பெண்களின் திருமணமும் வரதட்சணைக்காகத் தள்ளிப்போய் பருவம் கடந்து திருமணம் செய்து அதனால் பல சமூகத் தொல்லைகளை அனுபவிக்கவேண்டி வருகிறது. வரதட்சணைக் கொடுமையால் பல பொருத்தமற்ற திருமணங்களும் நிகழ்கின்றன. பலத்திருமணங்கள் முறிவுறுவதற்கும் வரதட்சணைப் பாக்கியே காரணமாக அமைந்து விடுகிறது. இளம் தம்பதிகளின் மனநிலையை மிகுதியாகப் பாதிக்கிறது. பெண்கள் கற்பு நெறியில் தவறிவிடவும் இது காரணமாக அமைகிறது.

வரதட்சணையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றியும் அது நன்கு செயல்பட முடியவில்லை. பொதுமக்கள் மத்தியில் தலைவர்களும் இலக்கிய மேதைகளும் எடுத்துச் சொல்லியும், கொடுமைகளை விளக்கி விளம்பரங்கள் பல செய்தும், இளைஞர்கள் மத்தியில் இதன் தீமைகளை இளைஞர்களைக் கொண்டே

எடுத்துக் கூறியும் இதற்கு முடிவின்றி இத்தீய வழக்கம் நம் சமுதா யத்தில் இன்றும் நிலைத்து நின்று விட்டது.

மண முறிவும் விதவைகள் மணமும் (Divorce and Widow marriage)

விதவை என்பவர் கட்டிய கணவனை இழந்தவர். கணவனைக் காலன் கொண்டு செல்ல இந்து சமய ஆசாரப்படி மனைவி விதவையாகிறாள். விதவைக்கோலம் பூண்ட மங்கையர் சமுதா யத்தில் பல கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு வாழவேண்டியதா யிருக்கிறது. அவர்கள் மறுமணம் செய்துக்கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. அவர்கள் பல சமூகக் கொடுமைகளுக்கும் ஆளாக வேண்டியதாயிருந்தது.

விதவைகள் மணத்திற்குப் பண்டைய இலக்கியங்களில் ஆதரவு கொடுக்கப் பட்டிருக்கிறது. இதிகாச காலத்தில் விதவைகள் மணத்திற்குத் தடை இல்லை. ரிக்வேதத்தில் விதவை தன் இறந்த கணவனைப் பற்றிய எண்ணத்தை மறந்து புதிதாக வேறு ஒரு ஆடவனை விரும்பி மணந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துக் காணப்படுகிறது. சந்திரகுப்த மௌரிய அரசனே ஒரு விதவையை மணந்துகொண்டதாக வரலாறு கூறுகிறது.

பத்தாவது நூற்றாண்டிற்குப் பிறகுதான் விதவைகள் மணம் செய்துகொள்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. விதவை குடும் பத்திற்குவந்த பீடை என்ற கருத்தும், அவளைப் பார்ப்பதும் பாவம், அவள் நிழல் படுவதும் நல்லதல்ல, அவள் சமூகத்தில் மதிப்பிழந்து ஒரு மூலையில் முடங்கிச் கிடக்க வேண்டும் என்ற கருத்துப் பரவலாகக் கடைபிடிக்கப்பட்டது. மேலும் கணவன் இறந்ததும் கைம்பெண் உடன்கட்டை ஏறித் தன் உயிரை மாய்த் துக்கொள்ளும் கொடிய 'சதி' (Sati) என்னும் பழக்கமும் பின் பற்றப்பட்டது.

இறந்த கணவனின் பிணத்தோடு மனைவியையும் எரிக்கும் கொடிய 'சதி' பழக்கத்தை அக்பர் காலத்தில் தடுக்க முயன்றும் முடியவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் பல சீர்திருத்தவாதி களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து 1829ஆம் ஆண்டு லார்டு வில்லியம் பெண்டிக் (Lord William Bendick) அவர்களால் 'சதி சட்டப்படி தடைசெய்யப்பட்டது. ஆரிய சமாஜம் போன்றசமயச் சீர்திருத்தக்கழகங்களின் ஆதரவாலும் விதவைகள் மணம் சட்டப் படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1955இல் அங்கிகரிக்கப்பட்ட இந்துக் களின் திருமணச் சட்டம் (Hindu Marriage Act) மற்றும் சிறப்புத்

திருமணச் சட்டம் (Spccial Marriage Act) இவைகளில் விதவை மணம் Window marriage சகல வசதிகளோடும் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விதவைகள் மறுமணம் பற்றிய நன்மை தீமைகள் இன்றும் இந்து சமுதாயத்தில் பரவலாகப் பேசப்பட்டுவரும் பிரச்சனை யாகவே இருக்கிறது. கன்னியை ஒரு தடவைதான் தானம் செய்ய தருமத்தில் வழியிருக்கிறது; எனவே மறுமணம் என்பது பொருந் தாக் கருத்து என்பர் சிலர். இந்துப் பெண்களின் உள்ளத் தூய் மையும் உடல் தூய்மையும் மறுமணத்தால் மாசுபட்டுக் கெட்டு விடும் என்று கருதுபவர் மற்றும் சிலர். ஒரே சாதியில் மறுமணம் வாய்ப்புக் குறைந்துபோய் சாதிவிட்டு சாதியில் மறுமணம் செய்யும் நிலை ஏற்படின் சாதித் தூய்மை கெட்டுவிட மறுமணம் வகைசெய்துவிடும் என்று வருந்துபவர்கள் வேறு சிலர். இந்துசமய மணமுறையின் அடிப்படையே ஏழு பிறப்பிற்கும் ஒரே கணவன் மனைவியர். அவர்களின் திருமணம் புனிதமானது. சொர்க்கத்தில் நிச்சியக்கப்படுவது. எனவே இப்பிறப்பில் மறுமணம் செய்து கொள்வதால் இந்துசமய அடிப்படையே ஆட்டம் கண்டுவிடும் என்று கலக்கமடைபவர்களை இந்துக்களில் பரவலாகக் காண்கிறோம்.

விதவை மணத்திற்கு ஆதரவாகச் சீர்திருத்தச் செம்மல்கள் பல காரணங்களைச் சுட்டிக் காட்டுவர். மறுமணத் தடை பெண் களிடையே கற்பொழுக்கக் கேட்டைக் கொண்டுவந்து விடும். இதனால் பருவ வயதில் விதவையான பெண்கள் கெட்டழியவும் சிலர் பரத்தையர்களாக (Prostitutes) மாறவும் வாய்ப்பு உண்டு. சில இந்துப் பெண்கள் சமயம் மாறி மறுமணம் செய்துகொள்ள வும் வாய்ப்புண்டு. மனிதாபிமான உணர்ச்சியோடு நோக்கினால் பெண்மையின் பூரிப்புத் தாய்மையில் சிறப்பெய்துகிறது. எனவே விதவையானாள் என்ற ஒரே காரணத்தால் தாய்மைப் பலன் பெற வழியின்றித் தடுத்தல் தவறு என்றும் கருதுகின்றனர்.

இன்று சட்டத்தில் விதவையர் மறுமணத்திற்கு வழி செய்து விட்டோம். தமிழக அரசு போன்ற அரசுகள் விதவை மணத்தை ஊக்குவிப்பதற்காகப் பரிசுகளும் சிறப்புப் பாராட்டுகளும் பல சலுகைகளும் செய்துகொடுக்க முன்வந்துள்ளன. இந்து விதவை களில் எத்தனை பேர் சட்டத்தின் பலனையும் சீர்த்திருத்த வாதிகளின் முற்போக்குக் கொள்கைகளையும் பின்பற்றுவார்கள் என்பது பொறுத்திருந்து கணிக்க வேண்டிய ஒன்றாகும். இந்துக்களைத் தவிர கிறித்துவர்களிடையேயும் முஸ்லிம் களிடையேயும் விதவை மறுமணம் ஒரு பிரச்சனையாக இல்லாமல்

அன்றாடம் வாழ்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைப் பழக்கமாக இருந்து வருவதால் நாளடைவில் இந்துக்களிடையேயும் இப்பழக்கம் வந்து விடலாம் என்று எதிர்பார்க்கலாம்.

மணமுறிவு (Divorce)

மணமுறிவு என்பது நியாயமான காரணங்களுக்காகத் தம்பதியர் தங்களுக்குள் இருக்கும் திருமண உறவை முறித்துக் கொள்வதற்கு சமூக—சட்ட அடிப்படையில் அங்கீகாரம் கொடுப்பதாகும்.

தம்பதிகள் மனமொத்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து இணைந்த மணவாழ்வு வாழ்வதில் சிக்கல் உண்டாயின் மணமுறிவு ஏற்படுகிறது. இந்துக்களின் திருமண முறையில் மண முறிவுக்கு இடமிருந்ததில்லை. தொழில் துறையில் முன்னேற்ற மடைந்த மேலை நாடுகளில் ஆண் பெண் இருவருக்கும் சம உரிமை என்ற அடிப்படையில் மணமுறிவு கேட்க உரிமையுண்டு. அந்நாடுகளில் மணமுறிவுச் சட்டம் மக்களின் எண்ணங்களைப் பிரதி பலிப்பதுபோல் அமைந்து மிக எளிதில் சட்டப்படி மணமுறிவு வழங்கப்படுகிறது. மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் திருமணம் எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கு மணமுறிவும் அதிமாகக் காணப்படுகிறது. மணமுறிவுக் கணக்குப் படி, நிகழும் திருமணங்களில் சரிபாதிக்குமேல் மணமுறிவில் முடிகின்றன. எனவே மணமுறிவைப் பொருட்படுத்தும் பழக்கம் அங்கில்லை.

மணமுறிவுக்குப் பல காரணங்கள் சொல்லப்படினும் மேலைநாட்டு வாழ்க்கைமுறையின் தொழில் புரட்சியாலும் அறிவியல் முன்னேற்றத்தாலும் வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறையில் பல காரணங்களைக் காணலாம். மக்கள் நிரந்தரமாக ஓர் இடத்தில் இருந்தகாலத்தில் சமூகக் கட்டுப்பாடுகளும் கோட்பாடுகளும் மிகுதியாகக் கடைப்பிடிக்கப் பட்டன. பொருளாதார முன்னேற்றம் கருதி மக்கள் அடிக்கடி இடப் பெயர்ச்சி செய்வதால் இக்கட்டுப்பாடுகளில் வலிமை குறைந்து விட்டன. கட்டுப்பாட்டுத் தளர்ச்சி முக்கியக் காரணங்களில் ஒன்றாகும்.

இளமையில் பாலுணர்ச்சியால் தூண்டப்பட்டு மணம் புரிந்து கொள்ளும் இளைஞர்கள் பிறகு வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவித்து வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற வெறியில் பிரிந்து செல்கின்றனர். மேலும் பொருளீட்டும் பொருட்டு வெவ்வேறு இடங்களில் வேலை செய்யச் செல்வதால்

பிரிவைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவமின்றியும் பிரிகின்றனர். திருமணத்தை ஒரு சமய அடிப்படை தெய்விக உறவு என்று கருதாது இருவருக்கும் ஏற்பட்ட நட்புறவு ஒப்பந்தம் என்று கருதும் போக்கு ஏற்பட்டிருப்பதால் இவ்வுறவு முறிவைப் பெரிதாகக் கருதுவதில்லை. குழந்தையின்மையும் ஒரு முக்கியக் காரணமாக அமைகிறது. குழந்தை பெறமுடியாத மணவாழ்வில் முறிவு ஏற்பட்டு விடுகிறது. பெண்களும் வெளியில் சென்று வேலை செய்து பொருளீட்டும் நிலையில் பொருளாதார உறவில் சமத்துவம் வரவே பெண்கள் தம் உரிமைக்காகச் சில சமயங்களில் மணமுறிவு நாடும் நிலை ஏற்படுகிறது. நகர மக்களிடையே பொதுவாக மணமுறிவு அதிகமாக இருப்பதைக் காண்கிறோம். கண்டதும் காதல் கொண்டு மணம் செய்யும் தம்பதிகளிடையே சற்று அதிகமாகவே மணமுறிவு விகிதம் இருக்கின்றது. உலகத்தின் சமயப் பிரிவுகளிலே மணமுறிவை அனுமதிக்கும் போக்கில் மாறுபாடுகள் இருப்பதால் சமய அடிப்படையிலும் மணமுறிவு விகிதம் வித்தியாசப்படுகிறது.

இந்து பெண்கள் கணவனைத் தெய்வமாகக் கருதினர். ஆனால் இந்து மணச் சட்டம் 1955இல் இயற்றிய பிறகு இந்துக்களும் மணமுறிவு கேட்கலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. திருமண முறிவுக்குக் காரணங்களாக இருவரில் எவராவது ஒருவர் வேறு யாரிடமாவது உடலுறவு வைத்துக்கொண்டாலோ, சமயம் மாறினாலோ, மனநிலை சரியில்லாதவராக இருந்தாலோ, தொழுநோய் போன்ற நோய்களில் பாதிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது உலகப் பற்றற்று இருத்தல் போன்ற காரணங்கள் கூறப்பட்டுள்ளன. இருந்தாலும் இந்தியாவில் இன்னும் சமுதாயம் மணமுறிவை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறவில்லை. அவ்வாறு மணமுறிவு செய்துகொண்டவர்கள் வேறுபாடின்றி ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

பெண்கள் நலம்

இந்தியாவில் பெண்கள் வரலாற்றுக்காலம் முதல் பலவிதமான கொடுமைகளுக்கு உள்ளாகி அழுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் முன்னேற்றத்திற்காக அவ்வப்போது குறிப்பிட்ட பாதகங்களினின்றும் அவர்களைக் காப்பாற்ற சமூகச் சீர்திருத்தவாதிகளும் அறிஞர்களும் போராடிப் பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுத் தந்தனர். சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் பெண்களுக்கு எங்கும் எதிலும் சம உரிமை என்ற தத்துவம் காப்பாற்றப்பட்டது. இதைச் செயலாக்க ஓட்டுரிமையில் ஆரம்பித்துப் பல உரிமைச்

சட்டங்களும் உரிமைப் பாதுகாப்பு நடவடிக்கைகளும், உரிமைப் பாதுகாப்பு அமைப்புகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

உரிமையும் அந்தஸ்து உயர்வும்

பெண்களின் உரிமைகள் பாதுகாப்பிற்காகவும் அவர்களின் சமூகப் பொருளாதாரத் தகுதியை உயர்த்துவதற்கும் குறிப்பாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முக்கியச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன:

1. இந்து திருமணச் சட்டம் (Hindu Marriage Act, 1955)
2. இந்து வாரிசு உரிமைச் சட்டம் (Hiudu succession Act, 1956)
3. இந்திய வயதாகாதவர் மற்றும் பாதுகாப்புச் சட்டம் (Indian Minority and Guardianship Act)
4. இந்து தத்து எடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் (Hindu Adoption and Maintenance Act)

இந்து திருமணச் சட்டம் ஆண்கள் பல பெண்களை மணந்துகொள்ளும் பழக்கம் பரவலாக இருந்ததைத் தடைசெய்தது. எனவே இந்துக் குடும்பங்களில் சக்களத்திச் சண்டைக்கும் மனைவியைப் புறக்கணித்தலுக்கும் வாய்ப்பு குறைந்தது. மேலும் இச்சட்டம் திருமணமுறிவுக்கு வழிசெய்து அதன் பலன் இருபாலாருக்கும் கிடைக்கச் செய்துவிட்டது. வாரிசு உரிமைச் சட்டம் விதவையான பெண்களுக்குக் கணவனின் சொத்தில் முழு உரிமையும் கிடைக்கச் செய்துள்ளது. ஆண் பிள்ளைகளைப் போலவே மூதாதையர் சொத்தில் தாய்க்கும் பெண் குழந்தைகளுக்கும் உரிமை கிடைக்க இச்சட்டம் வழி செய்கிறது. இந்து வயதாகாதவர் பாதுகாப்புச் சட்டத்தின்படி ஐந்து வயதுகுட்பட்ட குழந்தைகளின் பாதுகாவலராகத் தாயே இருக்கவேண்டும் என்றுதாய்மைக்குத் தனித்த தகுதி தந்திருக்கின்றது. குழந்தைகளைத் தத்தெடுப்பதால் ஆண்களைப்போல பெண்களும் தத்தெடுத்துக் கொள்ளலாம் என்ற உரிமையும் கணவன் தன் மனைவியின் விருப்பமறிந்து சம்மதத்தின் பெயரிலேதான் தத்தெடுக்க வேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட்டுள்ளது.

கல்வி முன்னேற்றம்

அடுப்பு ஊதும் பெண்களுக்குக் கல்வி எதற்கு என்று கேட்ட சமுதாயத்தில் பெண் கல்வி முக்கியத்துவத்தையும் பெண் கல்வியால் குடும்ப நலமும் குழந்தை நலமும் நாட்டு நலமும் செழிக்

கும் என்ற கருத்தை மக்கள் மனத்தில் பதியவைத்தனர். ஆண் குழந்தைகளைப்போல் பெண் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உயர்கல்வியின் எல்லா பிரிவுகளிலும் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சில துறைகளில் அவர்களுக்கென்று இடம் ஒதுக்கலும் நடைமுறையில் இருக்கின்றது. மைய அமைச்சகத்தில் மத்திய சமுதாய நல அமைப்பின் அங்கமாகப் பெண்கள் நல அமைப்பும் செயல்படுகிறது. வயது வந்த பெண்களுக்குக் குறுகியகாலக்கல்வி மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்ய சிறப்புத் திட்டமும் கிராம வளர்ச்சியில் பெண்களின் பங்குக்குத் தேவையான பயிற்சி கொடுக்கத் தனிப் பயிற்சி திட்டமும் 1958 ஆம் ஆண்டு முதல் செயல்படுகின்றன.

சுகாதாரப் பணிகள்

பெண்களுக்குச் சிறப்பாகத் தேவைப்படும் மகப்பேறு மருத்துவ வசதிகள் தனித்தல்லாத காரணத்தால் பொது மருத்துவ மனைகளில்தான் தங்கவேண்டும் என்ற நிலையில் பல பெண்கள் மருத்துவமனையில் ஆண்களின் பார்வையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள மறுத்து வீடுகளிலேயே சில சமயங்களில் இறக்கும் நிலை இருந்தது. சுகாதாரப் பணியின் முக்கிய அங்கமாக மகப்பேறு மருத்துவமனைகளும் குழந்தைநலக் காப்பகங்களும் அமைத்துப் பெண்களுக்குப் பெண் மருத்துவர் உதவிகள்கிடைக்கச் செய்து பெண்களின் நிலை ஏற்றமுற வகை செய்யப்பட்டிருக்கிறது. மகப்பேறு மருத்துவ விடுமுறையும் அதற்குச் சம்பளமும் கொடுத்தும் தனியார் செயலகங்களைக் கொடுக்கச் செய்தும் அரசாங்கம் பெண்களுக்கு உதவியிருக்கிறது. வேலை செய்யும் பெண்களின் குழந்தைகளைப்பகலில் தங்கவைத்துக்கொள்ளகுழந்தைகள் காப்பகங்கள் கட்டுவித்து உதவியிருக்கிறது. ‘சிறுகுடும்பம் சீரான வாழ்வுக்கு வித்து’ என்ற கருத்தைப் பரப்பவும் குடும்பநலத் திட்டத்தைக் கடைபிடிக்கவும் பெண்களுக்குத் தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதார முன்னேற்றம்

பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்காக பெண்களுக்குப் வேலைகள் கொடுக்கப்படுகின்றன. அரசு வேலைகளில் ஆண்களோடுசம உரிமைபெற்றுத்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களுக்குப் பாதுகாப்பு, சுகாதார வசதிகள், வேலைநேர அளவுகள், சம அளவு சம்பளம் போன்ற பலாபலன்கள் கொடுக்கப்படுகின்றன. பெண்மையின்

மெல்லியல்புக்கும் உடலமைப்புக்கும் மீறிய வேலைகள் தொழிற் சாலைகளில் கொடுக்காமல் பாதுகாக்கச் சட்டம் வகைசெய்கிறது. விவசாய வேலைகள் செய்யும் பெண்களுக்கும், காப்பி, டீ, ரப்பர் போன்ற தோட்டத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயித்து வசதிகளும் பாது காப்பும் கிடைக்குமாறு சட்டங்கள் செயல்படுகின்றன.

நகரங்களில் வேலைபார்க்கும் பெண்களுக்குத் தங்கும் வசதி களும் வேலை பார்க்கும் பெண்கள் விடுதிகள் கட்டிக்கொடுத்து நியாயமான வாடகையில் தேவையான வசதிகளோடும் பாதுகாப் போடும் பணிபுரிய அரசு திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. மேலும் குறுகிய காலச் சிறப்புப் பயிற்சிகள், பகுதிநேர வேலை வாய்ப்புகள், தொழிற் பயிற்சி, குடிசைத் தொழில் துவங்க பயிற்சி யும் பொருள் உதவியும் கொடுத்தல் போன்ற பணிகள் நடைபெறு கின்றன.

சந்தர்ப்பச் சூழ்நிலையால் வழுக்கிவிழுந்த பெண்களுக்காகப் பாதுகாப்பகங்கள், மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து அவை மூலம் அவர்கள் புனர்வாழ்வு பெற வசதி செய்கிறது. விபச்சாரத் தடுப்புச் சட்டங்களில் ஆங்காங்குள்ள ஓட்டைகள் அடைக்கப் பட்டுத் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஆதரவற்ற அனாதையான பெண்களுக்காகவும் உடல் ஊனமுற்ற பெண்களுக் காகவும் மத்திய சமூகநலக் கழகம் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது.

பெண்களின் நல வாழ்வுக்காகப் பாடுபடும் பல மகளிர் நல அமைப்புகள் உலக அளவிலும், அகில இந்திய அடிப்படையிலும், மாநில அளவிலும், வட்டார அளவிலும் செயல்படுகின்றன. உதா ரணமாக இளம் கிறித்துவ மகளிர் அமைப்பு (Young Womens' Christian Association), அகில இந்திய பெண்கள் மாநாடு (All India Women's Conference), இந்தியப் பெண்களின் தேசியக் குழு (The National Council of Indian Women), கஸ்தூரிபாய் காந்தி தேசிய நினைவு நிதி (Kasturbai Gandhi National Trust), ஒருங் கிணைந்த பல்கலைக்கழக மகளிர் அமைப்பு (Federation of University Women), அகில இந்திய பெண்கள் கல்விநிதிக் கழகம் (All India Women's Educational Fund Association) போன்ற பல அமைப்புகள் செயல்படுகின்றன.

வினாக்கள்

1. படுதா முறை என்றால் என்ன?
2. வரதட்சணை என்றால் என்ன?
3. மணமுறிவு எதனால் ஏற்படுகிறது?
4. விதவா விவாகம் என்றால் என்ன?
5. பெண்கள் முன்னேற்றமடைய அரசாங்கம் என்னென்ன திட்டங்கள் வகுத்துள்ளன?

15. நவபாரத உருவாக்கம்

அரசியல் சுதந்திரத்தை 1947 ஆம் ஆண்டு பெற்ற இந்தியா, பொருளாதார சமூகப் பண்பாட்டு முன்னேற்றத்தில் அதிக அக்கறையும் நாட்டமும் கொண்டு திட்டமிட்டுச் செயல்படுவதன் மூலம் நவபாரதத்தை எவ்வளவு வேகமாக உருவாக்க முடியுமோ அவ்வளவு வேகமாக உருவாக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்கிறது.

வெறும் பொருளாதார முன்னேற்றம் மட்டுமே நோக்காகக் கொள்ளாது சமுதாயத்தின் பல்வேறு அங்கங்களிலும் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காகச் செயல் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துகிறது. இந்த பல்நோக்குச் சமுதாய மேல்நிலைத் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, மக்களையே அதில் ஆர்வத்தோடு ஈடுபடச்செய்து, மக்கள் திட்டமாகச் செயல்படுத்த விரும்பியது. இதற்காகக் கிராம அளவிலிருந்து வட்ட, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அமைப்புக்களை ஏற்படுத்தி கடந்த 28 வருடங்களாகப் பல கட்டங்களில் திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது.

இச் செயல் திட்டங்கள் நாட்டு முன்னேற்றத்திற்காகத் திட்டக் குழுவின்மூலம் உருவாகின்ற ஐந்தாண்டு திட்டங்களின் அங்கங்களாகவும் நீண்டகாலத் தொலைநோக்குச் சமூக முன்னேற்றத்தின் கூறுகளாகவும் செயல்பட்டு வருகின்றன.

சமுதாய வளர்ச்சி

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் ஒரே பண்பாட்டு அமைப்பைக்கொண்ட மக்களைக் குறிக்கும். அம் மக்களிடையே தாங்கள் ஒருவரே என்ற ஒற்றுமையுணர்வும் ஒன்றாகச் செயல்படும் தன்மையும் இருக்கவேண்டும். சமுதாய வளர்ச்சியை (Community Development) ஓர் இயக்கமாகவும் (movement), ஒரு கருவியாகவும் (instrument), ஒரு நாக்காகவும் (approach), ஒரு வழிமுறையாகயும் (method)

காலத்திற்கேற்ப வரையறுத்துள்ளார்கள். ஆனால், தற்சமயம் அபிவிருத்தி அடையாத நாடுகளிலுள்ள ஊரியப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த உண்டான ஓர் இயக்கமாகவே கருதப்படுகிறது. சமுதாய வளர்ச்சியின் இணைச் சொல்லான 'சமுதாய அமைப்பு' (Community organisation) வாழ்க்கைத்தரமும் சமுதாய வசதிகளும் சிறிது வளர்ச்சி அடைந்து, சமுதாய ஒற்றுமையும் ஒருங்கிணைந்து மக்கள் செயல்படும் தன்மையும் போதாது என்ற நிலையில் அவற்றை உருவாக்கும் இயக்கமாகக் கருதப்படுகிறது.

சமுதாய அமைப்பும் வளர்ச்சியும் (Social organisation and development) என்ற சொல் (உள்ளூர்) முயற்சியால் ஏற்படும் முன்னேற்றத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது.

இந்தியாவின் சமுதாய வளர்ச்சியை ஊரக சமுதாய வளர்ச்சி (Rural community development) என்றும் நகரிய சமுதாய வளர்ச்சி (Urban community Development) என்றும் பிரிக்கலாம். ஊரகச் சமுதாய வளர்ச்சி: 1. இந்தியச் சுதந்திரத்திற்கு முன் அரசு முயற்சியால் ஊரிய வளர்ச்சி என்றும், 2. தனியார் முயற்சியால் நிகழ்ந்த ஊரிய வளர்ச்சி என்றும், 3. சமுதாய திட்டமும் தேசிய விரிவாக்கப் பணி என்றும், 4. சமுதாய வளர்ச்சியும் ஊராட்சி ஒன்றியங்கள் என்றும் 5. ஒருங்கிணைந்த ஊரிய வளர்ச்சி என்ற ஐந்து நிலைகளாகப் பிரித்து விவரமாக இங்கு காண்போம்.

சுதந்திரத்திற்குமுன் சமுதாய வளர்ச்சி (Commnity Development before Independence)

பண்டைய காலத்தில் சமுதாய வளர்ச்சி கிராம மன்றங்களையும் ஊராட்சி மன்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கியது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப் பெரியோர்களைக் கொண்ட கிராம சபை கூடி, ஊர் காரியங்களைப்பற்றி கருத்து பரிமாறி முடிவுகள் செய்து செயல்பட்டது. கிராமப் பொது வேலையையும், கோவில் மற்றும் பொது சொத்துகளை நிர்வகித்தலையும், நீதி பரிபாலனத்தையும், கிராமப் பாதுகாப்பையும் கவனித்து வந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிராம சபைகளின் வேலைகளில் ஆங்கில அரசு நேரிடையாகத், தலையிடவில்லை. ஆனால் ஆங்கில ஆட்சிக் கொள்கைகளும் நிர்வாக அமைப்பும் செயல்பட்ட விதங்களில் கிராம சபைகள் அவைகளின் முக்கியத்துவத்தை இழந்து நாளடைவில் பயனில்லாமல் போய்விட்டன.

கிராமச் சபைகளுக்குப் பொது வருவாயிலிருந்து கிடைத்து வந்த மானியத்தை ஆங்கில ஆட்சி நிறுத்திவிட்டது. மராமத்து வேலைகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டது. நீதிமன்றங்களை அரசாங்கம் ஏற்படுத்தியதால் கிராமச் சபைகள் நீதி பரிபாலனம் செய்யமுடியவில்லை. புதிய நிலச் சீர்திருத்தங்களால் புதுப்புது மிராசுதார்களும் ஜமீன்தார்களும் தோன்றி கிராமத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தினர். ஒருங்கிணைந்த வாழ்க்கைமுறையை சீர்குலைக்கக்காரணமாயினர். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து மூலப் பொருள்களைக் கொண்டுசென்று வெளிநாட்டுத் தொழிற் சாலைகளில் உற்பத்தியான சரக்குகளைக் கொண்டுவந்து கொட்டி இந்தியக் கைத்தொழில்கள் தலைதூக்காமல் செய்தனர். நிலச் சுவான்தார்கள் உழவர்களிடம் குத்தகை வாங்குவதில்தான் அக்கறை காட்டினார்களே தவிர நிலம் செழிப்பதற்கு எதுவும் செய்யவில்லை. உழவு நிலம் துண்டு போடப்பட்டுச் சிறுசிறு கூறுகளானமையாலும், உழவர்கள் கடன்மேல் கடன் வாங்கி கடனில் மூழ்கிக்கிடந்ததாலும், நடுத்தரகர்கள் இவ் உழவர்களைச் சுரண்டித் தின்றுவந்ததாலும் உழவர்கள் நலிவுற்றனர்.

ஆங்கில ஆட்சி பஞ்ச ஆய்வுக் குழுக்களை (Famine commission) 1880, 1900, 1901 ஆகிய ஆண்டுகளில் அமைத்து அதன்பேரில் நடவடிக்கைகள் எடுத்தது. அதுபோல் நீர்ப்பாசன ஆய்வுக்குழுவை (Irrigation commission) 1903ஆம் ஆண்டும் கூட்டுறவு ஆலோசனைக் குழுவை (committee on co-operation) 1915ஆம் ஆண்டும் ஆரம்பித்து உழவர்களுக்கு வேளாண்மைக்குத் தண்ணீரும் பணமும் கிடைக்க வழி செய்தது. மேலும், ராயல் வேளாண்மை ஆய்வுக் குழுவை 1926ஆம் ஆண்டு (Royal commission Agriculture) நியமித்து 1928ஆம் ஆண்டு உழவர் மாநாடு ஒன்றைக் கூட்டி, உழவர் முன்னேற்றத்திற்கு ஏற்பாடுகள் செய்தது. 1943இல் ஏற்பட்ட கொடிய வங்காளப் பஞ்சமும் அதை யொட்டிய விசாரணைக் குழுவும் அதன் விளைவாக ஏற்பட்ட 'அதிக உணவு உற்பத்தி செய்' (Grow More Food) என்ற இயக்கமும் குறிப்பிடத்தக்கவை.

தனியார் முயற்சியால் ஊரக வளர்ச்சி (Rural Reconstruction Non official Agencies)

மகாத்மா காந்தியடிகளும் இந்திய தேசியக் காங்கிரசின் அரசியல் போராட்டத்தோடு கிராம, சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார மறுமலர்ச்சித் திட்டமும் தீட்டி அதை ஒரு இயக்கமாகவே செயல்படுத்தி வந்தார். கிராமப் புனரமைப்புத்

திட்டம் 'தேசிய' இயக்கத்தோடு இணைந்து செயல்பட்டது. இதன் அங்கங்களாக கிராமப் பொருளாதாரத் திட்டமும் கிராம குடிசை மற்றும் கைத்தொழில் வளர்ச்சியும், ஆதாரக் கல்வியும், முதியோர் கல்வியும் செயல்பட்டன. இவைகளை ஒருங்கிணைத்து தொண்டுள்ளம் படைத்த மக்கள் அடங்கிய காந்தி சேவா சங்கம், அரிசன சேவா சங்கம், பசு சேவை சங்கம் (Go Seva Sangh) போன்ற அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் காந்தியடிகளோடு சற்றே மாறு பட்ட புறச்சூழ்நிலையில் ஊரிய வளர்ச்சிக்காகத் திட்ட மிட்டார். அவர் நோக்கில் கிராமம் செழிப்பான கிராமமாக மட்டும் அமையாமல் அழகிய கிராமமாகவும் அமைய வேண்டு மென்று கருதினார். தன் கல்விச் சீரமைப்பின் வடிவமாகிய விசுவ பாரதி' (Vishwa Bharati) யோடு ஸ்ரீநிகேதன் (Sriniketan) என்ற ஊரிய நிர்மாண நிருவனத்தையும் (Rural Reconstruction nstitute) சாந்தி நிகேதனில் ஏற்படுத்தினார். நிர்மாணப் பணி களையும் மேற்கொண்டு செயல்படுத்தினார்.

கோபாலகிருஷ்ண கோகலே அவர்களால் 1905ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய ஊழியர் கழகம் (The Servants of India Society) ஊரிய வளர்ச்சிக்காகப் பாடுபட்டது. பல மாநிலங்களில் ஊரிய மக்களிடையே மகப்பேறு மருத்துவ இல்லங்கள், கோழி வளர்ப்புப் பணி, நவீன வேளாண்மை முறைகள் கிராமக் கைத்தொழில்களை ஊக்குவிப்பது போன்ற பணிகளுக் காக முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தியது. இத் திட்டங்களுக்கு ஆங்காங்கே பயிற்சியும் கொடுத்தது.

கிறித்துவ சமயத் தொண்டர்களும் தேசிய கிறித்தவக் குழுவும் (National Christian Council) கிராம வேலைகளையும் கிராம தொண்டுகளையும் மேற்கொண்டனர். குறிப்பாக இவை கல்வியைப் பரப்புதல், சுகாதார மருத்துவ வசதிகள் செய்தல், ஏழ்மைநிலை யில் உள்ளவர்கள் உய்ய வழி செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபட்டனர். டாக்டர் ஸ்பென்சர் கட்சு (Dr. Spencer Hatch), மார்த்தாண்டம் (Martandam) என்ற இடத்தில் ஏற்படுத்திய ஊரிய வளர்ச்சிப்பணி மையம் மேல்நாட்டவர்களையும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த மக்களையும் கவர்ந்தது. அங்கு கூட்டுறவு அடிப்படையில் தொடங்கிய கோழி வளர்ப்பும், வாணிப நோக்கோடு முட்டை அபிவிருத்தி திட்டமும் பிற்காலத்தில் வந்த கோழிப் பண்ணைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

சமுதாயத் திட்டமும் தேசிய விரிவாக்கப் பணியும் (Community Projects and National Extension Service)

விடுதலை பெற்றவுடனேயே உருவாக்கப்பட்ட தேசிய அரசு ஏற்கெனவே தேசிய நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட தலைவர் களின் அனுபவத்தோடும் அரசாங்க அமைப்புகளின் துணையோடும் புதிய உயிரோட்டம் பெற்று செயல்படத் தொடங்கியது. ஆங்காங்கே மாநில அரசுகள் அங்குள்ள தலைவர் களின் முன்னனுபவத்தோடு பல புதிய செயல்திட்டங்களை நடத்தினர். அன்றைய சென்னை மாநிலத்தில் பிர்கா வளர்ச்சித் திட்டமும் (Firka Development Scheme), மத்தியப் பிரதேசத்தில் சேவக்கிராம (Sewagram) மாதிரித் திட்டமும், உத்திரப்பிரதேசத்தில் எடவா (Etawah) முன் மாதிரித் திட்டமும் அன்றைய பம்பாய் மாநிலத்தில் சர்வோதயத் திட்டமும் (Sarvodaya Scheme) பஞ்சாப் மாநிலத்தில் நிலோக்ரி (Nilokheri திட்டமும் குறிப்பிடத்தக்கவை. 1950-ல் உருவாக்கப்பட்ட தேசிய திட்டக்குழு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செயல் படுத்தப்பட்ட பல திட்டங்களையும் ஆராய்ந்து, அயல் நாடு களில் செயலாக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் கருத்தில்கொண்டு இந்தியாவிற்கேற்ற ஒரு செயல் திட்டத்தை வடிவாக்கும் வேலையை மேற்கொண்டது. இச் செயல் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஓர் அம்சமாக இருக்கவேண்டுமென்றும் விரும்பியது.

சமுதாய அபிவிருத்தியை ஓர் அணுகு முறையாகவும் ஊரிய விரிவாக்கத்தை ஓர்அமைப்பாகவும்கொண்டு ஐந்தாண்டு திட்டம் கிராம மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மாற்றும் பணியைத் தொடங்குகிறது என்றும் அது கீழ்க்கண்ட குறிக் கோளுடன் இயங்கும் என்றும் திட்டக் குழு விவரித்தது.

1. அபிவிருத்தித் துறைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து செயல் பட்டு, கிராம மக்களின் மொத்த வாழ்வையும் நலம்பெறச் செய்ய வேண்டும்.

2. மக்களிடையே கூட்டு முயற்சியும் சுய உழைப்பும் உண் டாக்கும் துறைகளை முதலில் கண்டுபிடித்து அவற்றில் அவர்கள் முயன்று முன்னேற அரசுத்துறைகள் வழிகாட்டிகளாக உதவ வேண்டும்.

3. நவீன வேளாண்மை முறைகளின்மூலமும் சிறு தொழில் மற்றும்கைத்தொழில் முன்னேற்றம் மூலமும் நிரந்தர வேலையின் மையையும் போதிய வேலையின்மையையும் போக்கவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகளைச் செயல் படுத்தத் தேவையான நடைமுறை உதவிகளைக் கொடுத்து பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டும்.

5. செயல் திட்டங்களில் கிராமத்திலுள்ள எல்லா குடும்பங் களும் குறிப்பாக இதுகாறும் உரிமை மறுக்கப்பட்டவர்களும் கூட்டுறவு அமைப்புகளிலும் மற்ற அமைப்புகளிலும் பங்குபெறும் படி அவைகளை நடத்தவேண்டும்.

6. கிராம மக்களிடையே தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற உள்ளுணர்வை (Burning desire) உண்டுபண்ண வேண்டும்.

1952 ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னோடித் திட்டங்களாக 55 சமுதாயத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றும் 300 கிராமங்களையும் 15 லட்சம் ஏக்கர் நிலத்தை யும் கிட்டத்தட்ட 2 லட்சம் மக்களையும் கொண்ட வட்டமாக அமைந்தது. ஒவ்வொரு வட்டத்திலும் மூன்று விரிவாக்க மையங் கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் 60 அல்லது 70 ஆயிரம் மக்களையும் 100 கிராமங்களையும் இணைத்து செயல்பட்டன. 1954இல் முன்னோடித் திட்டங்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்தது.

இதன்பின் தேசிய விரிவாக்கப் பணிக்கு (National Extension Service) முக்கியத்துவம் கொடுத்து மிக வேகமாக விரிவாக்கப் பணி மையங்கள் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டன. விரிவாக்கப் பணியின் முக்கிய அங்கமாக விரிவாக்கக் கல்வி (Extension Education) அமைந்தது. லீகன்ஸ் (Leagans) விரிவாக்கக் கல்வி என்பது "சுயமுயற்சியால் ஊரிய மக்கள் தங்கள் வாழ்க்கை முறை யை முன்னேற்றிக்கொள்ளக்கற்றுக்கொள்வது" என்று வரையறுத் துள்ளார். இதன் நோக்கம் மக்கள் எண்ணத்தையும் போக்கையும் மாற்றி முன்னேற்ற வேலைகளில் தீவிரமாக ஈடுபடச் செய்வ தாகும். தேசிய திட்டக் குழுவும் தேசிய விரிவாக்கப் பணி நாடு முழுவதும் செயல்படுத்தவேண்டும் என்று விரும்பியது.

1963 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இப்பணி நாடு முழுவதும் செயல்படத் துவங்கிவிட்டது. ஆனால், முதற்கட்டத் தில் வேளாண்மை உற்பத்திக்குமுக்கியத்துவம் கொடுத்து ரசாயன உரம் கொடுத்தல், உயர்ரக விதையும் வேளாண்மைக்கு உரிய கருவிகளும் வழங்குதல், கூட்டுறவு கடன் வழங்குதல் போன்ற மக்களுக்குக் கொடுக்கும் பணிகளே விரிவாக்கப் பணியாகச்

செயல்படுத்தப்பட்டன. 1969 ஆம் ஆண்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கியபோது இந்தியாவில் 5,265 சமுதாய வளர்ச்சி வட்டங்கள் இருந்தன. அவற்றுள் 489 பழங்குடி சமுதாய வளர்ச்சி வட்டங்களும், 999 முதல்நிலை தேசிய விரிவாக்கப் பணி வட்டங்களும் 2585 இடைநிலைத் தேசிய விரிவாக்கப்பணி வட்டங்களும், 1192 முழு வளர்ச்சியடைந்த சமுதாய வளர்ச்சி வட்டங்களும் அடங்கும். இத்திட்ட வளர்ச்சிக்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 40 கோடி ரூபாயும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 கோடி ரூபாயும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 294 கோடி ரூபாயும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பஞ்சாயத்து வளர்ச்சிக்காக தனியாக 8 கோடி ரூபாயும் செலவிடப்பட்டது.

சமுதாய வளர்ச்சியும் ஊராட்சி ஒன்றியங்களும்

முழு வளர்ச்சி அடைந்த சமுதாய வளர்ச்சி திட்டத்தின் இயக்க மையமாக ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்துள்ளன. மாவட்ட வளர்ச்சி குழுக்களை அரசு அமைத்து, அவற்றின் மூலம் வட்டாரத் தேவைகளுக்கேற்ப தேசியக் கொள்கைகளுக்கு இயைந்த திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வழி செய்தது. இதன் விளைவாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும், மாவட்டத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மாநில மன்ற உறுப்பினர்களையும் கொண்ட குழு திட்டமிட்டு ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் அமைப்பு நடைமுறையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சித் தலைவர்களின் அவைக் குழுவின் ஆலோசனைப்படி செயல்படுகின்றன. இது வேளாண்மை வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கைத்தொழில் வளர்ச்சி, சிறுதொழில் முயற்சி, வேலைவாய்ப்புப்பணித் திட்டங்கள் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. கால்நடை வளர்ச்சிக்கும் கோழி வளர்ச்சிக்கும் வகைசெய்கிறது. கல்வித் திட்டங்கள் பலவற்றை நடத்துகிறது. போக்குவரத்துச் சாலைகள் அமைத்தலையும் பராமரித்தலையும் தன் பணியாகக் கொண்டுள்ளது. பொது சுகாதாரப் பணிகள் மருத்துவம் மற்றும் குடும்பநலப் பணிகளையும் பொறுப்பாகக் கவனிக்கிறது. நலிந்தோருக்கு வீட்டு வசதி மற்றும் பல சமுதாய நலத்திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும்போது உள்ளூர் மக்களின் அன்றாட அவசிய திட்டத்திற்கு முக்கியத்

துவம் கொடுக்காததால் மக்களிடையே இத்திட்டத்தில் நம்பிக்கை குறைய ஆரம்பித்தது. அரசாங்கத் துறைகளிடையே இணைந்து செயல்படும் போக்கு குறைவாகக் காணப்பட்டது. திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான உபகரணங்களும் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் பற்றாக்குறையும் இருந்தது. பொதுமக்களிடையே ஒத்துழைப்பு மிகக் குறைந்து குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் அளவுக்கு சென்றது. கிராம மக்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கைக்கு எதிராகவே மக்களுடைய எண்ணமும் போக்கும் காணப்பட்டது. பல கிராமங்களில் மக்கள் இத் திட்டத்தைத் தங்கள் திட்டமாகக் கருதாது அரசாங்க வேலையாகவே கருதும் போக்கும் காணப்பட்டது.

பல குறைபாடுகள் இருந்தாலும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் கிராமக் குடியாட்சி அமைப்புகளும் ஊரிய வளர்ச்சியில் புதிய கண்ணோட்டத்தையும் கொண்டுவந்திருக்கிறது என்பது ஓர் அடிப்படை உண்மை. இத் திட்டங்களினால், கிராமங்களிலும் பல கிராமங்கள் ஒருங்கிணைந்த ஊராட்சி ஒன்றியங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பல தலைவர்கள் உருவாகின்றனர். இத் தலைவர்கள் குடியாட்சியின் அடிப்படைத் தூண்களாக நின்று வளர்ச்சிப் பணிகள் நடைபெற உதவுகின்றனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

சமூக வளர்ச்சித் திட்டங்கள் பல குறைபாடுகளுடன் செயல்பட்டு வந்ததாலும்; திட்டங்களைச் செயல்படுத்த வருவாய் போதாததாலும், வெற்றிகரமாகச் செய்ல்படும் ஒரு சில திட்டங்களால் ஊரக மக்களில் ஒருசாரார் மட்டும் பலன் பெறவும் மற்றவர்கள் வாழ்க்கையில் எந்தவித மாற்றமுமின்றி இருப்பதாலும், உற்பத்தி பெருகுவதால் வரும் பலன் ஒரு சிலருக்கே கிடைப்பதாலும்; கிராம மக்கள் வாழ்வில் அரசு எதிர்பார்த்த அளவு வளர்ச்சி பெறவில்லை. எனவே, ஊரகத்திலுள்ள எல்லா மக்களையும் எல்லாவிதமான வளங்களையும் ஒருங்கிணைத்து அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும்;

தருமபுரி போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் மிகக் குறைந்த வருமானம் கொண்ட பல ஊராட்சி ஒன்றியங்களின் முக்கிய வளர்ச்சித் திட்டங்கள் நிதிப் பற்றாக்குறையால் செயல்படுத்த முடியாமல் மேலும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தன.

மாநில அரசு மைய அரசின் துணையோடு சில பின்தங்கிய மாவட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் தீட்டி ஒருங்கிணைந்த ஊரிய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இதற்காக அரசின் எல்லாத் துறையினரும் தங்கள் விரிவாக்கப் பணிகளை ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒருமுகமாகச் செயல் படுத்துகின்றனர். மிகக் குறுகிய காலத்தில் மக்கள் வாழ்க்கை நிலை உயர்வதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

பஞ்சாயத் ராஜ் (Panchayat Raj)

பஞ்சாயத் ராஜ் என்பது கிராமக் குடியாட்சிக்கு வித்திட்ட ஓர் இயக்கத்தைக் குறிக்கும். இந்த இயக்கத்தின் அமைப்புகளாக ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் இயங்குகின்றன. இந்த அமைப்பு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இது உள்ளூர் மக்களுக்குத் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே வளமாக்கிக் கொள்ளவேண்டும் என்று திட்டம் தீட்டிச் செயல் பட வாய்ப்பளிக்கும் அமைப்பாகும்.

இதன் முக்கியக் குறிக்கோள்களாக புதிய தலைவர்களை உரு வாக்குதலையும் கிராம மக்களின் வாழ்வு நலம்பெற அவர் களையே பொறுப்பேற்றுச் செயல்படச் செய்வதையும் குறிப்பிட லாம்.

இந்தியாவில் இந்த இயக்கம் மக்கள் குடியாட்சியின் மைய மற்றும் மாநில ஆட்சி முறைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு, கட்சி அரசியலில் நன்கு தெளிவடைந்து கட்சி நிலைக்கு அப்பாற்பட்டுச்செயலாற்றப் பழகிக்கொண்டபின் வளர வேண்டிய ஒன்று. அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுவதில் ஏற்பட்ட சிக்கல்களினாலும், தேசியத் தலைவர்களின் பேராதரவினாலும், சிறிது அவசரமாகவே கொண்டுவரப்பட்டுவிட்டது என்று அறிஞர் கள் கருதுகிறார்கள்.

இந்தியாவில் 1970ஆம் ஆண்டில் 214,947 ஊராட்சி மன்றங் களும் 3297 ஊராட்சி ஒன்றியங்களும் 254, மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் செயல்படத் தொடங்கிவிட்டன. சமீபகாலத்தில் பல அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களினால் குடியாட் சியைப்பரவலாக்கும்(democratic decentralisation) கொள்கையின் வேகம் தடைபட்டதால் பல மாநிலங்களில் ஊரகக் குடியாட்சி மையங்கள் செயல்படவில்லை. இவைகளின் முக்கியத்துவத்தையும்

மக்கள் சரியாக உணரவில்லை. இவை நன்கு செயல்படும் ஒருசில மாநிலங்களிலும் அரசின் பல துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துஊராட்சி ஒன்றியங்களும் மன்றங்களும் புறக்கணிக் கப்படுகின்றன.

பஞ்சாயத் ராஜ் நன்கு செயல்பட்டு அதன் பலன் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் இன்றைய பொருளாதார மற்றும் நிர்வாக அமைப்புகளில் பல அடிப்படை மாறுதல்கள் செய்யவேண்டும். கிராமங்களையும் நகரங்களையும் தனித்துப் பார்க்கும் கண்ணோட்டம் மறைந்து ஒருங்கிணைந்த ஊரக-நகரக (Rural-urban) வளர்ச்சித் திட்டங்கள் தீட்டி இணைந்த முன்னேற்றத்திற்கு வழிசெய்யவேண்டும்.

நகரகத் திட்டமும் வளர்ச்சியும் (Urban Planning and Development)

மக்கள்தொகைப் பிரச்சினை என்ற அத்தியாயத்தில் கூறியதுபோல் நகரங்களின் எண்ணிக்கையும் அங்கு வாழும் மக்களின் அளவும் நகரங்களின் வளர்ச்சியும், இந்தியாவில் வேகமாக நிகழ்கின்றன. இந்த வேகத்திற்கு ஏற்றபடி நகரங்களில் வசதிகள் பெருகவில்லை. இதன் காரணமாக நகரங்களில் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பிரச்சினைகள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. உதாரணமாக, நகரங்களில் சேரிவாழ் மக்கள் பிரச்சினையை இங்கு நோக்குவோம்.

நகரங்களில் மக்கள்தொகை வளர்ச்சியின் காரணமாகப் புதிய வீடுகள் கட்டுதலும் பழைய வீடுகளை மாற்றி அமைத்தலும் நடைபெற்று வருகின்றன. மக்கள்தொகை வளர்ச்சிக்கும் வீடுகள் அதிகரிக்கும் விகிதத்திற்கும் வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் விளைவாக ஒவ்வொரு வீட்டிலும் குடியிருக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. தேவையை விட குறைவாகவே வீடுகள் இருப்பதால், வீட்டிற்கு மதிப்பு அதிக மாவதோடு வாடகையும் அதிகமாகிறது. நகர மக்களில் பலர் நிரந்தர வேலைகள் இன்றியும் குறிப்பாக கிராமங்களிலிருந்து குடிபெயர்வோர் நிரந்தரமற்ற தினக் கூலிகளாகவும் இருப்பதால் அதிக வாடகை கொடுத்து வீட்டுவசதி தேடிக்கொள்ளும் அளவுக்கு வசதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

நகரத்துப் பாட்டாளி வர்க்கத்தினர் எண்ணிக்கை மிக வேக மாக அதிகரித்து வருகிறது. வறுமையில் வாழும் இவர்கள் குடி யிருக்க வீடு கிடைக்காததாலும், கிடைக்கும்வீடுகளுக்குக்கேட்கும்

மிக அதிக வாடகைக் கொடுக்க முடியாத காரணத்தாலும் வீடின்றித் தவிக்கின்றனர். நகரத்தின் கழிசடைப் பகுதிகள் என்று ஆங்காங்கே ஒதுக்கி வைத்திருக்கும் குட்டை குளங்களின் கரைகள், குப்பை மேடுகள், வாய்க்கால் ஓரங்கள், சாக்கடைப் பகுதிகள் மற்றும் புறம்போக்கு இடங்களில் தற்காலிகக் குடிசைகள் அமைத்துக் காலம் தள்ளுகின்றனர். இந்த தற்காலிகக் குடியிருப்புகளைக் 'குடிசைப் பகுதிகள்' என்றனர். கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரும் மக்கள்தொகை அதிகரித்துக்கொண்டேயிருப்பதாலும் வீடுகள் கட்டும் வேகம் அதற்கு ஈடு கட்ட முடியாததாலும் நாளுக்குநாள் இத்தகையக் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் அங்கு வாழ்வோர் தொகையும் அதிகரித்துக் கொண்டேவருகிறது.

உதாரணமாக, சென்னை மாநரில் 1951ஆம் ஆண்டு குடிசை வாழ் மக்கள் 16 சதவிகிதமும், 1961ஆம் ஆண்டு இவர்கள் 24 சதவிகிதமும், 1971ஆம் ஆண்டு குடிசைச் சூழ்நிலையில் வாழும் மக்கள் கிட்டத்தட்ட 40 சதவிகிதமாகவும் இருந்தனர். 1951ல் ஐநூறுக்கும் குறைவாக இருந்த சேரிகளின் எண்ணிக்கை 1971ஆம் ஆண்டு இரண்டாயிரத்திற்கும் அதிகமாகியிருப்பதைக் காண்கிறோம். இதே போன்ற நிலைதான் மற்றெல்லா நகரங்களிலும் காணப்படுகிறது.

நகர வளர்ச்சியின் முக்கிய அங்கங்களுள் ஒன்றாகக் குடிசைகள் விளங்குகின்றன. இக் குடியிருப்புப் பகுதிகளில் எளிதில் தீப்பற்றிக்கொள்ளும் கூறை வீடுகள் அதிகம் என்பதால் ஆங்காங்கே தீ விபத்துகளும் அதிகரிக்கின்றன. நகரங்களின் தாழ்வான பகுதிகளில் பெரும்பாலும் குடிசைகள் கட்டப்பட்டிருப்பதால் மழை காலத்தில் மழைநீர் தங்கி பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் குடிசை வீடுகள் மிகவும் நெருக்கமாக கட்டப்படுவதாலும் பொதுச் சுகாதார வசதிகள் இல்லாததாலும் சுற்றுப்புறச் சூழ்நிலை மிகவும் மோசமாக அமைகிறது. அரசாங்கம் குடிசைவாழ் மக்கள் நிலை மேன்மைபெற உடனடித் திட்டம், குறுகியகாலத் திட்டம், நீண்டகாலத் திட்டம் என மூன்று திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

உடனடித் திட்டமாக, பாதிப்புகள் நிகழும் காலங்களில் முன்தடுப்புப் பணிகளில் ஈடுபடுகிறது. தீக்கட்டுப்பாடு விளம்பரமும், செயல் விளக்கங்களும், தீ பிடிக்காத கூறைகள் வழங்குதலும், தீ பற்றினால் விரைந்துசென்று அணைப்பதற்கு ஏற்ப வசதிகள் செய்தல் போன்ற நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படு

கின்றன. பொதுக் கழிப்பிடங்கள், குளிக்கும் அறைகள், தண்ணீர் வசதி போன்றவை செய்துகொடுத்துச் சுற்றுப்புறச் சூழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படச் செய்கிறது. மழைக்காலங்களில் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் குடிபெயரச் செய்து, வசதிகள் செய்துகொடுக்கிறது.

குறுகிய காலத் திட்டங்களான குடிசைப்பகுதி அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குடிசைப் பகுதிகளில் ஆங்காங்கே சாக்கடை வசதிகள், கழிப்பிடங்கள், குழாய்நீர் வசதி, சாலை அமைத்தல், தெரு விளக்கு அமைத்தல், நல மன்றங்கள் மூலம் குடிசைப் பகுதி மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் சுய முயற்சியையும் உண்டுபண்ணி சுற்றுப்புற வளர்ச்சியைச் செய்தல் போன்றவை கடைபிடிக்கப்படுகின்றன. தீப்பிடிக்காத கூறைகள், தண்ணீரால் அதிகம் பாதிக்கப்படாத தடுப்புச் சுவர்கள் போன்றவை வழங்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

நீண்டகாலத் திட்டமாகக்குடிசைமாற்று வாரியங்கள்மூலம் வீடுகள் கட்டிக்கொடுத்தல், மக்களுடைய பொருளாதார அபிவிருத்திக்காக சிறு தொழில்களும் கைத்தொழில்களும் பகுதிநேர வேலைகளும், வேலையற்றோருக்கு ஏதேனும் தொழில் பயிற்சியும் கொடுக்கும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுகின்றன. மேலும் கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கும், உடல்நிலை, மன நிலை வளர்ச்சிக்கும் ஏற்றவிதத்தில் பொழுதுபோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

குடிசைவாழ் மக்கள்தொகை மிக அதிகமாக இருக்கிறது. நகர சமுதாயத்தில் பல சிக்கல்களுக்குக் காரணமாக வறுமையும் நிரந்தரத் தொழிலின்மையும் குடும்பப் பிளவும் குடிசைப் பகுதியிலே அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே, நகர முன்னேற்றம் குடிசைப்பகுதி மக்கள் முன்னேற்றத்தையும் அவர்கள் நலவாழ்க்கையையும் முக்கியமாக ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும். இதற்காக உலக வங்கியும் மாநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவித் தொகை வழங்கும்பொழுது நலிந்தோர் நலவாழ்வுத் திட்டத்தையும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. சமுதாய ரீதியாக நோக்கினும் சமுதாயத்தில் வசதிமிக்க மக்களைத் தன்னகத்தே கொண்ட நகரத்தில் கணிசமான அளவு மக்கள் புறக்கணிக்கப்பட்டு ஒதுங்கி வாழும் நிலை சமதர்ம சமுதாய அடிப்படைக்கே ஏற்றதல்ல. குடிசைவாழ் மக்கள் பல இன்றியமையாத வேலைகளைச் செய்பவர்களாகவும் நகரப் பொருளாதாரத்திற்கு அடிப்படைத் தொண்டர்களாகவும்

விளங்குகிறார்கள். எனவே, நகரப் பொருளாதார நோக்கிலும், சமுதாய நோக்கிலும், நல்வாழ்வு நோக்கிலும், இவர்களுடைய அடிப்படைத் தேவைகள் அரசாங்கத்தின் கடமையாகிறது. இவர்கள் வாழ்க்கையை ஒரு பிரச்சனையாகவும் கேள்விக் குறியாகவும் நோக்காது நம் உடம்பிலுள்ள இன்றியமையாத ஓர் அங்கம் என்றும் அதன் பாதுகாப்பிற்கு ஓர் அங்கி கொடுப்பதுபோல் நல்வாழ்வு திட்டத்தின் ஒரு பகுதியாக குடிசைவாழ் மக்களின் நல்வாழ்வுப் பணிகள் செயல்படவேண்டும்.

நகரத் திட்டம் (Town Planning)

எங்கு வளர்ச்சி மெதுவாக இருக்கிறதோ அங்கும், எங்கு வளர்ச்சி மிக வேகமாக இருக்கிறதோ அங்கும் திட்டமிட்டுச் செயல்படுதல் அவசியம். முன்னதில் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கவும் பின்னதில் வளர்ச்சி சமுதாயத்தின் எல்லா அங்கங்களிலும் ஒரே அளவாக அமைந்து முழு வளர்ச்சி பெறுவதற்காகவும் திட்டம் தேவையாகிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்தே நகரத் திட்டங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன. அக்காலத்து நகரங்கள் வாணிப நிருவாக மையங்களாகத்தான் முக்கியத்துவம் பெற்றன. இன்றைய நகரங்கள் இச்செயல்பாடுகளுடன் தொழில்துறையிலும் பல சமூகத் தொண்டு மையங்களாகவும் பணியாற்றுகின்றன. முன்பைப்போல் பல மடங்கு வேகமாக வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படுவதால் அத் திட்டங்கள் நல்ல பலன் கொடுப்பதில்லை. அவை பலவிதமான கட்டுப்பாடுகளையும் தடைகளையுமே மையமாகக் கொண்டு செயல்படுகின்றன.

நகரியத் திட்டம் (Urban Planning)

நகரியங்களின் திட்டத்தில் முக்கிய அங்கம் எதிர்காலத்தைக் கணக்கிட்டுத் தேவைகளை மதிப்பிட்டு அவைகளைச் செயல்படுத்தத் திட்டம் தீட்டி ஒழுங்குபடுத்துவது. நகரியத் திட்டங்கள் நகரங்களின் எல்லைக்கு அப்பால் வாழும் கிராம மக்களையும் அவர்களின் வாழ்க்கை நிலையில் நிகழவிருக்கும் மாற்றங்களையும் கணக்கில் கொண்டு நகர கிராமத் தேவைகளைச் சேர்த்து மாநகரத் திட்டங்களாகச் செயல்படுத்துவது. இது நகரங்களையும் நகரின் புறத்தே உள்ள நகர்ப் புறப் பகுதிகளையும் அவற்றின் அருகில் உள்ள கிராமங்களையும் சேர்த்து ஒருங்கிணைத்த எதிர்கால வளர்ச்சியையும் கணக்கிட்டுத் தொலைநோக்குத் திட்டங்கள் கொடுக்கும்.

எதிர் காலத்தில் ஊரக—நகரக மக்களிடையே நெருக்கமும் பிணைப்பும் அதிகமாகும். இதனால் ஒன்றையொன்று பாதிக்கும் நிலைமை ஏற்படும். எனவே, அவை இரண்டையும் இணைத்து ஒவ்வொரு வட்டாரங்களும் ஒருங்கிணைந்த திட்டங்களே அதிகமாகத் தேவைப்படும்.

வினாக்கள்

1. இந்திய சமுதாய வளர்ச்சியை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
2. தனியார் முயற்சியால் ஏற்பட்டுள்ள ஊரிய வளர்ச்சியின் சாதனங்கள் எவை?
3. சமுதாய வளர்ச்சியில் ஊராட்சியின் பங்கு யாது?
4. நகரத் திட்டங்களின் முக்கியத்துவத்தை விவரி.

16. இந்தியச் சமுதாயத்தின் குறிக்கோள்

இந்தியா மக்களாட்சி முறையில் அமைந்த குடியரசு. இதில் குடிமக்கள் எல்லோருக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய நீதியும்; எதையும் சிந்திப்பதற்கும், பேசுவதற்கும், நம்பு வதற்கும், நம்பிக்கை வைப்பதற்கும், வணங்குவதற்கும் உரிமை யும்; எல்லோருக்கும் சமவாய்ப்பும் தகுதியும் பெற்றுக் கொடுப் பதும் தனிமனித மரியாதையையும் சகோதரத்துவத்தையும் தேசிய ஒற்றுமையையும் ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாடு.

மக்களாட்சி

மக்களாட்சியை மக்களுக்குடைய, மக்களுக்காக மக்களால் ஆன அரசாங்கம் என்பர். இதன் இரு முக்கியக் கூறுகளாக சுதந் திரமும் சமத்துவமும் அமையும். மக்கள் சுதந்திரத்தைக் கட்டுப் படுத்தும் சட்டங்கள் யாவும் மக்கள் இணக்கத்தைப் பெற்றே செயல்படுத்தப்படும். சமதர்ம சமுதாயம் அமைய அடிப்படை யாக எல்லோருக்கும் வாழ்க்கை வசதிகள் ஏற்படவேண்டும். ஓட்டுப்போடும் வாக்குரிமைச் சுதந்திரம் மட்டும் போதாது. எல் லோருக்கும் வேலைவாய்ப்பும் அடிப்படைச் சுதந்திரமும் பெருகு வதற்கு வாய்ப்புகள் வேண்டும். மக்களிடையே அனைவரையும் சகோதர சகோதரிகளாகக் கருதும் எண்ணமும் வளரவேண்டும்.

நம் நாட்டில் பிரதிநிதித்துவ மக்களாட்சி நடைபெறுகிறது. மக்கள் அதிகமாக இருப்பதால் நேரடியாகக் கலந்து செயல்பட முடியாது எனவே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் செயல்படும் மக்களாட்சி முறை இருக்கிறது. இங்கு மக்க ளுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற தொண்டுள்ளம் கொண்ட தொண்டர்களும் அவர்களின் தலைவர்களும் தேர் தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவர். இவர்கள் சார்ந்துள்ள தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளில் பெரும்பான்மை பெற்ற கட் சியோ அல்லது கட்சிகளின் கூட்டு அணியோ அரசு அமைக்க அழைக்கப்பட்டு அரசு அமைத்துச் செயல்படும். அம்முறையில் குடிமக்கள் தேர்தல் காலத்தில் மட்டும்தான் அரசைக் கட்டுப் படுத்த முடியும்.

நம் நாட்டில் மக்களாட்சிமுறை மூன்றடுக்குகள் கொண்ட மக்களாட்சி முறையாக அமைந்துள்ளது. இதன் மூன்று அடுக்குகள் (1) நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மைய அரசு, (2) மாநிலச் சட்டமன்றங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மாநில அரசுகள், (3) ஊராட்சி மன்றங்களையும் நகராட்சி மன்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் உள்ளாட்சித்துறை என்பன.

மக்களாட்சி முறையின் சிறப்புகளாகச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், மக்கள் மனமறிந்து சம்மதம் பெற்றுச் செயல் படுதலையும் குறிப்பிடலாம். இம்முறை அரசாட்சியில் சிறுபான்மையினருக்கும் சமூகத்தில் நலிந்தோருக்கும் தகுந்த பாதுகாப்புகள் கொடுக்கப்படுகின்றன. இது புரட்சிக்கு இடம் கொடுக்காது எல்லா மக்களும் பங்குபெறும் அரசு முறையாகும். இம்முறையில் மக்கள் அறிவு வளர்ச்சிக்கும் நிருவாகத்தில் மக்கள் பங்கு பெறுவதற்கும், பொறுப்புடன் மக்கள் செயல்படுவதற்கும், சுயநலமின்றிப் பொதுநலம் விரும்பித் தொண்டு செய்வதற்கும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

சமயச் சார்பற்ற மக்களாட்சி

பழங்காலத்தில் சமயம் ஒரு முக்கிய சக்தியாக விளங்கியது. மக்கள் பின்பற்றும் சமயநெறிகளை மன்னர்கள் பரப்பும் நிலை காணப்பட்டது. அரசாங்கத்திலேயே சமயத் தலைவர்களுக்கு ஒரு முக்கிய பொறுப்பான இடம் கொடுக்கப்பட்டது. கிறித்துவர்கள் அதிகம் வாழ்ந்த ஐரோப்பா கண்டத்தில் ரோமாபுரியில் வாழ்ந்த போப் கோலோச்சும் அளவுக்கு கத்தோலிக்க மன்னர்களெல்லாம் போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தனர்.

இங்கிலாந்து நாட்டில் கிறித்துவ சமயத்தின் ஒரு பிரிவான பிராட்டெஸ்டெண்டு (Protestant) சமய இயக்கம் ஆரம்பித்த பிறகு போப்பினுடைய ஆளுகைக்கு உட்படாத அரசு அமைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் கிறித்துவத் திருச்சபைக்கு (Church of England) உட்படாத சமயத்தவர்களின் உரிமைப் பாதிப்பு படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது.

இந்தியாவில் பழங்காலம் முதற்கொண்டு இந்து அரசர்கள் தாங்கள் வழிபட்ட சமயமுறையை வளர்க்கப் பாடுபட்டனர். பிற சமய முறைகளைத் தடுத்து நிறுத்தியதில்லை. பௌத்த சமயத்தைப் பரப்புவதில் தனிசிறந்து நின்ற அசோகப் பேரரசர் துறவிகளுக்குப் பொருள் கொடுத்து அஜ்விகா

(AJIVIKA) குகையைக் கட்டுவித்தார். அரசர்களும் சமயத் தலைவர்களும் 'நாம் வளர்வோம், பிற சமயத்தவர்களையும் வளர விடுவோம்' என்ற சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டனர். பின்னர் வந்த முஸ்லிம்கள் ஆட்சியிலும் இந்த சகிப்புத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்த அரசர்கள் இருந்தனர். பக்தி உணர்வு தூண்டப்பட்ட காலத்தில் இரு சமயங்களும் இணைந்து பக்தியைப் பரப்பியதைக் காணலாம். இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்திலும் இதே சகிப்புத்தன்மையைக் காண்கின்றோம்.

முஸ்லிம் அரசர்களும் ஆங்கில அரசும் பொதுப் பணத்திலிருந்து தாங்கள் சார்ந்திருந்த சமயத்தின் வளர்ச்சிக்காக முறையே சிறப்பு மிக்க மசூதிகளையும் வேதக்கோயில் (Church) களையும் கட்டுவித்துத் தம் சமயங்களைச் சார்ந்தவர் வழிபாட்டிற்கு வகை செய்தனர். இந்து அரசர்களும் முஸ்லிம் அரசர்களும் கிறித்துவ ஆளுனர்களும் மற்ற சமயத்தவர் வழிபாட்டையும் சமய நம்பிக்கையையும் மற்றும் சமயச் சடங்குகளையும் அனுமதித்து வந்துள்ளனர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கடைசிக் காலத்தில் பிரித்தாளும் கொள்கையின் இலக்கணமாகத் திகழ்ந்த ஆங்கில அரசு இந்தியர்களிடையே இந்துக்கள், முஸ்லிம்கள் என்ற வேற்றுமையைத் தூண்டிவிட்டனர். தேசிய எழுச்சியில் ஏற்படுத்தப் பட்ட வேற்றுமை உணர்வைப் பயன்படுத்தித் தங்கள் ஆட்சியை இந்தியாவில் தக்க வைத்துக்கொள்ள முயன்றனர். சுதந்திர தாகத்தில் தவித்த தேசத் தலைவர்கள் பாகிஸ்தான் என்ற முஸ்லிம் நாடு உருவாவதைத் தவிர்க்க முடியவில்லை இந்தியாவில் வேறு பல பகுதிகளிலும் வாழ்ந்த 100 மில்லியன் முஸ்லிம்கள், இந்தியர்கள் என்ற மேலான தேசிய உணர்வு கொண்டிருந்தனர். இந்த மேலான தேசிய உணர்ச்சி மயமான ஒருமைப்பாட்டுப் பின்னணியில்தான் நம் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாகியது. இந்தியர்கள் என்ற தேசிய உணர்வில் எல்லா சமயத்தவர்களும் சங்கமமாகிய ஒருமித்த தன்மைக்கு உருவம் கொடுக்கவேண்டிய சூழ்நிலையில்தான் இந்தியா ஒரு சமயச் சார்பற்ற மக்களாட்சி என்பது உருவானது.

சமயச் சுதந்திரமும் சமயச் சார்பின்மையும்

இந்திய அரசு மக்கள் பின்பற்றும் எல்லா சமயங்களிடையேயும் பாகுபாடு காட்டாது நடுநிலைமை வகிக்கிறது. இங்கு அரசாங்

சமயம் என்பது கிடையாது. அரசு ஒருபொழுதும் அரசாங்க சமயம் என்று எச்சமயத்தையும் வைத்துக்கொள்ளாது. எந்த சமயத் திற்கும் தனிச் சலுகையும் கொடுக்காது. யாரையும் எந்த சமயத்திற்கும் எந்தவிதமான ஆதாரம் கொடுக்கச் சொல்லியும் தூண்டாது. முழுவதும் அரசுப் பணத்தில் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் சமயக் கல்வி கற்பிக்காது. இந்தியாவில் உள்ள கல்வி நிலையங்கள் மாணவர்கள் அல்லது அவர்களின் பாது காவலர்களின் முன் அனுமதியின்றி சமயக் கல்வியைக் கற்கும்படி கட்டாயப்படுத்த முடியாது.

இந்தியர்கள் தாங்கள் விரும்பும் எந்த சமயத்தையும் பின்பற்ற வும் பிரச்சாரம் செய்யவும் சுதந்திரம் பெற்றவர்கள். இந்தச் சுதந்திரம் பொது ஒழுங்கையும், நடைமுறையையும், சுகாதாரத்தையும் பாதிக்காத வகையிலும், குற்றத்திற்கும் தீய சக்திகளுக்கும் துணைபோகாத வகையிலும் செயல்படுத்தப் படவேண்டும். சமயக் காரியங்களுக்கும் தானதருமங்களுக்காகவும் சொத்து சேர்ப்பதற்கும், அமைப்புகளை உருவாக்கி நடத்து வதற்கும் எல்லோருக்கும் உரிமை உண்டு.

இந்து சமயத்தின் பல உட்பிரிவுகளுக்கிடையே உள்ள பொது நிறுவனங்களையும், பொதுச் சொத்துகளையும் ஒழுங்காக நிருவகிக்க ஏற்ற அமைப்புகளை உண்டுபண்ணவும் சமூகச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும் அரசுக்கு உரிமை உண்டு.

சமதருமம்

பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு உலகில் பல பொருளாதார அமைப்புகளும் கொள்கைகளும் செயல்படு கின்றன. காலச் சுழற்சியில் ஒரு கொள்கை போற்றப்படுவதும் பின் மாற்றப்படுவதும், முற்றிலும் புதிய கொள்கை உருவாவதும் இயல்பு. பழங்காலத்தில் பரவலாக இருந்த பொருளாதாரக் கொள்கை பழங்குடி முதலாளித்துவமாகும், மக்கள் முன்னேற்றமும் வணிக வளர்ச்சியும் ஏற்பட்ட காலத்தில் முதலாளித்துவம் விரிவுபட்டு தனியார் முதலாளித்துவமும். அரசு முதலாளித்துவமும் செயல்பட்டன. தொழிற் புரட்சிக்குப் பிறகு தொழிற்சாலையை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகள் உருவாகிச் செயல்படத் தொடங்கின. தொழிலாளி யும் முதலாளியும் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணோட்டத்தில் நோக்கவும் செயல்படவும் முனைந்தனர். இவர்களுள் எவர் அரசின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெறுகின்றனரோ அவர்களின் கொள்கைகளுக் கிசைந்த பொருளாதார அமைப்பு

உருவாகியது. முதலாளிகளையும் தனியார் சொத்தையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவக் கோட்பாடும் தொழிலாளர்களையும் அரசாங்கத்தின் பொதுச் சொத்துடமையையும் அடிப்படையாகக் கொண்ட பொதுவுடமைக் கோட்பாடும் உலகெங்கும் செயல்படத் தொடங்கின. இவற்றிற்கிடையே தனியார் கூட்டுறவு முயற்சிகளும் அதன் பலனாக வேற்றுமைகள் குறைந்து கூட்டுறவால் தொழில் உறவுகளில் சிக்கல்கள் குறைய பொருளாதார அமைப்புகளில் கூட்டுறவு இயக்கங்களும் தோன்ற ஆரம்பித்தன.

இந்தியா நம் அரசியல் சமூகக் கொள்கைகளுக்கு இயைந்த நடுநிலைப் பொருளாதாரக் கொள்கை ஒன்றைக் கடைபிடிக்க விரும்பியது. முதலாளித்துவ ஆதிக்கம் குறைந்ததாகவும் தனி மனிதனின் சொத்துரிமை மிகவும் பாதிக்காததுமான சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்த முயன்றது. இம்முயற்சியின் அடித்தளமாகவும் நம் பொருளாதாரத்தின் மையமாகவும் சம தருமத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

நம் பொருளாதாரத்தில் பொதுத்துறை (Public Sector) என்றும் பொதுவும் தனியாரும் சேர்ந்த கூட்டுத்துறை (Joint-Sector) என்றும் தனியார் துறை (Private Sector) என்றும் வரையறுத்துச் செயல்படுகிறோம். சில கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டு தனியார் சொத்துரிமை வழங்கியிருக்கிறோம். தனி முயற்சியும் கூட்டு முயற்சியும் முற்றிலுமே அரசாங்க முயற்சியும் கொண்டு நாட்டு வளத்தைப் பெருக்கவும் அவற்றைச் சமதர்ம அடிப்படையில் பங்கிட்டுப் பலன் அனுபவிக்கவும் பல்வேறு பொருளாதார அமைப்புகளை உருவாக்கச் செயல்படுகிறோம். இச் செயல்கள் மூலம் நாட்டிலுள்ள எல்லோருக்கும் அடிப்படை உரிமைகளோடு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் கிடைப்பதற்காகப் பாடுபட்டு வருகிறோம். ஏற்றத் தாழ்வற்ற சமதருமச் சமுதாயம் அமைவதையே நம் சமுதாயக் கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

தேசிய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் (National Unity and Integrity)

இந்தியா ஒரு பரந்து விரிந்து கிடக்கும் பெரிய நிலப்பகுதி. இங்கு வற்றாத ஜீவநதிகளும் உண்டு. வறண்ட ஆறுகளும் உண்டு. எப்பொழுதும் மழை பெய்துகொண்டிருக்கும் பகுதியும் மழை பெய்யாத பகுதியும் உண்டு. பனிமலைப் பகுதியும் உண்டு. பாறை வெடிக்கும் அளவு வெயில் அடிக்கும் பகுதியும் உண்டு. வெயிலின் வெப்பமும் குளிரின் கொடுமையும் வேண்டிய அளவு உண்டு. காடு

முரடான காடுகளும் நல்ல சமவெளியும் உண்டு. காட்டு நிலமும் வளமான கனிகளும் இங்கு உண்டு.

நம்நாட்டு மக்களில் திராவிட இனத்தையும் ஆரிய இனத்தையும் மங்கோலிய இனத்தையும் இவ்வினங்களின் கலவைகளையும் காணலாம். இந்துக்களிடையே சாதி அமைப்பும் ஒவ்வொரு சாதியிலும் உட்பிரிவுகள் பலவும் உள்ளன. இவைகளினிடையே ஏற்றத் தாழ்வும், தனித்தியங்கும் தன்மையும் நீதிநெறி வழுவா பிற சாதிகளில் கலவா கொள்கைகளைக் கடைபிடிப்போருமுண்டு. சாதிகளின் பெயரால் சங்கங்களும், செயற்குழுக்களும் வட்ட, மாவட்ட, மாநில, ஏன் அகில இந்திய மாநாடுகள் நடத்தும் அளவுக்கு ஒட்டுறவும் உள்ளன. சாதிப் பற்று சில சமயம் சாதிவெறியாகி சாதிச் சண்டைகளிலும் கலவரங்களிலும் கொண்டுபோய்விடுகிறது.

சமயச் சார்பற்ற இந்நாட்டில் உலகத்துச் சமயங்களெல்லாம் தழைத்தோங்கக் காணலாம். இந்துக்களும், முஸ்லிம்களும், கிறித்துவரும், சீக்கியரும், பௌத்தரும், சமணத்தவரும் இன்னபிற சமயத்தவரும் சகல உரிமைகளோடு இந்நாட்டில் சமயப் பிரச்சாரம் செய்யலாம். சமயத்தின் அடிப்படையில் தான தருமம் மற்றும் கல்வி போன்ற எப்பணியையும் ஆரம்பித்து நடத்தலாம். மானிடர் எல்லோருக்கும் இங்கு சமய உரிமை உண்டு. சமயங்களினிடையே சண்டையும், சமயங்களுள் சண்டையும் வகுப்புக் கலவரங்களாக வடிவெடுத்ததற்கு ஆதாரமும் நம் சமூகத்தில் உண்டு.

தாய்மொழிகள் பல உள்ளன. அவற்றின் உட்பிரிவுகள் மிகப் பல. அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மொழிகள் 15. அவற்றுள் 13 மொழிகள் மாநிலங்களில் அரசு மொழிகளாகக் கோலோச்சுகின்றன. ஆனால் தேசிய அரசு மொழியாகிய இந்திக்கு எதிர்ப்புக் கூறி ஆங்கிலமும் இணைமொழியாக இருக்கப் போராடி உறுதி பெற்றவர் பிற மொழியினர். தத்தம் மொழி வளர்ச்சிப் போட்டியிலே பிற மொழிகளை வெறுக்கும் காழ்ப் புணர்ச்சி சில நேரங்களில் காட்டப்படுகிறது. உணர்ச்சியைத் தூண்டும் உணர்வுகளுள் மொழியுணர்வும் ஒன்று.

ஏற்றத்தாழ்வின் இலக்கணமாய் இந்தியரில் பலருண்டு. பட்டினியால் பதைபதைக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களும் பட்டாடையே உடல் உறுத்தும் என்று சுகம் காணும் பணக்காரர்கள் சிலரும் இந்நாட்டில் உள்ளனர். செல்வத்தில் பாதியை

ஐந்து சதவிகித மக்கள் அனுபவிக்க ஐம்பது சதவிகித மக்கள் ஐந்து சதவிகித வருமானத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் பரிதாப நிலை இந்நாட்டில் உண்டு.

இந்நாட்டில் புவியியல் அமைப்புப்படி வட்டாரப் பற்றுகள் பல உண்டு. தெற்கு கிழக்கு என்றும், மேற்கு வடக்கு என்றும் திசைகளில்வாழ் மக்களிடையே பற்று உண்டு. மாநிலங்கள் பல வற்றில் மாநிலப் பற்று மலர்ந்திருத்தலைக் காணலாம். மாநிலம், மாவட்டம் மற்றும் வட்டங்களினிடையேயும் பற்றின் பிடிப்பைக் காணலாம். பற்றின் பிடிப்பால் ஒருவகையில் ஒற்றுமையும் ஒருங்கிணைந்து செயல்படும் தன்மையும் வளர மற்றைய வகுப் பினர்மேல் வெறுப்பும் வேற்றுமையும் ஆத்திரமும் அவிழ்த்து விடப்படும்.

வாலிபர்கள் மத்தியிலே படித்தோருக்கும் படிக்காதவருக்கும், தொழில் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும், நகரத்தவருக்கும் கிராமத்தவருக்கும் வேலையின்மை நிலவுகிறது. வேலையில்லா இளவல்கள் வாழ்க்கையிலே பிடிப்பற்று வெறுப்புற்று வீணே பொழுதுபோக்கும் நிலைமை நிலவுகிறது.

இவ்விதமாக மலைபோல் வேற்றுமைகள் காணப்படினும் பல அடிப்படை ஒற்றுமைகள் இந்திய நாட்டில் இருப்பதால்தான் ஒற்றுமை உயர்ந்தோங்குகிறது. இந்திய ஒற்றுமைக்கு எதிராகப் பல சக்திகள் வேலை செய்தாலும் ஆழ்கடலின்மேல் அலைபோல் அச்சக்திகளின் முயற்சி அமைகிறது. இந்தியர்களின் ஒற்றுமை ஆழ்கடலின் அமைதிபோல் இருக்கிறது. நம்முடைய வரலாறும், பண்பாடும், சமூக மதிப்பும் இந்தியாவெங்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது. இந்தியப் பண்பாட்டில் ஆன்மிக ஒற்றுமை உணர்வும், வளைந்து கொடுக்கும் தன்மையும், சகிப்புத் தன்மை யும், வேற்றுமையில் ஒற்றுமை நன்கு வேரூன்றிய தன்மை காணும் பண்புகள். நம் பொருளாதார வளர்ச்சிக்கு ஒற்றுமை அடிப்படை யாக இருக்கிறது. நம்நாட்டில் தொழில் வளர்ச்சியும் அறிவியல் பொறியியல் முன்னேற்றமும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டவை. ஒற்றுமையே நம் மக்களிடையே இடப் பெயற்சிக்கு வழி செய்கிறது. வெவ்வேறு வட்டாரங்களின் மக்களிடையே காணப்படும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்க நம் நாடு எடுத்துக்கொள்ளும் சிறப்பு முயற்சிகள் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன. அகில இந்தியாவையும் ஒன்றாகக் கருதி நம் நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் அமைத்தலும் அவற்றைச் செயல்படுத்தலும் நாட்டு ஒற்றுமைக்கு வலுவூட்டுகின்றன.

இந்திய மக்கள் மேலெழுந்தவாரியாகத் தெரியும் வேற்றுமை யின்கீழ் அடிப்படையாக இருக்கும் ஒற்றுமையை நன்கு அறிந்த வர்கள். எனவேதான் இந்தியாவில் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற தத்துவம் நம்பப்படுகிறது.

தேசிய ஒருமைப்பாடு என்பது இந்தியா ஒரு நாடு என்ற கருத்தை வெளிக்கொணர்வதற்காக நம் நாட்டிலுள்ள எல்லா சக்திகளையும் இணைப்பது. இது நம் நாட்டிலுள்ள எல்லா சாதி சமய மற்றும் வாழ்க்கை முறைகளுக்கும் ஒரே மாதிரி மதிப்பைக் கொடுக்கிறோம் என்பதைக் காட்டும். நம் எல்லோ ருக்கும் பொதுவான தேசத்தை முதன்மையாகக் கொண்ட இலட்சியம் வேண்டும். வெவ்வேறு சாதி, சமய, சமூக, மாநில, வட்டார மக்களிடையேயும் நாம் எல்லோரும் ஒன்று என்ற உணர்ச்சி இருக்கவேண்டும்.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாக சகிப்புத்தன்மையும், கூட்டுறவும், ஒற்றுமையும், ஒன்றி வாழ்தலும் அமைகின்றன. மேலும் உணர்ச்சிபூர்வமான ஒருமைப் பாடும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அவசியம். மக்களுடைய இதயத்தாலும் எண்ணத்தாலும் நாம் எல்லோரும் ஒன்றே என்ற எண்ணத்தைப் பழக்கப்படுத்துதல் உணர்ச்சி ஒருமைப்பாடு எனப்படும்.

தேசிய ஒருமைப்பாடு அரசியல் அல்லது பொருளாதார எண்ணத்தைவிட மனநிலையையே அதிகமாகக் கொண்டுள்ளது. இது உணர்வுகளையும், எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் இணைத்து தேசியத்தை அறிந்துகொள்வதைக் குறிக்கிறது. இது நாட்டு ஒற்றுமையைத் தகர்க்கும் வகுப்புவாதம் மற்றும் பிரித்துப் பேசும் தன்மைகளை மறுத்தலையும் குறிக்கும்.

நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள் கூறியதைப்போல, தேசிய ஒருமைப்பாடு என்பது செங்கல்லையும் சுண்ணாம்பையும் கொண்டு கட்டப்படுவ தல்ல. சுத்தியலும் உளியும் கொண்டு செதுக்கப்படுவதுமல்ல. மக்களுடைய இதயத்தில் ஆழமாகப் பதியும்படியும் எண்ண ஓட்டத்தில் நிலைத்து நிற்கும்படியும் படிப்படியாகக் கல்விமூலம் வளர்க்கப்படவேண்டிய உணர்வாகும்.

நமது தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் கெஜேந்திரகட்கரின் (Gajendra Gadkar) தலைமையில் அமைந்த துணைக் குழு

1968 ஆம் ஆண்டில் கல்வியானது ஆரம்பக் கல்வி முதல் பட்ட மேற்படிப்புக் கல்வி நிலை வரை தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி,

1. இந்தியர்களின் இந்தியத் தன்மையையும், ஒற்றுமையை யும், கட்டொருமைப்பாட்டையும் (Solidarity) உண்டு பண்ணும் வகையில் அமையவேண்டும்.
2. குடியாட்சிக் கொள்கையில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும்.
3. இன்றைய இந்தியச் சமுதாயத்தை நவீன சமுதாயமாக்க உதவ வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

நாமும் இந்தியச் சமுதாய அடிப்படையையும் சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சனைகளையும் கற்றுத் தெளிந்ததன் மூலம் ஒற்றுமை அடிப்படையிலான ஒருமைப்பாட்டைக் கடை பிடிப்போம்.

வினாக்கள்

1. சமதர்ம சமுதாயம் என்றால் என்ன?
2. சமூகச் சார்பிலாக் கொள்கையின் தன்மைகள் யாவை?
3. மக்களாட்சியின் சிறப்பியல்புகளைத் தொகுத்தெழுது.
4. இந்தியாவில் ஒருமைப்பாட்டைக் கொண்டு வரும் கருத்து களை விளக்கு.

கலைச்சொற்கள்

A

Accomadation — இசைவுபடுத்தல்
Adoption — தத்து
Age composition — வயது அமைப்பு
Agencies — செயலிகள்
Anuloma — உயர்சாதி மணமுறை
Arbitration — நடுவர் தீர்ப்பு
Aristocracy — பிரபுக்கள் ஆட்சி
Aspects — அம்சங்கள்
Assimilation — இசைவுபடல்
Association — நிலையம்
Associational process — இணைக்கும் சொற்பாங்குகள்
Attitude — மனப்பான்மை
Authority — அதிகாரம்
Avoidance — தவிர்ப்பு
Avunculate — தாய்மாமன் உரிமை

B

Barbaric — காட்டுமிராண்டி நிலை
Behaviour — ஒழுகலாறு
Belief — நம்பிக்கை
Biarchal family — இருபாலார் ஆட்சிக் குடும்பம்
Bilateral kinship — இருவகை சார்பான உறவு
Birth rate — பிறப்பு விகிதம்
Bureaucracy — அதிகாரவர்க ஆட்சி

C

Caste law — சாதி விதிமுறை
Cells — உயிர்மங்கள்
Ceremonies — சடங்குமுறைகள்
Charismatic — காந்த சக்தி சார்ந்த

Charismatic authority — காந்த சக்தி சார்ந்த அதிகாரம்
City — நகரம்
Civilisation — நாகரிகம்
Clan — கால்வழி, குலம்
Class — வகுப்பு, வர்கம்
Classical evolution — பண்டைய பரிணாமம்
Closed system — மூடிய முறை
Coersion — கட்டாயப்படுத்தல்
Collateral kinship — ஒருதலை விட்ட உறவுமுறை
Collective represetatnion — கூட்டுப் பிரதிநிதித்துவச் சின்னம்
Communal — வகுப்புவாதம்
Communism — பொது உடைமை
Community — சமுதாயம்
Community sentiment — சமுதாய உணர்வு
Competition — போட்டி
Complex — தொகுப்பு
Complex society — சிக்கலான சமூகம்
Component — கூறு
Compromise — உடன்பாடு
Conciliation — சமரச இணக்கம்
Concrete — நிதர்சனமாக
Confiict — பூசல்
Conjugal family — தாம்பத்தியக் குடும்பம், கருக் குடும்பம்
Consanguine family — குருதி உறவுக் குடும்பம்
Consumption — நுகர்தல்
Criminal tribe — குற்றப் பரம்பரை
Cult — வழிபாட்டு மரபு
Cultural complex — பண்பாட்டுத் தொகுதி
Cultural lag — பண்பாட்டுப் பின்னடைவு
Cultural trait — பண்பாட்டுக் கூறு
Cultural variability — பண்பாட்டு உலைவு
Culture — பண்பாடு
Custom — வழக்கம்

D

Death rate — இறப்பு விகிதம்
Decent — வம்சாவளி

Democracy — குடியாட்சி
Demography — மக்கள் தொகை ஆய்வு, மக்கள் தொகையியல்
Dependence — சார்ந்திருத்தல்
Dependency feeling — சார்பு உணர்வு
Deviant — நெறி பிறழ்ந்த
Division of labour — வேலைப் பங்கீடு
Divorce — மணமுறிவு
Dowry — வரதட்சணை

E

Economic determinism — பொருளாதார நிர்ணயம்
Ethnic — மரபு இனக் குழு
Empirical Science — செய்முறை சார்ந்த அறிவியல்
Endogamy — அகமணம்
Equalitarian family — சமத்துவக் குடும்பம்
Exogamy — புறமணம்
Expectation — எதிர்பார்த்தல், எதிர்பார்ப்பு
Extended family — விரிந்த குடும்பம்

F

Factors — காரணிகள்
Family — குடும்பம்
Family of origin — பிறந்தகம்
Family of procreation — வேட்டகம்
Fantacy — மனக்கண் வடிவம்
Feudalism — நிலமானியமுறை
Field worker — களப்பணியாளர்
Folk lore — மக்கள் மரபியல்
Folk ways — நாட்டவர் வழக்குகள்
Formal method — வடிவம்சார் முறை
Forms — வடிவங்கள்

G

Germ — துன்மம்
Government — அரசாங்கம்
Group — குழு
Group Marriage — குழு மணம்
Group relation — குழு உறவு

H

Hierarchy — வரிசைக் கிரமம்
Homogeneous — ஒரே மாதிரியான
Human ecology — மனிதச் சூழ்நிலையியல்
Hypergamy — உயர்சாதி மணம்
Hypogamy — இயற்கை ஒவ்வாத மணம்

I

Ideal — தேர்ந்த
Ideas — எண்ணங்கள்
Imitative magic — ஒப்பு மாந்திரீகம்
Incest taboo — முறைக் காப்புணர்ச்சித் தடை
Industrial society — தொழிற் சமூகம்
Industrialisation — தொழில்மயமாதல்
Infant mortality — சேய் இறப்பு
Informal — விதிமுறை சாரா
Ingroup — அகக் குழு
Inheritance — சொத்துரிமை
Institution — நிறுவனம்
Interaction — ஊடாட்டம், உறவு தொடர்பு
Interest — பற்று
Isolate — தனிமர்

J

Joint family — கூட்டுக் குடும்பம்
Joking relations — கேலிசெய்யும் உறவுகள்

K

Kinship — உறவுமுறை

L

Levirate — மதனி மணம்
Life expectancy — ஆயுட்காலம்
Locality — வட்டம்

M

Major — பெரும்படியான
Marriage — திருமணம்

Mass	—	பொருண்மை
Mass media	—	பொதுமக்கள் தொடர்பு சாதனம்
Mate	—	துணை
Material	—	ஆக்கப் பொருள்கள்
Material culture	—	பொருள்சார் பண்பாடு
Maternal mortality	—	தாய்மார்களின் இறப்பு
Matriarchal family		தாயாட்சிக் குடும்பம்
Matrilinial	—	தாய்வழி
Matrilinial family	—	தாய்வழிக் குடும்பம்
Matripotested family	—	தாய்த் தலைமைக் குடும்பம்
Mechanical Solidarity	—	இயந்திர ஒருமைப்பாடு, இயந்திரத்திற்குரிய கட்டொருமைப்பாடு
Metaphysical stage	—	நுண்பொருள்; கோட்பாட்டியல் துறை
Middleman	—	இடைத் தரகர்
Migration	—	குடியிருப்பு
Militant	—	பொருகிற
Militant Society	—	பொருகிற சமூகம்
Mobility	—	இயக்கம்
Modernisation	—	நவீனமய மாற்றம்
Monarch	—	தனிநபர் ஆட்சி
Monogamy	—	ஒருதார மணம், ஒரு துணை மணம்
Mores	—	வழக்கடிபாடுகள்

N

Neighbourhood	—	அண்டையம், அண்டை அயலார்
Non-formal	—	முறைசாரா
Non-material culture	—	பொருள்சாரா பண்பாடு
Norms	—	நெறிகள்
Nuclear family	—	கருக்குடும்பம்

O

Open system	—	திறந்த அமைப்பு
Organic analogy Organic analysis	—	உயிரினம் சார்ந்த ஒப்புமை

Organic solidarity — உயிரின ஒருமைப்பாடு
Organism — உயிரினம்
Origin of species — உயிரினங்களின் தோற்றம்
Out-group — புறக் குழு

P

Pardha — படுதா
Patriarchal family — தந்தை ஆட்சிக் குடும்பம்
Patrilinial — தந்தைவழி
Patrilinial family — தந்தைவழிக் குடும்பம்
Patripotestal family — தந்தைத் தலைமைக் குடும்பம்
Patterns — கோலங்கள்
Patterns of culture — பண்பாட்டுக் கோலங்கள்
Peer group — நண்பர் குழாம்
Personality — ஆளுமை
Polyandry — பல கணவர் மணம்
Positive — புது மெய்மை
Positive philosophy — புற மெய்மைத் தத்துவம்
Positive stage — புற மெய்மை நிலை
Poverty — ஏழ்மை
Poverty line — ஏழ்மைக் கோடு
Prescriptive Norms — ஆணையிடு நெறிகள்
Primary affinal — முதனிலை மண உறவு
Primary consanguine fine — முதனிலைக் குருதி உறவு
Primary group — முதனிலைக் குழு
Pritiloma — கீழ்ச்சாதி மணமுறை
Problem — பிரச்சனை
Process — செயற்பாங்கு
Profane — புனிதம் சாராத
Proscriptive — தடை நெறிகள், தடைப் படுத்தும் நெறிகள்
Prostitute — பரத்தை

R

Rank — படிநிலை
Rational legal authority — பகுத்தறிவுக்கொத்த சட்டம் சார்ந்த அதிகாரம்
Region — வட்டாரம்
Regionalism — வட்டாரப் பற்று

Religion — சமயம், மதம்
Rite — சடங்கு
Role — செயல்பாடு, பங்கு
Role-feeling — பங்கு உணர்வு
Rural — ஊரகம்

S

Sacred — புனிதம்
Sanctions — உறுதியீடுகள்
Secondary group — இடைநிலைக் குழு, வழி நிலைக் குழு
Sentiments — உணர்வுகள்
Sex ratio — பால் இன விகிதம்
Sib — கால்வழி, கோத்ரம்
Social consensus — சமூக இசைவு
Social contract theory — சமூக ஒப்பந்தக் கோட்பாடு
Social disorganisation — சமூக ஒழுங்கு குலைதல்
Social distance — சமூகச் சேய்மை
Social dynamics — சமூக இயக்கவியல்
Social evolution — சமூக பரிணாமம்
Social expectation — சமூக எதிர்பார்ப்பு
Social facts — சமூக மெய்மைகள்
Social heritage — சமூக மரபுரிமை
Socialization — சமூக மயமாதல்
Social morphology — சமூக வடிவமைப்பியல்
Social physiology — சமூக உடலியல்
Social process — சமூக செயற்பாங்குகள்
Social psychiatry — சமூக உள மருத்துவவியல்
Social relation — சமூக உறவு
Social solidarity — சமூகக் கட்டொருமைப்பாடு
Social statics — சமூக நிலையமைப்பியல்
Social stratification — சமூக அடுக்கமைப்பு
Social structure — சமூக அமைப்பு
Social values — சமூக விழுமியங்கள்
Society — சமூகம்
Sons of the soil — மண்ணின் மைந்தர்கள்
Sororate — மைத்துனி மணம்
State of nature — இயற்கை நிலை
Status — தகுதி நிலை, அந்தஸ்து

Strain — மன உளைச்சல்
Stratification — அடுக்கமைப்பு, சமூக தரப் பிரிவு
Subordinate — கீழ்நிலை
Superiodinate — மேம்பட்ட நிலை
Supernatural powers — தெய்விக சக்திகள்
Supreme court — தலைமை நீதிமன்றம்
Synthetic School — பல்பொருள் கருத்தினம்
System of positive politics — புறமெய்மைசார் அறிவியலின் அமைப்பு முறை

T

Taboos — தடைகள்
Technological factors — தொழில்நுட்பக் காரணிகள்
Technology — தொழில்நுட்பம்
Territorial — நில எல்லை
Tetrononyme — சேய்வழிப் பெயர்
Theological Stage — இறையியல் நிலை
Theory — கோட்பாடு
Thinking — சிந்தனை
Tissue or web — இழைமம்
Tolerance — சகிப்புத் தன்மை
Totalitarianism — சர்வாதிகாரம்
Traditional authority — மரபுசார்ந்த அதிகாரம்
Traits — தனிக் கூறுகள், கூறுகள்
Truce — உடன்பாடு
Twice bourn } — இருபிறப்பாளர்
Twija }

U

Unilateral kinship — ஒருதலை சார்பான உறவு
Units — அலகு
Urban — நகரகம்
Urbanisation — நகர்மயமாதல்

V

Values — மதிப்பீடுகள், விழுமியங்கள்
Venereal Disease — பாலின நோய்

W

We feeling	—	நாம் உணர்வு
Westernisation	—	மேற்கத்தியமயமாகுதல்
Wheel diagrame	—	சக்கரப் படம்
Widow marriage	—	விதவை மணம்

BIBLIOGRAPHY

Anderson, Walfred, A. and Parker, Frederic, B.—*Society*: Its *Organization and Operation*. New Delhi : Affiliated East-West Press, 1966.

Bierstedt Robert.—*The Social Order : An Introduction to Sociology*. 2nd ed. New York : Mc Graw-Hill Book Company, 1957.

Bottomore, T. B.—*Sociology* : *A Guide to Problems and Literature*. Ninth impression. London : Unwin University Books, 1970.

Coser, Lewis, A.—*Masters of Sociological Thought* : *Ideas in Historical and Social Context*. 2nd ed. New York : Harcourt Brace Jovanovich, 1977.

Cuber, John, F.—*Sociology* : *A Synopsis of Principles*. 5th ed. London : Vision Press, 1963.

Fichter, Joseph–H. *Sociology*. 2nd ed. Chicago: University of Chicago Press, 1971.

Ginsberg, Morris.—*Sociology*. London : Oxford University Press, 1934.

கிஸ்பர்ட், பாஸ்கல், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள். தமிழாக்கம்: ஜெ. நாராயணன், சென்னை : தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1964.

Green, Arnold, W. *Sociology* : *An Analysis of Life in Modern Society*, 4th ed. New York : Mc Graw-Hill Book Company, 1964.

Hedding, Daniel and Glick Leonard—*Introduction to Sociology*. Massachusetts : Addison - Wesley Publishing Company, 1976.

Horton, Paul, B. and Hunt, Chester, L.—*Sociology*. New York : Mc Graw-Hill Book Company, 1964.

Inkles, Alex. –*What is Sociology ? : An Introduction to the Discipline and Profession*. Englewood Cliffs : Prentice-Hall, 1964.

Koeing, Samuel.—*Sociology : An Introduction to the Science of Society*. New York : Barnes & Noble, 1957.

MacIver, R. M. and Page, Charles H. — *Society : An Introductory Analysis*. Reprinted. London : Macmillan, 1965.

Stewart, Elbert, W. and Glynn, James, A.—*Introduction to Sociology*, 2nd ed. New Delhi. Tata Mc Graw-Hill Publishing Company, 1975.

Sutherland, Robert, L. Woodward, Julian, L. and Maxwell, Milton, A. — *Introductory Sociology*. 6th ed. New Delhi : Oxford & TBH Publishing Co., 1956.

Timasheff, Nicholas, S.—*Sociological Theory : Its Nature and Growth*. 3rd ed. New York : Random House, 1967.

Young, Kimball and Mack Raymond, W.—*Systematic Sociology : Text and Readings*. New Delhi. Affiliated East-West Press, 1972.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற